# புதையுண்டுபோன புராதன இந்துக் கோயில்கள்

## (அனுராதபுரம் மாவட்டம்)





என்.கே.எஸ்.திருச்செல்வம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதையுண்டுபோன புராதன இந்துக் கோயில்கள்

## (அனுராதபுரம் மாவட்டம்)

**என்.கே.எஸ்.திருச்செல்வம்** *B.A*

*வரலாற்றுத்துறை, சென்னை பல்கலைக்கழகம்*

வெளியீடு

**அருந்ததி பதிப்பகம்**

**கொழும்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் : புதையுண்டுபோன புராதன இந்துக் கோயில்கள்

ஆசிரியர் : என்.கே.எஸ்.திருச்செல்வம்

உரிமை : ஆசிரியருக்கே

வெளியீடு : அருந்ததி பதிப்பகம்

68/14, ஸ்ரீ சித்தார்த்த வீதி, கொழும்பு-05

முதல் பதிப்பு : ஐப்பசி 2017

பக்கங்கள் : xxiii+321

அச்சு பதிப்பு : குமரன் அச்சகம், 39, 36வது ஒழுங்கை, கொழும்பு-06

விலை : ரூபா. 850.00

Title : Pudaiyundupona Puraathana Indu Koyilkal

Author : N.K.S.Thiruchelvam

Copyright : Author

Publisher : Arunthathy Pathippakam.

68/14, Sri Siddhartha Road, Colombo-05

First Edition : October 2017

No.of Pages : xxiii+321

Printed by : Kumaran Printers, 39, 36th lane, Colombo-06

Price : Rs. 850.00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது அன்புத் தந்தை அமரர்

# என். கே. சுந்தரம்

## (கல்யாண சுந்தர தேவர்)

அவர்களுக்கு இந்நூல்



# சமர்ப்பணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியர் எழுதிய ஏனைய நூல்கள்

- தென்னிலங்கையின் புராதன இந்துக் கோயில்கள்
- பாரம்பரியமிக்க கதிர்காம பாதயாத்திரையும் கந்தசுவாமிக் கடவுளின் புனித பூமியும்
- கதிர்காமத்தை தரிசித்த சித்தர்களும் முனிவர்களும்
- தென்கிழக்கு இலங்கையின் பண்டைய இந்து சமய வரலாறு
- இலங்கையில் இராவணன் தொடர்பான பிராமிக் கல்வெட்டுக்கள்
- இந்து சமயம் ஓர் அறிவியல் பொக்கிஷம்
- யார் இந்த இராவணன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**RAMAKRISHNA MISSION**
(Ceylon Branch)
40, Ramakrishna Road, Colombo 6.

Phone - 2588253 & 5013805
Email - rkmcey@gmail.com

# ஆசியுரை

"புதையுண்டுபோன புராதன இந்துக் கோயில்கள் – அநுராதபுரம் மாவட்டம், எனும் தலைப்பில் திரு.என்.கே.எஸ்.திருச்செல்வம் அவர்கள் ஒரு சரித்திர ஆதார நூலை அருந்ததி பதிப்பகத்தின் மூலமாக வெளியிட இருப்பதை அறிந்து மகிழ்வுறுகிறேன்.

இந்து மதத்தில் சமயம், கலாசாரம் ஆகியன மறைந்து போகாமலும், உண்மைகள் சிதைந்து போகாமலும் பாதுகாக்கும் பொருட்டு கோயில்களை ஒரு சாதனமாக நம் முன்னோர்கள் உபயோகித்தனர். அந்தக் கோயில்களின் சிலைகள், ஓவியங்கள், கல்வெட்டுக்கள் ஆகியவைகளில் இருந்து பலவிதமான உண்மை களையும், தத்துவங்களையும் அறிந்து கொள்ள முடியும்.

திரு.திருச்செல்வம் அவர்களின் இத்தகைய நூல்களால் இயற்கையின் சீற்றத்தாலும், மனிதனுடைய செயற்பாடுகளாலும், சிதைவடைந்து காலத்தின் கோலத்தால் இருந்த இடம் தெரியாமல் மண்ணுள் புதையுண்டு கிடக்கும் பண்டைய கோயில்கள் வெளிக்கொணரப்படுகின்றன. இவைகளைத் தேடிக் கண்டுபிடித்து அவற்றின் புராதன நிலையையும், இன்றைய நிலையையும், அதன் முக்கியத்துவங்களையும், சரித்திரபூர்வமாக ஆராய்ந்து அந்த உண் மைகளையும், நம் முன்னோர்கள் வாழ்ந்த சமய,சமூக வாழ்க்கை, சமுதாய வாழ்க்கை முறையையும் யாவரும் அறிந்து கொள்ளவும் மீண்டும் உயிரோட்டமுள்ளதாக அதைக் கொண்டு வருவதற்கும் இந் நூலில் உள்ள தகவல்கள் பேருதவியாக அமைகின்றன.

இந்தப் புத்தகத்தை அனைவரும் படித்து இதில் குறிப்பிடப் பட்டுள்ள கோயில்களை மீண்டும் வழிபாட்டுத் தலங்களாக உருவாக்க இந்துக்கள் அனைவரும் அவர்களால் ஆன உதவி களையும், பணிகளையும் செய்து, இவை புத்துயிர் பெற உழைத்து அப்பணியை நிறைவேற்றுமேயானால் அதுவே நம் இந்து மதத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்கும், ஆன்மீக பெரியோர்களுக்கும் அதன்படி வாழ்ந்த நம் முன்னோர்களுக்கும் நாம் செய்யும் நன்றிக் கடனும், மரியாதையும் ஆகும்.

அதற்கேற்ப "புதையுண்டுபோன புராதன இந்துக் கோயில்கள்" என்னும் இந்த நூலை அரும்பாடுபட்டு எழுதிய நூலாசிரியரான திரு..திருச்செல்வம் அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாக இருந்த அனைவருக்கும் இறைவன் தன் அருளையும், ஆசியையும் வழங்க வேண்டுவதோடு என் அன்பையும், வாழ்த்துக்களையும் நூலாசிரியருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**சுவாமி சர்வரூபானந்தா**
**தலைவர்**
**இராமகிருஷ்ணமிஷன்**
**கொழும்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

அன்புக்குரிய நண்பர் திரு. என்.கே.எஸ்.திருச்செல்வம் எழுதிய "புதையுண்டுபோன புராதன இந்துக் கோயில்கள்" என்ற இந்து சமயத்தின் பொக்கிஷமாக விளங்கும் இந் நூலுக்கு அணிந்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி யடைகிறேன். காரணம் பண்டைய ஈழத்து இந்து சமய வரலாறு பற்றிய ஆய்வில் இம்முயற்சி ஒரு மைல் கல் லாகும். இதுவரை இந்து சமயம் பற்றி வெளிவந்த நூல் களை விட கள ஆய்வின் மூலம், தொல்லியற் பின்னணி யில், அதுவும் பாளி-சிங்கள நூல்களின் பின்புலத்தில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வாக இது விளங்குகிறது.

முன்பெல்லாம் ஈழத்து இந்து சமயமானது தென்னிந் தியாவிலிருந்து காலாகாலங்களில் இந்நாட்டிற்குப் புகுந்த படையெடுப்பாளர்களான, ஆக்கிரமிப்பாளர்களான தமிழர், பௌத்த கலாசாரத்தில் ஏற்படுத்திய செல்வாக்கின் வழி வந்ததே என்று நம்பப்பட்டது. ஆனால் **1970** களில் இருந்து ஈழத்தின் ஆதிக்குடியேற்ற மையங்களில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வுகள் தமிழர் வந்தேறு குடிகள் அல்லர் என்பதையும், சிங்கள மக்களைப் போன்று இந்நாட்டின் நாகரீகத்திற்கு வித்திட்டவர்கள் என்பதையும் உறுதிப் படுத்தியுள்ளன. இவ்ஆய்வுகள் இன்றைய சிங்கள-தமிழ் மொழி பேசுவோரின் ஆதிச்சமயம் இந்து சமயம் என்பதையும், கி.மு.3ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பௌத்தம் இங்கு புகுந்தபோது சிங்கள மக்களின் மூதா தையினர் பௌத்தத்தைத் தழுவ, தமிழ்மக்களின் பெரும் பான்மையினோர் தொடர்ந்தும் இந்துக்களாகவே வாழ்ந் தனர் என்பதையும் உறுதி செய்துள்ளன. இக்கருத்தையே **1980** களில் நாம் மேற்கொண்ட கலாநிதிப் பட்ட ஆய்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் மூலமும், பின்னர் தமிழரின் பழைமை, ஈழத்து இந்து சமயத்தின் தொன்மை போன்ற ஆய்வுகளின் மூலமும் வெளிப்படுத்தியுள்ளோம். இப்பின்புலத்தில் நோக்கும் போது அனுராதபுர இராச்சியத்தில் பல இந்துக் கோயில் கள் தமிழர் ஆட்சியிலும், தமிழ்க் குடியேற்றங்களினாலும் உருவாக்கப்பட, கால வெள்ளோட்டத்தில் பௌத்தர்களாக மாறிய சிங்கள மன்னரதும், மக்களதும் போஷிப்பையும் இவை பெறத் தவறவில்லை.

மேற்கூறிய கருத்தையே நூலாசிரியர் திருச்செல்வம் தனது முகவுரையில் பின்வருமாறு கூறுகின்றார்.

"1000 வருடங்களுக்கு முன்பு ஓர் சைவ சாம்ராஜ்யம் செழிப்புடன் விளங்கிய இடம் இன்று மனிதர்கள் உட்புகக்கூட முடியாத அளவிற்கு காடு மண்டிப் போய்க் கிடக்கிறது. மந்திர முழக்கமும், மணி ஓசையும் இடை விடாமல் ஒலித்துக் கொண்டிருந்த ஓர் இடம் இன்று மயான அமைதியுடன் உறங்கிக் கொண்டிருந்தது"

பௌத்த மதம் அரச மதமாக முதன்மை பெற்ற இக் காலத்தில் இந்துசமய அழிபாடுகள் பற்றிய அக்கறையும், ஆய்வும் முன்நோக்கிச் செல்லவில்லை என்பதை ஆய்வாள ரின் கள ஆய்வே கோடிட்டுக் காட்டுகிறது. இக்கள ஆய் வின் மூலம் அழியுண்ட பல கோயில்களின் எச்சங்கள் ஆய்வாளரின் இடைவிடாத பெருமுயற்சியால் மீட்கப் பட்டமையானது கள ஆய்வில் அவருக்குள்ள அதிக ஈடு பாட்டை வெளிக்காட்டுகிறது என்றால் மிகையாகாது. பிரித்தானிய தொல்லியலாளரான பெல் போன்றோர் "அனுராதபுரத்திலுள்ள தமிழர் அழிபாடுகள்" பற்றித் தமது ஆய்வேடுகளில் குறிப்பிட்டிருந்தாலும், இவை பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலாசிரியர் திருச்செல்வம் அவர்களது கள ஆய்வு தான் இப்பெரு இடைவெளியை நிரப்பியுள்ளது.

ஒட்டு மொத்தமாக நோக்கும் போது நூலாசிரியர் திருச்செல்வம் தனது அயராத உழைப்பினாலும், விடா முயற்சியாலும் மேற்கொண்ட களஆய்வுகளின் பயனாக, பண்டைய ஈழத்தில், குறிப்பாக அனுராதபுர காலத்தில் பௌத்த பாரம்பரியம் போன்று இந்து பாரம்பரியமும் செழித்துக் காணப்பட்டுள்ளது என்பது தெளிவாகியுள்ளது.

தொடர்ந்து ஏழு ஆண்டுகளுக்கு மேலாக, பல்வேறு சவால்கள் மத்தியில், எதற்கும் சளைக்காமல், எதுவித சன்மானத்தையோ எதிர்பாராது, இவ் ஆய்வை மேற்கொண்ட நூலாசிரியர் திருச்செல்வம் அவர்களுக்கு சைவ உலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. இவரது பணிகள் தொடர எல்லாம் வல்ல பரம்பொருளின் கருணை இவருக்குக் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம். நன்றி.

**பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்**
**ஓய்வுநிலை தகைசார் பேராசிரியர்.**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**திருநெல்வேலி.**
**மார்கழி 2017**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

முன்னைய காலங்களை விட தமிழ் சமூகத்தின் இன்றைய சமூக, அரசியல், வரலாற்றுச் சூழலில் அது தனது இருப்பை நிலை நாட்ட வேண்டிய நிலையை இரு மடங்காக்கியுள்ளது. இவ்விதத்தில் பண்பாட்டு அடையாளங்களைப் பேனவேண்டிய, ஆவணப்படுத்த வேண்டிய தேவை அதிகரித்தும் உள்ளது. இந்நோக்கில் பிரதேச வரலாறு, நாட்டாரியல் வரலாறு, சமூக வரலாறு முதலியன சார்ந்த நூல்கள் சில அவ்வப்போது வெளிவருகின்றன.

இத்தகைய ஆரோக்கியமான சூழ்நிலையில் "புதையுண்டு போன புராதன இந்துக் கோயில்கள்" எனும் இந்நூலின் வரவு ஆய்வாளர் திரு. என்.கே.எஸ். திருச்செல்வம் அவர்களது சமயப் பண்பாடு சார்ந்த தேடல், நம் சமூகம் இன்னொரு திசை நோக்கிச் செல்ல வேண்டியதன் அவசியத்தைப் புலப்படுத்தி நிற்கின்றது.

இந்து சமயப் பண்பாடு சார்ந்த தேடல்கள், குறிப்பாக கோயில்களைப் பொறுத்தவரை அவற்றின் வரலாற்றை எழுதுதல், கோயில்களில் கிடைத்துள்ள சின்னங்களை இனங்கண்டு கொள்ளல் முதலானவை சார்ந்தே நடைபெற்று வந்துள்ளன. உயர்கல்வி நிறுவங்களுடன் தொடர்புபட்டோரே இம்முயற்சிகளில் அதிகளவு ஈடுபட்டும் வந்துள்ளனர். இத்தகைய முயற்சிகளில் வெளியிலிருந்து ஈடுபட்டு வந்துள்ள சிலருள் முக்கியமான ஒருவராக நூலாசிரியர் திருச்செல்வம் காணப்படுகின்றார். ஏற்கனவே அதுபோன்ற நூல்கள் சிலவற்றை இந்நூலாசிரியர் எழுதியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய சூழலில் "புதையுண்டு போன புராதன இந்துக் கோயில்கள்" எனும் இந்நூல் மற்றொரு புதிய திசை நோக்கிய தேடலுக்கு, வாசிப்பிற்கு எம்மை ஆற்றுப் படுத்துகிறது. அதுதான் அனுராதபுர மாவட்டத்திலுள்ள 108 இந்துக் கோயில்களை முதன் முதலாக அவர் கண்டு பிடித்திருப்பது. உண்மைதான் காலப்புயலில் சிக்குண்டு வரலாற்றிலே மறைக்கப்பட்டுவிட்ட, மறக்கப்பட்டுவிட்ட அக்கோயில்களை சொல்லொணா சிரமங்களின் மத்தியிலே பல வருடங்களாகத் தேடிக்கண்டு பிடித்து, இனங்கண்டு கொண்டுள்ளார் நூலாசிரியர் திருச்செல்வம். இவர் தனது நூல் முன்னுரையிலே அவை பற்றியெல்லாம் விபரித்து முள்ளார்.

நூலாசிரியரது களஆய்வுத் தேடல்கள் கற்பனையிலி ருந்து உதித்தவை அல்ல. ஏறத்தாள நூறு வருடங்களுக்கு முன்னர் எச்.சி.பி.பெல் என்பவரின் ஆராய்ச்சிக் குறிப்பு களை அடியொற்றியே இவரது தேடல்கள் நிகழ்ந்துள்ளன. ஏற்கனவே நூலாசிரியர் திருச்செல்வம் தமது நூல்களூடாக தேடி வைத்திருந்த வரலாற்றுப் புலமையும், கோயில்கள் பற்றிய தகவல்களும் அதற்கேற்ற தகைமைகளை அவருக்கு வழங்கியிருந்தன. அனுராதபுர மாவட்டத்திலே இவர் அறி ந்திருந்த 200 கோயில்களுள் 108 கோயில்களையே இவ ரால் தற்சமயம் வெளிக்கொணர முடிந்துள்ளது. இவரின் ஆய்வின் பயனாக பல கோயில்கள் மண்ணிற்குள் இன்ன மும் புதையுண்டிருப்பதும், சில கோயில்கள் பௌத்த ஆலயங்களுடன் இணைக்கப்பட்டிருப்பதும் தெளிவாகியு ள்ளது.

அனைத்தையும் விட பல்லாண்டுகளுக்கு முன்பே சைவ இராச்சியமொன்று, அதுவும் தமிழ் இராச்சியமொ ன்று அனுராதபுர பிரதேசத்தில் இருந்து வந்திருப்பது நிதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனமாகத் தெரியவந்துள்ளது. இம்மகத்தான உண்மையைக் கண்டறிந்து எமக்கு உணர்த்தியுள்ள நூலாசிரியர் திருச் செல்வம் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். அத்தகைய பாராட்டானது அவர் ஏனைய கோயில்களைக் கண்டறிவதற்கும், பிறதேசங்களில் மறைந்து கிடக்கும் கோயில்களைக் கண்டறிவதற்கும் அவரைத் தூண்டும் வித த்திலான ஆக்கபூர்வமான செயல்பாடாக அமைதல் வேண் டும். இந்து சமய நலன் விரும்பிகள் மற்றும் வள்ளல்கள் இந்நூலாசிரியருக்கு ஆதரவும், உதவியும் வழங்குவதானது இவர் பழம்பெரும் இந்துச் சின்னங்களுள்ள பிற நாடு களைத் தேடிச் செல்வதற்கும் தூண்டுகோளாக அமையும் என்பதில் ஐயமில்லை.

வாழ்த்துக்களுடன்,

**செ. யோகராசா**

**(முன்னாள் மொழித்துறை பேராசிரியர்)**

**கிழக்கு பல்கலைக்கழகம்.**

**வந்தாறுமூலை, மட்டக்களப்பு.**

**நவம்பர் 2017**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

## புதையுண்டு போன புராதன இந்துக் கோயில்கள் எனும் இந்நூல் உருவானது எப்படி?

சில வருடங்களுக்கு முன்பு இலங்கையின் புராதன இந்துக்கோயில்கள் பற்றிய ஆய்வுகளை நான் மேற்கொண்டிருந்த சமயம் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் அவர்கள் எழுதிய "ஈழத்து இந்து சமய வரலாறு" எனும் நூலை வாசித்தேன். அந்நூலிலே புராதன இலங்கையின் முதலாவது வழிபாடு யக்ஷ வழிபாடு எனக் குறிப்பிட்டிருந்தார். அதற்கு அடுத்த படியாக நாக வழிபாடும், சிவ வழிபாடும் சிறப்புடன் விளங்கியமை பற்றியும் பேராசிரியர் குறிப்பிட்டிருந்தார். யக்ஷ வழிபாட்டின் விபரங்கள் மற்றும் கோயில்கள் பற்றியும் அந்நூலில் குறிப்பிடப்பட்டிருந்தது. பண்டைய அனுராதபுர நகரில் பண்டுகாபய மன்னனால் வழிபடப்பட்ட சில யக்ஷ தெய்வங்கள் பற்றியும், இந்து தெய்வ வழிபாட்டிற்கு முன்னோடியாக யக்ஷ தெய்வங்கள் விளங்கியதாகவும் குறிப்பிட்டிருந்தார். அதன் பின்பு யக்ஷ தெய்வங்கள் பற்றி ஆராய வேண்டும் எனும் ஆர்வம் எனக்கு ஏற்பட்டது.

இதற்காக அனுராதபுரத்திற்கு சென்று ஆய்வுகளை மேற்கொண்டேன். அப்போது ஜேதவனாராம விகாரை வளாகம் மற்றும் அபயகிரி விகாரை வளாகம் ஆகிய பகுதிகளில் யக்ஷ, யக்ஷி தெய்வங்களின் அழகிய சிற்பங்கள் பலவற்றைக் கண்டேன். அவை மட்டுமல்லாது பலவித வடிவங்களில் நாகராஜரின் சிற்பங்களையும் ஜேதவனாராம, அபயகிரி ஆகிய விகாரை வளாகங்களில் காணக் கிடைத்தது. இதனால் ஆய்வு செய்யும் ஆர்வம் அதிகரிக்க அடுத்தடுத்து பல தடவைகள் அனுராதபுரத்திற்கு சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைய நகரில் இருந்த எல்லா இடங்களிலும் ஆய்வு களை மேற்கொண்டேன்.

இக்கால கட்டத்தில் 100 வருடங்களுக்கு முன்பு எச்.சி.பி.பெல் எனும் ஆங்கிலேய ஆராய்ச்சியாளர் எழுதி யிருந்த ஆய்வுக் குறிப்புகளைத் தேடி இலங்கை தொல் பொருள் திணைக்களத்திற்கு சென்று அவை பற்றிய விபர ங்களையும் குறிப்பெடுத்தேன். அதில் அனுராதபுரத்தின் வடக்கில் இருந்த சில கோயில்களைப் பற்றியும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

மீண்டும் மூன்றாவது தடவையாக அனுராதபுரத்தி ற்கு சென்றேன். அனுராதபுரம் பௌத்த யாத்திரீகர்களா லும், சுற்றுலாப் பயணிகளாலும் எப்பொழுதும் நிரம்பி வழியும் ஓர் சுற்றுலாத்தலம். அன்றும் அப்படித்தான். கூட் டம் களை கட்டியது. இந்தத்தடவை பெல் அவர்கள் குறிப்பிட்டிருந்த கோயில்களைத் தேடி அபயகிரி விகாரை யின் வடக்குப் பக்கம் உள்ள பங்குளிய, பெருமியன் குளம், அசோகாராம, விஜேராம ஆகிய இடங்களுக்குச் சென்றேன். அங்கெல்லாம் பெல் குறிப்பிட்ட கோயில் களைக் காண முடியவில்லை.

அப்போதுதான் இவ்விடங்களுக்கு நடுவில் இருந்த ஓர் காட்டுப்பகுதி என் கவனத்தை ஈர்த்தது. அக்காட்டுக் குள் சென்று பார்க்க வேண்டும் எனும் ஆவல் ஏற்பட்டது. அப்பகுதியில் தற்செயலாக சந்தித்த இரு சிங்கள தம்பி மாரின் உதவியுடன் காட்டுப் பகுதிக்குள் நுழைந்தேன். சுற்றுலாப் பயணிகள் யாரும் செல்லாத இடம். பட்டப் பகலில் கூட ஆள் நடமாட்டம் இல்லாத இடம். பறவை களும், காட்டு வண்டுகளும் கத்தும் ஓசை மட்டுமே காதுகளில் கேட்டுக் கொண்டிருந்தது. சூரிய வெளிச்சமே படாமல் சற்று இருட்டாக அக்காட்டுப்பகுதி காணப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டது. காட்டுக்குள் நடந்து சென்று கொண்டிருந்த போது காலில் ஏதோ தடுக்கி விழப் பார்த்தேன். என் காலில் தடுக்கியது என்னவென்று பார்த்தபோது தான் தெரிந்தது, அது சிற்பங்கள் செதுக்கப்பட்ட ஓர் நாகக் கல் என்று. முக்கால்வாசி மண்ணுள் புதையுண்டு அக்கல் காணப்பட்டது. ஆர்வம் மேலிட அப்பகுதியில் இருந்த பற்றைகளையும், காய்ந்த சருகுகளையும் விலக்கிப் பார்த்த போது ஆச்சரியமும், ஆனந்தமும் அடைந்தேன். அவ்விட த்திலே காட்டுப் பற்றைகளுள் மறைந்தும், மண்ணுள் புதையுண்டும் ஏராளமான கோயில்களின் இடிபாடுகளும், கற்தூண்களின் துண்டங்களும், செங்கல் அத்திவாரங்களும், கட்டிடங்களின் சிதைவுகளும் காணப்பட்டன அதுதான் எச்.சி.பி.பெல் அவர்கள் குறிப்பிட்டிருக்கும் இந்துக் கோயில்களின் வளாகம் என்பதைப் புரிந்து கொண்டேன்.

என்னோடு வந்த தம்பிமார் இருவரும் இதுதான் தமிழர்கள் அழித்த பௌத்த விகாரைகளின் சிதைவுகள் எனக் கூறினர். அந்த சிறுவர்களுக்கு இப்படித்தான் உண் மைக்குப் புறம்பாக ஓர் பொய்யைக் கூறி வைத்துள்ளார் கள் என்பது புரிந்தது. இது போன்று பாதையின் அடுத்த பக்கத்தில் உள்ள காட்டிலும், விஜேராம விகாரைக்கு செல்லும் வீதியின் மேற்குப் பக்கத்தில் உள்ள காட்டிலும் அழிக்கப்பட்ட விகாரைகளின் சிதைவுகள் இருப்பதாகக் அவர்கள் கூறினர். சிறுவர்களின் உதவியோடு பாதையின் கிழக்குப் பக்கத்தில் உள்ள காட்டிற்கும் சென்று பார்த் தேன். அங்கும் கோயில்களின் சிதைவுகளை கண்டேன். பின்பு தம்பிமார் இருவரையும் அனுப்பிவிட்டு விஜேராம காட்டுப் பகுதிக்குச் சென்றேன். அங்கும் சிதைவுகள் காணப்பட்டன. சுமார் **600** மீற்றர் அகலமும், **1500** மீற்றர் நீளமும் கொண்ட அந்தக் காட்டுப்பகுதி முழுவதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்களின் சிதைவுகள் பரந்து காணப்பட்டன. மொத்த மாக இக்காட்டுப் பகுதியில் சுமார் 20 கட்டிடங்களின் இடிபாடுகள் காணப்பட்டன. வரலாற்று ஆய்வாளர் எச்.சி.பி. பெல் அவர்களின் ஆய்வுக் குறிப்புகளில் இவ ற்றை "*Tamil Ruins*" (தமிழர் இடிபாடுகள்) என அவர் குறிப்பிட்டுள்ளார். அக்குறிப்புகளில் பெல் குறிப்பிட்டுள்ள அத்தனை இடங்களும் இங்கே துல்லியமாகக் காணப் பட்டமை ஆச்சரியத்தை உண்டாக்கியது. 1000 வருடங்க ளுக்கு முன்பு ஓர் சைவ சாம்ராஜ்யம் செழிப்புடன் விளங் கிய இடம் இன்று மனிதர்கள் உற்புகக்கூட முடியாத அள விற்கு அடர்ந்த காடு மண்டிப்போய் கிடக்கிறது. மந்திர முழக்கமும், மணி ஓசையும் இடை விடாமல் ஒலித்துக் கொண்டிருந்த ஓர் இடம் இன்று மயான அமைதியுடன் உறங்கிக் கொண்டிருந்தது.

அதன்பின்பு அனுராதபுரத்தை முழுமையாக ஆராய் ந்து முடித்தபின் சுமார் 40 இந்துக் கோயில்கள் மண்ணுள் புதையுண்டு கிடப்பதை அறிய முடிந்தது. இத்தனை பெருந்தொகையான கோயில்கள் ஒரே நகரத்தில் இருக்கு மானால், இதே பண்டைய காலத்தில் செழிப்புடன் விள ங்கிய அனுராதபுரம் மாவட்டத்தில் எத்தனை கோயில்கள் இருந்திருக்கும் எனும் எண்ணத்தோடு அம்மாவட்டத்தில் இருந்த கோயில்கள் பற்றிய பட்டியலைத் தயாரித்தபோது சுமார் 200 இந்துக் கோயில்களின் பெயர்கள் கிடைத்தன. பட்டியலில் உள்ளபடி அக்கோயில்கள் இருந்த இடங்க ளுக்குச் சென்று அவற்றைத் தேடிப் பார்த்தபோது சில கோயில்கள் பௌத்த ஆலயங்களுடன் இணைக்கப்பட்டு "தேவாலய"எனும் பெயரில் பௌத்த மக்களால் வழிபடப் பட்டு வருகின்றமை தெரிந்தது. ஆனால் பல கோயில்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணிற்குள் புதைந்து கிடப்பதையும் காணக்கூடியதாக இருந்தது.

அந்த சமயத்தில் தான் "புதையுண்டு போன புராதன இந்துக் கோயில்கள்" எனும் தலைப்பு உதயமாகியது. அன்று முதல் அதுவரை ஆய்வு செய்து முடித்த, அழிந்து போய் மண்ணுள் புதையுண்டு போன கோயில்கள் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளை தினக்குரல் பத்திரிகையில் 2010 ஆம் ஆண்டு தொடர்ந்து 20 வாரங்கள் எழுதினேன். தொடர்ந்து ஆய்வு முயற்சிகளில் ஈடுபட்டபோது அனுராதபுர மாவட்டத்தில் அழிந்தநிலையில் அதிகமான கோயில்கள் புதையுண்டு கிடப்பதை அறிந்தேன். இதுவரை நான் ஆய்வுசெய்து முடித்த அழிந்துபோன கோயில்களின் விபரங்களை இந்தத் தலைப்பில் ஓர் ஆய்வு நூலாக எழுதி வெளியிட முடிவு செய்தேன். அதன்படி அனுராதபுர மாவட்டத்தில் ஒரு காலத்தில் செழிப்புடன் பூஜிக்கப் பட்டு, பின்பு காலத்தால் அழிந்து மறைந்து போய்விட்ட, மேலும் மக்களில்லாத நிலையில் பராமரிப்பின்றி சிதைந்து போய்விட்ட, மற்றும் ஐரோப்பியரின் ஆக்கிரமிப்பின் போது அழிக்கப்பட்டு மண்ணுள் புதையுண்டு இடிபாடுகளாய்க் காணப்பட்ட 108 கோயில்கள் பற்றிய வரலாற்றுத் தகவல்களுடன் சுமார் 7 வருட ஆய்வு முயற்சியின் பின் இந்நூலை வெளியிடுகிறேன்.

இன்று அனுராதபுரத்திற்கு செல்லும் இந்துக்கள் கூட சுற்றுலா பயணிகள் போல் அங்கிருக்கும் பௌத்த விகாரைகளுக்குச் சென்று சுற்றிப் பார்த்து விட்டு வந்து விடுகின்றனர். அங்கு சிதைவுகளாக 40 இந்துக் கோயில்கள் இருப்பது பற்றி பலருக்குத் தெரியாது. தெரிந்த ஒரு சிலரும் அவற்றைக் கண்டு கொள்வதில்லை. அனுராதபுர நகரில் உள்ள பௌத்த வழிபாட்டிடங்கள் அனைத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசார முக்கோணத் திட்டத்தின் கீழ் புனரமைக்கப் பட்டு பௌத்த மக்கள் வழிபடும் வகையில் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆனால் சைவமக்களின் மூதாதையர்களால் வழி படப்பட்ட இந்துக் கோயில்கள் எதுவும் புனரமைக்கப் படாமல் தேடுவாரற்று காடுகளுக்குள் மறைந்து போய்க் கிடக்கின்றன. இதன் மூலம் புராதன அனுராதபுர இராச்சி யத்தில் சைவசமயம் இருக்கவில்லை எனும் தோற்றப் பாட்டை எதிர்கால பௌத்த, இந்து சந்ததியினர் எண் ணும் நிலை உருவாகியுள்ளது.அனுராதபுர யுகத்தின் 1000 வருட தொன்மைமிக்க சைவசமய கலாசாரத்தின் சான்று களும், தடயங்களும் மக்களின் பார்வையிலிருந்து மறை க்கப்பட்டுள்ளன. அதேசமயம் இங்கிருந்து எடுக்கப்பட்ட அழகிய இந்து தெய்வச் சிலைகள் இலங்கையின் நூதன சாலைகளையும், தொல்பொருள் காட்சிச்சாலைகளையும் அலங்கரித்து, அழகு படுத்திக் கொண்டிருப்பதோடு, உல் லாசப் பிரயாணிகளைக் கவரும் வகையில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் கிடைக்கப்பெற்ற பண்டைய திருவு ருவச் சிலைகளில் அழகும், அம்சமும் மிக்கவை இந்து தெய்வச் சிலைகளே என்பது அனைவரும் அறிந்த உண் மையாகும். இவற்றிற்கு உலக அளவிலே பெரும் மதிப்பு நிலவுகிறது, எனவே தான் இன்றும் இலங்கையிலும், இந்தி யாவிலும் ஆங்காங்கே காலத்துக்குக் காலம் கிடைக்கப் பெறும் இந்து தெய்வச்சிலைகள் பெருந்தொகைக்கு பேரம் பேசி விற்கப்பட்டு, வெளிநாடுகளுக்கு கடத்தப் படுகின் றன. வெளிநாடுகளில் உள்ள தொல்பொருள் காட்சிச் சாலைகளில் இந்து தெய்வச்சிலைகள் பலவும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. ஐரோப்பியர் காலத்தில் இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலிருந்து கொண்டு செல்லப்பட்ட தெய்வச் சிலைகள் பல ஐரோப்பிய நாடுகளிலுள்ள தொல்பொருள் காட்சிச் சாலைகளில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. எனவே இத் தனை பெருமதிப்புமிக்க இந்து தெய்வச்சிலைகள் வைத்து வழிபடப்பட்ட கோயில்களின் சிதைவுகளும், அடையாள ங்களும் ஏன் மக்களின் பார்வையிலிருந்து மறைக்கப்பட வேண்டும்?

இலங்கையின் இந்து சமயத் தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள், அறிஞர்கள் மற்றும் புத்திஜீவிகள் இந்த விட யத்தைக் கவனத்தில் எடுத்து, அனுராதபுரத்தில் காடுகளுக் குள் மறைந்து காணப்படும் பண்டைய இந்துக் கோயில் கள் இருக்கும் இடத்தில் உள்ள காட்டைத் துப்பரவு செய்து,மக்களின் பார்வைக்கு விட வழிசெய்ய வேண்டும்.

**என்.கே.எஸ்.திருச்செல்வம் *B.A***
வரலாற்றுத்துறை, சென்னை பல்கலைக்கழகம்
ஐப்பசி **2017**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றிக்குரிய நல்லுள்ளங்கள்

**பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்**

எனது இந்நூலுக்கு பெறுமதிமிக்க ஓர் அணிந்துரையை வழங்கி, எனது பலவருடகால களஆய்வு முயற்சிகளை உள்ளுணர்வோடு பாராட்டி, எனக்கும் இந்நூலுக்கும் பெருமை சேர்த்த யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் ஓய்வுநிலை தகைசார் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் அவர்களுக்கு எனது சிரம் தாழ்த்திய நன்றிகள்.

**திரு. பாரதி இராஜநாயகம்**

"புதையுண்டுபோன புராதன இந்துக் கோயில்கள்" எனும் தலைப்பில் நான் எழுதிய ஆய்வுக் கட்டுரைகளை ஞாயிறு தினக்குரல் பத்திரிகையில் தொடர்ந்து 20 வாரங்கள் பிர சுரித்து எனக்கு உத்வேகம் அளித்த ஞாயிறு தினக்குரல் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் மதிப்பிற்குரிய திரு.பாரதி இராஜநாயகம் அவர்களுக்கும், தினக்குரல் பத்திரிகை நிறு வனத்திற்கும் எனது மனம் கனிந்த நன்றிகள்.

**பேராசிரியர் செ.யோகராசா**

எனது இந்நூலுக்கு நல்லதோர் அணிந்துரையை வழங்கிய கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் மொழித்துறை தகைசார் பேராசிரியர் செ.யோகராசா அவர்களுக்கு எனது நன்றிகள்.

**திரு. க.குமரன்**

எனது ஆய்வுக் கட்டுரைகளை புத்தகங்களாக வெளியிட நல்ல பல ஆலோசனைகளை வழங்கி எனது நூல்கள் வெளிவர உதவி புரிந்து, என்னை ஊக்குவித்த குமரன் புத்தக நிலையத்தின் உரிமையாளர் மதிப்பிற்குரிய திரு. குமரன் அவர்களுக்கு எனது மனமுவந்த நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமதி. அருந்ததி திருச்செல்வம்**

எனது ஆய்வுகளை மேற்கொள்வதற்காக அனுராதபுர மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும், பல நாட்கள் என்னுடன் வந்து, என் வாழ்க்கையில் மட்டுமல்லாது எனது ஆய்வுகளுக்கும் துணையாக இருந்த என் அன்புத் துணைவி திருமதி. அருந்ததி திருச்செல்வம் அவர்களுக்கு எனது இதயம் கனிந்த நன்றிகள்.

**சிவஸ்ரீ கு.வை.க.வைத்தீஸ்வர குருக்கள்**

இந்நூலையும், என்னையும் பெருமையோடு அறிமுகம் செய்து வைத்த இந்துக் குருமார் அமைப்பின் தலைவர் மதிப்பிற்குரிய வைத்தீஸ்வர குருக்கள் ஐயா அவர்களுக்கு என் மனமுவந்த நன்றிகள்.

**திரு. க.செந்தில்குமார்**

எனது ஆய்வுகளுக்காக அனுராதபுரம் நகரின் இருந்த பல இடங்களுக்கும் என்னோடு வந்த கொழும்பைச் சேர்ந்த நண்பர் செந்தில்குமார் அவர்களுக்கு எனது மனமுவந்த நன்றிகள்.

**திரு. சி.பிரகாஷ்**

எனது ஆய்வுகளை மேற்கொள்வதற்காக பதவியா நகருக்கு என்னோடு வந்த திருகோணமலையைச் சேர்ந்த நண்பர் பிரகாஷ் அவர்களுக்கு எனது மனமுவந்த நன்றிகள்.

**செல்வி. இ.அன்னலட்சுமி**

இந்நூலுக்காக நான் எழுதிய கையெழுத்துப் பிரதிகளை தட்டச்சு செய்ய உதவிய செல்வி அன்னலட்சுமி அவர்களுக்கு எனது நன்றிகள்.

**திருமதி. க.சாந்தினி**

எனது கையெழுத்துப் பிரதிகளை தட்டச்சு செய்து எனக்குத் தந்த திருமதி. சாந்தினி அவர்களுக்கு எனது நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

அனுராதபுரம் மாவட்டத்தின் பண்டைய இந்துக் கோயில்கள்-ஓர் அறிமுகம் ........ 1

1.அனுராசபுரேசர் சிவன் கோயில்-அனுராதபுரம் ........ 9

2.சித்தராஜன் கோயில்-அனுராதபுரம் ........ 14

3.காளவேலன் கோயில்-அனுராதபுரம் ........ 15

4.வைஷ்ரவண யக்ஷ கோயில்-அனுராதபுரம் ........ 16

5.புரதேவன் கோயில்-அனுராதபுரம் ........ 17

6.வியாத தேவன் கோயில்-அனுராதபுரம் ........ 18

7.தென்திசை யக்ஷி கோயில்-அனுராதபுரம் ........ 19

8.சேதியா (வடவாமுகி) யக்ஷி கோயில்-அனுராதபுரம் ........ 21

9.கிழக்கு வாசல் யக்ஷி கோயில்-அனுராதபுரம் ........ 22

10.பச்சிமராஜினி யக்ஷி கோயில்-அனுராதபுரம் ........ 23

11.கம்மார தேவன் கோயில்-அனுராதபுரம் ........ 24

12.திஸ்ஸவாவி காவற் கோயில்-அனுராதபுரம் ........ 24

13.மகேஜ சிவன் கோயில்-அனுராதபுரம் ........ 25

14.சிவிகசாலை சிவன் கோயில்-அனுராதபுரம் ........ 28

15.ஜேதவனாராம நாகராஜர் கோயில்-அனுராதபுரம் ........ 31

16.அபயகிரி நாகராஜர் கோயில்-அனுராதபுரம் ........ 32

17.பிராமணன் தியவசனின் கோயில்-அனுராதபுரம் ........ 34

18.தாய் நவரட்ணவல்லி காளி கோயில்-அனுராதபுரம் ........ 34

19.ஈஸ்வரமுனி சிவன் கோயில்-அனுராதபுரம் ........ 36

20.சூரியன் கோயில்-அனுராதபுரம் ........ 50

21.குமாரகணம் முருகன் கோயில்-அனுராதபுரம் ........ 53

22.பிள்ளையார் கோயில்-பசவக்குளம், அனுராதபுரம் ........ 55



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23.ஈஸ்வரன் கோயில்-அபயகிரி, அனுராதபுரம் .......... 59
24.சூரிய தேவன் கோயில்-அபயகிரி, அனுராதபுரம் .......... 78
25.பிள்ளையார் கோயில்-யானைக்குளம், (அத் பொக்குன) அனுராதபுரம் . 79
26.விஜேராம சிவன் கோயில்-அனுராதபுரம் .......... 83
27.சிவன் கோயில்- அசோகாராம, பங்குளிய, அனுராதபுரம் .......... 86
28.கண்ணகி அம்மன் கோயில்-அனுராதபுரம் .......... 95
29.ஜேதவனாராம சிவாலயம்-அனுராதபுரம் .......... 98
30.காளி அம்மன் கோயில் - அனுராதபுரம் .......... 106
31.சிவாலயம் 1 - பெருமியன் குளம், அனுராதபுரம் .......... 112
32.சிவாலயம் 2-பெருமியன் குளம், அனுராதபுரம் .......... 119
33.பத்ரகாளியம்மன் கோயில் - பெருமியன் குளம், அனுராதபுரம் .......... 123
34.இந்துக் கோயில் 4-பெருமியன் குளம், அனுராதபுரம் .......... 127
35.இந்துக் கோயில் 5-பெருமியன் குளம், அனுராதபுரம் .......... 128
36.விஷ்ணு கோயில்-அனுராதபுரம் .......... 131
37.புளியங்குளம் சிவாலயம்-அனுராதபுரம் .......... 132
38.பிள்ளையார் கோயில்-நுவரவாவி, அனுராதபுரம் .......... 134
39.விருபக்ஷர் கோயில் - அனுராதபுரம் .......... 138
40.இந்துக்கோயில்-தேவநம்பியதிஸ்ஸபுர, அனுராதபுரம் .......... 140
41.வீரபத்திரர் கோயில் - அனுராதபுரம் .......... 142
42.எல்லாளனின் குலதெய்வக் கோயில்-அனுராதபுரம் .......... 143
43.எல்லாளன் சமாதிக் கோயில்-அனுராதபுரம் .......... 147
44.கெடிகே கோயில்-அனுராதபுரம் .......... 157
45.நாக கோயில் (நகா விகாரை)-அனுராதபுரம் .......... 159
46.முருகன், விஷ்ணு, பத்தினி அம்மன் கோயில்கள்-நெலும் கன்னிய, களத்தேவ-அனுராதபுரம் .......... 162
47.அம்மன் கோயில்-ஜேதவனாராம அனுராதபுரம் .......... 163



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48.அம்மன் கோயில்-மிகுந்தலை......166
49.இரவிகுலமாணிக்க ஈஸ்வரம்-முதலாம் சிவாலயம்(ஸ்ரீ பார்வதிபுரம்) பதவியா......177
50.இரண்டாம் சிவாலயம்-(ஸ்ரீ பார்வதிபுரம்) பதவியா......184
51.வலகழி சிவன் கோயில்-மூன்றாம் சிவாலயம்(ஸ்ரீ பார்வதிபுரம்)-பதவியா......185
52.நான்காம் சிவாலயம்-(ஸ்ரீ பார்வதிபுரம்) பதவியா......188
53.ஐந்தாம் சிவாலயம்-(ஸ்ரீ பார்வதிபுரம்) பதவியா......189
54.தெய்யன்னேகந்த இந்துக் கோயில்- பதவியா......190
55.சிவன் கோயில்-புத்தனேஹெல, பதவியா......192
56.உத்தம சோழ ஈஸ்வரம்-ஆத்தகட, கெப்பிட்டிகொல்லாவ......193
57.விஷ்ணு கோயில்-ஆத்தகட, கெப்பிட்டிகொல்லாவ......196
58.பரமேஸ்வரி அம்மன் கோயில்- வாஹல்கட......197
59.இந்துக் கோயில்-மஹாகணத்தராவ......199
60.சிவன் கோயில்-வேரகல......202
61.வைரவர் கோயில்-விஜித்தபுர, கலாவெவ......204
62.கந்தசுவாமி கோயில்-ஹுருள்ளுவெவ......210
63.இந்துக் கோயில்-பறங்கியாவாடி, ஹொரவப்பொத்தானை......215
64.இந்துக் கோயில்-சங்கிலி கணத்தராவ, மதவாச்சி......216
65.திவக்கனின் கோயில்-பிராமணகாமம் (திவக்க பமுனுகம)-தந்திரிமலை......218
66.ஐயனார் கோயில்-ஆண்டியாகல, தந்திரிமலை......222
67.விஷ்ணு கோயில்-தம்பலகொல்லாவ......224
68.இந்துக் கோயில்-மொரகஹவல, கஹட்டகஸ்திஹிலிய......225
69.நாக வைரவர் கோயில்-அவுக்கன......226
70.தலபத்குளம் அம்மன் கோயில்-தியதித்தவெவ, ஹோரவபோத்தான 232



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

71.கோயில் கட்டிய குளம் இந்துக் கோயில்-கோலிபெந்த வெவ, மதவாச்சி ........ 234
72.மன்னன் கட்டிய குளம் நாககோயில்-மானன்கட்டிய, யக்கல்ல ........ 235
73.சிவன் குகைக்கோயில்-ஹந்தகலகந்த ........ 236
74.நாக கோயில்-எருவேவ, கல்குளம் ........ 240
75.நாக கோயில்-வண்ணம்மடுவ குளம், உலகல்ல ........ 240
76.ஐயனார் கோயில் - அமுனுகொலே, சிப்பிக்குளம் ........ 241
77.விஷ்ணு கோயில்-காடிகல, ராஜாங்கன குளம் ........ 242
78.நாக கோயில் - பிராமணகிரி,நாகிரிகந்த ........ 242
79.இந்துக் கோயில்-நாவெஹெர,நிக்காவெவ ........ 244
80.நாக கோயில்-பரத நாகலேன- பில்லாவேகல, தந்திரிமலை ........ 247
81.ஜெயசேனன் யக்ஷ கோயில்-ரிடிகல (அரிட்ட பர்வத மலை) ........ 249
82.சிவன் குகைக்கோயில்-ஆண்டியகந்த- ரிடிகல (அரிட்ட பர்வத மலை) ........ 250
83.தெவியன்னேகந்த இந்துக் கோயில்-ரிடிகல (அரிட்ட பர்வத மலை) 254
84.வேவல்தென்ன சிவன் குகைக்கோயில்-ரிடிகல (அரிட்ட பர்வத மலை) ........ 255
85.முருங்க ஹிட்டி கந்த முருகன் கோயில்- (முருகன் நின்ற மலை) மடாத்துகம ........ 257
86.அம்மன் கோயில்- கிரலகல, ஹொரவப்பொத்தனை ........ 258
87.இந்துக் கோயில்-ஆண்டியாகல,பாலாகல ........ 261
88.சிவன் கோயில்-பிராமணயாகம, பறங்கியாவாடி ........ 261
89.சங்கிலி மலைக்கோயில்-கோகபேகந்த, கஹட்டகஸ்திகிலிய ........ 262
90.ஆண்டிக்கல் மலை இந்துக் கோயில்-அங்கமுவ,ராஜங்கனை ........ 262
91.பத்தினியம்மன் கோயில்-பத்தினிகம, கல்னேவ ........ 265
92.சிவாலயக்குளம் சிவன் கோயில்-கலென்பிந்துனுவெவ ........ 265
93.அம்மன்கட்டு அம்மன் கோயில்-அமனன்கட்டுவ,இபலோகம ........ 266



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

94.ஆண்டிக்கடவை இந்துக் கோயில்-பலிப்பொத்தன, ரத்மல்கஹவெவ 266
95.சிவாலயபிட்டி இந்து கோயில்-துனுமடலாவ,மகாவிலச்சி ..... 267
96.ஆண்டிக்குளம் இந்துக் கோயில்-தெப்பன்குளம ..... 268
97.பிராமணகாமம் இந்துக் கோயில்-பமுனுகம,சந்தபாகம ..... 268
98.காளி கோயில்-காளிவில்,களுவில ..... 269
99.காளி கோயில்-காளிவில்காமம் (களுவிலகம),சுகதகம ..... 269
100.பிராமணகாமம் இந்துக் கோயில்-பமுனுகம,கம்சபா ஹல்மில்லேவ ..... 270
101.பிராமணர்காமம் இந்துக் கோயில்-பிராமணயாகம,செலஸ்திமடுவ 270
102.சிவாலயகல்லு சிவன் கோயில்-சிவலாகல,வலகம்பாஹுவ ..... 270
103.ஆண்டிமலை இந்துக் கோயில்-ஆண்டியாகல,தமரவெவ ..... 271
104.இந்துக் கோயில்-கோயில் கட்டிய குளம், கோணமரியாவ ..... 271
105.கதிர்காமம் முருகன் கோயில்-கதிரகம, கெலே புளியங்குளம ..... 272
106.நாக கோயில்-பதவியா ..... 272
107.காளி கோயில்-களுவில பரணகம, பாவக்குளம் ..... 272
108.நாக கோயில்-நாபடவில, பரண ஹல்மில்லேவ ..... 273
அனுராதபுரம் மாவட்டத்தில் இந்து தெய்வங்கள் தொடர்பான பிராமிக் கல்வெட்டுக்கள் ..... 274
அனுராதபுர மாவட்டத்தின் தமிழ்க் கிராமங்கள் ..... 282
அனுராதபுரம் மாவட்டத்தில் சுடுமண் லிங்க வடிவங்களும், தெய்வ உருவங்களும் ..... 291
அனுராதபுரத்தில் இந்து சமய சின்னங்கள் பொறிக்கப்பட்ட நாணயங்கள் ..... 294
உசாத்துணை நூல்கள் ..... 298



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கங்கள்

| | | |
|---|---|---|
| பொ.ஆ | - | பொது ஆண்டு (கி.பி.) |
| பொ.ஆ.மு | - | பொது ஆண்டுக்கு முன் (கி.மு.) |
| ஈ.இ.வ | - | ஈழத்து இந்துசமய வரலாறு |
| *TM* | - | *The Mahavamsa* |
| *IOC* | - | *Inscriptions of Ceylon* |
| *ASHOHIC* | - | *A Short History of Hinduism in Ceylon* |
| *JRASCB* | - | *Journal of the Royal Asiatic Society of Ceylon Branch* |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுராதபுரம் மாவட்டத்தின் பண்டைய இந்துக் கோயில்கள்-ஓர் அறிமுகம்

இலங்கையில் உள்ள 9 மாகாணங்களில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இரண்டையும் தவிர ஏனைய 7 மாகாணங்களிலும் 7 இந்து தெய்வங்களை காவல் தெய்வங்களாக சிங்கள, பௌத்த மக்கள் பயபக்தியுடன் வழிபட்டு வருகின்றனர். இம்மாகாணங்களில் ஒன்றான வடமத்திய மாகாணத்தின் காவல் தெய்வமாக விளங்குபவர் பிள்ளையார். வடமத்திய மாகாணத்தில் அமைந்துள்ள இரண்டு மாவட்டங்களில் அனுராதபுரம் மாவட்டமும் ஒன்றாகும். இம்மாவட்டத்தில் பண்டைய காலம் முதல் சைவ சமயமும், சிவவழிபாடும் சிறப்புற்றுக் காணப்பட்டமை ஆய்வுகள் மூலம் தெரிய வருகின்றது. இம்மாவட்டத்தில் ஏராளமான கோயில்கள் சிறப்புடன் வழிபடப்பட்டுள்ளன. மாவட்டத்தின் தலைநகரான அனுராதபுரம், இலங்கையின் பண்டைய தலைநகரங்களில் முதன்மையானதாகும். இது 2000 வருடங்களுக்கு முன்பு தோற்றம் பெற்ற நகரமாகும். இத்தலைநகரை மையமாக வைத்து பல பண்டைய தமிழ், சிங்கள மன்னர்கள் இலங்கையை ஆட்சி செய்துள்ளனர்.

பௌத்த சமயம் அனுராதபுர இராச்சியத்திற்குள் வருவதற்கு முன்பு இங்கு யக்ஷ, நாக, சிவ வழிபாடுகளே சிறப்புடன் காணப்பட்டன. ஆரம்பத்தில் யக்ஷ வழிபாடே இங்கு காணப்பட்டதாக வரலாற்று நூல்கள் கூறுகின்றன. அதன் பின்பு நாக வழிபாடும், சிவ வழிபாடும் இத்தலைநகரில் மட்டுமல்லாது இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் காணப்பட்டமையை வரலாற்று நூல்கள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. இலங்கையின் ஆதிக்குடிகளான இயக்கர் யக்ஷ தெய்வங்களையும், நாகர் நாக தெய்வங்களையும் வழிபட்டனர். இதற்கான சான்றுகள் அனுராதபுர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராச்சியத்தில் அதிகளவில் காணப்படுகின்றன. வரலாற்றுக் குறிப்புகளின்படி ஏராளமான இந்துக் கோயில்கள் அமைந்திருந்த ஓர் பண்டைய நகரமாக அனுராதபுரம் விளங்கியுள்ளது. இங்கு சுமார் 40 இந்துக் கோயில்கள் அமைந்திருந்தமைக்கான சான்றுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இக்கோயில்கள் எல்லாம் பண்டுகாபய மன்னன் காலம் முதல், அதாவது பொ.ஆ.மு 4 ஆம் ஆண்டு முதல் சோழர் காலமான பொ.ஆ 10 ஆம் நூற்றாண்டு வரை அனுராதபுர நகரத்தில் சிறப்புடன் விளங்கியுள்ளன.

இக்காலப்பகுதிக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பு அனுராதபுரத்தில் உள்ள சில இடங்கள், இராவணனுடன் தொடர்புபட்டவை என பண்டைய ஓலைச் சுவடிகள் மூலம் தெரிய வருகிறது. “ராவண கத்தா” எனும் பண்டைய ஓலைச்சுவடிகளில் இராவணனின் தந்தையான விஷ்ரவசு முனிவர், தாய் கைகேசி ஆகியோரின் நினைவாக இராவணன் இசுருமுனிய கோயிலைக் கட்டி தனது தாய் தந்தையை வழிபட்டான் எனக் கூறப்பட்டுள்ளதாக கலாநிதி மிருண்டோ ஒபேசேகர தனது நூலில் கூறிப்பிட்டுள்ளார். இசுருமுனிய கோயிலின் அருகில் உள்ள வெஸ்ஸகிரி குகையில் இராவணின் தந்தையான விஷ்ரவசு முனிவரின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளதாக கலாநிதி சூர்ய குணசேகர தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். இராவணின் தந்தையான விஷ்ரவசு முனிவர் வாழ்ந்த இடமே வெஸ்ஸகிரி என ஆய்வாளர் தனேஷ் கொடிப்பிலிஆரச்சி தனது நூலில் கூறியுள்ளார். எனவே சிங்கள ஆய்வாளர்களின் மேற்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மூலம் மிகப் பண்டைய காலத்தில் விஷ்ரவசு முனிவர், கைகேசி, இராவணன் ஆகியோர் அனுராதபுரத்துடன் தொடர்புபட்டுள்ளார்கள் என்பது தெரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணனின் காலம் பொ.ஆ.மு.5112 என இந்திய ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர். இராவணன் சிவலிங்க வழிபாட்டை மேற்கொண்ட தீவிர சிவபக்தன் என வால்மீகி இராமாயணம் உட்பட பல இந்திய தல புராணங்கள் கூறுகின்றன. இராவணனின் தந்தையான விஷ்ரவசு முனிவர், தாய் கைகேசி ஆகியோர் சிவலிங்க வழிபாடு செய்தவர்கள் என இந்தியாவின் பிரசித்தி பெற்ற சிவன் கோயில்களின் தலபுராணங்கள் கூறுகின்றன. எனவே இவர்களுடன் தொடர்புடைய அனுராதபுரத்திலும் சுமார் 7000 வருடங்களுக்கு முன்பு சிவலிங்க வழிபாடு இருந்துள்ளது என்பது இதன் மூலம் உறுதியாகிறது.

இலங்கையின் மிகத்தொன்மை வாய்ந்த ஆதி இரும்புக்கால தொல்லியல் மையங்களில் அனுராதபுரமும் ஒன்றாகும். ஆதி இரும்புக்கால தொல்லியல் மையமான பொம்பரிப்பின் வீழ்ச்சிக்குப் பின் அனுராதபுரம் உருவாகி இருக்கலாம் என கலாநிதி இந்திரபாலா கூறியுள்ளார். இத்தொல்லியல் மையம் பொ.ஆ.மு.900 ஆண்டளவில் தோற்றம் பெற்றுள்ளது. ஆதி இரும்புக்கால பண்பாடு தென்தமிழ் நாட்டிலிருந்து இலங்கையின் மேற்குக் கரையோரத்திற்கு பரவி, அங்கிருந்து அனுராதபுரத்திற்கு வந்தது என ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். இலங்கையில் பெருங்கற்கால பண்பாடு நிலவிய அனுராதபுரத்தில் முருக வழிபாட்டின் சின்னமான இரும்பினால் செய்யப்பட்ட வேல் கிடைக்கப் பெற்றுள்ளது. இதன் மூலம் அனுராதபுரத்தில் சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன்பு முருகனின் வேல் வழிபாடு நிலவியுள்ளது எனக் கூறக்கூடியதாக உள்ளது. இது போன்று பொம்பரிப்பு, கந்தரோடை, பூநகரி, பின்வெவ ஆகிய இடங்களிலும் இரும்பினால் செய்யப்பட்ட வேல் சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் அவர்கள் எழுதிய "ஈழத்து இந்து சமய வரலாறு" எனும் நூலில் புராதன இலங்கையில் முதலாவது வழிபாடு யக்ஷ வழிபாடு எனக் குறிப்பிட்டுள்ளார். அதற்கு அடுத்த படியாக நாக வழி பாடும், சிவ வழிபாடும் சிறப்புடன் விளங்கியமை பற்றி யும் பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார். யக்ஷ வழிபாட்டின் விபரங்கள் மற்றும் கோயில்கள் பற்றியும் அந்நூலில் குறிப்பிடப்பட்டிருந்தது. பண்டைய அனுராதபுர நகரில் பண்டுகாபய மன்னனால் வழிபடப்பட்ட சில யக்ஷ தெய் வங்கள் பற்றியும், இந்து தெய்வ வழிபாட்டிற்கு முன் னோடியாக யக்ஷ தெய்வங்கள் விளங்கியதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அனுராதபுரம் பண்டைய நகரில் உள்ள வெஸ்ஸகிரி குகைகளில் சில பிராமிக் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட் டுள்ளன. இவற்றில் நாக எனும் பெயர் பொறிக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் நாக வழிபாடு செய்தவர்கள் இக்குகைப்பகுதியில் இருந்தமை தெரிய வருகிறது. மேலும் சில தமிழ்க் கல்வேட்டுக்களும் அனுராதபுர நகரில் கண் டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றுடன் பல இந்து தெய்வச் சிலைகளும் அனுராதபுரம் பண்டைய நகரில் கண்டெடுக் கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் இங்கு பல இந்துக் கோயில்கள் இருந்தமை பற்றித் தெரிய வருகிறது.

தேவநம்பியதீசன் காலத்தில் (பொ.ஆ.மு.247-207) அனுராதபுரத்தில் பிராமணன் தியவசனின் கோயிலும், அனுராதபுரத்திற்கு வடக்கே பிராமணன் திவக்கனின் கோயிலும் இருந்தது என மகாவம்சம், மகாபோதி வம்சம் ஆகிய நூல்களில் கூறப்பட்டுள்ளது. இக்கோயில்கள் தேவ நம்பியதீசன் பௌத்த சமயத்தைக் தழுவுவதற்கு முன்பு இருந்தவையாகும். பிராமணன் திவக்கன், தியவசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியோரின் கோயில்கள் சிவன் கோயில்களாகத்தான் இருக்க வேண்டும் என வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.

அனுராதபுர நகரில் தமிழ் மன்னன் எல்லாளனின் குல தெய்வக் கோயில் அமைந்திருந்தது. இது பற்றி மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ளது. பொ.ஆ.மு. **145-101** காலப்பகுதியில் மொத்தமாக **44** ஆண்டுகள் எல்லாளன் இலங்கையை ஆட்சி செய்தான். அவனது ஆட்சிக் காலத்தில் நடந்த ஓர் சம்பவம் பற்றி மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் எல்லாளன் தனது தலைநகரில் தன் குல தெய்வத்திற்கு கோயில் அமைத்து, பூஜைகள் செய்து, வழிபட்டு வந்துள்ளான் என எண்ணக் கூடியதாக உள்ளது. அதுமட்டுமல்லாது நான்கு பெருந்தேவர்களுக்கும் கோயில்கள் அமைத்து வழிபட்டு வந்துள்ளான். இவை அன்று அவனது தலைநகரை அல்லது இராச்சியத்தைப் பாதுகாத்த நாற்திசைக் காவற் கோயில்களாக இருந்திருக்க வேண்டும்.

மகாவம்சத்தில் எல்லாளனின் குலதெய்வம் மற்றும் நான்கு பெருந்தேவர்கள் பற்றிக் கூறப்பட்டுள்ள போதும், அந்த தெய்வங்களின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை. மகாவம்சத்தை மொழி பெயர்த்த வில்லியம் கெய்கர் நான்கு பெருந்தேவர்கள் எனப்படுவோர் லோகபாலகர்கள் எனவும், இவர்கள் தத்தரத்தன், விருல்ஹஹன், விபோக்ஷன், வெஸ்ஸவணன் ஆகியோர் எனவும், அடிக்குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இந்து சமய புராணங்கள் நான்கு பெருந்தேவர்கள் எனப்படும் லோகபாலகர்கள் குபேரன், யமன், இந்திரன், வருணன் எனக் கூறுகின்றன. எனவே எல்லாளன் தன் குலதெய்வத்துடன், நாற்திசை கடவுள்களையும் வழிபட்டுள்ளான் எனக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாளனின் சமயவழிபாடுகள் பற்றி மகாவம்சம் சில விபரங்களைத் தருகிறது. இவன் தவறான மார்க்கத்தினை தழுவியவன் எனவும், இவன் தனது ஆட்சியில் பௌத்த மதத்திற்கு ஆதரவு அளித்த போதிலும், தன் பழைய மத நம்பிக்கையைக் கைவிடவில்லை என மகாவம்சம் கூறுகி றது. மகாவம்சம் குறிப்பிடும் தவறான மார்க்கம், பழைய மத நம்பிக்கை என்பன எல்லாளன் கடைப்பிடித்த சைவ சமயத்தையே குறிப்பிடுகின்றது.

பண்டுகாபயன், தேவநம்பியதீசன், துட்டகாமினி, சத் தாதீசன், வட்டகாமினி ஆகிய எல்லா பௌத்த மன்னர்க ளும் அமைத்த தூபிகள் மற்றும் விகாரைகள் அனைத் தையும் ஒன்று விடாமல் குறிப்பிட்ட மகாவம்ச ஆசிரியர், 44 ஆண்டுகள் இலங்கையை ஆட்சி செய்த எல்லாளன் எனும் தமிழ் சைவ மன்னன் கட்டிய சைவக் கோயில்கள் பற்றிக் குறிப்பிடவில்லை. மேலும் 22 ஆண்டுகள் ஆட்சி செய்த தமிழ் மன்னர்களான சேனன், கூத்திகன் மற்றும் 14 ஆண்டுகள் ஆட்சி செய்த 5 தமிழ் மன்னர்களான புல கத்தன், பாகியன், பணயமாறன், பிளையமாறன், தாதியன் ஆகியோர் கட்டிய சைவக் கோயில்கள் பற்றியும் குறிப் பிடவில்லை. 2000 ஆண்டுகளுக்கு முன்பு ஆட்சி செய்த இவர்கள் 8 பேரும் மொத்தமாக 80 ஆண்டுகள் ஆட்சி செய்துள்ளனர். இவர்கள் அமைத்த கோயில்கள் பற்றி மகாவம்சத்தில் குறிப்பிடப்படாவிட்டாலும் இந்த 80 ஆண்டு காலப்பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட சைவக் கோயில்கள் அனுராதபுரம் உட்பட இலங்கை முழுவதி லும் இம்மன்னர்களால் அமைக்கப்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. இக்காலப்பகுதியில் தமிழர்கள் சிவவழி பாட்டில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தமையால் மேற்குறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப்பிட்ட 80 ஆண்டு காலப்பகுதியில் சிவன் ஆலயங்களே இவர்களால் அதிகளவில் அமைக்கப் பட்டிருக்கும்.

இலங்கையை ஆட்சி செய்த தமிழ் மன்னர்களான சேனன், கூத்திகன் ஆகியோரிடமிருந்து ஆட்சியை கைப் பற்றிய அசேலன் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் எல்லாளன் அனுராதபுரத்தைக் கைப்பற்றினான். எல்லாளன் ஆட்சி அமைப்பதற்கு இங்கிருந்த பிராமண, ஜைன, நிக ண்ட (சமணர்) துறவிகளின் ஆதரவு கிடைத்ததாக சிங்கள நூல்கள் கூறுகின்றன. எனவே எல்லாளன் காலத்தில் பிரா மண, ஜைன, சமண துறவிகள் அரச ஆதரவுடன் இருந்து ள்ளனர்.

வட்டகாமினியின் ஆட்சியின் போது ருகுணு இராச் சியத்தில் தீசன் எனும் பிராமணனும், அனுராதபுர இராச் சியத்தில் கிரிநிகண்டர் எனும் சமணத் துறவியும் செல்வா க்கு பெற்று விளங்கினர். இவர்களின் உதவியுடன் 5 தமிழ் மன்னர்கள் ஆட்சியைக் கைப்பற்றி 14 வருடங்கள் ஆட்சி செய்தனர். எனவே இவற்றை எல்லாம் வைத்துப் பார்க்கும் போது மேற்குறிப்பிட்ட தமிழ் சைவ மன்னர்களின் 80 வருட ஆட்சிக் காலப்பகுதியில் ஏராளமான சைவக் கோயி ல்கள் அனுராதபுர இராச்சியத்தில் அமைக்கப்பட்டிருக்கும் என்பது உறுதியாகிறது.

அனுராதபுரம் பண்டைய நகரின் வடக்குப் பகுதியில் சுமார் 600 மீற்றர் அகலமும், 1500 மீற்றர் நீளமும் கொண்ட காட்டுப்பகுதி முழுவதும் கோயில்களின் சிதைவு கள் பரந்து காணப்படுகின்றன. மொத்தமாக இக்காட்டுப் பகுதியில் சுமார் 20 கட்டிடங்களின் இடிபாடுகள் காணப் படுகின்றன. வரலாற்று ஆய்வாளர் எச்.சி.பி. பெல் அவர் களின் ஆய்வுக் குறிப்புகளில் இவற்றை "*Tamil Ruins*" (தமிழர் இடிபாடுகள்) எனக் குறிப்பிட்டுள்ளார். 1000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடங்களுக்கு முன்பு இப்பகுதியில் ஓர் சைவசாம்ராஜ்யம் செழிப்புடன் விளங்கியது என்றால் மிகையாகாது.

அனுராதபுரத்திற்கு அடுத்தபடியாக அதிகமான இந்துக் கோயில்களைக் கொண்ட நகரமாக பதவியா காணப்படுகிறது. சோழர் காலத்தில் ஸ்ரீ பார்வதிபுரம் எனும் பெயருடன் பதவியா சிறப்புற்று விளங்கியுள்ளது. இங்கு மொத்தமாக 5 கோயில்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அனுராதபுரம் மாவட்டத்தில் சுமார் 200 இந்துக் கோயில்கள் காணப்படுகின்றன. இவற்றில் 150 க்கும் மேற்பட்ட கோயில்கள் அழிந்து போய் மண்ணுள் புதையுண்டு கிடக்கின்றன. சில கோயில்கள் பௌத்த விகாரைகளுடன் இணைக்கப்பட்டு "தேவாலய" எனும் பெயரில் பௌத்த மக்களால் வழிபடப்பட்டு வருகின்றன.அனுராதபுரம் மாவட்டத்தில் பரவலாக எல்லா இடங்களிலும் பண்டைய மன்னர்களால் கட்டப்பட்ட குளங்களுக்குப் பாதுகாப்பாக நாகராஜர் மற்றும் பிள்ளையார் சிலைகள் ஸ்தாபிக்கப்பட்டு பூஜைகள் நடைபெற்றுள்ளன. இன்றும் இம்மாவட்டத்தில் சந்திக்கு சந்தி புத்த பகவானின் சிலைகளை விட பிள்ளையாரின் சிலைகளே அதிகளவில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1.அனுராசபுரேசர் சிவன் கோயில்-அனுராதபுரம்

இலங்கையின் மிகப்புராதன ஆலயங்களான நாற்திசை கோயில்களுக்கு அடுத்தபடியாக வரலாற்று ரீதியான ஆதாரம் உள்ள ஆலயம் தான் அனுராதபுரம் சிவன் கோயிலாகும். மிகப் பழமைவாய்ந்த இச்சிவன் கோயில் சுமார் 2300 வருடங்களுக்கு முற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

**பண்டுகாபயன் காலத்தில் அமைக்கப்பட்ட சிவன் கோயில்**

பொ.ஆ.மு.377ல் அனுராதபுரத்தை தலைநகராகக் கொண்டு முதலாவதாக ஆட்சி புரிந்த அரசனான பண்டு காபயன் விஜயனின் வழிவந்த சைவ மன்னனாவான். விஜயனின் தம்பியின் மகனான பண்டுவாசதேவனின் மகள் உம்மத்த சித்ராவின் மகன் தான் பண்டுகாபயன். இவன் முதன் முதலாக அனுராதபுர இராஜதானியை அமைத்து அங்கு ஓர் சிவன் கோயிலைக் கட்டினான் என வரலாற்று நூல்கள் கூறுகின்றன. இச்சிவன் கோயில் பண்டுகாபயனின் காலமான பொ.ஆ.மு.377-307ஆம் ஆண்டு காலப்பகுதியில் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

இச்சிவன் கோயிலைத் தவிர வேறு பல இந்துக் கோயில்களும் அனுராதபுர இராஜதானியில் அமைந்திருக்க இடமுண்டு. ஏனெனில் தேவநம்பிய திஸ்ஸனின் காலத்தில் தான் இலங்கையில் பௌத்த மதம் பரவியது. பண்டு காபயனின் ஆட்சிக்காலம் முதல் தேவநம்பிய திஸ்ஸனின் ஆட்சிக் காலமான பொ.ஆ.மு 250ஆம் ஆண்டு வரை யான சுமார் 150 ஆண்டுகள் அனுராதபுர இராச்சியம் ஓர் இந்து இராச்சியமாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அபய தீர்த்தமும், வெள்ளரசு மரமும் உள்ள இடத்தில் சுயம்பு லிங்கம்**

தக்ஷிண கைலாசபுராணத்தில் "அனுராசபுர மகிமை உரைத்த படலம்" எனும் அத்தியாயத்தில் அனுராசபுரேசர் சிவாலயம் பற்றி பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. "அபயம் எனும் பெயருள்ள பெரிய தீர்த்தமும் (அபய வாவி) வெள் ளரச மரமும் எந்த இடத்தில் இருக்கின்றனவோ அந்த இடத்தில் சுயம்புவாகிய சிவலிங்கம் இருக்கின்றது......"



**அனுராசபுரேசர் சிவாலயத்தின் தீர்த்தமான அபயவாவி குளம்**

அரசன் அவ்விடத்தில் ஒரு நகரத்தைக் கட்டி முடித்து அதற்கு அனுராதபுரம் எனப் பெயரும் இட்டான். அங்கு ள்ள சிவாலயமானது ஆகம விதிப்படி கட்டப்பட்ட பிர காரத்துடன் கூடியது. உயரமான கோபுரத்தோடும், மண் டபங்களோடும், பரிவார தேவர்களோடும் அமைக்கப் பட்டது. அரசன் சுவாமிக்கு அனுராசபுரேசர் என்றும், அம்பிகைக்கு விஜயாம்பிகை என்றும் பெயர் சூட்டினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிக்கு நித்திய பூசைக்கும், நைமித்திய பூசைக்கும் கிராமங்களும், விளை நிலங்களும், திரவியமும் ஏற்படுத்தி வைத்தான் என தக்ஷிண கைலாச புராணம் கூறுகிறது.

**தக்ஷிண கைலாசபுராணம் கூறும் அனுராசபுர மகிமை உரைத்த படலம்**

தக்ஷிண கைலாசபுராணத்தில் இதே அத்தியாயத்தில் இத் திருத்தல மகிமை பற்றி சூதமுனிவர் பின்வருமாறு கூறுகிறார். ஒரு மனிதன் மனதையடக்கி பரிசுத்தமாகி அப யமெனும் மகா தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, சோமவார அமாவாசையில் வெள்ளரச பிரதட்சிணம் செய்து, பிர தோஷ சிவராத்திரியில் உபவாசம் செய்து சிவதரிசனமும் செய்பவராகின் அவர் மனைவி மக்கள் பொருளுடன் இம் மையில் சுகமாக வாழ்ந்து, முடிவில் சுவர்க்கத்தை அடை ந்து, இந்திர செல்வத்தில் முழுகி முத்தியைப் பெறுவர் எனக் கூறுகிறார். இக்கூற்றின் படி இங்கிருந்த அபய வாவி தீர்த்தமும், வெள்ளரசு மர தலவிருட்சமும், சிவ லிங்க மூர்த்தியும் பண்டைய காலத்தில் அனுராதபுரத்தில் கீர்த்தியும், சக்தியும் மிக்கவையாக விளங்கியுள்ளன என்பது தெளிவாகத் தெரிகிறது.

**பண்டுகாபயன் கட்டிய தீர்த்தக் குளம்**

தக்ஷிண கைலாய புராணம் குறிப்பிடும் அபய தீர்த் தம் எனும் அபாயவாவி குளம் இலங்கை வரலாற்றின்படி அமைக்கப்பட்ட முதலாவது குளமாகும். பொ.ஆ.மு 444-414 காலப்பகுதியில் இலங்கை மன்னனாக இருந்த பண்டு வாசுதேவனின் ஏழு மைத்துனர்களில் ஒருவனான அனு ராதன் என்பவனால் அனுராதபுரத்தில் இக்குளம் சிறியதாக அமைக்கப்பட்டது. பின்பு பொ.ஆ.மு 377-307 காலப் பகுதியில் அனுராதபுரத்திலிருந்து இலங்கையை ஆட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து வந்த பண்டுகாபயனால் பெரிதாகக் கட்டப்பட்ட பின் "அபயவாவி" எனப் பெயர் பெற்றது.



**அனுராதபுரத்தில் உள்ள வெள்ளரசு மரம்**

வரலாற்றாய்வாளர் குவைரோஸ் தொண்ணூறு அரசர்கள் ஆண்ட நகரம் என்பதால் "அனுராதபுரம்" என்ற பெயர் பெற்றது என்கிறார். அனுராதபுரத்தில் அதன் முதல் மன்னனான பண்டுகாபயனால் முதன் முதலாக அமைக்கப்பட்ட சிவாலயத்தின் இறைவன் பெயர் "அனுராசபுரேசர்" என்பதால் அந்நாளில் இக்கோயில் அனுரேஸ்வரர் கோயில் என்றழைக்கப்பட்டிருக்க வேண்டும். அனுரேஸ்வரர் கோயில் அமைந்திருந்த இடம் அனுராதபுரம் என அழைக்கப்பட்டிருக்க வேண்டும். கோணேஸ்வரர் கோயில் அமைந்திருந்த இடம் திருகோணமலை என்பது போல, கேதீஸ்வரர் கோயில் அமைந்திருந்த இடம் கேதீஸ்வரம் என்பது போல அனுரேசர் கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திருந்த இடம் அனுராதபுரம் என அழைக்கப் பட்டிருக்க வேண்டும் என ஊகிக்கலாம்.

**பண்டைய சிவாலயம் பற்றிய மேஜர் போர்ப்ஸின் குறிப்பு**

அனுராதபுரம் புனித நகரின் மிக முக்கியமான பகுதி யாக விளங்குவது மஹாவிஹாரை எனப்படும் இடமாகும். மிகப்புராதன காலத்தில் இவ்விடத்தின் முன்பகுதியில் சிவாலயம் ஒன்று அமைந்திருந்தமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன. கருங்கல் நந்தியும் அதனருகில் கொடிமர மும் இங்கு கண்டுபிடிக்கப்பட்டது. 1828ல் இப்பகுதியை ஆய்வு செய்த மேஜர் போர்ப்ஸ் என்பவர் இதுபற்றி பின் வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"காடில்லாமல் இருக்கும் ஒரேயொரு பகுதி மகா விஹாரையின் முன்னுள்ள பகுதியாகும். இப்பகுதியில் ஒரு சதுரத்தில் நிழல் தரும் மரம் ஒன்று நிற்கிறது. இங்கு 14 அடி உயரமுள்ள தூணொன்றின் அருகில் ஓர் அச்சில் சுழலும் கருங்கல் காளை ஒன்று உண்டு. இவையனைத்தும் இங்கே ஓர் சிவன் கோயில் இருந்ததென்பதைக் காட்டு கின்றது. இக்கல்தூண் எல்லா சைவக் கோயில்களிலும் நந்தியின் அருகில் காணப்படும் கொடித்தம்பமாக இருக் கலாம்" இவ்வாறு மேஜர் போர்ப்ஸ் தனது குறிப்பில் எழுதியுள்ளார். இக்குறிப்பின் மூலம் வெள்ளரசு மரம் இரு க்கும் மகாவிஹாரைப் பகுதியின் முன்பக்கம் பண்டைய சிவாலயம் இருந்தமை உறுதியாகிறது.

தக்ஷிணகைலாய புராணத்தில் கூறப்பட்டுள்ள படி இத்தனை தொன்மை வாய்ந்த அனுராசபுரேசர் ஆலயத் தின் புனித தீர்த்தமான அபயவாவியும், தலவிருட்சமான வெள்ளரசு மரமும் இன்றும் அனுராதபுரத்தில் காணப்ப டும் நிலையில் இவ்வாலயத்தின் மூர்த்தியான, சுயம்புவான சிவலிங்கம் மட்டும் எங்கோ மறைந்து கிடக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.சித்தராஜன் கோயில்-அனுராதபுரம்

அனுராதபுரத்தை தலைநகராக அமைத்து ஆட்சி செய்த முதல் மன்னனான பண்டுகாபயன் ஆட்சி செய்த பொ.ஆ.மு.377-307 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பௌத்த சமயம் இலங்கையில் இருக்கவில்லை.



**அனுராதபுரத்தில், அபயகிரி பகுதியில் காணப்படும் யக்ஷனின் சிற்பம் (கையில் குழந்தையுடன்)**

இந்தக் காலப் பகுதியில் இலங்கையில் இருந்த ஒரே சமயமானது இந்து சமயமாகும். யக்ஷ எனும் இயக்கர் களின் சமய நம்பிக்கைக்கு ஆதரவளித்த பண்டுகாபயன் அனுராதபுர இராஜதானிக்குள் இயக்கர்களுக்காகவும், தனது வழிபாட்டுக்காகவும் பல யக்ஷ, யக்ஷி கோயில்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைத்தான். இயக்கர் தெய்வமான சித்தராஜ கடவுளுக்கு ஒரு கோயில் அமைத்துக் கொடுத்தான் என மகாவம்சம் கூறுகின்றது. அபயவாவியின் கீழ்க்கரையில் சித்தராஜன் கோயில் அமைக்கப்பட்டிருந்தது.அனுராதபுரத்தின் முதலாவது குளமான அபயவாவி குளத்திற்கு காவலாக குளத்தின் கிழக்குக் கரையில் சித்தராசனை பண்டுகாபயன் அமர்த்தி வழிபட்டான் எனக் கூறப்படுகிறது.

சித்தராஜன் நீருக்குரிய தெய்வம் என பேராசிரியர் பரணவிதான, பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர். பிற்காலத்தில் வந்த நீருக்குரிய கடவுளான வருணனை ஒத்த தெய்வமாக சித்தராஜ யக்ஷ தெய்வம் இருக்க வேண்டும். சித்தராஜன் எனும் பெயர் மனதிற்கு அதிபதி எனும் பொருளைக் கொண்டிருப்பதாலும், மன்மதனின் பெயரான மனோபவ என்ற பெயரின் பொருளை ஒத்ததாக இருப்பதாலும் இத்தெய்வம் மன்மதன் அல்லது காமதேவன் ஆகிய தெய்வங்களைப் போன்ற யக்ஷ தெய்வம் எனவும் சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

## 3.காளவேலன் கோயில்-அனுராதபுரம்

பண்டுகாபய மன்னனால் காளவேலன் எனும் யக்ஷ தெய்வத்திற்காகக் கட்டப்பட்ட இன்னுமோர் கோயில் நகரின் கிழக்குப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்ததாக மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. யக்ஷ தெய்வங்கள் பற்றிக் கூறும் ஆய்வாளர் ராகுல, காளவேல தெய்வம் தொடர்பான செய்திகள் யக்ஷ வழிபாட்டின் ஓர் அம்சமாகிய ஆன்றோர் வழிபாட்டைக் குறிக்கும் எனக் கூறியுள்ளார்.

பண்டுகாபய மன்னன் காளவேலனுக்கு இன்னுமொரு கோயிலும் அமைத்து வழிபட்டதாக திம்புலாகல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு கூறுகிறது. பொலநறுவை மாவட்டத்தில் உள்ள தோலபர்வத மலையில் இக்கோயில் கட்டப்பட்டது. தோலபர்வத என்பது திம்புலாகல மலையின் பண்டைய பெயராகும்.

## 4.வைஷ்ரவண யக்ஷ கோயில்–அனுராதபுரம்

பண்டுகாபய மன்னன் காலத்தில் யக்ஷர்களின் தலைவனான வைஷ்ரவணனுக்கு அனுராதபுரத்தில் கோயில் கட்டி வழிபடப்பட்டமை பற்றி மகாவம்சம் கூறுகிறது.



**அனுராதபுரத்தில், தக்கிண்ண தூபியில் காணப்படும் வைஷ்ரவணன் சிற்பம்**

நகரத்தின் மேற்கு வாயிலில் ஆலமரத்தின் கீழ் இக் கோயில் அமைக்கப்பட்டிருந்தது. காவல் தெய்வமாக விளங்கிய வைஸ்ரவணன் தான் செல்வத்தின் அதிபதியான குபேரன் எனவும் சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அனுராதபுரத்தில் தக்கிண்ண தூபியில் வைஷ்ரவணனின் சிற்பம் ஒன்று காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5.புரதேவன் கோயில்-அனுராதபுரம்

அனுராதபுர நகரைப் காக்கும் தெய்வமே புரதேவன் எனும் யக்ஷ தெய்வமாகும். புரம் என்பது நகரத்தைக் குறிப்பதால் நகரத்தின் தேவன் எனும் பொருளில் புரதேவ எனும் பெயர் வழங்கப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படு கிறது. இப்புரதேவனின் கோயில் பற்றி ஹென்றி பாக்கர் தனது"*Ancient Ceylon*"எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். புரதேவனின் கோயில் இடுகாட்டின் வடக்குத் திசையில் இருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். கோட்டை இராச்சிய காலப்பகுதியில் இலங்கையில் இருந்த நகரீசர் எனும் சிவன், நகரத்தைக் காக்கும் கடவுளாகும். எனவே பண்டைய காலத்து புரதேவனே பின்பு வழிபடப்பட்ட நகரீசருக்கு முன்னோடியாக இருந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

**எல்லாளன் காலத்தில் இருந்த கோயில்**

நகரத்தைக் காக்கும் தெய்வம் பற்றி எல்லாளன் காலத் திலும் ஓர் குறிப்பு காணப்படுகிறது. எல்லாளன் போரில் இறந்த பின்பு அவனின் மருமகனான பாலுகன் அனுராத புரத்திற்கு படை எடுத்து வந்து துட்டகைமுனுவின் படை களோடு போர் செய்து கொண்டிருந்தபோது துட்டகை முனுவின் யானை பின் வாங்கியது. அப்போது மகா விஹாரை எல்லைக்குள் இருந்த நகரின் காவல் தெய்வத் தின் கோயில் அருகே துட்டகாமினி உறுதியுடன் நின்று கொண்டிருந்தான் என மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ளது. இக்குறிப்பின் மூலம் பண்டுகாபயன் காலத்திலிருந்த நகர த்தை காக்கும் தெய்வத்தின் கோயில் எல்லாளன்-துட்டகை முனு காலத்திலும் இருந்தது எனக் கூறலாம். பண்டைய காலம் முதல் இலங்கையில் இருந்த இராச்சியங்களிலும், தலைநகரங்களிலும் நாற்திசைக் காவற் கோயில்கள் இருந் தமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6.வியாத தேவன் கோயில்-அனுராதபுரம்

அனுராதபுரத்தில் வியாததேவ எனும் யக்ஷ தெய்வத்திற்கும் கோயில் அமைத்து வழிபடப்பட்டது பற்றிய குறிப்புகள் உள்ளன. இது வேட்டைதெய்வம் எனக் கருதப் படுகிறது. இந்த தெய்வத்தை சில அறிஞர்கள் வியாதி தேவ எனக் குறிப்பிட்டு, இது நோய்களைக் குணப்படுத் தும் தெய்வம் எனக் கூறுகின்றனர்.



**அனுராதபுரத்தில், அபயகிரியில் காணப்படும் யக்ஷனின் சிற்பம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த தெய்வம் இடுகாட்டிற்கு அருகில் இருந்ததாக வும், இதன் உறைவிடம் பனைமரம் எனவும் குறிப்பி டப்பட்டுள்ளது. இலங்கையின் புராதன தெய்வங்கள் பற்றி ஆராய்ந்த ஹென்றி பாக்கர் இந்த வேட்டை தெய்வ வழிபாடானது தென்னிந்தியாவிலிருந்து பழங்குடி மக்க ளால் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டது எனக் குறிப் பிட்டுள்ளார். புராதன காலம் முதல் தென்னிந்தியாவின் கிராமங்களில் காவல் தெய்வமாக வழிபடப்படும் கருப்ப ண்ணசாமி கடவுள் ஒற்றைப் பனை மரத்தில் உறைந்தி ருப்பார் எனவும் முதியவர்கள் கூறுவது இங்கே குறிப் பிடத்தக்கது.

## 7.தென்திசை யக்ஷி கோயில்-அனுராதபுரம்

பண்டுகாபயனால் அனுராதபுரத்தின் தென்திசை வாச லில் இவ்வாலயம் அமைக்கப்பட்டிருந்தது. இயக்கர் குலத் திற்காக அவர்களின் குலதெய்வமான யக்ஷி எனும் இயக்கி அம்மனுக்காக இக்கோயில் அமைத்துக் கொடுக்கப் பட் டது. இந்த யக்ஷியின் பெயர் என்னவென்று குறிப்பிடப் படவில்லை.

இந்த யக்ஷியின் தலைக்கு அருகில் படமெடுத்த வண் ணம் ஐந்து தலை நாகம் காணப்படுகிறது. ஒரு கையை இடுப்பில் வைத்தவாறும், மறுகையில் தாமரை மலர்களை ஏந்தியவாறும் இந்த யக்ஷியின் வடிவம் காணப்படுகிறது.

இந்த யக்ஷியின் தலைக்கு அருகில் நாகத்தின் வடிவம் காணப்படுவதால் இது நாகேஸ்வரி, நாகபூஷணி ஆகிய தெய்வங்களுக்கு முன்னோடியாக இருந்திருக்கலாம் என வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அனுராதபுரத்தில் ஜேதவனாராம தூபியின் அருகில் காணப்படும் யக்ஷினியின் சிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8.சேதியா (வடவாமுகி) யக்ஷி கோயில்-அனுராதபுரம்

பண்டுகாபய மன்னன் தனது அரண்மனைக்குள்ளே சேதியா எனும் யக்ஷ தெய்வத்திற்கு கோயில் அமைத்து வழிபட்டான் என மகாவம்சம் கூறுகிறது.



**அனுராதபுரத்தில் கிடைத்துள்ள தலையற்ற யக்ஷினியின் சிலை**

இந்த யக்ஷி வடவாமுகி எனப் பெயர் பெற்றிருந் தாள். வடவாமுகி என்பது குதிரை முகத்தை உடையவள் எனும் அர்த்தத்தைக் கொண்டதாகும். பண்டுகாபயன் தன் மாமனாருடன் போர் புரிந்தபோது இந்த தெய்வம் அவனு க்குத் துணையாக இருந்ததாகவும் தெரியவருகிறது. பண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காபயன் இந்த யக்ஷினிக்கும், தான் கோயில் கட்டி வண ங்கிய ஏனைய யக்ஷ தெய்வங்களுக்கும் ஒவ்வொரு வருடமும் பலி கொடுத்து பூஜைகள் செய்து வந்தான்.

## 9.கிழக்கு வாசல் யக்ஷி கோயில்-அனுராதபுரம்

பண்டுகாபயனால் அனுராதபுர நகரின் கிழக்கு வாசலில் ஓர் யக்ஷி கோயில் அமைக்கப்பட்டதாக மகா வம்சம் கூறுகிறது. எனினும் இந்த யக்ஷியின் பெயர் குறிப் பிடப்படவில்லை. அனுராதபுர நகரின் காவல் தெய்வங்க ளில் ஒன்றாக இந்த யக்ஷி தெய்வம் இருந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது.



**ஜேதவனராம தூபியின் அருகில் உள்ள யக்ஷினியின் சிற்பம்**

இந்த யக்ஷி தெய்வங்கள் நகரின் காவல் தெய்வங்க ளாக இருந்ததினால் தான் பிற்காலத்தில் இந்நகரில் பௌத்த சமயம் பரவிய போதும் பழையகாவல் தெய்வங் களின் உருவங்கள் ஜேதவனாராம, அபயகிரி போன்ற மிகப்பெரிய பௌத்த விகாரைகளில் சிற்பங்களாக வடிக் கப்பட்டன என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10.பச்சிமராஜினி யக்ஷி கோயில்- அனுராதபுரம்

பண்டுகாபயனால் அனுராதபுர நகரின் மேற்கு வாசலில் ஒர் யக்ஷி கோயில் அமைக்கப்பட்டதாக மகாவம்சம் கூறுகிறது. இங்கிருந்த யக்ஷியின் பெயர் பச்சிமராஜினி என்பதாகும். இக்கோயில் பற்றிய ஏனைய தகவல்கள் எங்கும் குறிப்பிடப்படவில்லை.



**அபயகிரி தாதுகோபத்தின் அருகில் காணப்படும் யக்ஷியின் சிற்பம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11.கம்மார தேவன் கோயில்-அனுராதபுரம்

அனுராதபுரத்தில் குடிகொண்டிருந்த இன்னுமோர் யக்ஷ தெய்வத்தை கம்மார தேவன் என அழைத்தனர். இத்தெய்வம் கொல்லர்களின் அல்லது தொழிலாளர்களின் தெய்வம் எனக் கூறப்படுகிறது. மகாபோதி வம்சம் எனும் நூலில் இத்தெய்வ வழிபாடு தேவநம்பிய தீசனின் காலம் வரை இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

தேவநம்பியதீசன் அனுராதபுரத்தில் பௌத்த சங்கத்தை அமைப்பதற்கு உரிய இடத்தைத் தேர்ந்தெடுத்த போது,அவ்விடம் கம்மார தேவனின் கோயிலருகே அமைந்திருந்ததாகவும் அந்நூலில் கூறப்பட்டுள்ளது. பண்டுகாபய மன் னன் காலத்தில் வழிபடப்பட்ட யக்ஷ தெய்வங்கள் பற்றி பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தனது நூல்களில் குறிப்பிட் டுள்ளார்.

# 12.திஸ்ஸவாவி காவற் கோயில்-அனுராதபுரம்

பண்டைய அனுராதபுர நகரில் முக்கியத்துவம் வாய்ந்த இரு குளங்களில் திஸ்ஸவாவியும் ஒன்றாகும். அபாய வாவி குளத்திற்கு காவலாக சித்தராஜன் எனும் யக்ஷ தெய்வத்தை ஸ்தாபித்தது போல, இன்னுமோர் முக்கிய குளமான திஸ்ஸவாவி குளத்திற்கும் ஓர் காவல் கோயில் அமைக்கப்பட்டிருக்கும் என பேராசிரியர் பரணவிதான குறிப்பிட்டுள்ளார்.

திஸ்ஸவாவி தெய்வம் பற்றி பொ.ஆ.10ஆம் நூற்றாண்டில் பொறிக்கப்பட்ட 4ஆம் மகிந்தனின் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளதாக பேராசிரியர் பரணவிதான குறிப்பிட்டுள்ளார். இக்கல்வெட்டில் பௌத்த மதத்தை இலங்கைக்குக் கொண்டு வந்த மகிந்ததேரர் திஸ்ஸவாவியில் இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**திஸ்ஸவாவி குளம்**

யக்ஷ தெய்வ வழிபாட்டை பௌத்த வழிபாடாக மாற்ற முயற்சி செய்தார் எனக் கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் அபயவாவிக்கு ஓர் காவல் தெய்வம் இருந்தது போல திஸ்ஸவாவிக்கும் ஓர் காவல் தெய்வம் இருந்துள்ளது என லாம். இந்த யக்ஷ தெய்வத்தின் பெயர் மகாவம்சத்தில் குறிப்பிடப்படவில்லை.

## 13.மகேஜ சிவன் கோயில்-அனுராதபுரம்

அனுராதபுரம் புராதன நகரின் வடக்கில் கட்டப் பட்டுள்ள தூபராம தாதுகோபம் இருந்த இடத்தில் இச் சிவன் கோயில் அமைந்திருந்தது. இது இயக்கர்களின் வழி பாட்டுத் தலமாகும்.

**பண்டுகாபயன் காலத்தில் பண்டைய இலங்கையில் இந்து சமயம்**

பொ.ஆ.மு. 4ஆம் நூற்றாண்டில் அனுராதபுரத்தை முதன்முதலாக தலைநகராகக் கொண்டு ஆட்சிசெய்த பண் டுகாபயன் காலத்தில் பல இந்துக் கோயில்கள் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றன. இக்காலப்பகுதியில் அனுராதபுரத்தில் அமைக்கப்பட்ட இந்து ஆலயங்களில் மகேஜ சிவன் கோயிலும் ஒன்றாகும். இக்காலத்தில் பண்டைய இலங்கையில் இந்து சமயம் மட்டுமே இருந்தது என்பதும், பண்டுகாபயன் பண்டைய இந்து சமயத்தைத் தழுவிய ஓர் மன்னன் என்பதும் குறிப்பிடத்தக்கது.



**தூபராம தாதுகோபம்**

பொ.ஆ.மு. *3*ஆம் நூற்றாண்டில் தேவநம்பியதீசன் அனுராதபுரத்திலிருந்து ஆட்சி செய்த காலத்திலேயே பௌத்தமதம் இங்கு அறிமுகப்படுத்தப்பட்டது. அப்போது மகேஜ சிவன் கோயில் இருந்த இடத்தில் தூபராம தாதுகோபம் கட்டப்பட்டது. பௌத்தம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆரம்ப காலத்தில் பண்டைய இந்து சமய வழிபாடான யக்ஷ வழிபாடு செல்வாக்குப் பெற்றிருந்த இடங்களில் தான் பௌத்த தாது கோபங்கள் கட்டப்பட்டன என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகேஜ கோயில் இருந்த இடத்தில் தூபராம தாதுகோபம்

பொ.ஆ.4ஆம் நூற்றாண்டில் யக்ஷன் காலவேலன் கோயில் அமைந்திருந்த இடத்தில் தாதுகோபம் ஒன்று கட்டப்பட்டதென மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. யக்ஷ மகேஜன் கோயில் இருந்த இடத்தில் தான் ஈழத்தின் முதல் தாதுகோபமான தூபராம கட்டப்பட்டதாக பேராசிரியர் பரணவிதானவும் குறிப்பிட்டுள்ளார்.

யக்ஷ தெய்வங்களில் ஒன்றான இந்த மகேஜனது கோயில் அனுராதபுரத்தில் கடம்பவனத்தில் காணப்பட்டதோடு, தேவநம்பியதீசனின் காலத்தில் தூபராம தாது கோபம் இங்கு கட்டப்பட்டபோது இது அதனுள் மறைந்து போய்விட்டது எனவும், கடவுளர் எல்லோரிலும் முதன்மையானவர் எனப் பொருள் தரும் "மகேஜ" எனும் பதம் சிவனுக்குரியது எனவும், பாளி மொழி நூல்களில் இது "மகேச" என இடம் பெற்றுவிட்டது எனவும் பேராசிரியர் சி.க.சிற்றம்பலமும் கூறியுள்ளார்.

## இரண்டு பெண் தெய்வச் சிலைகள்

தூபராம தாதுகோபம் அமைக்கப்பட்டிருக்கும் இடத்தில் இரு பெண் தெய்வச்சிலைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. முழுமையான சிலையொன்றும், தலை மட்டும் உள்ள சிலையின் பாகமொன்றும் கிடைக்கப் பெற்றுள்ளது. இவை "மைத்திரி" எனும் பெண் தெய்வத்திற்குரியவை எனக் கூறப்படுகிறது. மைத்திரி என்பது தக்ஷனுக்கு பிரசூதியிடம் உதித்த பெண்களில் ஒருத்தி. அதாவது தக்ஷனின் மகள் எனவும், யமனின் தேவி எனவும் பொருள் படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14.சிவிகசாலை சிவன் கோயில்-
# அனுராதபுரம்

அனுராதபுரத்தின் முதல் மன்னனான பண்டுகாபய னால் பொ.ஆ.மு. 377-307 காலப்பகுதியில் இரண்டு மடா லயங்கள் அனுராதபுர நகரில் அமைக்கப்பட்டன. அவை சிவிகாசாலை, சொத்திசாலை என்றழைக்கப்பட்டன. இவற் றில் சிவிகாசாலை சிவலிங்கங்களைக் கொண்ட வழி பாட்டுத் தலமாக இருந்தது. சொத்திசாலை பிராமணர்கள் வேதம் ஓதுவதற்காக அமைக்கப்பட்ட மடாலயமாகும்.

## பண்டுகாபயன் கட்டிய சைவ மடாலயங்கள்

"சிவிகாசாலை", "சொத்திசாலை" பகுதிகளில் பிரா மணர்கள் வாழ்ந்து வந்துள்ளனர். சிவிகாசாலை முக்கிய சிவ வழிபாட்டுத் தலமாக இருந்துள்ளது. இக்கோயிலின் உண்மையான பெயர் எதுவென்ற விபரங்கள் கிடைக் கவில்லை. மேலும் இவ்வாலயங்கள் இங்கு வாழ்ந்து வந்த தமிழ் வணிகர்களின் போஷிப்பையும் பெற்றுள்ளன. இக்காலப் பகுதியில் தமிழ் வணிகர்கள் அனுராதபுரத்தில் வாழ்ந்து வந்தமைக்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

## தமிழ் வர்த்தகர்களின் அலுவலகம்

பொ.ஆ.மு.1ஆம்,2ஆம் நூற்றாண்டுகளில் அனுராதபுர நகரில் வர்த்தகத்தில் ஈடுபட்டுவந்த தமிழ் வணிகர் குழு வொன்று இந்நகரத்தில் ஓர் முக்கிய கட்டிடமொன்றை அமைத்திருந்தது. வணிகக் குழுவினரின் அங்கத்தவர்கள் கூடி வர்த்தகம் சம்பந்தமான விடயங்களை ஆராய்ந்து, கலந்து பேசி தீர்மானங்கள் எடுக்கும் ஓர் வர்த்தக அலுவ லகமாக இது பயன்படுத்தப் பட்டுள்ளது. இக்கட்டிடம் இயற்கையாக இங்கு அமைந்திருந்த பாறையை நன்கு செதுக்கி அதை அடித்தளமாகக் கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாறையின் மீது கம்பங்கள் நடப்பட்டு கூரை அமைக்கப்பட்டிருந்தது. இக்கூரை பிற்காலத்தில் அழிந்து போயுள்ளது. இருப்பினும் அடித்தளமான பாறை இன்றும் நல்ல நிலையில் காணப்படுகின்றது.



**அனுராதபுரத்தில் 2000 வருடங்களுக்கு முற்பட்ட தமிழர்களின் வர்த்தக அலுவலகத்தின் எஞ்சிய பகுதி**

செதுக்கப்பட்ட பாறை மீது கம்பங்கள் நாட்டப்படுவதற்காகத் தோண்டப்பட்ட குழிகளையும் காணக்கூடியதாக உள்ளது. வர்த்தகக் குழுவின் அங்கத்தவர்களும், அதிகாரிகளும் அமர்வதற்காகப் பாறைமீது சில படிக்கட்டுக்களும் செதுக்கப்பட்டுள்ளன. இப்படிக்கட்டுக்கள் வணிக அதிகாரிகளினதும், அங்கத்தவர்களினதும் ஆசனங்களாகப் பயன் படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு அதிகாரிக்கும் தனித்தனி ஆசனங்கள் நிரந்தரமாகவே அமைக்கப்பட்டுள்ளன. இப் படிக்கட்டுகளில் அமரவேண்டிய அதிகாரிகளின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



94

## அனுராதபுரம் கல்வெட்டு

படிக்கட்டுக்களுக்கு மேலே பிராமிக் கல்வெட்டு ஒன்றும் பொறிக்கப்பட்டுள்ளது. இது தமிழ்க் குடும்பத் தலைவன் பற்றிய ஓர் கல்வெட்டாகும். இக்கல்வெட்டில் "இல்லு பரதனான தமிழன் சமன மூலம் அமைக்கப்பட்ட தமிழ் குடும்பத் தலைவனின் மடம்" என எழுதப்பட்டு படிகளில் சிலரின் பெயர்கள் பின்வருமாறு பொறிக்கப் பட்டுள்ளது. "சகவின் ஆசனம், நசடவின் ஆசனம், க...திசனின் ஆசனம் , .. .. ..ஆசனம், குபிர சுஜாதாவின் ஆசனம், கப்பலோட்டி காரவனின் ஆசனம்". இக்கல் வெட்டு *Inscriptions of Ceylon-Volum-1* எனும் நூலில் 94 வது கல்வெட்டாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

**இலங்கையிலுள்ள தமிழர் பாரம்பரியச் சின்னங்களில் மிகப் புராதனமான சின்னம்.**

இக்கட்டிடம் அதி முக்கியத்துவம் வாய்ந்த தமிழர்களின் பாரம்பரியச் சின்னமாகும். இரண்டாயிரம் வருடங்களுக்கு முற்பட்ட காலங்களில் தமிழர்களால் அமைக்கப் பட்ட கட்டிடத்தின் பாகங்கள் எதுவும் இதுவரை தமிழ் நாட்டில் கூடக் கிடைக்கப் பெறவில்லை. ஆனால் அது இலங்கையில் கிடைத்துள்ளபடியால் அதி முக்கியத்துவம் வாய்ந்த தமிழர்களின் கட்டிடமாகக் கருதப்படுகிறது. மேலும் இலங்கையிலுள்ள தமிழர் பாரம்பரியச் சின்னங்களில் மிகப் புராதன சின்னமாகவும் இது கருதப்படுகின்றது. இதன் மூலம் அனுராதபுர நகரில் 2000 வருடங்களுக்கு முற்பட்ட காலத்தில் தமிழ் வணிகர்கள் வாழ்ந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி ஆதாரபூர்வமாகத் தெரிய வந்துள்ளது. மேலும், இவர்களால் சிவிகாசாலை எனும் சிவன் கோயிலும், சொத்திசாலை போன்ற சைவ மடாலயங்களும், இங்கிருந்த சைவக் கோயில்கள் அனைத்தும் பரிபாலிக்கப்பட்டும் தானதர்மங்கள் வழங்கப்பட்டும் வந்திருக்க வேண்டுமென்பது வரலாற்று உண்மையாகும்.

## 15.ஜேதவனாராம நாகராஜர் கோயில்-அனுராதபுரம்

பண்டைய அனுராதபுர நகரில் யக்ஷ வழிபாடு அதிகளவில் காணப்பட்டது போல் நாக வழிபாடும் பரவலாக இருந்தமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன.



**ஜேதவனாராம பகுதியில் உள்ள நாகராஜ சிற்பம்**

பௌத்த சமயம் இலங்கையில் பரவிய காலத்தில் அனுராதபுர நகரில் பல நாகராஜர் கோயில்கள் இருந்துள்ளன. ஜேதவனாராம பகுதியில் பல நாகராஜ மற்றும் நாகினி சிற்பங்கள் காணப்படுகின்றமை மூலம் இக்கூற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியாகின்றது. இவற்றில் நாகராஜர் மற்றும் நாகினி ஆகிய தெய்வங்கள் ஐந்து தலை நாகத்தின் கீழ் நின்று கொண்டிருப்பது போன்ற சிற்பங்களே அதிகளவில் காண ப்படுகின்றன.




**ஜேதவனாராம பகுதியில் காணப்படும் நாகராஜர் மற்றும் ஏழுதலை நாகத்தின் சிற்பம்**

## 16.அபயகிரி நாகராஜர் கோயில்-அனுராதபுரம்

அபயகிரி விகாரைப் பகுதியிலும் நாக வழிபாடு நில வியமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன. இங்கும் பல நாகராஜர் சிற்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. அனுராத புரத்தின் வடக்குப் பகுதியில் நாக வழிபாடு சிறப்புடன் விளங்கியதாக நூல்கள் கூறுகின்றன. அபயகிரி விகாரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளாகம் அனுராதபுரத்தின் வடக்குப் பகுதியில் இருப்பது குறிப்பிடத்தக்கது.



**அபயகிரி விகாரைப் பகுதியில் உள்ள நாகராஜர், நாகினி, ஐந்துதலை நாகம் ஆகியவற்றின் சிற்பங்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17.பிராமணன் தியவசனின் கோயில்-
# அனுராதபுரம்

பண்டைய அனுராதபுர நகரில் பிராமணன் தியவச னின் கோயில் இருந்தது பற்றி மகாபோதிவம்சம் எனும் நூலில் கூறப்பட்டுள்ளது. இக்கோயில் பொ.ஆ.மு.247-207 காலப்பகுதியில் தேவநம்பியதீசன் இலங்கையை ஆட்சி செய்த போது அனுராதபுர நகரில் இருந்துள்ளது.

அனுராதபுர நகரில் பௌத்தமத வழிபாட்டிடங்களை அமைப்பதற்கான எல்லையை மன்னன் நிறுவியபோது, அவ்வெல்லைக்கோடு பிராமணன் தியவசனின் கோயிலுக்கு அருகில் சென்றதாக அந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்குறிப்பின் மூலம் பிராமணன் தியவசன் ஓர் கோயி லைப் பராமரித்து வந்துள்ளான் என்பது தெரிகிறது.

# 18.தாய் நவரட்ணவல்லி காளி கோயில்-
# அனுராதபுரம்

இலங்கையில் விரல் விட்டு எண்ணக்கூடிய மிகப் புராதன கோயில்களில் தாய் நவரட்ணவல்லி காளி கோயி லும் ஒன்றாகும். இக்கோயில் மிகவும் சக்திவாய்ந்த கோயி லாக இருந்துள்ளது.பொ.ஆ.மு. 3ஆம் நூற்றாண்டில் அனு ராதபுரத்தில் வாழ்ந்த சைவமக்களால் திறந்தவெளிக் கோயி லாக ஒரு தில்லை மரத்தின் கீழ் இக்கோயில் வழிபாடு கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் அருகில் இருந்த காடும் கோயிலுக்குரியதாக இருந்துள்ளது.

**திறந்தவெளி மரக்கோயிலில் தாய்க்கு கொடுக்கப்படும் உயிர்ப் பலிகள்**

இன்று ருவன்வலிசாய தாதுகோபம் கட்டப்பட்டி ருக்கும் இடமே புராதன தாய் நவரட்ணவல்லி காளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் இருந்த இடமாகும். இம்மரக் கோயிலில் பல் வேறு நேர்த்திகள் மக்களால் வைக்கப்பட்டு அவற்றை நிறைவேற்றும் பொருட்டு தாய்க்கு உயிர்ப்பலிகள் கொடுப் பதும் வழக்கமாக இருந்தது. ஆதிமரக் கோயிலான இது அமைந்திருந்த இடத்தை பொ.ஆ.மு 246 ஆம் ஆண்டில் அனுராதபுத்திற்கு வந்த மகிந்ததேரர் ருவன்வலி தாது கோபம் அமைக்கத் தேர்ந்தெடுத்தார். அதன்பின் அங்கு தாதுகோபம் அமைக்க திட்டங்கள் தீட்டப்பட்டன.



**அனுராதபுரத்தில் உள்ள ரட்னவல்லி (ருவன்வலி) தாதுகோபம்**

அதன் காரணமாக ஆவேசமடைந்த இத்தாய் கொள் ளை நோயை இப்பகுதியில் பரப்பினாள் என்றும், இத னால் மக்கள் இங்கிருந்த தில்லை மரத்தை வெட்டவிட வில்லை என்றும் தெரிய வருகிறது. இக் கோயிலில் இரு ந்த லிங்கக் கல்லில் ஞானவாக்கு ஒன்று காணப்பட்டது. இவ்வாக்கின்படி இத்தாய்க்குரிய உயிர்ப்பலிகள் கொடுக் கப்பட்டு, இக்கோயிலும், அதற்குரிய காடும் அழிக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டு ருவன்வலிசாய தாதுகோபம் அமைக்கப்பட்டது. இதன் பகுதிகள் பேணப்பட்டுள்ளனவாகத் தெரிகிறது.

தாய் நவரட்ணவல்லி காளி கோயிலை அழித்து தாது கோபம் கட்டப்பட்டமையால் பிற்காலத்தில் அனுராத புரத்தை ஆக்கிரமித்த தமிழ்ப்படைகள் ருவன்வலிசாய தாதுகோபத்தை அழித்துப் பழி தீர்த்துக் கொண்டனர் என ஆய்வாளர் *H.*நெவில் தனது ஆய்வுக் குறிப்பில் தெரிவித் துள்ளார்.

## 19.ஈஸ்வரமுனி சிவன் கோயில்-அனுராதபுரம்

அநுராதபுரம் புராதன நகரில் திஸ்ஸவாவியின் கிழக் குக் கரையில் இசுருமுனிய விஹாரை அமைந்துள்ளது. அநுராதபுரத்திலிருந்து குருநாகல் செல்லும் வீதியில் உள்ள தக்கிண்ண தூபி எனும் எல்லாளன் சமாதிக்கும், வெஸ்ஸ கிரிய குகைகளுக்கும் இடையில் இவ்விஹாரை அமைந்து ள்ளது. இதுவே 2000 வருடங்களுக்கு முற்பட்ட காலத்தில் சிவனுக்கு ஸ்தாபிக்கப்பட்ட முன்னீஸ்வரம் எனும் குடை வரைக் கோயிலாகும். பின்பு இக்கோயில் ஈஸ்வரமுனி என அழைக்கப்பட்டு தற்போது இசுருமுனிய எனத் திரிபடைந் துள்ளது.

**இராவணன் தன் தாய் தந்தைக்காக கட்டிய கோயில்**

இசுருமுனிய எனும் இவ்விடம் பல நூற்றாண்டுகளு க்கு முன்பு இராவணனுடன் தொடர்பு பட்டுள்ளது என பண்டைய ஓலைச் சுவடிகள் கூறுகின்றன."ராவண கத்தா" (இராவணனின் கதை)எனும் பண்டைய ஓலைச்சுவடிகளில் இராவணனின் தந்தையான விஷ்ரவசு முனிவர், தாய் கைகேசி ஆகியோரின் நினைவாக இராவணன் இசுரு முனிய கோயிலைக் கட்டி, தனது தாய் தந்தையை வழி பட்டான் எனக் கூறப்பட்டுள்ளதாக கலாநிதி மிருண்டோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒபேசேகர தனது நூலில் கூறிப்பிட்டுள்ளார். இசுருமுனிய கோயிலின் அருகில் உள்ள வெஸ்ஸகிரி குகையில் இராவணின் தந்தையான விஷ்ரவசு முனிவரின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளதாகவும், இவர் வாழ்ந்த இடமே வெஸ்ஸகிரி எனவும் கலாநிதி சூர்ய குணசேகர, ஆய்வாளர் தனேஷ் கொடிப்பிலி ஆரச்சி ஆகியோர் தமது நூல்களில் கூறியுள்ளனர்.

## எல்லாளன் புனரமைத்த சிவன் கோயில்

இராவணனின் தன் தாய் தந்தையின் நினைவாகக் கட்டிய கோயிலை எல்லாளன் ஓர் சிவன் கோயிலாக புனரமைத்தான் என கலாநிதி மிருண்டோ ஒபேசேகர தான் எழுதிய "ராவண சிஷ்டாச்சாரய" எனும் நூலில் கூறிப்பிட்டுள்ளார். எல்லாளன் காலத்தில் பிராமணர்களின் செல்வாக்கு அனுராதபுரத்தில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. எல்லாளனின் காலம் பொ.ஆ.மு.145-101 வரையான காலமாகும். அதேசமயம் இசுருமுனிய சிவன் கோயில் இதற்கு முன்பே தேவநம்பியதீசன் காலத்திலேயே (பொ.ஆ.மு.247-207) சிவன் கோயிலாக அவனால் வழிபடப்பட்டது எனவும் சில ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். இம்மன்னனின் காலத்தில் தான் அனுராதபுரத்திற்கு வடக்கே பிராமணன் திவக்கனின் கோயிலும், அனுராதபுரத்தில் பிராமணன் தியவசனின் கோயிலும் இருந்தது என மகாவம்சம், மகாபோதி வம்சம் ஆகிய நூல்களில் கூறப்பட்டுள்ளது. இக்கோயில்கள் தேவநம்பியதீசன் பௌத்த சமயத்தைக் கைக்கொள்வதற்கு முன்பு இருந்தவையாகும். எனவே பிராமணன் திவக்கன், பிராமணன் தியவசன் ஆகியோரின் கோயில்கள் சிவன் கோயில்களாகத்தான் இருக்க வேண்டும் என்பது வரலாற்றாசிரியர்களின் கருத்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வட இந்தியாவில் உள்ள மஸ்ரூர் கோயிலை ஒத்த இசுருமுனிய கோயில்**

வடக்குத்தெற்காக பல சிகரங்களைக் கொண்டு அமைந்துள்ள நீண்ட பாறைத்தொடரில் இசுருமுனிய குகைக் கோயில் அமைந்துள்ளது. ஆரம்பத்தில் லிங்க வழிபாட்டு கோயிலாக இது ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. பௌத்த சமயம் இலங்கையில் அறிமுகமாவதற்கு முன்பு இக்கோயில் அமைக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.



**இந்துக் கோயிலின் அடித்தளத்தைக் கொண்ட இசுருமுனிய குகைக் கோயில்**

இதே அமைப்பையுடைய ஓர் கற்கோயில் வட இந்திய மாநிலமான இமாலயப் பிரதேசத்தின் மேற்கில் உள்ள "மஸ்ரூர்" என்னுமிடத்தில் அமைந்துள்ளது. இமாலயப் பிரதேசத்தின் தலைநகரான சிம்லாவின் வடக்கில் உள்ள தர்மாசலா என்னுமிடத்திற்கு அருகில் மஸ்ரூர் அமைந்துள்ளது. ஒரு குளக்கரையில் சுமார் 150 அடி நீளமும், 100



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடி அகலமும் கொண்ட ஓர் பாறைத் தொடரில் உயர மாகவும், குட்டையாகவும் அமைந்துள்ள சிகரங்களை கோபுரங்களாகச் செதுக்கி 15 குகைக் கோயில்கள் அமை க்கப்பட்டுள்ளன.

இக்குகைக் கோயில்கள் பாண்டவர்கள் வனவாசம் புரி ந்த காலத்தில் அவர்களால் உருவாக்கப்பட்டதாகக் கூறப் படுகிறது. ஆரம்பத்தில் இது ஓர் சிவனின் கோயிலாக ஸ்தாபிக்கப்பட்டது. மத்திய காலப்பகுதியில் இங்கு இரா மன், லட்சுமணர், சீதை ஆகியோரின் சிற்பங்கள் செதுக் கப்பட்டன. எல்லோரா, மாமல்லபுரம், போன்ற இடங்க ளிலும் பொ.ஆ.7ஆம், 8ஆம் நூற்றாண்டுகளில் இதே போல குகைக் கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஈஸ்வரமுனி கற்கோயிலும், மஸ்ரூர் கற்கோயிலும் ஒரே வடிவமைப்புடன் கூடியதாகவும், பல சிகரங்களையு டைய ஒரு பாறைத் தொடரில் அமைக்கப்பட்டவையாக வும், ஒரே காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டவையாகவும், ஆரம்பத்தில் சிவன் கோயிலாக உருவாக்கப்பட்டவையா கவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. பொ.ஆ.8ஆம் நூற்றா ண்டில் ஜலந்தர் வம்ச மன்னர்களால் மஸ்ரூர் கற்கோயில் கள் அமைக்கப்பட்டதாக தெரிகிறது. இதே காலப்பகுதி யில் தான் தென்னிந்தியாவில் பல்லவ கட்டிடக் கலை மரபு மேலோங்கத் தொடங்கியது. ஈஸ்வரமுனியின் பாறை களிலும் சிற்பங்கள் செதுக்கப்பட்டன.இன்று இசுருமுனிய விஹாரை பௌத்தர்களின் முக்கிய வழிபாட்டுத் தலமாக உள்ளது. கற்குகையுடன் கூடிய சிவன் கோயிலாக, பல கற்சிற்பங்கள் செதுக்கப்பட்ட கோயிலாக இருந்து, பின்பு பௌத்த வழிபாட்டு இடமாக மாற்றமடைந்ததை அறியக் கூடியதாக உள்ளது. இக்கோயில் பல்லவர் காலம் வரை சிவன் கோயிலாகவே இருந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இசுருமுனிய கோயிலில் சிவன், பார்வதி சிற்பம்**

இன்று இசுருமுனியவில் நாம் காணும் கற்சிற்பங்கள் புராதன சிவன் கோயிலுக்குரிய சின்னங்களாகும். "இசுரு முனிய காதலர்கள்" என்றழைக்கப்படும் சிற்பம் புராதன சிவன் கோயிலின் "சிவன்-சக்தி" சிற்பமாகும். குப்தக்கலை மரபுடன் இச்சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது.



**இசுருமுனிய நீர்த்தடாகத்தின் வலது பக்கம் இருந்த சிவன் பார்வதி சிற்பம்**

பேராசிரியர் அனுராத செனவிரத்ன இது உமா-மகேஸ்வரன் சிற்பம் எனக் குறிப்பிட்டுள்ளார். பொ.ஆ. 4ஆம் நூற்றாண்டில் குப்தரின் காலம் ஆரம்பமானாலும், பொ.ஆ. 6ஆம் நூற்றாண்டிலேயே ஈஸ்வரமுனி சிவன் கோயிலில் சிவன்-பார்வதி சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. அஜந்தா குகை ஓவியங்களை கல்லில் செதுக்கியவாறு இச்சிற்பம் காணப்படுகிறது. இதிலுள்ள சிவன் சிற்பத்தின் இடது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத் தோளில் காணப்படும் பூநூல், பின்புறமுள்ள திருவாசி போன்றவை இச்சிற்பம் இந்து தெய்வத்திற்குரியது என்பதைத் தெரிவிக்கின்றன. அத்துடன் பார்வதி சிற்பத்தின் வலது கையில் குறிக்கப்படும் முத்திரை, இதன் தெய்வீகத் தன்மை கொண்ட முகபாவம் போன்றவை இச்சிற்பம் மனிதர்களுக்குரியது அல்ல என்பதையும் உறுதியாகத் தெரிவிக்கிறது.



**இசுருமுனிய தொல்பொருள் காட்சிசாலையில் வைக்கப் பட்டுள்ள சிவன்-பார்வதி (உமா -மகேஸ்வரன்) சிற்பம்**

பேராசிரியர் பரணவித்தான இச்சிற்பம் துட்டகைமுனுவின் மகனான சாலியவும், அவனது காதலி அசோகமாலாவும் உள்ள சிற்பம் எனக் கூறியுள்ளார். இது பக்கசார்பாக அவர் கூறியுள்ளதையும், எந்த வகையிலும் இது தெய்வங்களுக்குரிய இலட்சணங்களை உடையது என்பதையும் எமக்கு உணர்த்துகிறது. இச்சிற்பத்திலுள்ள பார்வதி மலை ஜாதிப் பெண்ணாக சித்திரிக்கப்பட்டுள்ளார். சிவன் சிற்பத்தின் பின்புறம் உள்ள அம்பு சிவனால் அர்ச்சுனனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்பட்ட சிவாஸ்திரமான பாசுபதமாகும் என ஆய் வாளர்கள் கூறுகின்றனர். அதேசமயம் இது இராவணனின் தாய், தந்தையான கைகேசி-விசுரவசு ஆகியோரின் சிற்பம் எனவும் சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

## இசுருமுனியவில் ஐயனார் வழிபாடு

இக்குகைக் கோயிலின் பிரதான உள்வாசலின் வலப் பக்கத்தில் காணப்படும் "மனிதனும், குதிரையும்" என்ற ழைக்கப்படும் சிற்பம் ஐயனார் சிற்பமாகும். மேலும் நீர்த்தடாகத்தின் அருகேயுள்ள கற்பாறையில் செதுக்கப் பட்ட யானைகளின் சிற்பமானது ஐயனாரில் வாகனங்க ளான யானை, குதிரை என்பவற்றைக் குறிப்பதாகும். புராதன சிவன் கோயிலின் ஐயனார் வழிபாடு நடைபெற்ற இடமாக இது இருக்க வேண்டும் எனக் கூறப்படுகிறது. மாமல்லபுரத்தின் குகைகளில் செதுக்கப்பட்ட சிற்பங்களை ஒத்ததாக இவை உள்ளன. அன்றைய சிங்கள மக்களால் "கடவர தெய்யோ" என வணங்கப்பட்ட ஐயனார் குளக் கரையிலிருந்து குளங்களையும், வயல்களையும் காப்பவரா கக் கருதப்பட்டார்.

இச்சிவன் கோயிலும் அதனுடன் கூடிய ஐயனார் கோயிலும் திஸ்ஸவாவி எனப்படும் புராதன குளக்கரையில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஐயனாரின் சிற் பமானது இராவணனின் தந்தையான விசுரவசுவின் உருவம் என்பதும் வேறுசில ஆய்வாளர்களின் கருத்தாகும். இதனை ஆனந்தகுமாரசுவாமி கபிலமுனிவரின் சிற்பம் எனக் கூறியு ள்ளார்.

இச்சிற்பம் ஐயனாரின் வடிவத்தை பெரிதும் ஒத்துள் ளமை பற்றி பேராசிரியர் பத்மநாதன் எழுதிய "இலங் கையில் இந்து சமயம்" எனும் நூலில் பின்வருமாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடப்பட்டுள்ளது. அம்ஸ்ரர்டாம் பல்கலைக் கழகப் பேராசிரியராக விளங்கியவரும் தென்னாசிய கலைகள் பற்றிய நிபுணத்துவம் காரணமாக உலகப் புகழ் பெற்றவருமான லொனா ஹஸன் டீ லியூ அம்மையாரின் முயற்சிகளின் பயனாக இசுருமுனிய சிற்பம் பற்றிப் புதிய சிந்தனைகள் ஏற்படலாயின. இசுருமுனியவிலுள்ள மனித வடிவமான சிற்பம் ஐயனாரின் வடிவமென்ற கருத்தை முதன் முதலாக அவர் முன் வைத்தார். அவர் தனது கருத்துக்கு அழுத்தங்கொடுக்கும் வண்ணமாகக் கர்நாடகத்திலும், தமிழகத்திலும் காணப்படும் பல புராதனமான ஐயனார் வடிவங்களின் பிரதிமா லக்ஷணங்களை உதாரணமாகக் கொண்டார்.



**கர்நாடகத்திலும், தமிழகத்திலும் உள்ள புராதன ஐயனார் வடிவங்களை ஒத்த இசுருமுனிய ஐயனார் சிற்பம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்நாடகத்திலே துங்கபத்திரை ஆற்றங்கரையில் அமைந்துள்ள ஆலம்பூர் எனும் கிராமத்தில் விஸ்வபிரம்மா கோயில் ஒன்றுள்ளது. அதில் இசுருமுனியவிலுள்ள சிற்பத்தைப் போன்ற சிற்பம் ஒன்றுண்டு. இரண்டு வடிவங்களின் பிரதிமா லக்ஷணங்களும் ஒரே விதமானவை. ஆலம்பூர் சிற்பம் ஆசனக் கோலமானது. அதுவும் மகாராஜ லீலாசனம் போன்ற வகையில் அமைந்துள்ளது. அதன் கால்களின் அமைப்பு இசுருமுனிய சிற்பத்தில் உள்ளதைப் போல அமைந்திருக்கின்றது. இச்சிற்பத்தின் இடப்பக்கத்தில் குதிரை முகம் தெரிகின்றது. ஆலம்பூரிலுள்ள சிற்பம் ஐயனாரின் வடிவமாகும். அதனால் இசுருமுனியவிலுள்ள சிற்பத்தையும் ஐயனாரின் உருவமெனக் கொள்வது மிகவும் பொருத்தமானதாகும்.



**கர்நாடகாவில் ஆலம்பூரில் உள்ள விஸ்வபிரம்மா கோயிலில் காணப்படும் ஐயனார் சிற்பம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்தில் ஐயனாரின் சிலைகள் பல்லவர் காலம் முதலாகக் கிடைக்கின்றன. வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள எசலம் என்னும் ஊரிலே பல்லவர் காலத்திற்குரிய ஐயனாரின் சிற்பமொன்று காணப்படுகின்றது. அதன் அம்சங்களும், இசுருமுனிய, ஆலம்பூர் ஆகிய இடங்களிற் காணப்படும் சிற்பங்களில் உள்ளவற்றைப் பெரிதும் ஒத்திருக்கின்றன. சோழர்காலத்து சிற்பங்களில் சில புதிய அம்சங்கள் இடம் பெற்றுள்ளன. முதலாம் இராஜராஜன் காலத்தில் உருவாக்கப்பட்ட சிற்பமொன்று திருப்பத்தூரிலே காணப்படுகின்றது. அதில் ஐயனார் இளமைக் கோலத்துடனும் சுருண்ட நீளமான கேசங்கள் அமைந்த சடாபாரத்துடனும் விளங்குகின்றார். எசலத்திலுள்ள சிற்பத்தைப் போலவே கால்கள் அமைந்திருக்கின்றன.ஆயினும் அதிலே கைகளில் ஒன்று படைக்கலம் ஏந்திய கோலத்துடன் அமைந்துள்ளது. கண்ணபுரத்திலும் ஐயனாரின் புராதனமான சிற்பமொன்று காணப்படுகின்றது. அது சோழர் காலத்துக்கு முற்பட்டது போலத் தெரிகின்றது. அந்த சிற்பத்திலுள்ள கையிலே சவுக்கின் உருவம் தெரிகின்றது.

காஞ்சிபுரத்திலுள்ள ஐயனாரின் சிற்பமொன்று ஒரு கால் மடித்து ஆசனத்தில் வைக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. மற்றக்கால் உயர்த்தியும் முழங்கால் மட்டத்திலே கீழ் நோக்கிய வண்ணமாக மடித்துப் பாதம் ஆசனத்தில் ஊன்றிய நிலையிலும் அமைந்திருக்கின்றது. கால்களின் அமைப்பு ஆலம்பூர், எசலம், இசுருமுனிய ஆகிய இடங்களிலுள்ள உருவங்களைப் போலவே காணப்படுகின்றது. அதன் தலையில் உயரமான மகுடம் அமைந்திருக்கின்றமை ஒரு புதிய அம்சமாகும்.ஆசனத்தின் வலப்பக்கத்தில் ஐயனாரின் வாகனமாகிய குதிரையின் உருவம் அமைந்துள்ளது. திருவனந்தபுரம் அருங்காட்சியகத்திலே காணப்படும் 17ஆம் நூற்றாண்டுக்குரிய ஐயனாரின் உலோக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்பத்திலும் இசுருமுனிய சிற்பத்தின் அம்சங்கள் அமைந்திருக்கின்றமையும் கவனத்திற்குரியதாகும்.

பொதுவாக ஐயனாரை இளமை பொருந்திய காவற் கடவுளாகக் கொள்வது வழமை. ஐயனாரின் சிலைகள் கோயில்கள், குளம், வயல், வனம், மலை ஆகியவற்றின் எல்லைப்புறத்தில் வைக்கப்படும். வயல்களையும், புனம், தோட்டம் போன்றவற்றையும் ஐயனார் காவல் புரிவதாகக் கருதினார்கள். குதிரையும், யானையும் ஐயனாரின் வாகனங்களாகக் கொள்ளப்படும். இசுருமுனியாவிலுள்ள சிற்பத்திற்கு ஐயனார் பற்றிய சிந்தனைகளும் ஐதீகங்களும் சாலப் பொருந்துவனவாகும்.

அந்தச் சிற்பம் அநுராதபுரத்திலுள்ள பெருங்குளமான திஸ்ஸவாவியின் அணைக்கட்டின் சமீபமாக அமைந்திருக்கின்றது. அது உயரமான நிலத்திற் கற்பாறையிலே செதுக்கப்பட்டுள்ளது. அதனால் காவற் கடவுளின் சிற்பமாக அதனை அமைத்துள்ளனரென்று கருத முடிகின்றது. அதன் அம்சங்கள் எல்லாம் ஐயனாரின் சிற்பங்களில் உள்ளவற்றைப் பெரிதும் ஒத்திருக்கின்றன. உருவத்தின் ஒரு புறத்திலே குதிரை முகம் அமைந்துள்ளமை அது ஐயனாரின் வடிவம் என்பதை உறுதி செய்கின்றது. ஐயனார் வழிபாடு இலங்கையிலே புராதனமானதென்றும் பல்லவரின் செல்வாக்கு ஏற்பட்டமையின் விளைவாக அநுராதபுரத்திலே ஐயனாரின் கோலத்தைப் பௌராணிக வர்ணனைகளுக்கும், சிற்ப சாஸ்திர விதிகளுக்கும் ஏற்புடைய வண்ணமாக உருவாக்கினார்கள் என்றும் கருத முடிகின்றது. இவ்வாறு பேராசிரியர் பத்மநாதன் "இலங்கையில் இந்து சமயம்" எனும் தனது நூலில் இசுருமுனிய சிற்பம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இசுருமுனியவில் விஷ்ணுவுக்கு பரிவாரக் கோயில்

இசுருமுனியவில் கல்லினால் அமைக்கப்பட்டுள்ள புத்தர் சிலைக்கு அருகில் நின்ற நிலையில் விஷ்ணுவின் சிற்பமொன்றும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. இது இங்கிருந்த விஷ்ணு குகைக்கோயிலின் சிற்பமாகும். ஈஸ்வரமுனி சிவன் கோயிலில் விஷ்ணுவுக்கும், ஐயனாருக்கும் தனித்தனி குகை கோயில்கள் அமைக்கப்பட்டிருந்தன. தமிழதேவி எனும் இளவரசி இக்கோயிலுக்கு மானியங்கள் வழங்கியுள்ளதாக அறியப்படுகிறது. இவை தவிர மேலும் ஓர் பல்லவர் கால சிற்பமும் இங்குள்ள தொல்பொருட் காட்சிச்சாலையில் காணப்படுகிறது.




**இசுருமுனிய குகைக் கோயிலின் பண்டைய தோற்றம். 1809ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட படம்**

## புராதன காலத்து முன்னீஸ்வரம்

புராதன காலத்தில் இச்சிவன் கோயில் முன்னீஸ்வரம் என்ற பெயரில் அழைகப்பட்டு வந்துள்ளது. பொ.ஆ.6 ஆம் நூற்றாண்டின் பின் எழுந்த பல்லவர் சிற்பக்கலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபைக் கொண்ட மாமல்லபுரத்து சிற்ப முறையினைப் பிரதிபலிக்கும் இச்சிவன் கோயில் அனுராதபுரத்தில் சிறப் புற்று விளங்கிய பல்லவர் காலக் கோயிலாகும். பல்லவர் காலத்தின் பின் இது பௌத்த வழிபாட்டுத் தலமாக மாற் றமடைந்துள்ளது. "முன்னீஸ்வரம்" என்ற பெயர் முனிஈஸ் வரம் எனவும், பின்பு முனி என்பது பின்னுக்கும் ஈஸ்வர என்பது முன்னுக்கும் மாறி "ஈஸ்வரமுனி" என மாற்றம டைந்து பின் "இசுருமுனிய" என தற்போது அழைக்கப் படுகிறது.

ஆனால் இசுருமுனிய என்ற பெயர் இங்கிருந்து தெற்கு நோக்கி குருநாகலுக்கு செல்லும் வீதியின் இடது பக்கத்தில், சுமார் ஒரு கி.மீ.தூரத்தில் அமைந்துள்ள வெஸ் ஸகிரிய எனப்படும் குகைகளுள்ள பகுதிகளுக்கே வழங்கப் பட்டு வந்தது.இப்பகுதியிலுள்ள கல்வெட்டுக்களில் "இசிரி மண" என்ற பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி இன்று வெஸ்ஸகிரிய என அழைக்கப்படும் இடத்திற்கே இசுருமுனி என்ற பெயர் வழங்கப்பட்டு வந்துள்ளது. முன் னீஸ்வரம் சிவன் கோயில் பௌத்த வழிபாட்டுத் தலமாக மாற்றப்பட்ட பின் இதற்கு இசுருமுனி என்ற பெயர் சூட் டப்பட்டுள்ளது. இப்பெயர் யாரால் எப்போது சூட்டப் பட்டது என்பது தெரியவில்லை. இருப்பினும் இசுரு முனிய என்ற பெயர் தற்போதைய இசுருமுனியவின் உண் மையான பெயர் அல்ல என்பது மட்டும் நிச்சயமாகத் தெரிகிறது.

**எல்லாளன்-துட்டகைமுனு யுத்தம் நடந்த இசுருமுனி**

ஈஸ்வரமுனி சிவாலயம் அமைந்திருந்த இப்பகுதி புரா தன காலத்தில் தமிழ்மக்கள் செறிந்து வாழ்ந்திருந்த இடங் களில் ஒன்றாகும். எல்லாளனுக்கும், துட்டகாமினிக்கும் நடந்த யுத்தத்தில் எல்லாளனுக்காக போரிட்ட தமிழர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை வெற்றி கொண்ட இடங்களில் இசுருமுனியவும் ஒன் றென மகாவம்சம் கூறுகிறது.

**ஈஸ்வரன் என்பதைக் குறிக்கும் இசுரு எனும் சொல்**

தற்போது இருக்கும் விஹாரையின் முன்பாக உள்ள தடாகம் புராதன சிவன் கோயிலின் தீர்த்தக் குளமாகும். வீரசூரியா எனும் வரலாற்றாய்வாளர் இது முன்பு சைவத் தலமாக இருந்து பௌத்த தலமாக மாறியுள்ளது எனத் தெரிவித்துள்ளார். இன்று இங்கு காணப்படும் பௌத்த தூபி பிற்காலத்தில் கட்டப்பட்டதாகும். இசுரு என்பது சிங்கள வழக்கின் படி ஈஸ்வரன் என்பதைக் குறிப்பதாகும். கோட்டை இராச்சிய காலத்தில் எழுதப்பட்ட சந்தேச நூல்களில் உள்ள பல பாடல்களில் ஈஸ்வரன் கோயில் களை "இசுரு கோவில" எனக் குறிப்பிட்டுள்ளமை அவதா னிக்கத்தக்கது.



**இசுருமுனிய குகைக்கோயிலில் உள்ள மகரக் கோமுகி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இசுருமுனிய விகாரையில் மகரக் கோமுகி

இசுருமுனிய ஓர் இந்துக்கோயில் என்பதற்கு ஆதார மாக மேலும் பல சான்றுகள் இங்கே காணப்படுகின்றன. இசுருமுனிய விஹாரை என்று தற்போது அழைக்கப்படும் குகைக் கோயிலின் முன்பக்கம் உள்ள மண்டபத்தின் அடித்தளத்திற்கு மேலே உள்ள ஜகதி கட்டிடப் பிரிவின் இடது பக்கம் சைவ ஆலயத்திற்குரிய சின்னமொன்று உள் ளது. இக்கட்டிடத்துடன் இணைந்து காணப்படும் மகரக் கோமுகியே அது. கோமுகிகள் இந்துக் கோயில்களுடன் தொடர்புடைய ஒரு கட்டிடப் பகுதியாகும்.இவை பெரும் பாலும் இந்துக் கோயில்களில் கருவறையிலுள்ள மூர்த்தி யுடன் இணைத்துக் கட்டப்படும்.

### கருவறை மண்டபத்தின் மேல் கஜலட்சுமி சிற்பம்

மேலும் இந்துக் கோயில்களில் மண்டபம் அல்லது கருவறை வாசல் கதவிற்கு மேலே செதுக்கப்பட்டிருக்கும் கஜலட்சுமி சிற்பம், இசுருமுனிய குகைக்கோயில் வாசலின் மேற்பகுதியிலும் காணப்படுகின்றது. முன்பு சிவன் கோயி லாக இது இருந்தபோது இங்கு காணப்பட்ட சைவ ஆலய கட்டிடக்கலை அம்சங்கள் இக்கோயில் பௌத்த விகாரையாக மாற்றம் பெற்ற பின்பும் கூட காணப்படு கின்றமை குறிப்பிடத்தக்கது.

## 20.சூரியன் கோயில்-அனுராதபுரம்

அனுராதபுரத்தில் ருவன்வலிசாய தூபிக்கு மிக அருகில் ஓர் சூரியன் கோயில் அமைந்திருந்தது பற்றி ஆய்வாளர் ஜெ.சி.ஸ்மித்தர் குறிப்பிட்டுள்ளார்.ருவன்வலிசாய பகுதியை ஆய்வு செய்வதற்காக ஆய்வாளர் ஸ்மித்தர் அமர்த்தப்பட் டார். அவர் இங்கு காணப்பட்ட சதுரவடிவுடைய ஒரு கட்டிடத்தை சூரியன்கோயில் எனஅடையாளம் கண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்மித்தர் அடையாளம் கண்ட சூரியன் கோயில்



ருவன்வெலிசாய தூபியின் மேற்கு வாசலில் சதுர வடிவில் காணப்படும் நீர்த்தடாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்தூண்கள் மட்டுமே எஞ்சியிருந்த இக்கட்டிடத்தில், இரண்டு கைகளிலும் தாமரை மலர்களை ஏந்திய வண்ணம் சூரியனின் சிலை காணப்பட்டதாக ஸ்மித்தர் குறிப்பிட்டுள்ளார்.



**ருவன்வலிசாய சூரியன் கோயில் இடிபாடுகளில் காணப்பட்ட சூரியனின் சிலை**

சூரியன் கோயிலில் காணப்பட்ட கற்தூண்களிலும் சூரியனின் அடையாளங்கள் பொறிக்கப்பட்டிருந்ததாகவும் அவர் கூறியுள்ளார். இவ்வாலயத்தின் அருகில் காணப்படும் சதுரவடிவுடைய நீர்த்தடாகம் ருவன்வலிசாய தூபிக்கு வெள்ளைப்பூச்சு பூசுவதற்கு பயன்படுத்தப்பட்டதாகவும் ஸ்மித்தர் மேலும் கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருவன்வெலிசாய தூபியின் மேற்கு வாசலுக்கும்,பசவக் குளத்திற்கும் இடையில் மூன்று கட்டிடங்கள் காணப்படு கின்றன. தூபியின் மேற்கு வாசலுக்கு நேராக ஓர் சதுர மான தடாகமும், தடாகத்தின் வடக்குப் பக்கம் சுமார் 15 கற்தூண்களுடன் ஒரு கட்டிட இடிபாடும், அதன் மேற் குப் பக்கம் குளத்தின் அணைக்கட்டின் அருகில் ஒரு சிறிய தூபியின் சிதைவுகளும் காணப்படுகின்றன. இவற் றில் தூண்களுடன் காணப்படும் கட்டிடமே சூரியன் கோயிலாகும்.

## 21.குமாரகணம் முருகன் கோயில்- அனுராதபுரம்

அனுராதபுரத்தில் கிடைக்கப்பெற்ற இரு கல்வெட்டு க்கள் மூலம் குமாரகணம் என்ற இடத்தில் முருகன் கோயில் ஒன்று இருந்தமை தெரிய வந்துள்ளது. பொ.ஆ. 9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இக்கல்வெட்டுக்களில் குமா ரகணத்து பேரூரைச் சேர்ந்த சேக்கிழான் சங்கன், சேக் கிழான் சென்னை ஆகிய இரு வணிகர்கள் இங்கிருந்த கோயிலுக்கு தானம் வழங்கியது பற்றி தெரிவிக்கப்பட்டு ள்ளது.

**பேரூர் எனப்படும் பெரிய வணிக நகரம் பற்றிக் கூறும் கல் வெட்டு**

குமாரகணம் என்னும் இடத்தைப் பற்றி தமிழக கல் வெட்டுக்கள் எதிலும் கூறப்படவில்லை. ஆகவே இது இலங்கையில் அனுராதபுரத்தில் அமைந்திருந்த ஒரு வணிக நகரம் எனக் கருதப்படுகிறது. அத்துடன் கல்வெட்டில் இவ்வூர் பேரூர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளபடியால் இது ஓர் பெரிய வணிக நகரமாகவும், தமிழ் வர்த்தகர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்த நகரமாகவும் இருக்க வேண்டும் எனக் கருத இடமுண்டு. தமிழ் வணிகர்கள் வாழ்ந்த இடமாகையால் நிச்சயமாக இங்கு இந்துக் கோயில்கள் வணிகர்களால் கட்டப்பட்டிருக்க வேண்டும். அப்படிக் கட்டப்பட்ட ஒரு கோயிலுக்கே இவர்கள் தானம் செய்தது பற்றி கல்வெட்டு கூறுகிறது.



**குமாரகணம் பேரூர் கல்வெட்டு**
**(நன்றி-இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள்-பேராசிரியர் பத்மநாதன்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் தமிழ் வணிகர்கள் அமைத்த நகரங்களில் இதுவே மிகவும் பழைமையானது எனக் கருதலாம். பொ.ஆ 7ஆம் நூற்றாண்டிற்கும், பொ.ஆ. 10ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் குமாரகணம் முருகன் கோயில் இங்கிருந்த வணிகர்களாலும், மக்களாலும் நல்லமுறையில் பரிபாலிக்கப்பட்டு வந்துள்ளது. இன்று இவ்வாலயம் அமைந்திருந்த குமாரகணம் எங்கிருந்தது என்ற அடையாளம் கூடத் தெரியாமல் உள்ளது. இருப்பினும் அனுராதபுரம் புராதன நகரில் இவ்வாலயம் இருந்திருக்க வேண்டும் என நம்பப்படுகிறது.

## 22.பிள்ளையார் கோயில்-பசவக்குளம், அனுராதபுரம்

அனுராதபுரம் புராதன நகரில் அமைக்கப்பட்டிருந்த இந்துக் கோயில்களில் பசவக்குளம் பிள்ளையார் கோயிலும் ஒன்றாகும். 1890 ஆம் ஆண்டளவில் தொல்பொருள் ஆய்வாளரான *H.C.B.*பெல் அவர்களால் அனுராதபுரத்தில் நடத்தப்பட்ட ஆய்வுகளின் போது பொ.ஆ. 7ஆம் நூற்றாண்டுக்கும், பொ.ஆ.10ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்திற்குரிய இருபதுக்கும் மேற்பட்ட இந்துக் கோயில்களின் கட்டிட அழிபாடுகளும், ஆலயச் சின்னங்களும், கண்டுபிடிக்கப்பட்டன. இதில் இந்து தெய்வச்சிலைகள், சிற்பங்கள், செப்பு மற்றும் வெண்கலப் படிமங்களும் அடங்குகின்றன.

**ஆலய இடிபாடுகளிடையே கண்டெடுக்கப்பட்ட பிள்ளையார் சிலையும், லிங்கமும், காளியம்மன் சிலையும்**

இக்காலப்பகுதியில் *H.C.B.*பெல் கண்டுபிடித்த இப்பிள்ளையார் கோயில் பசவக்குளத்தின் அணைக்கட்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகில் காணப்பட்டது. ருவன்வலிசாய, தூபராம போன்ற தாதுகோபங்களுக்கு மேற்குப் பக்கத்தில் பசவக் குளத்தின் மதகின் அருகில் இப்பிள்ளையார் கோயில் அமைக்கப் பட்டிருந்தது.



**தற்போது காணப்படும் பசவக்குளம் சிவன் கோயில்**

இப்பிள்ளையார் ஆலயம் சோழர் காலத்திற்கு முன்பு அனுராபுரத்தில் அமைக்கப்பட்டிருந்த கோயில்களில் ஒன் றாகும். 18 அடி நீள, அகலம் கொண்ட ஆலயத்தின் அத்தி வாரத்தை *H.C.B.* பெல் கண்டு பிடித்தார். இவ்வாலய இடிபாடுகளுக்கிடையில் பிள்ளையார் சிலையும், லிங்கம் ஒன்றும், எருதின் தலையில் நின்று கொண்டிருக்கும் காளி அம்மன் சிலையும் கண்டெடுக்கப்பட்டன. இச்சிலைகளை வைத்து புராதன ஆலய இடிபாடுகள் இருந்த இடத்தில் ஓர் சிறிய சிவன் கோயில் அமைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பாதையின் இடது பக்கம் பசவக்குளம் மதகும், வலது பக்கம் கோயிலும்**

**அனுராதபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட மூன்றாவது சிவ லிங்கம்.**

அனுராதபுரத்தில் இரண்டு சிவலிங்கங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவ்விரண்டு லிங்கங்களிலும் ஆவுடையார் காணப்படவில்லை. அதே சமயம் மூன்றாவது சிவலிங்கமும் அனுராதபுரத்தில் கிடைத்துள்ளது. இச்சிவலிங்கம் வட்டவடிவமான ஆவுடையாருடன் கிடைத்துள்ளது. லிங்கத்தின் மேற்பகுதி உருளையாகவும் கீழ்பகுதி எட்டுப் பட்டையாகவும் காணப்படுகிறது. லிங்கம் 18 அங்குலம் உயரத்தையும், ஆவுடையார் 26 அங்குல விட்டத்தையும் கொண்டுள்ளது.

இச்சிவலிங்கம் 9 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என அடையாளம் காணப்பட்டுள்ளது. ஆனால் இந்த லிங்கம் அனுராதபுரத்தில் எவ்விடத்தில் கிடைக்கப் பெற்றது என்ற விபரங்கள் தெரியவில்லை. பசவக்குளம் பிள்ளையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலில் *H.C.P.*பெல் கண்டெடுத்த லிங்கம் இதுவா என்பதும் தெரியவில்லை. இது கொழும்பு தேசிய நூதன சாலையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.



**அனுராதபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட மூன்றாவது சிவலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23.ஈஸ்வரன் கோயில்-அபயகிரி, அனுராதபுரம்

அநுராதபுரம் புராதன நகரின் வடக்கில் அபயகிரி விகாரை வளாகம் அமைந்துள்ளது. இது பொ.ஆ.மு. 1ஆம் நூற்றாண்டில் வட்டகாமினி அபயவினால் கட்டப்பட்டது.இவ்விகாரை கட்டப்படுவதற்கு முன்பு இங்கு பெரிய சிவாலயம் ஒன்று இருந்துள்ளது. இச்சிவாலயத்தை அழித்து அதன் மீதே அபயகிரி விகாரை கட்டப்பட்டது என மலலசேகர, அரிச்சந்திர ஆகிய வரலாற்றாசிரியர்கள் தமது நூல்களில் குறிப்பிட்டுள்ளனர்.



**பண்டைய சிவன் கோயில் இருந்த இடத்தில் வட்டகாமினி கட்டிய அபயகிரி தூபி**

## தமிழ் மன்னன் எல்லாளன் கட்டிய சிவன் கோயிலா?

தேவநம்பிய தீசன் காலத்தில் பௌத்த சமயம் இலங்கையில் பரவத் தொடங்கினாலும், அவன் காலத்தில் செல்வாக்குடன் இருந்த பிராமண, ஜைன, நிகண்ட (சமணர்) துறவிகள் பௌத்தம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே செல்வாக்குடனேயே விளங்கினர். இலங்கையை 22 வருடங்கள் ஆட்சி செய்த தமிழ் மன்னர்களான சேனன், கூத்திகன் ஆகியோரிடமிருந்து ஆட்சியை கைப்பற்றிய அசேலன் என்பவன் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் எல்லாளன் எனும் தமிழ் மன்னன் அனுராதபுரத்தைக் கைப்பற்றினான். எல்லாளன் ஆட்சி அமைப்பதற்கு இங்கிருந்த பிராமண, ஜைன, நிகண்ட (சமணர்) துறவிகளின் ஆதரவு கிடைத்ததாக சிங்கள நூல்கள் கூறுகின்றன. எனவே எல்லாளன் காலத்தில் பிராமண, ஜைன, சமண துறவிகள் அரச ஆதரவுடன் இருந்துள்ளனர். எல்லாளன் ஆட்சி செய்த 44 வருட காலத்தில் இவர்களால் கோயில்கள் மற்றும் ஜைன, சமண பள்ளிகள் போன்றவை அமைக்கப்பட்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இந்தக் காலப் பகுதியில் தமிழ் மன்னனான எல்லாளனின் ஆதரவுடன் அனுராதபுரத்தில் சிவன் கோயில் உட்பட பல சைவக் கோயில்கள் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

**வட்டகாமினி அபய (வலகம்பா) மன்னன் காலத்திற்கு முற்பட்ட சிவன் கோயில்**

வட்டகாமினி அபய எனும் வலகம்பா மன்னன் இரண்டாவது தடவையாக ஆட்சியைக் கைப்பற்றிய பின்பே அபயகிரி விகாரை கட்டப்பட்டது.இது பொ.ஆ.மு 29-17 வரையான காலப்பகுதியில் கட்டப்பட்டதாகும்.தமிழ் மன்னன் எல்லாளனை வெற்றி கொண்ட துட்டகைமுனுவின் தம்பியான சத்தாதீசனின் மூன்றாவது புதல்வனே வட்டகாமினி அபய எனும் வலகம்பா என்பவனாவான். இவன் ஆட்சிக்கு வந்து 5ஆவது மாதத்தில் ருகுணு இராச்சியத்தில் இருந்த தீசன் என்ற பிராமணன் இவனது ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சி செய்து கொண்டிருந்தான். இந்த காலகட்டத்தில் ஏழு தமிழர்கள் அனுராதபுரத்திற்கு படை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்து வந்து வட்டகாமினியை சிறைப்பிடிக்க முயன்ற போது அவன் தப்பியோடி காட்டிற்குள் ஒளிந்து கொண்டான்.

இக்காலப்பகுதியில் ருகுணு இராச்சியத்திலும், அனுராதபுர இராச்சியத்திலும் பிராமண, சமண துறவிகளின் செல்வாக்கு ஓங்கியிருந்தது. ருகுணு இராச்சியத்தில் தீசன் எனும் பிராமணனும்,அனுராதபுர இராச்சியத்தில் கிரி நிகண்டர் எனும் சமணத் துறவியும் செல்வாக்கு பெற்று விளங்கினர். இவர்களின் ஆதரவுடன் ஐந்து தமிழ் மன்னர்கள் ஒருவர் பின் ஒருவராக 15 ஆண்டுகள் அனுராதபுரத்தில் இருந்து ஆட்சி செய்தனர்.

இந்த ஐந்து மன்னர்கள் காலத்திலிருந்து 57 வருடங்களுக்கு முன்பு இலங்கையில் எல்லாள மன்னன் ஆட்சி நிலவியது. 44 வருடங்கள் இலங்கையின் மன்னனாக எல்லாளன் ஆட்சி செய்த காலத்தில் தான் (பொ.ஆ.மு 145-101) அபயகிரி பகுதியில் ஈஸ்வரன் கோயில் ஸ்தாபிக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த ஐந்து மன்னர்களும் பொ.ஆ.மு. 44 ல் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினர். இவர்கள் காலத்தில் அபயகிரி பகுதியில் இருந்த சிவன் கோயில் பிரசித்தி பெற்று விளங்கியிருக்க வேண்டும். அனுராதபுரத்தின் வடக்குப் பக்கத்தில் சிவன் கோயிலும், சமணப் பள்ளியும் இருந்தன. கிரி நிகந்தர் எனும் சமணத் துறவியின் பொறுப்பில் பிராமணர்களும், சமணர்களும் இவற்றைப் பராமரித்து வந்தனர்.தப்பியோடிய வட்டகாமினி இக்காலப்பகுதியில் மகாதீச எனும் தேரரின் நம்பிக்கைக்குரியவரான தனசிவன் எனும் தமிழனின் பாதுகாப்பில் 14 வருடங்கள் இருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிவலிங்கம், நந்திதேவர் ஆகியவை புனித சின்னங்களாக வைத்து ஸ்தாபிக்கப்பட்ட அபயகிரி தூபி**

ஐந்து தமிழ் மன்னர்களில் கடைசியாக தாதிகன் என்பவன் ஆட்சி செய்த காலத்தில் படை திரட்டி வந்த வட்டகாமினி அபய தாதிகனிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றினான். தமிழ் மன்னர்களின் ஆட்சிக்கு ஆதரவாக இருந்த கிரிநிகந்தரின் கோயில்களை அழித்து அவ்விடத்தில் தூபியைக் கட்டினான். தனது பெயரில் உள்ள அபய எனும் பெயரையும், கிரி நிகந்தரின் பெயரில் உள்ள கிரி எனும் பெயரையும் சேர்த்து அத்தூபிக்கு அபயகிரி எனப் பெயரிட்டான் என மகாவம்சம் கூறுகிறது



**அபயகிரி தூபியில் ஸ்தாபிக்கப்படவிருக்கும் லிங்கத்தையும், நந்திதேவரையும் வட்டகாமினி வணங்கும் காட்சி**

அதே சமயம் இவ்விடத்தில் இருந்து தன்னால் அழிக்கப்பட்ட சக்தி வாய்ந்த சிவன் கோயிலின் மூல மூர்த்தியான சிவலிங்கத்தையும், நந்தி தேவரையும் பயபக்தியுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்கி, அவற்றை புனித சின்னங்களாக ஒரு பேழையில் வைத்து, தான் அமைத்த தூபியின் நடுப்பகுதியில் ஸ்தாபித்து, தூபியைச் சுற்றிக் காவல் தெய்வங்களையும் அமர்த்தி வழிபட்டான். குபேரக் கடவுளின் காவலர்களான சங்கநிதி, பத்மநிதி ஆகிய தெய்வங்களை தூபியின் பிரதான வாசலில் காவல் தெய்வங்களாக ஸ்தாபித்தான். அன்று முதல் இன்று வரை இப்பிரமாண்டமான தூபியின் உள்ளிருந்து சிவனும், நந்திதேவரும் அருளாட்சி செய்து வருகின்றனர்.



**அபயகிரி தூபியில் லிங்கத்தையும், நந்திதேவரையும் ஸ்தாபிக்கும் முன் நடக்கும் புனித பூஜை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அபயகிரியில் சிவாலயம் இருந்தமைக்கான ஆதாரங்கள்**

அபயகிரியில் சிவாலயம் இருந்தமைக்கான பல சான்றுகள் அங்கே காணப்படுகின்றன. அபயகிரி தூபியில் லிங்கத்தையும், நந்திதேவரையும் ஸ்தாபிக்கும் முன் நடக்கும் புனித பூஜையும், மன்னன் வட்டகாமினி பூஜையில் கலந்து கொண்டு லிங்கத்தையும்,நந்திதேவரையும் வணங்கும் காட்சியும் அங்கே சுவர் ஓவியங்களாக சித்தரிக்கப் பட்டுள்ளன. இவற்றைத்தவிர இங்கு சில சிவாலயச் சின்னங்களும், சிலைகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

**அபயகிரியில் உள்ளவை யூப்ப ஸ்தம்பங்களா? தாரா லிங்கங்களா?**

அபயகிரி தூபியின் பின் பக்கம் துண்டுகளாக உடைந்த இரண்டு பெரிய தாரா லிங்கங்கள் காணப்படுகின்றன. இவற்றில் பெரியது *23* அடி நீளமும், *26* அங்குல விட்டமும் கொண்டதாகும். நான்கு துண்டுகளாக உடைந்து காணப்படும் இந்த லிங்கத்தின் மேல்பகுதி எட்டுப்பட்டம் கொண்ட விஷ்ணு பாகமாகவும், கீழ்ப் பகுதி சதுர வடிவம் கொண்ட பிரம்ம பாகமாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இரண்டாவது லிங்கம் இரண்டு துண்டுகளாக உடைந்துள்ளது.இது *12* அடி நீளமும், *11* அங்குல விட்டமும் கொண்டதாகும். இதன் முழுப்பகுதியும் எட்டுப் பட்டம் கொண்டதாக செதுக்கப்பட்டுள்ளது. இரண்டு லிங்கங்களின் உச்சிப்பகுதி எட்டு வரிகளைக் கொண்ட உருளை வடிவமாகும்.

இது பௌத்த தூபியின் உச்சியில் வைக்கப்பட்டிருந்த யூப்ப ஸ்தம்பங்கள் என இங்குள்ள பெயர்ப் பலகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது எட்டு திசைகளுக்கும் பாது காப்பாக விளங்கும் தெய்வங்களுக்காக வைக்கப்பட்டதாகவும், பொ.ஆ. 5 ஆம் நூற்றாண்டுக்கு முன்பு தூபியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சியில் பொருத்தப்பட்டவை எனவும், அதன் பின்பு தூபியின் உச்சியில் யூப்ப ஷ்தம்பங்களுக்குப் பதிலாக "தேவதா கொட்டுவ" எனப்படும் சதுரவடிவான பகுதி அமைக்கப்பட்டதாகவும் பெயர்ப் பலகையில் குறிப்பிடப் பட்டுள்ளது.



**அபயகிரி-பெரிய தாராலிங்கம் உயரம் 23' அடி, விட்டம் 26"**

தென்னிந்தியப் பிராந்தியத்தில் பல்லவர் காலத்தின் நடுப்பகுதியான பொ.ஆ.6ஆம் நூற்றாண்டின் பின்பே கல்லில் சிற்பங்கள் மற்றும் நேர்த்தியான தூண்கள் அமைக் கப்பட்டன. ஆனால் யூப்ப ஸ்தம்பங்கள் பொ.ஆ. 5 ஆம் நூற்றாண்டிற்கு முன்பு பயன்படுத்தப்பட்டதாக குறிப்பிடப் பட்டுள்ளது. ஆனால் அபயகிரியில் காணப்படும் இந்தத் தூண்கள் மிகவும் நேர்த்தியாக செதுக்கப்பட்டுள்ளன. இவை பொ.ஆ. 6ஆம், 7ஆம் நூற்றாண்டு காலத்தில் செதுக்கப் பட்டவையாகத் தெரிகின்றன. இதன்படி பார்க்கும் போது அபயகிரியில் உள்ள இத்தனை நேர்த்தியான தூண்கள் எப்படி 5 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவை எனக் கூற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும்? 5 ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் தான் தூபிகளில் யூப்ப ஸ்தம்பங்கள் பயன்படுத்தப்பட்டன என்றால் அபய கிரியில் காணப்படும் இந்தத் தூண்கள் எப்படி யூப்ப ஸ்தம்பங்களாக முடியும்?



**அபயகிரி-சிறிய தாராலிங்கம் உயரம் 12' அடி- விட்டம் 11"**



**காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் கோயிலின் 12 பட்டை தாராலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**சாஞ்சி தூபியின் வரைபடம்**




**அபயகிரி யூப்ப ஸ்தம்பம் அருகில் உள்ள வரைபடம்**

யூப்ப ஸ்தம்பங்கள் பற்றி "புராண அபயகிரி விஹாரய" எனும் நூலில் பேராசிரியர் டி.ஜி.குலதுங்க பின்வருமாறு கூறியுள்ளார். யூப்ப ஸ்தம்பம் என்பது பண்டைய தூபிகள் எல்லாவற்றிலும் கட்டாயமாக அமைக்கப்பட வேண்டிய ஓர் பாகம் அல்ல. சாஞ்சி தூபியில் யூப்ப ஸ்தம்பம் இருந்தமைக்கான ஆதாரங்கள் இல்லை. சேருவில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூபி அமைத்தமை தொடர்பாக தாதுவம்சம் கூறும் விபர ங்களில் யூப்ப ஸ்தம்பம் பற்றிக் குறிப்பிடப்படவில்லை. ருவன்வலிசாய தூபியில் யூப்ப ஸ்தம்பம் இருந்தது பற்றி குறிப்பிடப்படவில்லை என பேராசிரியர் தனது நூலில் கூறியுள்ளார். அனுராதபுரத்தில் உள்ள மிகப்பெரிய பண் டைய தூபிகளான ஜேதவனாராம,ருவன்வலிசாய, மிரிஸ்ஸ வெட்டிய ஆகியவற்றில் யூப்ப ஸ்தம்பங்கள் இருக்க வில்லை. ஆனால் பெரிய சிவாலயம் அமைந்திருந்த அபய கிரி தூபியில் மாத்திரம் எப்படி யூப்ப ஸ்தம்பங்கள் வந்தன? எனவே இவை தூபியில் இருந்த யூப்ப ஸ்தம் பங்கள் என்பதை விட, இங்கிருந்த சிவாலயத்தின் மூல மூர்த்தியான தாரா லிங்கங்கள் என்பதே பொருத்தமாக உள்ளது.அதே சமயம் சிவலிங்கங்கள் இவ்வளவு நீளமான தாக (உயரமானதாக) இருக்குமா எனும் கேள்வியும் இங்கே எழுகிறது.

பொதுவாகவே சிவலிங்கங்கள் மூன்று பாகங்களைக் கொண்டதாக அமையும். தளத்திற்குள் இருக்கும் அடிப் பகுதி பிரம்ம பாகம் எனவும், ஆவுடையாருக்குள் மறைந் திருக்கும் நடுப்பகுதி விஷ்ணு பாகம் எனவும், மேலே நம் கண்களுக்குத் தெரியும் உச்சிப் பகுதி உருத்திர பாகம் என வும் அழைக்கப்படும்.

பேராசிரியர் கோபால கிருஷ்ண ஐயர் "இந்து விக்கி ரகக் கலை மரபில் சிவ வடிவங்கள்" எனும் தனது நூலில் சிவலிங்கங்களின் வகைகள் மற்றும் உயரம், அகலம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அந்நூலில் பின்வருமாறு கூறப் பட்டுள்ளது.

சிவலிங்கங்களை நான்கு பிரதான வகைகளாகப் பிரிக் கலாம். அவை சுயம்பு, ஆர்ஷம், காணவம், மானுஷம் என்பனவாகும்.இவற்றில் மானுஷம் என்பது மனிதர்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்தாபிக்கப்படுபவையாகும். இவற்றில் மொத்தமாக எட்டு வகையான லிங்கங்கள் உள்ளன. இவை சமகண்ட லிங்கம், வர்த்தமான லிங்கம், சைவாதிக லிங்கம், ஸ்வஸ்திக லிங்கம், சர்வதோபத்ர லிங்கம், சார்வதேசிக லிங்கம், திரைராசிக லிங்கம், தாரா லிங்கம் என்பனவாகும். இவற்றின் மொத்த உயரத்தை மூன்றாகப் பிரித்து ஒவ்வொரு பாகத்தையும் அமைப்பார்கள். அதாவது மொத்தமாக உயரம் 12 அடி என்றால் 4+4+4 என்ற வகையில் பிரிக்கப்படும். இந்த அளவு 3+4+5 எனவும் அமையும். மேலும் 4+4+5 என அமையும் போது உயரம் 13 அடியாக அமையும். இதில் 4 அடி உருத்திர பாகமாகவும், 4 அடி விஷ்ணு பாகமாகவும், 4 அடி பிரம்ம பாகமாகவும் அமையும்.




8.1 இலிங்க நாளமும் யோனி பீடமும்

1. இலிங்க பாகம் 2. விஷ்ணுபாகம் 3. ருத்ர பாகம்
4. சதுரமான பிரம பாகம் 5. எட்டுப்பட்டமான விஷ்ணுபாகம்
6. திரட்சியான ருத்ரபாகம்.

**இந்து விக்கிரகக் கலை மரபில் சிவ வடிவங்கள் எனும் நூலில் காணப்படும் லிங்கத்தின் வரைபடம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் உருத்திர பாகமாகவுள்ள 4 அடி லிங்கம் மட்டுமே நம் கண்களுக்குத் தெரியும். எனவே நாம் பார்க்கும் 4 அடி சிவலிங்கத்தின் மொத்த உயரம் 12 அடியாகும். அபயகிரியில் உள்ள 12 அடி தாரா லிங்கம் நம் கண்களுக்குத் தெரிந்த 4அடி சிவலிங்கமாக இருந்திருக்க வேண்டும். அதுபோல 23 அடி தாரா லிங்கம் நம் கண்களுக்குத் தெரிந்த 8 அடி உயரத்தில் பிரமாண்டமான மூல லிங்கமாக இருந்திருக்க வேண்டும். தாரா லிங்கங்கள் பற்றி பேராசிரியர் கோபால கிருஷ்ண ஐயர் அந்நூலில் பின்வருமாறு கூறுகிறார்.

"தாரா லிங்கம் மூன்று வகையில் அமையும். முதல் வகை அடி முதல் நுனிவரை சதுரமாக அமைவதாகும். சமகண்ட லிங்கத்தில் பிரம்ம பாகம் மட்டும் சதுரமாகவும், மற்றவை எட்டுப்பட்டை வடிவிலும் அமைவது இரண்டாவது வகை. சமகண்ட லிங்கத்தின் பிரம்ம பாகத்தை சதுரமாகவும், விஷ்ணு பாகத்தை எட்டுப் பட்டமாகவும், உருத்திர பாகத்தை பதினாறு பட்டமாகவும் அமைத்தல் மூன்றாவது வகை. தாரா லிங்கத்தில் கீற்றுக்கள் போன்ற தாரைகள் செதுக்கப்படும்."

இவ்வாறு பேராசிரியர் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும் போது அபயகிரியில் காணப்படுபவை தாரா லிங்கங்கள் தான் என்பது மேலும் உறுதியாகிறது.

**அர்த்தநாரீஸ்வரர் வெண்கலச் சிலை**

அபயகிரி தூபியின் மேடையின் அருகில் சிறிய அர்த்த நாரீஸ்வரரின் வெண்கலச்சிலை ஒன்று கிடைக்கப்பெற்றுள்ளது. 6 அங்குல உயரமுடைய இச்சிலை 2 அடி ஆழத்தில் அகழ்வின்போது கிடைத்துள்ளது.நான்கு கைகளுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடது பக்கம் சிவனினதும், வலது பக்கம் பார்வதியின தும் வடிவத்துடன் நர்த்தன கோலத்தில் இச்சிலை காணப் படுகின்றது. தற்போது கொழும்பு தேசியநூதன சாலையில் இச்சிலை காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.



**அர்த்தநாரீஸ்வரர் வெண்கலச் சிலை**

### மிகப் புராதன நந்தி

அபயகிரி தூபி பகுதியில் அகழ்வாராச்சியின் போது மிகப் புராதனமான கல் நந்தியின் சிலை ஒன்று கிடைக்கப் பெற்றது. சுமார் 2அடி நீளமான இச்சிலை அபயகிரி தொல்பொருள் காட்சிச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நந்தி அபயகிரி விகாரையின் கீழ் மறைந்து போன சிவன் கோயிலின் சின்னமாக இருக்க வேண்டும் என நம்பப்படுகிறது.



**அபயகிரி விகாரைப் பகுதியில் அகழ்வாராய்ச்சியின் போது கண்டெடுக்கப்பட்ட மிகப் புராதன நந்தி**

## அபயகிரியில் கண்டெடுக்கப்பட்ட பிரம்மாவின் சிலையும், இந்து சமய சின்னங்களும்

அபயகிரி விகாரை வளாகத்தின் தெற்கில் உள்ள லங்காராம தூபிக்கு அருகில் காணப்படும் சிலை மனையில் நிலத்தின் அடியில் இருந்து சில இந்துசமயச் சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டன. இங்கு நின்ற நிலை வடிவத்தில் தலையற்ற ஓர் புத்தர் சிலை கிடைக்கப் பெற்றது. இச்சிலையின் கீழே இருந்த தாமரைப் பீடத்தின் உள்ளே ஓர் பிரம்மாவின் சிலை இருந்தது. நான்கு முகங்களுடன் கைகூப்பிய வண்ணம் ஆமை வாகனத்தின் மீது நின்ற நிலையில் காணப்படும் இச்சிலை கரடு முரடாக வடிவமைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம்மாவின் சிலையுடன் 15 இந்துசமய சின்னங்களும் தாமரைப் பீடத்தில் காணப்பட்டன. இவற்றில் மேரு மலை, சுவாஸ்திகா, சங்கு போன்றவை குறிப்பிடத்தக்கவை. இச்சின்னங்கள் காணப்பட்ட புத்தர் சிலை பொ.ஆ 6ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என கணிக்கப்பட்டுள்ளது. இங்கு கிடைக்கப்பெற்ற பிரம்மா சிலையும் பொ.ஆ 6ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும் எனக் கூறப்படுகிறது.



**அபயகிரியில் கண்டெடுக்கப்பட்ட பிரம்மாவின் சிலையும், இந்து சமய சின்னங்களும்**

## அபயகிரியில் லக்ஷ்மி மற்றும் சுவஸ்திகா நாணயங்கள்

அபயகிரி விகாரைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் போது அதிகளவில் லக்ஷ்மி உருவம் பொறிக்கப்பட்ட நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டன. லக்ஷ்மி உருவம் உட்கார்ந்த நிலையிலும், நின்ற நிலையிலும் பொறிக்கப்பட்டிருந்தன. மற்றும் சுவஸ்திகா வடிவம் பொறிக்கப்பட்ட நாணயங்கள் பலவும் கிடைக்கப் பெற்றிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இந்திரனின் வஜ்ராயுதம்

அபயகிரியின் பிரதான தானசாலையின் அருகில் மேற் கொள்ளப்பட்ட அகழ்வின் போது அங்கிருந்த ஓர் சிறிய கிணற்றில் இந்திரனின் ஆயுதமான வஜ்ரம் கிடைக்கப் பெற்றது. இவை யாவும் அபயகிரி பகுதியில் இந்து சமய செல்வா க்கு நிலவியமையைக் காட்டுகின்றது.

### அபயகிரியில் தமிழ்க் கல்வெட்டு

அபயகிரி தூபி அமைந்துள்ள மேடையின் விழிம்பி ற்கு அருகில் ஓர் தமிழ்க் கல்வெட்டு கண்டெடுக்கப்பட் டது. இது அபயகிரி தாதுகோபத்தின் மேடையின் ஓரத் தில் பதிக்கப்பட்டிருந்த கற்பாளங்களில் ஒன்றில் காணப் பட்டது.



**அபயகிரி தூபியின் மேடை அருகில் கண்டெடுக்கப்பட்ட தமிழ்க் கல்வெட்டு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கல்வெட்டு எட்டாம் நூற்றண்டுக்குரியது எனவும், கல்வெட்டில் உள்ள எழுத்துக்கள் பல்லவர் கால தமிழ் எழுத்துக்கள் எனவும் பேராசிரியர் பத்மநாதன் குறிப்பிட்டுள்ளார். கல்வெட்டில் 10 வரிகளில் தமிழ் எழுத்துக்கள் காணப்படுகின்றன. இது இலங்கையில் கிடைத்த, தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்களில் மிகப் பழமையானதாகும்.

அபயகிரிப் பகுதியில் அமைக்கப்பட்ட ஓர் கட்டிடத்தின் கல்தரை பற்றிய செய்தியை இக்கல்வெட்டு கூறுகிறது. இங்கிருந்த தமிழர்களால் இக்கல்தரை அமைக்கப்பட்டு தமிழில் கல்வெட்டும் பொறிக்கப்பட்டுள்ளது. இவர்கள் பௌத்த தமிழர்களாக இருக்க வேண்டும் எனவும் பேராசிரியர் கூறியுள்ளார்.

**அபயகிரி விகாரைப் பகுதியில் பிரமாண்டமான தீர்த்தக் கிணறும், அபிஷேக மண்டபமும்.**

அபயகிரி விகாரைக்கு முன்பு மிகப்பெரிய தீர்த்தக் கிணறு ஒன்று உள்ளது. இந்தியாவிலிருக்கும் கங்கா, யமுனா, பிரம்மபுத்ரா போன்ற புனித நதிகளில் இருந்து கொண்டுவரப்பட்ட தீர்த்தநீர் இக்கிணற்றில் ஊற்றப்பட்டு, இப்புனித நீர் இங்கிருந்த தெய்வச் சிலைகளுக்கு அபிஷேகம் செய்யப்பட்டதாக நூற்குறிப்புகள் கூறுகின்றன. கிணற்றின் முன் பக்கம் அபிஷேக மண்டபம் காணப்படுகிறது. இம்மண்டபத்தில் இருந்த பீடத்தில் புத்தர், போதிசத்துவர் மற்றும் தெய்வச் சிலைகளுக்கு அபிஷேகம் செய்யப்பட்டது. மண்டபத்தின் நடுவில் உள்ள மேடையின் இரு பக்கங்களிலும் அபிஷேகம் செய்யத் தேவையான புனித நீரை சேமிக்க வட்ட குழிகள் அமைக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அபயகிரி தூபியின் முன்பக்கம் காணப்படும் வட்டவடிவனான தீர்த்தக் கிணறு



அபிஷேகம் செய்ய பயன்படுத்தப்பட்ட "அபிஷேக் மண்டப"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அபிஷேக் புத்தர் சிலை**

மேலும் அபயகிரி தூபியின் முன்பக்கம் உள்ள ஓர் புத்தர் சிலைக்கும் அபிஷேகம் நடத்தப்பட்டுள்ளது. இச் சிலை "அபிஷேக் புத்தா" எனப் பெயர் பெற்றுள்ளது. இப்புத்தர் சிலை காணப்பட்ட மண்டபத்தின் அருகில் தெய்வச் சிலைகளை அபிஷேகம் செய்யப் பயன்படுத்தப் பட்ட பீடக்கல் ஒன்றும் காணப்படுகின்றது. தற்போது இந்த புத்தர் சிலை "இரண்டாம் போதி சமாதி புத்தா" என அழைக்கப்படுகின்றது. கைகள் இரண்டும் உடைந்த நிலையில் இந்த சிலை காணப்படுகிறது.



**அபயகிரியில் சிதைந்த நிலையில் உள்ள "அபிஷேக் புத்தா" சிலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24.சூரிய தேவன் கோயில்-அபயகிரி, அனுராதபுரம்

அபயகிரி விகாரைப் பகுதியில் சூரிய பகவானுக்கு கோயில் இருந்துள்ளது. இதனை உறுதி செய்யும் வகையில் இங்கு இரண்டு சூரிய பகவான் சிற்பங்கள் காணப்படுகின் றன. இவ்விரு சிற்பங்களிலும் உள்ள சூரிய தேவன் ஒரு கையில் தாமரை மலரை ஏந்திய வண்ணமும், அடுத்த கையை தன் தொடை மீது வைத்த வண்ணமும் நின்ற நிலையில் காணப்படுகிறார்.



**அபயகிரியில் காணப்படும் சூரியன் சிலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25.பிள்ளையார் கோயில்-யானைக்குளம், (அத் பொக்குன) அனுராதபுரம்

அபயகிரி விகாரையின் தென்மேற்கில் அத்பொக்குன எனும் நீர்த்தடாகம் காணப்படுகின்றது. "அத் பொக்குன" என்பது யானைத் தடாகம் என்பதாகும். அனுராதபுர நகரில் காணப்படும் தடாகங்களில் இதுவே அளவில் பெரியதாகும்.



**அத் பொக்குன எனும் யானைக்குளத்தின் அழகிய தோற்றம்**

இது 160 மீற்றர் நீளமும், 54 மீற்றர் அகலமும், 10 மீற்றர் ஆழமும் கொண்டது. இத்தடாகம் சர்வதேச ஒலிம்பிக் நீச்சல் தடாகத்தின் அளவைப்போன்று ஆறு மடங்கு பெரியதாகும். யானைத் தடாகத்திற்கு இதன் வடக்கில் உள்ள பெருமியன் குளத்திலிருந்தும், தெற்கில் அமைந்திருக்கும் புளங்குளத்திலிருந்தும் இரு கல்சுரங்கக் கால்வாய்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் நீர் கிடைக்கின்றது. இத்தடாகம் அபயகிரி விகாரை வளாகத்தில் தங்கியிருந்த பௌத்த பிக்குகளின் தேவைக் காக அமைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.



**யானைக்குளம் தடாகத்தில் கண்டெடுக்கப்பட்ட மிகப்பழமை வாய்ந்த தலையற்ற பிள்ளையார் சிலை**

**தடாகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற மிகவும் பழமை வாய்ந்த பிள்ளையார் சிலை**

இத்தடாகத்தில் மிகப்பழமை வாய்ந்த தலையற்ற பிள் ளையாரின் சுண்ணக்கல் சிற்பம் ஒன்று கண்டெடுக்கப் பட்டது. இதன் மூலம் தடாகத்தின் அருகில் ஓர் பிள்ளை யார் கோயில் அமைந்திருக்கலாம் என நம்ப இடமுண்டு. இப்பிள்ளையார் கோயில் இந்த நீர்த்தடாகத்திற்கு காவ லாக அமைக்கப் பட்டிருக்கலாம் எனவும் கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**யானைக்குளம் தடாகத்தின் அருகில் இந்துக் கோயிலின் அமைப்புடன் காணப்படும் ஓர் கட்டிடத்தின் இடிபாடு**

ஏனெனில் பண்டைய காலத்தில் குளங்களுக்கு காவலாக பிள்ளையார், நாகராஜர், ஐயனார் ஆகிய தெய்வங்களை குளக்கட்டில் அல்லது குளத்தின் அருகிலுள்ள பெரிய விருட்சத்தின் கீழ் ஸ்தாபிப்பது வழமையாக இருந்தது. அதுபோல ஓர் சிறிய குளத்திற்கு நிகரான இந்த மிகப் பெரிய நீர்த்தடாகத்திற்கும் காவலாக அன்றைய அனுராதபுர மன்னர்கள் பிள்ளையாரை இவ்விடத்தில் அமர்த்தியிருக்கலாம் எனக் கூறப்படுகிறது. தடாகத்தின் அருகில் இந்துக் கோயிலின் அமைப்புடன் ஓர் கட்டிடத்தின் சிதைவுகளைக் காணக் கூடியதாக உள்ளது.

**யானைத் தடாகம் என்ற பெயர் வரக் காரணம்**

இக்குளத்திற்கு யானைத் தடாகம்(அத்போக்குன)என்ற பெயர் வருவதற்கு ஓர் முக்கிய காரணமும் உள்ளது.1885ல் இத்தடாகத்தை ஆய்வு செய்த ஆங்கிலேய ஆராய்ச்சியாளரான எஸ்.எம்.பரோஸ் என்பவரே இதற்கு அத்பொக்குன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(யானைத் தடாகம்) என்ற பெயரை வைத்தார். எனினும் இப்பெயரை அவர் வைப்பதற்கு என்ன காரணம் என ஆராய்ந்து பார்க்கும் போது ஓர் விடயம் தெரிந்தது.



**யானைக்குளம் (அத் பொக்குன) தடாகத்தின் முழுமையான தோற்றம்**

இங்கு யானை முகம் கொண்ட பிள்ளையார் கோயில் அமைக்கப்பட்டிருந்தமையால் இக்குளமும் பிள்ளையார் குளம் என அழைக்கப்பட்டுள்ளது. இதுவே பின்பு யானைக் குளம் என மருவியுள்ளது என யூகிக்கலாம். ஏனெனில் இக்குளத்திற்கு யானைக்குளம் என்ற பெயர் எப்படி வந் தது என்பதை எந்த ஆய்வாளர்களாலும் கூறமுடியவில்லை. எனவே இங்கிருந்த யானை முகத்தையுடைய கடவுளின் பெயரால் அருகிலிருந்த குளத்திற்கும் யானைக்குளம் என்ற பெயர் வைக்கப்பட்டுள்ளது என்பதே சரியான, பொருத்த மான கூற்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26.விஜேராம சிவன் கோயில்-அனுராதபுரம்

அனுராதபுரம் புராதன நகரின் வடக்கில் சுமார் 3 கி.மீ தொலைவில் உள்ள பலுகஸ்வெவ குளத்தின் வட கரையில் விஜேராம விஹாரையின் கட்டிட இடிபாடுகள் காணப்படுகின்றன. இங்கு ஓர் சிவன் கோயிலின் எச்சங் களும் காணப்படுகின்றன.



**விஜேராம சிவன் கோயிலின் சிதைவுகள்**

**நந்தி சிலைகளும், இந்து தெய்வச் சிலைகளும்**

இங்கு மேற்கொண்ட அகழ்வுகளின் போது கருங்கல் நந்தி சிலைகளும், இந்து தெய்வச்சிலைகளும் கண்டெடுக் கப்பட்டன. இதே போன்ற வடிவத்தையுடைய நந்தி சிலைகள் மாத்தளை மாவட்டத்தின் வடபகுதியில் உள்ள மெனிக்தென என்னுமிடத்திலும் கண்டெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இங்கு கிடைக்கப்பெற்ற நந்தி போன்று இன்னுமோர் நந்தி அபயகிரி விஹாரைப் பகுதியிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இவை இங்கிருந்த சிவாலயத் தின் எச்சங்களாக இருக்கலாம் என நம்பப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவன் கோயில் கட்டிடத்தில் வெளிப்புற சுவரில் சிவன்-பார்வதி மற்றும் துவார பாலகர்களின் சிற்பங்கள்



இன்னுமோர் சிவன் பார்வதி சிற்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தெய்வ உருவங்களைக் கொண்டிருந்த சிவாலயம் பொ.ஆ.7ஆம்-10 ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்டதாக இருக்கவேண்டும் எனக் கூறப்படுகிறது. இங்கிருந்த சிவால யம் பல பரிவார மூர்த்திகளை கொண்டிருந்தது எனக் கூறும் வகையில் சிவாலயத்தின் அதிஷ்டானத்தில் 6 சிம் மக் கோமுகிகள் காணப்படுகின்றன. மேலும் சிவாலய கட்டிடத்தின் சுவர்களில் நின்ற நிலையில் சிவன்-பார்வதி யின் 6 புடைப்புச் சிற்பங்களும் செதுக்கப்பட்டுள்ளன. சிவன்-பார்வதி சிற்பங்களின் இரண்டு பக்கங்களிலும் துவார பாலகர்களின் சிற்பங்களும் காணப்படுகின்றன.



**சிவன் கோயிலில் காணப்படும் சிம்மக் கோமுகி**

இவற்றைத் தவிர இங்கு வெண்கலத்தினால் செய்யப் பட்ட சிறிய நந்தியின் சிலையும் கண்டெடுக்கப்பட்டது. இது 12 செ.மீற்றர் உயரமுடைய சிறிய நந்தியாகும். பொ. ஆ.8-9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இச்சிலையின் முதுகுப் பகுதி உடைந்துள்ளது. திமிலின் பின்பகுதி காணப்பட வில்லை. இச்சிலை தற்போது கொழும்பு தேசிய நூதன சாலையில் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


FIG. 144

**நந்தியின் வெண்கலச் சிலை**

இப்படியான சுமார் 20க்கும் மேற்பட்ட இந்துக்கோயில்கள் அனுராதபுரத்தில் காணப்படுவதாக H.C.P. பெல் அவர்களின் ஆய்வுக் குறிப்புகள் மூலம் தெரிய வருகிறது.

## 27.சிவன் கோயில்- அசோகாராம, பங்குளிய, அனுராதபுரம்

அனுராதபுரம் புராதன நகரின் வடக்கில் சுமார் 2 கி.மீ தொலைவில் உள்ள பங்குளிய பகுதியில் மருத தீர்த்தச் சுனையின் அருகில் அசோகாராம விஹாரை கட்டிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடிபாடுகள் காணப்படுகின்றன. இங்கு ஓர் புத்த பகவான் சிலை உள்ளது. இங்குள்ள கட்டிட இடிபாடுகளுக்குள் ஓர் சிவாலயத்தின் எச்சங்களும் காணப்படுகின்றன.

**பீடம் அற்ற தாரா லிங்கம்**

இங்கு பீடம் அற்ற ஓர் தாரா லிங்கம் காணப்படுகின்றது. அடிப்பக்கம் சதுரமாகவும் மேல்பக்கம் உருளையாகவும் இச்சிவலிங்கம் செதுக்கப்பட்டுள்ளது.சிதைந்த நிலையில் காணப்படும் இதன் உருளையான மேற்பகுதியில் 6 பட்டைகள் காணப்படுகின்றன.



**தாரா லிங்கத்தின் அண்மித்த தோற்றம்**

**நடராஜர் சிலையின் பாதங்கள்**

இங்கு இன்னும் சில சிவாலயச் சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டன. இவை வெண்கலத்தினால் ஆன நடராஜர் சிலையின் இரண்டு பாதங்கள் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அசோகாராம இடிபாடுகளுக்குள் காணப்படும் தாரா லிங்கம்




நடராஜர் சிலையின் பாதங்கள்

பொ.ஆ. 8-9 ஆம் நூற்றாண்டுக்குரிய இப்பாதங்களில் ஒன்று 8 செ.மீ. உயரமும், அடுத்தது 10 செ.மீ உயரமும் கொண்டதாகும். இதன் முழுமையான சிலை கணுக்கால் வரை உடைக்கப்பட்டுள்ளது. 1896ஆம் ஆண்டு எச்.சி.பி. பெல் இவற்றைக் கண்டெடுத்ததோடு தனது அறிக்கையில் இவ்விபரங்களை வெளியிட்டார். அவரது அறிக்கையில் இலக்கம். 62,63 ல் இவை பதிவு செய்யப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோமுகிகள்

அசோகாராம இடிபாடுகளுக்குள் இந்துக் கோயில்களின் கருவறையுடன் இணைத்துக் கட்டப்படும் கோமுகிகள் நான்கு காணப்படுகின்றன. இக்கோமுகிகள் தற்போது இங்குள்ள வட்ட வடிவமான தூபியின் அடித்தள நிலத்தில் கற்கள் பதிக்கப்பட்டுள்ள தரையுடன் இணைத்துக் கட்டப்பட்டுள்ளன.



**அசோகாராம இடிபாடுகளுக்குள் காணப்படும் கோமுகி**

## தமிழ், கிரந்த மொழிக் கல்வெட்டுக்கள்

அசோகாராம விகாரைப் பகுதியில் 3 கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவற்றில் ஒன்று தமிழ் மொழியிலும், ஏனைய இரண்டும் கிரந்த மொழியிலும் எழுதப்பட்டுள்ளன. ஒரு கல்வெட்டு தூணிலும், மற்றைய கல்வெட்டுக்கள் இரண்டும் கற்பலகைகளிலும் பொறிக்கப்பட்டுள்ளன. 1891 ஆம் ஆண்டு எச்.சி. பி.பெல் இக்கல்வேட்டுக்களைக் கண்டு பிடித்தார். அவர் இவற்றை பங்குளிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வெட்டுக்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். இவை சிறிய கல்வெட்டுக்களாகும்.




**கோமுகிகள் இரண்டின் தோற்றம்**

இவற்றில் தமிழ்க் கல்வெட்டு *3* வரிகளில் தூண் ஒன்றில் பொறிக்கப்பட்டுள்ளது. இதில் "ஸ்ரீகேசரி அரசி பிச்சை ஒன்று" எனும் வாசகம் எழுதப்பட்டுள்ளது. கேசரி அரசி என்பவர் செய்த தானம் பற்றிய செய்தியை இக்கல்வெட்டு கூறுகிறது. கிரந்த மொழி கல்வெட்டில் "கந்தகுடி வித்தி ஸ்தி ரோந்த....கேசரி"ஆகிய சொற்கள் காணப்படுகின்றன. அடுத்த கல்வெட்டில் "ஸ்ரீ சந்தசதேப்ய" எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வேட்டுக்கள் கேசரி, ஸ்ரீ சாந்தசதி ஆகியோர் இங்கு செய்த திருப்பணி பற்றிய செய்திகளைக் குறிப்பிடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்து தெய்வ சுதை உருவங்களும், இரும்பு வேலும்**

பங்குளிய அசோகாராம கட்டிட இடிபாடுகளுக்குள் பல சுதை உருவங்களின் உடைந்த தலைகளும், உடலின் பாகங்களும், மிருகங்களின் உடைந்த பாகங்களும் கண்டெடுக்கப்பட்டன. இவற்றின் இந்து சமய அடையாளங்களுடன் சில உருவங்கள் காணப்படுகின்றன.




**தலையில் திரிசூலத்துடன் மனித சுதை வடிவம்**

*1892ஆம் ஆண்டு எச்.சி.பி.பெல் இவற்றைக் கண்டெடுத்தார். பங்குளிய இடிபாடுகளில் உள்ள எல்லா கட்டிடங்களிலும் அத்திவாரங்களும்,சில கற்தூண்களுமே எஞ்சியுள்ளன. இவற்றில் 21ஆம் இலக்கக் கட்டிடத்திலேயே இச்சுதை உருவங்கள் கண்டெடுக்கப்பட்டன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குளிய இடிபாடுகள் உள்ள வளாகத்தின் மேற்குப் பக்கத்தில் மருத தீர்த்தச் சுனையின் அருகில் 21 ஆம் இலக்கக் கட்டிடம் அமைந்துள்ளது. வடக்கு தெற்காக ஒடுங்கிய நீண்ட வடிவில் கிழக்குத் திசையை நோக்கிய வண்ணம் இக்கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது.சந்திர வட்டக் கல்லுடன், இரண்டு நாககாவற் கற்சிலைகளுடன் கூடிய 5 படிகளைக் கொண்ட வாசலும், அதன் மீது நீள் சதுரமான மேடையில் இக்கட்டிடம் காணப்படுகின்றது.



**கோமுகி மற்றும் தூண்களுடன் பரிவாரக் கோயில் கட்டிடம்**

மேடையில் ஒடுங்கிய நீளமான மண்டபமும், மண்டபத்தின் முன் பக்கம் 7 சிறிய அறைகளும் வரிசையாக அமைக்கப்பட்டுள்ளன. இவை பரிவாரக் கோயில்களாக இருக்க வேண்டும். தற்போது இக்கட்டிட இடிபாடுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12 கற்றூண்களும், 2 நீளமான கோமுகிகளும் காணப்படு கின்றன. இது போன்ற வடிவமைப்புடன் கதிர்காமம் முருகன் கோயிலின் பின்பக்கம் வரிசையாக 5 பரிவாரக் கோயில்கள் உள்ளன.




**பூணூல் தரித்த உருவங்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சுதையில் நந்தி உருவங்களின் உடைந்த துண்டுகள்




இரும்பு வேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குளியவில் கிடைக்கப்பெற்ற மனித உருவத் தலைக ளில் 2ஆம் இலக்க உருவத்தின் முடியில் திரிசூலம் காண ப்படுகின்றது. அடுத்ததாக உடைந்த மனித உடற் பாகங்க ளில் இரண்டு உருவங்கள் பூணூல் தரித்து காணப்படுகின் றன. மிருக உருவங்களில் உடைந்த இரண்டு நந்தியின் உருவங்கள் உள்ளன. இன்னுமோர் கட்டிடத்தில் இரும்பு வேல் சின்னம் ஒன்று கிடைத்துள்ளது. இதன்படி பங்குளி யவில் சிவன் ஆலயம் மட்டுமல்லாது பரிவார தெய்வங்க ளுக்கும் சிறிய ஆலயங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

## 28.கண்ணகி அம்மன் கோயில்-அனுராதபுரம்

அனுராதபுரத்தில் பொ.ஆ. 2ஆம் நூற்றாண்டில் இல ங்கையை ஆண்ட கஜபாகு மன்னனால் கண்ணகி அம்ம னுக்கு கோயில் அமைக்கப்பட்டது. சேரநாட்டில் கண் ணகி விழாவில் கலந்து கொண்டு நாடு திரும்பிய மன்னன் கஜபாகு கண்ணகி அம்மனின் தங்கச் சிலம்பு மற்றும் நான்கு கோயில்களில் இருந்த தெய்வங்களின் சின்னங்கள் *(The jewelled Anklets of the Goddess Pattini and the Insignia of the Gods of the four Devalas)* ஆகியவற்று டன் பல குடிமக்களையும் இங்கு அழைத்து வந்ததாகவும், இவர்கள் மொத்தமாக 12000 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொகையினர் எனவும் "இராஜவலிய" கூறுகிறது.

**கஜபாகு மன்னன் அமைத்த கண்ணகி கோயில்கள்**

கண்ணகியின் தங்கச் சிலம்புடன் திரும்பிய மன்னன் யாழ்ப்பாணத்தில் சம்புகொல பட்டினத்திற்கு அருகிலுள்ள திருவடிநிலை எனும் இடத்திலுள்ள அங்கணாமைக்கடவை எனும் இடத்தில் கண்ணகிக்கு முதலாவது கோயிலை அமைத்தான் என நூல்கள் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கிருந்து அனுராதபுரத்திற்கு வரும் வழியில் மடு என்னுமிடத்தில் கண்ணகியம்மனுக்கு ஓர் கோயிலையும் அமைத்தான் எனவும் கூறப்படுகிறது. மடுவில் கண்ணகி அம்மனுக்கு கோயில் இருந்தது பற்றி *Manual of the North Central Province* எனும் ஆய்வு நூலில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. "*St.Mary s Church at Madhu is considered by the Buddhist and Great many of the Tamil pilgrims who resort there as the Temple of Pattini Amma (Amman kovil). It is interesting to note that the festivals of Kannaki and those of Madhu are in the month of July*"

அதன்பின் கஜபாகு மன்னன் தனது தலைநகரான அனுராதபுரத்தில் ஓர் கண்ணகியம்மன் கோயிலை அமைத்தான் எனவும் வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. இதுவே ஈஸ்வரமுனியில் அமைந்த கண்ணகியம்மன் கோயிலாகும். ஏற்கனவே இங்கு அமைக்கப்பட்டிருந்த ஈஸ்வர முனி எனும் சிவன் கோயிலின் அருகில் உள்ள நீர்த்தடாகத்தின் முன்பாக இக்கோயில் அமைந்திருந்ததாகக் குறிப்புகள் கூறுகின்றன.

**ஆடி மாதம் கண்ணகிக்கு வீதி உலா**

இக்கோயில் அமைக்கப்பட்ட பின் கஜபாகு மன்னன் வருடந்தோறும் ஆடிமாதம் பூரணை தினத்தன்று கண்ணகிக்கு பெருவிழா நடத்தி வந்தான். இவ்விழாவின் போது கண்ணகி அம்மன் சிலை ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. ஆடி மாதத்தில் நடைபெற்ற இவ்விழாவை "எசல பெரஹரா" என அழைத்து வந்தனர். இவ்விழாவின் காரணமாக இலங்கை மழை வளம் பெருகி நாட்டில் விவசாய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைச்சல்கள் பெருகி செழிப்புடன் விளங்கியதாக சிங்கள இலக்கிய நூல்கள் மூலம் தெரிய வருகிறது.





**ஜேதவனாராம பகுதியில் கிடைத்த இரு கண்ணகி அம்மன் சிலைகள்**

கஜபாகு மன்னன் காலமான பொ.ஆ.*112-134* வரையான காலப்பகுதியில் இவ்வாலயம் சிறப்புற்று விளங்கியது. இவனால் அறிமுகப்படுத்தப்பட்ட கண்ணகியம்மன் திருவிழாவின் தொடர்ச்சியே தற்போது கண்டியில் நடந்து வரும் “எசெல பெரஹறா” எனும் ஊர்வலமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பினும் இசுருமுனிய பகுதியில் கண்ணகியம்மன் சம்பந்தமான எந்த தடயங்களும் இதுவரை கிடைக்கப் பெறவில்லை. அதேசமயம் ஜேதவனாராம பகுதியில் மேற் கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் போது இரண்டு கண்ணகி அம்மன் சிலைகள் கண்டு பிடிக்கப்பட்டமை இங்கே குறிப்பிடத்தக்கது.

## 29.ஜேதவனாராம சிவாலயம்-அனுராதபுரம்

அனுராதபுரம் புனிதநகரில் ஜேதவனாராம தாது கோபம் அமைந்துள்ளது. இதற்கு அருகில் சிவாலயம் மற் றும் சில இந்துக் கோயில்கள் இருந்தமைக்கான ஆதார ங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இக்கோயில்கள் ஜேதவனா ராம தாதுகோபத்திற்கு மேற்கில் அமைக்கப்பட்டிருந்தன.

### தமிழ் வணிகர்கள் அமைத்த கோயில்கள்

அனுராதபுரத்தின் புராதன நகரின் மத்தியில் அர ணும், அகழியும் சூழ்ந்த கோட்டைக்குத் தெற்குப்புறத்தில் பொ.ஆ.9ஆம் நூற்றாண்டில் குடியேறிய வணிகர்களால் இவ்வாலயங்கள் கட்டப்பட்டுள்ளன. அன்றைய காலப்பகு தியில் தென்னிந்தியாவில் புகழ்பெற்று விளங்கிய சர்வதேச வணிகர்களான நானாதேசிக வணிகர்கள் அனுராதபுரத்தில் வணிக நகரமொன்றை அமைத்துள்ளனர். பல இடங்களில் வணிக நிலையங்களை நிறுவி இங்கிருந்த அரசர்களுக்கு தேவையான ஆடை ஆபரணங்கள் முதல் ஆயுதங்கள், யானை, குதிரை வரை சகல பொருட்களையும் வெளிநாடு களிலிருந்து பெற்றுக் கொடுக்கும் வாணிப உரிமையை ஒப்பந்தத்தின் அடிப்படையில் பெற்று வர்த்தகத்தில் ஈடு பட்டு வந்தனர்.

அனுராதபுரத்தில் அமைந்திருந்த பௌத்தப் பெரும் பள்ளிகளுக்குத் தேவையான கற்பூரம், சந்தனம், நெய்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணெய் மற்றும் பௌத்த சங்கத்தாருக்கு வேண்டிய சீனப்பட்டு, துணிகள் போன்றவற்றை பெருமளவில் வெளி நாடுகளிலிருந்தும், உள்நாட்டு உற்பத்தியாளர்களிடம் இரு ந்தும் கொள்வனவு செய்து விநியோகம் செய்தனர். அரச செல்வாக்குப் பெற்றிருந்த இவர்கள் தாம் அமைத்த நகரங் களிலும், விற்பனை நிலையங்களுக்கு அருகாமையிலும் தமது வழிபாட்டின் நிமித்தம் கோயில்களை அமைத்து வழிபட்டனர். இதே அடிப்படையில் ஜேதவனாராம பகு தியில் நானாதேசிக வணிக நிலையங்களுக்கு அருகில் அமைக்கப்பட்டதே ஜேதவனாராம சிவாலயமாகும்.

பொ.ஆ. 9ஆம், 10ஆம் நூற்றாண்டளவில் அமைக்கப் பட்ட இச்சிவாலயம் அன்று முதல் சோழர் இலங்கையை ஆட்சிசெய்த காலத்திலும், அதன் பின்பும் சிறப்புற்று விள ங்கியது. சோழர்களின் ஆட்சியின் பின்பு தலைநகர் என்ற அந்தஸ்த்தை அனுராதபுரம் இழந்தபோதும் அங்கிருந்த பௌத்த வழிபாட்டுத் தலங்களும், மகாபோதி நிலையமும் பௌத்த சங்கத்தார்களாலும், யாத்திரை செல்லும் மக்க ளாலும் வழிபடப்பட்டது. பொலநறுவையிலிருந்து ஆட்சி செய்த மன்னர்களும் அனுராதபுரம் சென்று புராதன தாது கோபங்களை பேணுவதிலும், வழிபடுவதிலும் காலத்துக் குக் காலம் அவற்றிலே விழாக்கள் நடத்துவதிலும் ஆர்வம் காட்டி வந்தனர்.

பொ.ஆ.1250ஆம் ஆண்டுவரை இதே நடைமுறையில் அனுராதபுரம் இயங்கிக் கொண்டிருந்தது. வணிகர்களால் வழிபடப்பட்டு வந்த சிவாலயமும் சிறப்புற்று விளங்கியது. இதன்பின் கலிங்க மாகனின் படையெடுப்பிற்கு பிறகு இந்நகரம் கைவிடப்பட்ட நிலையில் இங்கிருந்த பௌத்த வழிபாட்டுத் தலங்களோடு இந்து ஆலயங்களும் பராம ரிப்பின்றி அழிவுற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எச்.சி.பி. பெல் கண்டுபிடித்த இந்து ஆலய இடிபாடுகள்**

ஆங்கிலேய தொல்பொருள் ஆய்வாளரான எச்.சி.பி. பெல் என்பவரால் *1892* ஆம் ஆண்டு அனுராதபுரத்தில் தொல்லியல் ஆய்வுகள் மேற்கொண்ட போது இப்புராதன நகரில் *20* க்கும் மேற்பட்ட இந்துக் கோயில்களின் இடிபாடுகள் அடையாளம் காணப்பட்டன. மேலும் பல கல் வெட்டுக்களும், ஆலயச் சின்னங்களும், சிலைகளும் அவ்வப்போது கண்டெடுக்கப்பட்டன. இக்கோயில்கள் யாவும் பொ.ஆ.10ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டவையாகும். இவை பொ.ஆ.7ஆம் நூற்றாண்டு முதல் அமைக்கப்பட்டவை எனத் தெரிய வருகிறது.



**ஜேதவனாராம சிவாலயம் அமைந்திருந்ததாகக் கருதப்படும் இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட உமா-மகேஸ்வரர் சிலைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிலத்திலிருந்து வெளிப்பட்ட இந்துக் தெய்வச் சிலைகள்**

ஜேதவனாராம சிவாலயம் மற்றும் இங்கிருந்த கோயில்களுக்குரிய பல விக்கிரகங்களும், படிமங்களும் சிவாலயம் அமைந்திருந்த இடத்தினருகில் கண்டுபிடிக்கப்பட்டன. கலாசார முக்கோணத் திட்டத்தின் கீழ் ஜேதவனாராம தாதுகோபத்தின் சுற்றுப் புறங்களில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியின் போது பல அரிய வெண்கலச் சிலைகள் கண்டெடுக்கப்பட்டன.



**சந்திரசேகரர் வெண்கலச் சிலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு உமாமகேஸ்வரர், சந்திரசேகர், பார்வதி, சிவகாமி சமேத நடராஜர், வீரபத்திரர், பூவளநாயகி, நாகதம்பிரான் அல்லது வகுளீசரர், பத்தினியம்மன் ஆகியோரின் வெண்கலச் சிலைகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவற்றில் உமாமகேஸ்வரர், சந்திரசேகர், நடராஜர், பார்வதி ஆகிய சிலைகள் ஒரு குழியில் புதைக்கப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அனுராதபுரத்தில் ஏற்பட்ட கலகமொன்றின் போது சிவாலயத்திலிருந்த இச்சிலைகள் பாதுகாப்பாக எடுத்துச் செல்லப்பட்டு நிலத்தில் புதைக்கப்பட்டுள்ளன. இவற்றில் சிவன் சிலையும், உமாதேவியார் சிலையும் பொ.ஆ.11ஆம் நூற்றாண்டுக்குரியவையாகும்.

**வீரபத்திரரின் வெண்கலச் சிலை**

இங்கு கிடைக்கப்பெற்ற வீரபத்திரரின் சிலை மிகவும் வித்தியாசமான முறையில் வார்க்கப்பட்டுள்ளது. ஒரு கையில் வாள் போன்ற படைக்கலத்தை ஏந்திய வண்ணமும், மறுகையில் ஒரு தலையைப் பிடித்த வண்ணமும் உள்ளது. தக்கனின் யாகத்தைக் குலைத்து அவனது தலையைக் கொய்து தாண்டவம் புரிகின்ற கோலமாக இது அமைந்துள்ளது. இச்சிலையின் கீழ் “ஸ்ரீ நானா தேசிகன்” என எழுதப்பட்டுள்ளது. நானாதேசிக வணிகரொருவரால் இவ்வாலயத்திற்கு வழங்கப்பட்ட சிலையாக இது இருக்க வேண்டும். நானாதேசிக வணிகர்கள் சோழர் காலத்தில் இலங்கையின் பல பாகங்களிலும் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த வீரபத்திரர் சிலை பொ.ஆ. 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இச்சிலைகள் யாவும் கொழும்பு நூதனசாலையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ஜேதவனாராம சிவாலயப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட வீரபத்திரர் சிலை**

## மிகவும் அரிய பூவளநாயகி வெண்கலச் சிலை

பூவளநாயகி எனப்படும் சிலை இலங்கையில் வேறெங்கும் காணக் கிடைக்காத அரிய சிலையாக உள்ளது. இந்தியாவில் கூட இப்படியொரு சிலை கிடைத்ததில்லையாம். மலர்ச்செடி மீது பூர்ணகலசம் ஏந்தியவாறு காணப்படும் இவ்வம்மன் திருவுருவம் வளம், செழுமை, நிறைவு போன்றவற்றைக் குறிப்பதால் இவ்வம்மனுக்கு பூவளநாயகி என்ற பெயர் பொருத்தமாகும் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். வாணிபத்தால் செல்வம் படைத்து விளங்கிய வணிக சமூகத்தவர்களால் முற்காலங்களில் போற்றி வழிபடப்பட்ட தெய்வமாக இது இருக்க வேண்டும் என நம்பப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ஜேதவனாராம சிவாலயம் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட பூவளநாயகி சிலை**

**மிகமிக அரிதான நாகதம்பிரான் அல்லது வகுளீசரர் சிலை**

அடுத்ததாக மிகமிக அரிதான படிமமொன்றும் கிடைக்கப் பெற்றுள்ளது. அச்சிலை வருளீசரர் அல்லது நாகதம் பிரான் என அடையாளம் காணப்பட்டுள்ளது. இதுவரை இந்தியாவிலும், இலங்கையிலும் இது போன்ற சிலையொன்று கிடைக்கப்பெறவில்லை. முகம் துணியால் மூடப் பட்ட நிலையில், ஒரு கையில் ஏடுகளும், மறுகையில் மாலையொன்றும், பின்புறத்தில் தண்டமொன்றும் காணப் படுகிறது. இது பிற தேசமொன்றிலிருந்து இங்கு கொண்டு வரப்பட்ட ஒன்றாகக் கருதப்படுகின்றது. இச்சிலையும், பூவளநாயகி சிலையும் அனுராதபுரம் ஜேதவனாராம அருங்காட்சியகத்தில் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**நாகதம்பிரான் அல்லது வகுளீசரர் சிலை**

இங்கு கிடைக்கப்பெற்ற இரண்டு கண்ணகி சிலைகளும் ஜேதவனாராம அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. சிலப்பதிகாரத்தில் "ஒரு முலையிழந்தாள் பத்தினி" எனப் பாடப்பட்டுள்ளது. மதுரை மாநகரை மும்முறை வலம் வந்து தன் மார்பகத்து இடது முலையினைத் திருகிப் பெயர்த்து வீதியில் எறிந்து சபித்தாள் என சிலப்பதிகாரம் கூறுகிறது. இங்குள்ள கண்ணகி வெண்கலச் சிலைகள் இரண்டும் ஒரு முலையற்ற வடிவத்தில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இதை வைத்தே இச்சிலைகள் இரண்டும் பத்தினிக்குரியவை என அடையாளம் காணப்பட்டன. இச்சிலைகள் யாவும் ஜேதவனாராம பகுதியில் சிவாலயம் மற்றும் பரிவாரக் கோயில்கள் இருந்தமைக்கான தொல்லியல் ஆதாரங்களாக விளங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

 

**ஜேதவனாராமயில் சிவாலயம் இருந்த பகுதியில் கிடைத்த உமாமகேஸ்வரர், உமாதேவி சிலைகள்**

## *30.காளி அம்மன் கோயில் - அனுராதபுரம்*

அனுராதபுரம் புராதன நகரின் மத்தியில், தூபராம தாதுகோபத்திலிருந்து அபயகிரி தாதுகோபத்திற்கு செல்லும் வழியில் பாதையின் இடது பக்கத்தில் காளி அம்மன் கோயில் அமைந்திருந்தது. தூபராம தாதுகோபத்தின் வடக்குத் திசையில் 500 மீ தொலைவில் வீதியின் இடது புறத்தில் இக்கோயிலின் இடிபாடுகள் காணப்படுகின்றன. முன்பு வை வீதி என இது அழைக்கப்பட்டது. புராதன அனுராதபுரக் கோட்டையின் மேற்கு வாசலுக்கு நேராக இவ்வாலயம் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இடிபாடுகளிடையே கண்டெடுக்கப்பட்ட அம்மன் சிலை**

அகழியாலும், அரணாலும் சூழப்பட்ட இக்கோட்டைப் பகுதியில் முதலாம் விஜயபாகுவின் அரண்மனையின் இடிபாடுகளும் கெடிகே, தலதாமாளிகை போன்றவற்றின் எச்சங்களும் காணப்படுகின்றன. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் அனுராதபுரக் கோட்டையின் மேற்கு வாசற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின் போது ஆய்வாளர் *H.C.B.*பெல் அவர்களால் இங்கிருந்த இந்துக் கோயிலின் இடிபாடுகளும், சின்னங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்விடிபாடுகளுக்கு மத்தியில் அழகிய அம்மன் விக்கிரகமொன்றும் கண்டெடுக்கப்பட்டது. இச்சிலை மதிஷமர்த்தினியின் தோற்றத்தை உடையதாகும்.




**அனுராதபுரம் புராதன நகரில் உள்ள காளிகோயில் இடிபாடுகள்**

**பண்டைய தெய்வச் சிலைகளில் மிக்க அழகுடைய மகிஷமர்த்தினி சிலை**

அனுராதபுரம் காளிகோயிலில் கண்டெடுக்கப்பட்ட இந்த மகிஷமர்த்தினி அம்மன் சிலை இலங்கையில் கிடைக்கப்பெற்ற தெய்வச் சிலைகளிலேயே மிகவும் உன்னதமானதும்,அழகிய வடிவமைப்பையும் கொண்டதாகும். எட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகளையுடைய இந்த அம்மன் சிலை ஓர் செங்குத்தான நீள்வட்டக்கல்லில் புடைப்புச் சிற்பமாக செதுக்கப்பட்டுள்ளது.



**காளிகோயில் இடிபாடுகளிடையே கண்டெடுக்கப்பட்ட வனப்புமிக்க மகிஷமர்த்தினி சிலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மனின் முகத்தில் மூக்குப்பகுதி சற்று சிதலமடைந்து காணப்படுகின்றது. மேலும் சிலையின் அடியில் கணுக்கால் பகுதி முற்றாக வெடித்து சிலை இரண்டு துண்டுகளாகக் காணப்படுகிறது. வெடித்த இந்தப் பகுதி சிலையுடன் சேர்த்து ஒட்டவைத்து முழுமையாக்கப்பட்டுள்ளது.

அம்மனின் எட்டுக் கைகளிலே மேற்பகுதியிலுள்ள கைகளில் சங்கும், கதாயுதமும் ஏந்திய வண்ணம் உள்ளன. அடுத்த இரண்டு கைகளில் வாளும், வில்லும் காணப்படுகின்றன. அடுத்த இரண்டு கைகளில் உள்ள ஆயுதங்கள் உடைந்திருக்கலாம் எனத் தெரிகிறது. இக்கைகளில் திரிசூலமும், ஈட்டியும் இருந்திருக்க வேண்டும். கீழே உள்ள கைகளில் இடது கையில் பெரிய கத்தியை நிலத்தில் ஊன்றிய வண்ணமும், வலது கையை இடுப்பில் வைத்தவாறும் செதுக்கப்பட்டுள்ளது.

தலையிலே கிரீடமும், காதுகளில் வளையமும், தோள்களிலே அம்புக் கூடையும், கழுத்திலே மணிமாலைகளும், மார்பிலே ஆடை அணிகளும், கைகளிலே வளையல்களும், இடையிலே ஒட்டியாணமும், இடுப்பிலே கச்சையும், கால்களிலே சிலம்பும் அணிந்த வண்ணம் வடிவமைக்கப்பட்ட இத்தனை நேர்த்தியான புராதன சிலையை இலங்கையில் வேறு எங்கும் காண முடியாது.

இப்படிப்பட்ட அழகிய, நேர்த்தியான மகிஷமர்த்தினியின் சிலை கொழும்பு தேசிய நூதனசாலையை அலங்கரிக்கும் அதேவேளை,இச்சிலையைப் பாதுகாத்த கோயில் கவனிப்பாரின்றி பற்றைகள் வளர்ந்து கற்தூண்கள் அங்கொன்றும், இங்கொன்றுமாக வீசப்பட்டு அவல நிலையில் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அனுராதபுர தமிழ் வணிகர்களின் குலதெய்வம்**

இந்த மகிஷமர்த்தினியின் உருவம் நானாதேசிக வணிகர்களின் வணிக முத்திரையிலும் பொறிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. நானாதேசிக வணிகர்கள் அனுராதபுரத்தில் அரச செல்வாக்குப் பெற்று விளங்கியிருந்தபடியால், இவர்களின் வர்த்தக நகரங்கள் அனுராதபுரத்தின் பிரதான பௌத்த விகாரைகளுக்கு சமீபத்தில் உருவாக்கப்பட்டிருந்தன. இவர்களின் குலதெய்வமான பரமேஸ்வரியின் வடிவமே மகிஷமர்த்தினி என்பதால் இவ்வம்மனை மூலமூர்த்தியாகக் கொண்ட ஆலயத்தை இவ்விடத்தில் அமைத்திருந்தனர். இவ்வாலயம் பொலநறுவைக் காலத்தில் அமைக்கப்பட்டிருந்தது.

தூபராம தாதுகோபத்திற்கு செல்லும் வழியில் இவ்வாலயம் அமைந்திருந்ததால், தாதுகோபத்தைத் தரிசிக்க வரும் மக்கள் அதிகமாகக் கூடும் இடமான இப்பகுதியில் வணிகர்களின் விற்பனை நிலையங்கள் இருந்த இடத்திற்கு அருகிலேயே அவர்களால் அம்மன் ஆலயம் அமைக்கப்பட்டிருந்தது என்று ஊகிக்கக் கூடியதாக உள்ளது. இவ்வம்மன் ஆலயம் கர்ப்பக்கிருகம், அந்தராளம், மண்டபம் போன்ற பகுதிகளைக் கொண்டிருந்தது. 20 தூண்கள் கூரையைத் தாங்கியிருந்தன. கோயில் பிரகாரத்தின் மதில்கள் செங்கற்களால் கட்டப்பட்டிருந்தன.

**அரச ஆதரவுடன் அனுராதபுரத்தில் வணிகம்செய்த தமிழர்**

சோழர் ஆட்சியின் பின் வந்த மன்னர்கள் அனைவரும் பொலநறுவையைத் தலைநகராகக் கொண்டு முடிசூட்டிக் கொண்டாலும் அனுராதபுரத்தை புனித நகராகப் பராமரித்து வந்தனர். இங்கிருந்த பிரதான தூபிகளான ருவன்வலிசாய, ஜேதவனாராம, தூபராம, அபயகிரி போன்றவற்றைப் பாதுகாப்பதிலும், அவற்றிற்குச் சென்று வழிபாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்துவதிலும், அவ்வப்போது விழா எடுப்பதிலும், தான தர்மங்கள் செய்வதிலும் ஆர்வம் காட்டி வந்தனர். இத் தூபிகளுக்கும், விஹாரைகளுக்கும் தேவையான சகல பூஜைப்பொருட்களும், அன்னதானத்திற்குத் தேவையான சரக்குகள் முதல் சகல பொருட்களும் தமிழ் வணிகர்க ளால் தருவித்துக் கொடுக்கப்பட்டன. தூர இடங்களில் உற்பத்தியாகும் பொருட்களும், அந்நிய நாடுகளில் உற்பத் தியாகும் பொருட்களும் இவ்வணிகர்களால் தருவிக்கப் பட்டன. இவ்வுரிமை அரச ஆதரவுடன் தமிழ் வணிகர் களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

பொ.ஆ. 1197-1200 வரையும், பொ.ஆ.1209-1210 வரையும், பொ.ஆ. 1211-1212 வரையுமாக மூன்று தட வைகள் பொலநறுவையில் இராணியாக முடிசூடிக் கொண்ட லீலாவதி, பராக்கிரமபாகு மன்னனின் மனைவி யாவார். இவள் தனது ஆட்சியின் போது அனுராதபுரத் திலுள்ள தூபிகளைத் தரிசிக்கவரும் மக்களுக்கு அன்ன தானம் வழங்குவதற்காக ஓர் தானசாலையை அமைத்தாள். இதற்கு வேண்டிய அரிசி முதல் சரக்குகள் போன்ற பொருட்களை பெறுவதற்காக "பலவலவி மேதாவி" என் னும் மடிகையினை தானசாலைக்கு அருகில் நானாதேசிக வணிகரைக் கொண்டு அமைப்பித்தாள். இத்தானம் பற்றிய லீலாவதியின் கல்வெட்டு ஒன்றும் கிடைக்கப்பெற்றுள்ளது.

இதன் மூலம் அனுராதபுரத்தில் தமிழ் நானாதேசிக வணிகர்கள் அரச ஆதரவுடன் விற்பனை மையங்களை அமைத்து வணிகத்தில் ஈடுபட்டிருந்தனர் என்பது நிரூபன மாகிறது. இவ்வணிகர்களால் தமது விற்பனை நிலையங்க ளுக்கருகில் ஆலயங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இவ்வம் மன் ஆலயத்தைத் தவிர வேறுபல ஆலயங்களும் இவர் களால் அனுராதபுரத்தில் அமைக்கப்பட்டிருந்தமைக்கான ஆதாரங்கள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31.சிவாலயம் 1 - பெருமியன் குளம், அனுராதபுரம்

அனுராதபுரம் புராதன நகரின் வடக்கில் குட்டம் பொக்குன எனும் இரட்டைத் தடாகத்திலிருந்து விஜேராம விகாரைக்குச் செல்லும் பாதையின் வலது பக்கத்திலும், இடது பக்கத்திலும் காணப்படும் பகுதியில் ஏராளமான இந்து வழிபாட்டு இடங்களும்,கட்டிடங்களும் இடிபாடு களாய்க் காணப்படுகின்றன. இப்பகுதி பலுகஸ்வெவ குளத் தின் தெற்கிலும், பெருமியன் குளத்தின் கிழக்கிலும், பங்கு ளிய குளத்தின் வடக்கிலும். மல்வத்து ஓயாவின் மேற்கி லும் காணப்படும் காட்டுப் பகுதியாகும்.

இப்பகுதியில் தான் 1893ல் *H.C.B* பெல் பல இந்துக் கோயில்களின் இடிபாடுகளைக் கண்டு பிடித்தார். தான் கண்டுபிடித்த இந்த இந்துக் கோயில்களின் தொகுதிக்கு அவர் "*Tamil Ruins*" (தமிழர் இடிபாடுகள்) எனப் பெயரிட்டு தனது தொல்லியல் ஆய்வுக் குறிப்புகளில் எழுதியுள்ளார்.



**விஜேராமைக்கு செல்லும் இந்தக் காட்டுப்பகுதியிலேயே இந்துக் கோயில்களின் இடிபாடுகள் காணப்படுகின்றன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அனுராதபுரத்தில் காடு வளர்ந்து கவனிப்பாரின்றி கிடக்கும் பண்டைய சைவ சாம்ராஜ்யம்**

இன்று காடாகக் காணப்படும் இப்பகுதி 1000 வருடங்களுக்கு முன்பு ஓர் சைவ சாம்ராஜ்யம் செழிப்புடன் விளங்கிய இடம் என்பது பலருக்குத் தெரியாத விடயமாகும். இன்று இவ்விடத்திற்கு மனிதர்கள் உற்புகக்கூட முடியாத அளவிற்கு அடர்ந்த காடு மண்டிக் கிடக்கிறது. இந்துக் கோயில்கள் காணப்படும் இக்காட்டுப் பகுதியைச் சுற்றி இலங்கைத் தொல்பொருள் திணைக்களத்தினால் "பெருமியன் குளம் ஒதுக்கப்பட்ட பிரதேசம்" என பெயர் பலகை போடப்பட்டுள்ளது.




**அனுராதபுரம் புராதன நகரின் வடக்கில் அதிகளவில் இந்துக் கோயில்கள் அமைந்திருந்த பகுதியின் தேசப்படம்**

பண்டைய அனுராதபுர நகரில் உள்ள பௌத்த வழிபாட்டிடங்கள் அனைத்தும் கலாசார முக்கோணத் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு பௌத்த மக்கள் வழிபடும் வகையில் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெருமியன் குளம் ஒதுக்கப்பட்ட பிரதேசம்-கிழக்குப் பகுதி



பெருமியன் குளம் ஒதுக்கப்பட்ட பிரதேசம்-மேற்குப் பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் சைவ மக்களின் மூதாதையர்களால் வழிபடப் பட்ட இந்துக் கோயில்கள் எதுவும் புனரமைக்கப்படாமல் தேடுவாரற்று காடுகளுக்குள் மறைந்து போய்க் கிடக்கின் றன. இதன் மூலம் புராதன அனுராதபுர இராச்சியத்தில் சைவசமயம் இருக்கவில்லை எனும் தோற்றப்பாட்டை எதிர்கால இந்து, பௌத்த சந்ததியினர் நோக்கும் நிலை உருவாகியுள்ளது. அதேசமயம் இங்கிருந்து எடுக்கப்பட்ட அழகிய இந்து தெய்வச்சிலைகள் இலங்கையின் நூதன சாலைகளையும், தொல்பொருள் காட்சிச் சாலைகளையும் அழகுபடுத்திக் கொண்டு உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் வகையில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.



**காட்டுக்குள் சிவாலயத்தின் தீர்த்தக் கேணியின் சிதைவுகள்**

இலங்கையின் இந்துசமயத் தலைவர்கள், அறிஞர்கள் மற்றும் புத்திஜீவிகள் இந்த விடயத்தைக் கவனத்தில் எடு து, அனுராதபுரத்தில் உள்ள பண்டைய இந்துக் கோயில் கள் இருக்கும் இடத்தில் உள்ள காட்டைத் துப்பரவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து குறைந்த பட்சம் மக்களின் பார்வைக்காவது விட வழிசெய்ய வேண்டும்.



**சிவாலயத்தின் இடிபாடுகள்- 1893ல் எச்.சி.பி.பெல் எடுத்த படம்**

**இரண்டு சிவலிங்கங்கள்**

1893ல் இப்பகுதியை ஆராய்ந்த ஆய்வாளர் எச்.சி.பி. பெல் பெருமியன்குளப் பகுதியில் சிறிய செங்கற்களால் ஆன கட்டிடங்களைக் கொண்ட இரண்டு இடிபாடுகளில் இரண்டு சிவலிங்கங்களை கண்டெடுத்தார். இவை இப் பகுதியில் உள்ள இரு சிவாலயங்களுக்குரியவை எனவும், இவை பொ.ஆ. 10 ஆம் நூற்றாண்டுக்கு சற்று முற்பட் டவை எனவும் அவர் கூறியுள்ளார். ஒரு சிவலிங்கம் 7ஆம் இலக்க கட்டிடத்திலும், இன்னுமோர் சிவலிங்கம் 11ஆம் இலக்க கட்டிடத்திலும் கண்டெடுக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இவற்றில் ஒன்று அனுராதபுரம் தொல் பொருள் காட்சிச்சாலையிலும், மற்றையது அனுராதபுரம் கதிரேசன் கோயிலிலும் வைக்கப்பட்டிருந்தன. தற்போது இவை கொழும்பு நூதனசாலையில் காட்சிக்கு வைக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ளன. இந்த சிவலிங்கங்கள் இரண்டிற்கும் ஆவுடையார் காணப்படவில்லை. ஆனால் ஒரு சிவலிங்கம் வெளிப்புறம் வட்டவடிவமானதும், உற்புறம் எண்கோண வடிவமானதுமான பீடமொன்றினுள் காணப்பட்டது.




**எச்.சி.பி.பெல் கண்டுபிடித்த லிங்கமொன்றின் வரைபடம்.**

அனுராதபுர நகரம் சோழர் முற்றுகையின் போது வீழ்ச்சியடைவதற்கு முன்பு இங்கு அதிகளவில் தமிழ் மக்கள் வாழ்ந்து வந்தனர். இவர்கள் நகரில் செறிந்து வாழ்ந்த பகுதியே பெருமியன்குளப் பகுதியாகும். மொத்தமாக இப்பகுதியில் ஆறு இந்துக் கோயில்களின் அழிபாடுகளையும், ஆலயத்துடன் கூடிய மடப்பள்ளி போன்றவற்றின் இடிபாடுகளையும், மேலும் பல தெய்வச் சிலைகளையும், உடைந்த சிலைகள் மற்றும் கற்றூண்களின் துண்டுகள் ஆகியவற்றையும் 1893ல் *H.C.B* பெல் கண்டுபிடித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





எச்.சி.பி.பெல் கண்டுபிடித்த இரண்டு சிவலிங்கங்கள்



வெளிப்புறம் வட்ட வடிவமானதும், உற்புறம் எண்கோண வடிவமானதுமான பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**பெருமியன் குளம் பகுதியில் இருந்த சிவாலயம் ஒன்றின் வரைபடம்**

## 32.சிவாலயம் 2-பெருமியன் குளம், அனுராதபுரம்

புராதன அனுராதபுர நகரின் வடக்கில் உள்ள பெருமியன் குளப்பகுதியில் காணப்படும் இடிபாடுகளில் இரண்டு சிவாலயங்கள் இருந்துள்ளன. இங்கு கிடைக்கப்பெற்ற இரு சிவலிங்கங்களில் ஒன்று இரண்டாவது சிவாலயத்திற்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**இரண்டாவது சிவாலயத்தின் வரைபடம்**

தாகும். இச்சிவலிங்கம் அனுராதபுரம் கதிரேசன் கோயிலில் வைக்கப்பட்டிருந்தது. பின்பு இது கொழும்பு நூதனசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு விட்டது. இச்சிவலிங்கம் பீடம் இன்றி காணப்பட்டது. சிவலிங்கம் காணப்பட்ட இச்சிவாலயத்தின் இலக்கம் 11 என எச்.சி.பி. பெல் குறிப்பிட்டுள்ளார். இவ்வாலயம் அமைந்திருந்த பகுதி தற்போது காடுகளும், பற்றைகளும் வளர்ந்து காணப் படுகிறது. அனுராதபுரம் புராதன நகரை ஆய்வு செய்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*H.C.B.*பெல் அவர்களால் இங்கு பல இந்துக் கோயில்கள் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



**ரதத்தில் பயணிப்பது போன்ற சூரியன் சிலைகள்**

**மூன்று சூரிய பகவான் சிலைகள்**

பெருமியன்குளம் ஆலய இடிபாடுகளில் மொத்தமாக மூன்று சூரியன் சிலைகள் கண்டெடுக்கப்பட்டன. இவற்றில் இரண்டு சிலைகளில் ஏழு குதிரைகள் பூட்டிய ரதத்தை ஒருவர் செலுத்த, இரு பக்கங்களிலும் இரண்டு உதவியாளர்கள் புடைசூழ, சூரியபகவான் இரு கைகளிலும் தாமரை மொட்டுக்களை ஏந்திய வண்ணம் ரதத்தில் நின்று கொண்டு பயணிப்பது போல இந்த சூரியன் சிலைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செதுக்கப்பட்டுள்ளன. அடுத்த சிலை கைகள் இரண்டிலும் தாமரை மொட்டுக்களை ஏந்தியவாறு சாதாரணமாக நிற்கும் சிலையாகும்.



**நின்ற நிலையில் சூரியன் சிலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**சிவாலயத்தில் கண்டெடுக்கப்பட்ட உடைந்த சிலைகள் மற்றும் கற்றூண்களின் துண்டுகள்**

இவற்றைத் தவிர சுடுமண்ணில் செய்யப்பட மனிதத் தலைகளும் மேலும் பல சிவாலயச் சின்னங்களும் இந்தக் கோயில் வளவில் கண்டெடுக்கப்பட்டன.

## 33.பத்ரகாளியம்மன் கோயில் - பெருமியன் குளம், அனுராதபுரம்

அனுராதபுரம் புராதன நகரின் வடக்கில் காணப் பட்ட ஆறு ஆலய இடிபாடுகளில் காளி கோயிலின் இடி பாடுகளும் காணப்படுகின்றன. இவ்வாலயமும் சோழர் காலத்திற்கு முன்பு அமைக்கப்பட்டிருந்த ஆலயங்களில் ஒன்றாகும். இவ்வாலய கட்டிடம் பெல் அவர்களால் இலக்கம் *13A* என அடையாளமிடப்பட்டது.

*1893*ஆம் ஆண்டு எச்.சி.பி.பெல் அவர்களால் இப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் போது அழ கிய பத்ரகாளி அம்மனின் சிலையொன்றும், அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய கல் கதவுநிலை ஒன்றும் கண்டெடுக்கப்பட்டன. இச்சிலை தற்போது கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூதனசாலையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. நின்ற நிலையில் எட்டு கைகளுடன் கம்பீர தோற்றத்துடன் இச் சிலை காணப்படுகிறது. சதுர வடிவுடைய ஆவுடையார் மீது அமைக்கப்பட்ட இன்னுமோர் சதுரமான பீடத்தில் இச்சிலை காணப்படுகிறது. இடுப்பைப் பிடித்தவண்ணம் உள்ள இரண்டு கைகளில் ஒன்று சிதலமடைந்துள்ளது. முகத்தில் கண்கள் மற்றும் வாய் ஆகியவையும் சற்று சித லமடைந்துள்ளன. இவற்றைத் தவிர சிலை நல்ல அழகு டன் நேர்த்தியாகக் காணப்படுகின்றது.



**எச்.சி.பி.பெல் கண்டுபிடித்த அழகிய பத்ரகாளி அம்மன் சிலை**

இங்கிருந்த காளி கோயில் கருவறை, அந்தராளம், மண்டபம் மற்றும் சுற்றுமதில் ஆகியவற்றுடன் அமைக்கப் பட்டுள்ளது. கோயிலின் முன் பக்கம் இடது புறத்தில் மடப்பள்ளி ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எச்.சி.பி.பெல் கண்டெடுத்த பத்ரகாளி அம்மன் சிலையின் முழுமையான தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மடப்பள்ளியுடன் கூடிய காளி கோயிலின் வரைபடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 34.இந்துக் கோயில் 4-பெருமியன் குளம், அனுராதபுரம்

அனுராதபுரத்தின் வடக்குப் பகுதியில் 1893ஆம் ஆண்டு எச்.சி.பி.பெல் பல இந்துக் கோயில்களின் இடிபாடுகளைக் கண்டுபிடித்தார். இவை “*Tamil Ruins*” என அழைக்கப்படுகின்றன.இங்கிருந்த ஆறு கோயில்களில் இக் கோயிலும் ஒன்றாகும். இக்கோயில் கட்டிடத்திற்கு இலக்கம் 10 என அவர் அடையாளமிட்டார். இங்கு விஷ்ணு பாதம் பொறிக்கப்பட்ட முத்திரை ஒன்றும், ஓர் நாக சிற்பமும் கண்டெடுக்கப்பட்டன. விஷ்ணு பாதம் பொறிக்கப்பட்ட முத்திரை கொழும்பு நூதனசாலையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.இங்கிருந்த இன்னுமோர் கட்டிட இடிபாடுகளிடையே தலையற்ற புத்தர் சிலை ஒன்றையும் பெல் கண்டெடுத்தார்.






**விஷ்ணு பாத முத்திரை- முன்பக்கமும், பக்கவாட்டு தோற்றமும் முழுமையான தோற்றமும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**இலக்கம் 10 கோயிலின் வரைபடம்**

## 35.இந்துக் கோயில் 5-பெருமியன் குளம், அனுராதபுரம்

அனுராதபுரத்தின் வடக்குப் பகுதியில் எச்.சி.பி.பெல் கண்டுபிடித்த ஆறு கோயில்களில் இதுவும் ஒன்றாகும். இக்கோயில் இலக்கம் 2என அடையாளமிடப்பட்டுள்ளது. இக்கோயில் கருவறை, அந்தராளம், மண்டபம் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**இலக்கம் 2 கோயிலும், மடப்பள்ளியும்**

சுற்றுமதில் ஆகியவற்றுடன் காணப்படுகின்றது. சுற்று மதிலின் முன்பக்கம் உள்ள வாசலின் இடது பக்கத்தில் ஓர் செவ்வக வடிவ கட்டிடமொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. கோயிலின் வலது பக்கம், சுற்றுமதிலுக்கு வெளியே, நீள மான பெரிய கட்டிடமொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. செவ்வக வடிவில் 24 தூண்களைக் கொண்ட உள் மண் டபமும், அதன் முன்பக்கம் 20 தூண்களைக் கொண்ட நீளமான மண்டபமும் காணப்படுகின்றது. இவை மடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளி, வாகனசாலை, களஞ்சியம் போன்றவையாக இருக்கலாம். இப்பகுதியில் தெய்வச் சிலைகள் மட்டுமல்லாது தெய் வச்சிலைகளின் உடைந்த துண்டுகள், சப்தகன்னியரின் சிலைகள், ஐந்துதலை நாக சிற்பம், சுடுமண் பாவைகளின் தலைகள், சைவ ஆலயச் சின்னங்கள் போன்றவையும் கண்டெ டுக்கப்பட்டன.



**பெருமியன்குளம் இடிபாடுகளில் கண்டெடுக்கப் பட்ட நாக சிற்பத்தின் வரைபடம்**

**சப்த கன்னியரின் கற்சிலைகள்**

பெருமியன்குளம் பகுதியில் இந்துக்கோயில்கள் அமைந்திருந்த வளாகத்தில் சப்தகன்னியர் இருவரின் கற்சிலைகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவை மகேஸ்வரி மற்றும் பிராம்மி ஆகியோரின் சிலைகளாகும். நான்கு கரங்களை கொண்ட இச்சிலைகள் இரண்டும் பொ.ஆ 9 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும். இச்சிலைகள் கொழும்பு நூதனசாலையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மகேஸ்வரி, பிராம்மி ஆகியோரின் கற்சிலைகள்**

## 36.விஷ்ணு கோயில்-அனுராதபுரம்

அனுராதபுரத்தில் கருங்கல்லினாலான விஷ்ணு பகவானின் உடைந்த தலை மட்டும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இத்தலை ஒரு அடி உயரமானதாகும். இதன்படி இத்தலையைத் தாங்கியிருந்த சிலை சுமார் 6 அடி உயரமானதாக இருக்க வேண்டும். இது பொ.ஆ 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். இச்சிலையின் உடற்பாகங்கள் கண்டெடுக் கப் படாத நிலையில் விஷ்ணு பகவானின் தலை மட்டும் கொழும்பு நூதனசாலையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள் ளது. இச்சிலை ஸ்தாபிக்கப்பட்டிருந்த கோயில் ஓர் விஷ்ணு கோயிலாக இருக்க வேண்டும். ஆனால் இக் கோயில் அனுராதபுரத்தில் எங்கு இருந்தது என்பது தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**அனுராதபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட விஷ்ணு சிலையின் தலை**

## 37.புளியங்குளம் சிவாலயம்-அனுராதபுரம்

அனுராதபுரத்திலுள்ள யாழ்ப்பாணம் சந்தியிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் யாழ்வீதியில் 2 கி.மீ தூரத்தில் உள்ள புளியங்குளம் சந்தியில் இக்கோயில் அமைந்திருந்த தாக நம்பப்படுகிறது. இச்சந்தியில் உள்ள ரஜரட்ட பல்க லைக்கழகத்தின் முன்பக்கம் ஓர் காட்டுப் பகுதி காணப் படுகிறது. இப்பகுதி புப்பராமய என அழைக்கப்படுகிறது. இங்கு பல புராதன கட்டிட இடிபாடுகள் காணப்படுகி ன்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**அனுராதபுரத்தில் புளியங்குளம் பகுதியில் கிடைத்த சிலை**

**சிவனின் சிலை**

இங்குள்ள ஓர் கட்டிட சிதைவுகளுக்கு மத்தியில் ஓர் ஆண் தெய்வத்தின் சிலையை எச்.சி.பி.பெல் கண்டெடுத்தார். நான்கு கைகளுடனும், இடது கையில் திரிசூலத்துடனும் காணப்படும் இச்சிலை சிவனுக்குரியது என அடையாளம் காணப்பட்டுள்ளது. இச்சிலை கண்டெடுக்கப்பட்ட கட்டிட இடிபாடு ஒரு சிவன் கோயிலாக இருக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கட்டிடத்தில் உடைந்த நிலையில் ஓர் கோமுகியும் காணப்படுகின்றது. கோமுகிகள் கோயிலின் கருவறையுடன் இணைத்துக் கட்டப்படுபவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கோமுகியுடன் காணப்படும் புளியங்குளம் சிவன் கோயில் எனக் கருதப்படும் கட்டிடத்தின் சிதைவுகள்**

**தமிழ்க் கல்வெட்டு**

புளியங்குளம் இடிபாடுகளில் ஓர் தமிழ்க் கல்வெட்டும் கண்டெடுக்கப்பட்டது. ஓர் குட்டையான தூணில் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.எச்.சி.பி. பெல் 1893ஆம் ஆண்டு இக்கல்வெட்டைக் கண்டெடுத்தார்.

## 38.பிள்ளையார் கோயில்-நுவரவாவி, அனுராதபுரம்

அனுராதபுரத்திலிருந்து திருகோணமலைக்கு செல்லும் வீதி நுவரவாவியை ஒட்டிச் செல்கிறது. இவ்வீதியில் நுவர வாவியின் வடமேற்குப் பக்கத்தில், வாவிக்கரையில் இப் பிள்ளையார் கோயில் அமைந்துள்ளது. நுவரவாவியின் அணைக்கட்டிற்கு அருகில் சற்று சிதைந்த நிலையில் இவ் வாலயம் காணப்படுகின்றது. இவ்வாலயத்திற்கு அருகில் பிரதான ஓர் சந்தி உள்ளது.இங்கிருந்து புளியங்குளத்திற்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லும் பாதை யாழ்ப்பாண வீதியுடன் இணைகிறது. இச்சந்தி பிள்ளையார் சந்தி என்றழைக்கப்படுகிறது. இச் சந்தி பிள்ளையார் ஆலயத்தின் அருகில் இருப்பதால் இப் பெயர் வந்துள்ளது.

இங்கிருந்த பிள்ளையார் கோயில் பற்றி 1886ஆம் ஆண்டில் இலங்கை தொல்பொருள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட ஆய்வுக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வறிக்கையில் பிள்ளையார் சந்தியின் அருகில் காணப்படும் நுவரவாவி அணைக்கட்டை ஒட்டி பிள்ளையாருக்குரிய ஓர் பழமை வாய்ந்த கோயில் காணப்படுவதாகவும், இங்குள்ள விநாயகர் சிலை மிகவும் அழகு வாய்ந்தது மட்டுமல்லாமல் ஏனைய இடங்களில் கிடைக்கப் பெற்ற சிலைகளை விட பலவகையிலும் வேறுபட்டுள்ளது எனவும், இது போன்ற கோயில்கள் பொலநறுவையிலும் கண்டுபிடிக்கப்பட்டன எனவும் கூறப்பட்டுள்ளது.



**புராதன ஆலய இடிபாடுகள் மீது கட்டப்பட்ட கருவறை கோபுரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கருவறையில் உள்ள புராதன பிள்ளையார் சிலை



புராதன கோமுகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயத்தின் கருவறையின் அடித்தளமும், சில கருங்கல் தூண்களும், பிள்ளையார் விக்கிரகமும் மட்டுமே எஞ்சியிருந்தன. கருங்கல்லினாலான புராதன கருவறையின் அடித்தளத்தில் புராதன கோமுகியும் உள்ளது. சிதைந்த நிலையில் இருந்த இவ்வாலயம் **1917** ஆம் ஆண்டில் புனரமைக்கப்பட்டது. கருவறை, தூபி, மண்டபம் ஆகியவை அமைக்கப்பட்டு பூஜை வழிபாடுகள் நடத்தப்படுகின்றன. இருப்பினும் நுவரவாவி குளத்தில் நீர் பெருகும் போது ஆலய வளவு நீரில் மூழ்கிவிடுவதாகவும், அச்சமயம் கருவறையில் உள்ள பிள்ளையார் விக்கிரகத்தின் கழுத்து வரை நீர்மட்டம் காணப்படுவதாகவும் இப்பகுதி மக்கள் கூறுகின்றனர். ஆலயத்தை சுற்றி பண்டைய கருங்கல் தூண்கள் பல காணப்படுகின்றன. ஆலய மண்டபத்தை புராதன நான்கு தூண்கள் தாங்கி நிற்கின்றன.



**ஆலயத்தின் புராதன தூண்களும் சிறிய ஆவுடையாரும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 39.விருபகஷர் கோயில் - அனுராதபுரம்

அனுராதபுரத்தில் அபயகிரி விஹாரையின் முன்பக்கம் உள்ள தெற்கு வாசலின் முன்பாக உள்ள மண்டபத்தின் *(Assembily Hall)* அருகில் விருபாக்ஷர் கோயில் அமைந்திருந்தது.



**அபயகிரி விஹாரையின் முன்பக்கம் உள்ள மண்டபம் (Assembily Hall)**

இக்கோயிலில் பத்து துண்டுகளாக உடைந்த நிலையில் விருபாக்ஷர் சிலை காணப்பட்டது. இச்சிலை தற்போது அபயகிரி தொல்பொருள் காட்சிச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. விருபாக்ஷர் சிலையின் தலையின் பின் பக்கம் ஐந்து தலை நாகம் படம் எடுத்தவண்ணம் காணப்படுகிறது. இச்சிலை மேற்கு பகுதிக்கு காவலாக விளங்கும் தெய்வமான விருபாக்ஷருக்குரியது என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**அபயகிரி விஹாரையின் முன்பக்கம் உள்ள மண்டபத்தில் கிடைக்கபெற்ற விருபாக்ஷர் அல்லது நாகராஜர் சிலை.**

இச்சிலை நாகராஜருக்குரியது எனவும் சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அபயகிரி மடாலயம் பற்றிக் கூறும் மிகுந்தலைக் கல்வெட்டில் அபயகிரியில் நைந்த் *(Naind)* எனும் தேவன் வழிபடப்பட்டான் எனப் பொறிக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ளது. அக்கல்வெட்டு குறிப்பிடும் நைந்த் எனும் தெய்வம் நாகராஜரே எனவும் சில ஆய்வாளர்கள் கூறி யுள்ளனர். மிகுந்தலைக் கல்வெட்டு குறிப்பிடும் நாகராஜர் சிலையே பல துண்டுகளாகக் கிடைக்கப் பெற்றது எனக் கூறப்படுகிறது.

## 40.இந்துக்கோயில்-தேவநம்பியதிஸ்ஸபுர, அனுராதபுரம்

அனுராதபுரம் நகரிலிருந்து திஸ்ஸாவாவி குளத்தின் வடக்குப் பக்கமாக செல்லும் பழைய புத்தளம் வீதியி லிருந்து பிரிந்து தேவநம்பிய திஸ்ஸபுர என்னுமிடத்தை ஊடறுத்துச் சென்று அரிப்பு வீதியில் இணையும் வட்ட வந்தனா வீதியில் ஓர் இந்துக் கோயிலின் அமைப்பை யுடைய புராதன கட்டிடத்தின் இடிபாடுகள் காணப்படு கின்றன. இது பதனகார என அழைக்கப்படுகிறது.



**கோயிலின் சுற்றுமதில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ஆலயத்தின் வாசலில் கல்கதவு நிலைகள்**

இந்தக் கட்டிடம் முழுக்க முழுக்க ஓர் இந்துக் கோயிலின் அமைப்புடன் முற்றிலும் மஞ்சள் நிற மணற் கல்லினால் கட்டப்பட்டுள்ளது. கிழக்கு நோக்கிய வாசலு டன் கருவறை, அந்தராளம், அர்த்த மண்டபம் ஆகியவை இக்கோயிலின் பாகங்களாகும். கற்பாளங்களைக் கொண்டு நான்கு வரிகளில் சுமார் 5 அடி உயரத்தில் சுற்று மதில் அமைக்கப்பட்டுள்ளது. கிழக்கு நோக்கிய முன் பக்கத்தில் பிரதான வாயில் காணப்படுகின்றது. வாசலில் ஒன்றின்பின் ஒன்றாக இரண்டு கல்கதவு நிலைகள் உள்ளன. வடக்கி லும், தெற்கிலும் வாசல்கள் காணப்படுகின்றன. ஆலயத் தின் முன்பக்கம் பிரதான வீதியும், ஏனைய மூன்று பக்கங் களிலும் காடுகளும் காணப்படுகின்றன.

சுற்று மதிலுக்குள் சுமார் 4 அடி உயரமான மேடை மீது மேலும் 2அடி உயரத்தில் கோயில் அமைக்கப்பட்டு ள்ளது.மண்டபத்தில் தூண்கள் எதுவும் காணப்படவில்லை கருவறையில் 2 தூண்களும், ஒரு குட்டைத் தூணுமாக மொத்தம் 3 தூண்கள் காணப்படுகின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ஆலயத்தின் அத்திவாரத் தோற்றம். செயற்கைக்கோள் படம்.**

இது ஓர் இந்து கோயில் என்பதற்கு மேற்கூறியவற்றை விட இன்னுமோர் முக்கிய அம்சம் ஒன்றும் உள்ளது. சாதாரணமாக பௌத்தமத கட்டிடங்களின் வாசல்களில் காணப்படும் சந்திர வட்டக்கல் இங்குள்ள வாசல்களில் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## 41.வீரபத்திரர் கோயில் - அனுராதபுரம்

அனுராதபுரத்தில் வீரபத்திரருக்கு ஓர் கோயில் இருந்திருக்கலாம் என நம்பக் கூடிய வகையில் ஓர் ஆதாரம் கிடைத்துள்ளது.

**பரசுராமர் அல்லது வீரபத்திரர் சிலை**

இங்கு ஓர் வீரபத்திரர் அல்லது பரசுராமர் சிலை கண்டெடுக்கப்பட்டது. பொ.ஆ 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இச்சிலை இரண்டரை அடி உயரத்தைக் கொண்டதாகும். கையில் பரசு எனும் ஆயுதத்தை ஏந்திய வண்ணம் இச்சிலை காணப்படுகிறது. கையில் பரசு எனும் ஆயுதத்தை ஏந்தி நிற்பவர்கள் பரசுராமரும், வீரபத்திரருமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பரசுராமர் அல்லது வீரபத்திரர் சிலை**

எனவே இச்சிலை பரசுராமர் அல்லது வீரபத்திரருக்கு உரியது எனக் கூறப்படுகிறது. இச்சிலையும் அனுராதபுரத்தில் எங்கு கண்டெடுக்கப்பட்டது எனும் விபரங்கள் தெரியவில்லை. இச்சிலையும் கொழும்பு நூதனசாலையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

## 42.எல்லாளனின் குலதெய்வக் கோயில்-அனுராதபுரம்

அனுராதபுர நகரில் தமிழ் மன்னன் எல்லாளனின் குல தெய்வக் கோயில் அமைந்திருந்தது. இது பற்றி மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ளது. பொ.ஆ.மு. 145-101 காலப்பகுதியில் எல்லாளன் இலங்கையை ஆட்சி செய்தான். அவனது ஆட்சிக் காலத்தில் நடந்த ஓர் சம்பவம் பற்றி மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குலதெய்வத்திடம் மழை வேண்டி உண்ணாவிரதமிருந்த எல்லாள மன்னன்**

ஒரு சமயம் கிழவி ஒருத்தி வெயில் காலத்தில் அரிசியை காயப்போட்டிருந்தாள். அப்போது திடீரென மழை பெய்து அரிசியை நனைத்து விட்டது. அவள் அரிசியுடன் அரண்மனைக்குச் சென்று ஆராய்ச்சி மணியை அடித்து, பருவமில்லாத காலத்தில் மழை பெய்து தனது அரிசி முழுவதும் நனைந்து விட்டதாக மன்னனிடம் முறையிட்டாள். எல்லாள மன்னன் “நீதியுடன் நடந்தால் உரிய காலத்தில் தானே மழை பெய்ய வேண்டும்” என எண்ணியவனாக உண்ணாவிரதத்தை மேற்கொண்டான். மன்னனுடைய விரதத்தினால் வெப்பம் தாங்காத அவனின் குலதெய்வம் நான்கு பெருந்தேவர்களிடம் இதனைத் தெரிவித்தது. இத்தெய்வங்கள் சக்கனிடம் சென்றார்கள். சக்கன் பஜ்ஜுணனை அழைத்து இனி உரிய காலத்தில் மழை பெய்ய வேண்டும் எனக் கட்டளை இட்டான். குலதெய்வம் இதுபற்றி மன்னனிடம் தெரிவித்தது. அப்பொழுது முதல் அவனது ஆட்சிக் காலம் முழுவதும் பகலில் மழை பெய்வது இல்லை. இரவில் மட்டுமே வாரம் ஒரு முறை மழை பெய்யும். அதுவே எல்லா நீர்நிலைகளையும் நிறைத்து விடும். இவ்வாறு மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ளது.

**எல்லாளனின் இராச்சியத்தில் நான்கு காவல் தெய்வங்கள்**

இதன் மூலம் எல்லாளன் தனது தலைநகரில் தன் குலதெய்வத்திற்கு கோயில் அமைத்து, பூஜைகள் செய்து, வழிபட்டு வந்துள்ளான் என எண்ணக் கூடியதாக உள்ளது. அதுமட்டுமல்லாது நான்கு பெருந்தேவர்களுக்கும் கோயில்கள் அமைத்து வழிபட்டு வந்துள்ளான். இவை அன்று அவனது தலைநகரை அல்லது இராச்சியத்தைப் பாதுகாத்த நாற்திசைக் காவற் கோயில்களாக இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாவம்சத்தில் எல்லாளனின் குலதெய்வம் மற்றும் நான்கு பெருந்தேவர்கள் பற்றிக் கூறப்பட்டுள்ள போதும், அந்த தெய்வங்களின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை. அதேசமயம் சக்கன், பஜ்ஜுணன் ஆகிய பெயர்கள் குறிப் பிடப்பட்டுள்ளன.

மகாவம்சத்தை மொழி பெயர்த்த வில்லியம் கெய்கர் நான்கு பெருந்தேவர்கள் எனப்படுவோர் லோகபாலகர்கள் எனவும், பிரம்மலோகத்தில் இந்திரனுக்கு அருகில் எப் போதும் இருப்பவர்களான தத்தரத்தன், விருல்ஹஹன், விபோக்ஷன், வெஸ்ஸவணன் ஆகியோர் எனவும், இவர்கள் நான்கு திசைகளிலும் ஆட்சி செலுத்துபவர்கள் எனவும் அடிக்குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.



**நாற்திசை தெய்வங்களான குபேரன், யமன், இந்திரன், வருணன் ஆகியோருடன் பிரம்மா**

ஆனால் இந்துசமய புராணங்கள் நான்கு பெருந்தேவ ர்கள் எனப்படும் லோகபாலகர்கள் வடக்கில் குபேரன், தெற்கில் யமன், கிழக்கில் இந்திரன், மேற்கில் வருணன் எனக் கூறுகின்றன. எனவே எல்லாளன் தன் குலதெய்வத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடன், குபேரன், யமன், இந்திரன், வருணன் ஆகிய நாற்திசை கடவுள்களையும் வழிபட்டுள்ளான் எனக் கூறலாம்.

### தமிழ் மன்னன் எல்லாளன் கட்டிய சைவக் கோயில்கள் பற்றிக் கூறாத மகாவம்சம்

எல்லாளனுக்கு முன்பு ஆட்சி செய்த பண்டுகாபயன், தேவநம்பிய தீசன் மற்றும் எல்லாளனின் பின்பு ஆட்சி செய்த துட்டகாமினி, சத்தாதீசன், வட்டகாமினி என எல்லா பௌத்த மன்னர்களும் அமைத்த பௌத்த தூபிகள் மற்றும் விகாரைகள் அனைத்தையும் ஒன்று விடாமல் குறிப்பிட்ட மகாவம்ச ஆசிரியர், 44 ஆண்டுகள் இலங்கையை ஆட்சி செய்த எல்லாளன் எனும் தமிழ் சைவ மன்னன் கட்டிய சைவக் கோயில்கள் பற்றிக் குறிப்பிடவில்லை. மேலும் 22 ஆண்டுகள் ஆட்சி செய்த சேனன், கூத்திகன் ஆகிய தமிழ் சைவ மன்னர்கள் மற்றும் 14 ஆண்டுகள் ஆட்சி செய்த 5 தமிழ் சைவ மன்னர்கள் கட்டிய சைவக் கோயில்கள் பற்றியும் குறிப்பிடவில்லை. 2000 ஆண்டுகளுக்கு முன்பு ஆட்சி செய்த இந்த தமிழ் சைவ மன்னர்கள் 8 பேரும் மொத்தமாக 80 ஆண்டுகள் ஆட்சி செய்துள்ளனர். மகாவம்சத்தில் குறிப்பிடப்படாவிட்டாலும் இந்த 80 ஆண்டு காலப் பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட சைவக் கோயில்கள் அனுராதபுரம் உட்பட இலங்கை முழுவதிலும் இம்மன்னர்களால் அமைக்கப்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

இலங்கையை 22 வருடங்கள் ஆட்சி செய்த தமிழ் மன்னர்களான சேனன், கூத்திகன் ஆகியோரிடமிருந்து ஆட்சியை கைப்பற்றிய அசேலன் என்பவன் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் எல்லாளன் அனுராதபுரத்தைக் கைப்பற்றினான். எல்லாளன் ஆட்சி அமைப்பதற்கு இங்கிருந்த பிராமண, ஜைன, நிகண்ட (சமணர்) துறவிகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவு கிடைத்ததாக சிங்கள நூல்கள் கூறுகின்றன. எனவே எல்லாளன் காலத்தில் பிராமண, ஜைன, சமண துறவிகள் அரச ஆதரவுடன் இருந்துள்ளனர் என்பது குறிப் பிடத்தக்கது. இக்காலப் பகுதியில் தமிழர்கள் சிவவழி பாட்டில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தமையால் மேற்குறி ப்பிட்ட 80 ஆண்டு காலப்பகுதியில் நூற்றுக்கணக்கான சிவன் கோயில்கள் இவர்களால் அமைக்கப்பட்டிருக்கும்.

## 43.எல்லாளன் சமாதிக் கோயில்-அனுராதபுரம்

அனுராதபுரத்தில் உள்ள ஸ்ரீ மகாபோதியிலிருந்து இசுருமுனிய விகாரைக்குச் செல்லும் வழியில் பாதையின் வலது பக்கத்தில் தன்னந்தனியாக, யாரும் கண்டு கொள் ளாத நிலையில், ஓர் பாழடைந்த செங்கல் தூபி காணப் படுகிறது. இதுவே தக்கின்ன தூபி என அழைக்கப்படும் எல்லாளன் சமாதியாகும்.



**அனுராதபுரத்தில் தக்கின்ன தூப என அழைக்கப்படும் தமிழ் மன்னன் எல்லாளனின் சமாதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீரத்தமிழ் மன்னனுக்குக் கொடுக்கப்பட்ட கௌரவம்**

2160 வருடங்களுக்கு முன்பு நீதி வழுவாத, நேர்மையான, செங்கோல் ஆட்சி புரிந்த, ஓர் வீரத்தமிழனுக்கு, அவனை போரில் வென்ற சிங்கள மன்னனால் கொடுக்கப்பட்ட அதிஉயர் கௌரவத்தின் அடையாளச் சின்னம் தான் இந்த இடத்தில் இருந்த எல்லாளன் சமாதியாகும்.

பொ.ஆ.மு.101ல் துட்டகாமினியுடன் நடந்த போரில் எல்லாளன் இறந்ததும் துட்டகாமினி எல்லாளனுக்காக ஓர் சமாதியைக் கட்டினான். எல்லாளனின் நீதி தவறாத செங்கோல் ஆட்சியையும், நேர்மையான செயல்களையும், வயது முதிர்ந்த நிலையிலும் இளையவனான தன்னுடன் சரிசமமாக போர் செய்த எல்லாளனுடைய வீரத்தையும் மதித்து அதற்கு கௌரவம் அளிக்கும் முகமாக இந்த சமாதியை துட்டகாமினி அமைத்தான்.

**எல்லாளனின் உருவச்சிலை**

இங்கு சமாதியை மட்டுமல்லாது எல்லாளனின் உருவச் சிலையையும் அமைத்து அங்கு ஓர் கோயிலை துட்டகாமினி அமைத்தான் என இது தொடர்பான பண்டைய நூல்கள் மற்றும் எல்லாளன் சமாதி ஆகியவற்றை ஆராய்ந்த ஆய்வாளர் டபிள்யூ.எஸ்.பண்டார தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

நீதி, நேர்மை, வீரம் ஆகியவற்றை மதித்து எல்லாளனுக்கு சமாதியைக் கட்டிய துட்டகாமினி அவ்விடத்தில் எல்லாளனின் உருவச் சிலையையும் அமைத்து அதைக் கோயிலாக்கி, இவ்வழியில் செல்வோர் எல்லாளன் சிலைக்கு வணக்கம் செலுத்திச் செல்ல வேண்டும் எனவும், வண்டிகளில் செல்வோர் வண்டியை விட்டு இறங்கி எல்லாளன் சிலைக்கு மரியாதை செலுத்திச் செல்ல வேண்டும் எனவும், இவ்வழியே வாத்தியக் கருவிகள் இசைத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு செல்வோர் இவ்விடத்தில் தமது வாத்தியங்களை நிறுத்தி இச்சிலைக்கு மரியாதை செலுத்திச் செல்ல வேண்டும் எனவும் கட்டளையிட்டான்.



**யாழ்ப்பாணத்தில் உள்ள எல்லாளன் சிலை**

**இலங்கையில் தூபி வடிவில் சமாதி அமைக்கப்பெற்ற ஒரே மன்னன் எல்லாளன்**

இலங்கையில் ஆட்சி செலுத்திய வேறெந்த மன்னனுக்கும் இவ்வளவு பெரிய, அதுவும் தூபி வடிவில் சமாதி அமைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையின் முக்கிய மன்னர்களான தேவநம்பிய தீசன், துட்டகாமினி, விஜயபாகு,பராக்கிரமபாகு போன்ற எந்த மன்னர்களுக்கும் சமாதிகள் அமைக்கப்படவில்லை, இந்த அளவிற்கு மரியாதை செலுத்தவுமில்லை. அப்படியானால் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னன் எல்லாளனுக்கு மட்டும் சமாதியும், சிலையும், கோயிலும் ஏன் அமைக்கப்பட்டது?

**சைவ சமய நம்பிக்கையுடன் வாழ்ந்த எல்லாளன்**

எல்லாளன் மிகவும் பலம்வாய்ந்த மன்னனாக இலங்கையை 44 வருடங்கள் செங்கோல் ஆட்சி புரிந்து வந்தான். தமிழ்சைவ மன்னனாக இருந்தாலும் பௌத்த சமயத்தின் மீது மிகுந்த மரியாதை வைத்திருந்தான். இவனது நீதி தவறாத ஆட்சியைப் புகழ்ந்துரைக்கும் பாளி நூல்கள், இவன் தவறான மார்க்கத்தினை (இந்து மதத்தினை) தழுவியவன் எனவும் கூறுகின்றன. இவன் தனது ஆட்சியில் பௌத்த மதத்திற்கு ஆதரவு அளித்த போதிலும், தன் பழைய மத நம்பிக்கையைக் கைவிடவில்லை என மகாவம்சம் கூறுகிறது. எல்லாளன் பகைவர்க்கும், நண்பர்க்கும் சமநீதி வழங்கியதாகக் கூறும் மகாவம்சம், அவனது நீதி நெறி தவறாத ஆட்சியை மனுநீதிச் சோழனின் கதைகளோடு ஒப்பிட்டு விபரித்துள்ளது. எல்லாளனின் நீதி, நேர்மையைத் தெரிந்து கொள்ள சில சம்பவங்களை மகாவம்சம் கூறுகிறது.

**எல்லாளனின் செங்கோல் ஆட்சியைக் கூறும் சம்பவங்கள்**

எல்லாளனின் அறையில் ஓர் ஆராய்ச்சி மணி கட்டப்பட்டிருந்தது.நீதி வேண்டுவோர் எந்த நேரமும் கோட்டை வாசலில் தொங்கும் கயிற்றினை இழுத்து இந்த மணியை ஒலியெழுப்பினால் மன்னன் வந்து விசாரித்துத் தீர்வு கொடுப்பான்.

எல்லாளனுக்கு ஒரு மகனும், ஒரு மகளும் இருந்தனர். ஒருநாள் தேரில் திஸ்ஸவாவியை நோக்கி எல்லாளனின் மகன் பயணப்பட்டபோது, வழியில் தாய்ப்பசுவுடன் படுத்திருந்த கன்றின் கழுத்தின் மேல் தேர்ச்சில் ஏறியதால், கன்று அவ்விடத்தில் இறந்துவிட்டது. தாய்ப்பசு ஆராய்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணியை இழுத்து அடித்து எல்லாளனிடம் நீதி கேட்டது. எல்லாளன் தனது மகனின் தலையை அதேவிதமாக தேர்ச் சில்லில் இட்டு கொன்று பசுவுக்கு நீதி வழங்கினான்.

ஒரு வயோதிப கிழவி வெயில் காலத்தில் அரிசியைக் காயப் போட்டிருந்த போது, பருவம் தப்பிப் பொழிந்த மழையால் அரிசி முழுவதும் நனைந்து பழுதடைந்து போனது.அவள் எல்லாளனிடம் முறையிட்டபோது, அவன் தன் குலதெய்வத்திடம் பருவத்தில் மட்டும் மழை பெய்ய வேண்டி உண்ணாவிரதமிருந்து, பின் குலதெய்வத்தின் மூலம் வருணனிடம் வாரத்திற்கொரு தடவை இரவில் மட்டும் மழை பெய்யப்பெற்றதாக மகாவம்சம் கூறுகிறது.

மகாவம்சம் கூறுகின்ற இன்னுமோர் கதை மூலம் எல் லாளன் பௌத்த மதத்தை ஆதரவளித்து போற்றிப் பாது காத்தான் என்பதையும் நிரூபிக்கின்றது. எல்லாளன் தேரி லேறி சேத்தியகிரி நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது, தேரின் பின்பக்கம் தாதுகோபமொன்றில் பட்டு தாது கோபத்திற்குச் சேதத்தை ஏற்படுத்தியது. தனக்குத் தெரியா மல் நடந்த இந்தத் தவறை அறிந்த மன்னன் தேரிலிருந்து கீழே குதித்து, தனது தலையை உடனடியாகச் சீவிவிடு மாறு அமைச்சர்களிடம் கூறினான். இது தெரியாமல் நிகழ்ந்தது. அமைதியடையுங்கள். தூபியைத் திருத்தி அமை த்து விடலாம் என அமைச்சர்கள் கூறினார். தாது கோப த்தின் பதினைந்து கற்களே சிதைவடைந்திருந்தன. அப்படி யிருந்தும் அந்தத் தாதுகோபத்தை புனரமைக்க எல்லாளன் பதினையாயிரம் கஹப்பணம் செலவிட்டான். எல்லாள னின் நீதி வழுவாத ஆட்சியை இக்கதைகள் எடுத்துரைக் கின்றன. இவை எல்லாளனின் செங்கோலாட்சியைப் புலப்படுத்த மகாவம்சம் எடுத்துக் கொண்ட ஐதீகக் கதை கள் எனலாம். எனவேதான் இலங்கையில் எந்த அரசனுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் மரணத்தின் பின் கிடைக்காத மரியாதை எல்லாளனுக்குக் கிடைத்தது.

**எல்லாளனுக்கு சமாதியும், சிலையும், கோயிலும் அமைக்கப்பட்டது ஏன்?**

துட்டகாமினி இவ்வாறு எல்லாளனுக்கு கோயில் அமைப்பதற்கு இன்னுமோர் முக்கிய காரணமும் இருந்தது.எல்லாளன் 44 வருடங்கள் செங்கோல் ஆட்சி புரிந்து வந்த நீதி, நேர்மை, கண்ணியம் மிக்க மன்னன் மட்டுமல்லாது சைவம், பௌத்தம், சமணம், ஜைனம் ஆகிய மதங்களையும் சமமாக மதித்து, இலகுவில் யாராலும் வெல்ல முடியாத மிகவும் பலம் வாய்ந்த மன்னனாகவும், அற்புத சக்திகள் கொண்டவனாகவும் விளங்கினான். எல்லாளனின் அற்புத சக்தி பற்றி மகாவம்சம் இவ்வாறு கூறுகிறது.

> "இந்த அரசன் தவறான நம்பிக்கைகளைக் கைவிடாத போதிலும் தீய வழியில் நடக்கும் குற்றத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டவனாக இருந்ததால் தான் இத்தகைய அற்புத சக்திகளைப் பெற முடிந்தது. உண்மையானதை நம்புகின்ற ஒருவன், அதை அறிந்து கொள்ளும் சக்தி படைத்தவனுக்கு, தீய வழியில் நடக்கும் குற்றத்தைக் கண்டிக்காமல் எப்படி இருக்க முடியும்" எனக் கூறுகிறது.

இதன் மூலம் எல்லாளன் அற்புத சக்திகள் பெற்றவன் என்பது தெரிகிறது. அனுராதபுர இராச்சியத்தின் தெற்கில் (தென்னிலங்கையில்) 28 பலம் வாய்ந்த கோட்டைகளை எல்லாளன் அமைத்திருந்தான். 32 சிற்றரசர்களை அங்கு ஆட்சியில் அமர்த்தினான். துட்டகாமினி 12 மாதங்களுக்கு மேல் போர் புரிந்து, ஆயிரக்கணக்கான தனது படைவீரர்களைப் பலிகொடுத்து, 32 சிற்றரசர்களையும் கொன்று, 28



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டைகளையும் அழித்தான். அதன் பின்பே எல்லாள னும் கொல்லப்பட்டான்.

இத்தனை சக்தி வாய்ந்தவர்கள் இறந்த பின்பு தேவர் களாக நிலை கொள்வார்கள் என்ற நம்பிக்கை அன்று இருந்தது. அவர்களுக்கு கோயில் கட்டி, அங்கு சிலை வைத்து, காவல் தெய்வங்களாக மதித்து, அவர்களுக்கு பூஜைகள் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் அவர்கள் மீண்டும் தமது சக்திகள் மூலம் உருவெடுப் பார்கள் எனும் பலமான நம்பிக்கையும் அன்று இருந்தது. இதன் காரணமாகவே துட்டகாமினி எல்லாளன் கொல்லப் பட்ட இடத்தில் அவனது உடலை எரித்து, அவ்விடத்தில் நினைவுத்தூபியை அமைத்து, அங்கு கோயில்கட்டி, அதில் எல்லாளனின் சிலையையும் அமைத்து, பூஜைகள் செய்து, வணங்கி, அவ்வாறே ஏனையோரும் எல்லாளன் சிலைக்கு மரியாதை செலுத்தும்படி கட்டளையிட்டான்.

**எல்லாளன் சமாதிக் கோயிலில் இருந்த கல்வெட்டும், சிலை இருந்தமைக்கான ஆதாரமும்**

இந்த நினைவுத் தூபிக்கு அருகில் ஒரு தூணில் கல் வெட்டு ஒன்றையும் பொறித்தான். அக்கல்வெட்டில் "அரசனாயிருந்தால் என்ன, குடியானவனாக இருந்தால் என்ன யாராகினும் இவ்வழியால் பல்லக்கிலோ, சிவிகை யிலோ முரசுகொட்டி எதிர்காலத்தில் செல்லலாகாது" எனப் பொறிக்கப்பட்டிருந்தது.

எல்லாளனுக்கு துட்டகாமினி அமைத்த சமாதியில் எல்லாளனின் சிலையும் அமைக்கப்பட்டது என்பதற்கு இன்னுமோர் பண்டைய ஆதாரமும் உள்ளது. பொ.ஆ. 8ஆம் அல்லது 9ஆம் நூற்றாண்டில் "வம்சத்த பக்காசினி" எனும் நூல் எழுதப்பட்டது. இந்நூல் மகாவம்சத்திற்கு உரையாக அமையப் பெற்றது. மகாவம்சத்தை மொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்த்த வில்கெல்ம் கைகர் இந்நூல் 11-ம் நூற்றாண்டிற்கும் 13-ம் நூற்றாண்டிற்கும் இடையில் இயற்றப்பட்டிருக்க வேண்டும் எனக் கருதினார்.

இந்நூலில் எல்லாளனும், துட்டகாமினியும் இறுதியாகப் போர் புரிந்த இடம் புரதக்கிண துவாரம்ஹி எனவும், இது எலார பட்டிமாகரவுக்கு கிழக்கேயும், அனுராதபுரத்தின் தெற்குப் பகுதியிலும், குயவரின் கிராமத்திற்கு மேற்கேயும் அமைந்ததாக குறிப்பிடப்படுகிறது. உரை ஆசிரியர் எலார பட்டிமாகர எனும் இடத்தைப் பற்றி குறிப்பிடுகையில் அது அன்றைய தலைமுறைக்கு நன்கு பரிச்சயப்பட்ட ஒரு இடமாகவும், எல்லொருக்கும் தெரிந்த இடமாகவும் குறிப்பிடுவது நோக்கத்தக்கது. எலார பட்டிமாகர என்றால் "எல்லாள விக்கிரக அகம்" எனப் பொருள்படும். அதாவது எல்லாளனின் விக்கிரகம் உள்ள வீடு என்பதாகும். இப் புனித இடம் முன்பே கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. வம்சத்த பக்காசினி இயற்றப்பட்ட காலத்திலும் அது இருந்திருக்கிறது.

வம்சத்த பக்காசினியின் உரை ஆசிரியர் வாழ்ந்த காலத்திலும் இலங்கை அரசர்கள் எல்லாளன் தூபியை அண்மித்ததும் இசை வாத்தியங்கள் வாசிப்பதை நிறுத்தி மாலைகளையும், வாசனைப் பொருட்களையும் தாங்கிய வண்ணம் புனித இடத்தை வலம் வந்து இத்தூபியை (Cetiya) வழிபட்டனர். பரணவித்தானாவும் உரையாசிரியர் வாழ்ந்த காலம் வரையிலும் அதாவது எல்லாளன் இறந்து 1000 ஆண்டிற்கு பின்னரும் எல்லாளனின் பிரதிமைக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது என்பதை ஒப்புக் கொண்டார். எல்லாளன் இறந்த பின்னர் அவன் எவ்வாறு புனிதமான ஒருவனாய்க் கருதப்பட்டான் என்பதை அவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுக்கு உருவாக்கப்பட்ட சிலையும் அச்சிலைக்கு அமைக்கப்பட்ட ஒரு அகமும் வெளிக்காட்டுகின்றன.

**எல்லாளனுக்கு அனுராதபுரத்தில் சமாதிக் கோயில் இருந்தமைக்கான ஆதாரங்கள்**

எல்லாளனின் சமாதிக் கோயிலுக்கு மரியாதை செலுத்த வேண்டும் என பொ.ஆ.மு. 2-ம் நூற்றாண்டில் துட்டகாமினி இட்ட ஆணை,பொ.ஆ.6ம் நூற்றாண்டில் கடைப்பிடிக்கப்பட்டு வந்தமைக்கு மகாவம்சமும், 8ஆம், 9ஆம் அல்லது 11ஆம், 13ஆம் நூற்றாண்டில் "வம்சத்த பக்காசினி" எனும் நூலும், 14ஆம் நூற்றாண்டில் "சத்தர் மாலங்காரய" என்ற நூலும் சான்றுகளாக அமைகின்றன.

மேலும் 1840 ல் *Eleven Years in Ceylon* எனும் நூலும், 1859 ல் *Ceylon* எனும் நூலும், 1885 ல் *The Buried Cities of Ceylon* எனும் நூலும், 1896 முதல் 1900 வரையான தொல்பொருள் திணைக்கள அறிக்கைகளும், 1900 ல் *The Rajavaliya* எனும் நூலும், 1909 ல் *Ancient ceylon* எனும் நூலும், 1932 ல் *An Illustrated guide to the Buried Cities of Ceylon* எனும் நூலும், எச்.டபிள்யூ.கேவ், ஏ.எம்.கோகட், ராஜா த சில்வா, சத்த மங்கல கருணாரத்ன, டபிள்யூ.எஸ்.பண்டார ஆகியோரின் அறிக்கைகளும் சான்று பகர்கின்றன.

**உதாசீனப்படுத்தப்பட்ட இலங்கையின் சிங்கள, பௌத்த மக்களின் வீரநாயகன் துட்டகாமினியின் கட்டளை**

ஆனால் இன்றோ இந்த உயர்ந்த மரபு மறைந்து விட்டது. இலங்கை சிங்கள, பௌத்த மக்களின் வீர நாயகனாகப் போற்றப்படும் ஓர் உன்னத மன்னன் இட்ட கட்டளை வேண்டுமென்றே மக்களால் மறைக்கப்பட்டு விட்டது. வீரதர்மத்தில் ஒரு நாட்டையும், மக்களையும் அதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னத நிலைக்கு உயர்த்திய ஒரு வழக்கம் மறக்கப்பட்டு விட்டது.



**தமிழ் மன்னன் எல்லாளனின் சமாதியில் வைஷ்ரவனின் சிற்பம்**

*1948*ஆம் ஆண்டு வரை தொடர்ந்து கடைப்பிடிக்கப் பட்டு வந்த ஓர் ஆணை இன்று மழுங்கடிக்கப்பட்டு விட் டது. மறுபுறம் எல்லாளன் மாண்டதும் அவனைத் தோற் கடித்தவன் மனச்சாட்சி உறுத்த எல்லாளனை ஏறக்குறைய தெய்வ நிலைக்கு உயர்த்தினான் என மகாவம்சம் சான்று தருகின்றது.

அனுராதபுரத்தில் எல்லாளன் சமாதி எனும் தக்கி ண்ண தூபியின் முன்பக்கம் காணப்படும் கற்தூணில் வைஷ்ரவண குபேரனின் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 44.கெடிகே கோயில்-அனுராதபுரம்

அனுராதபுரத்தில் புராதன கோட்டைப் பகுதியின் மத்தியில், கெடிகே கோயிலின் இடிபாடுகள் காணப் படுகின்றன. இக்கோயில் பல்லவர் கால கட்டிடக் கலை மரபுடன் கட்டப்பட்டுள்ளது. இக்கோயில் பொ.ஆ.7-9 ஆம் நூற்றாண்டுக்குரியது. இக்கோயிலின் கதவு, ஜன்னல் நிலைகள் மற்றும் படிகள் ஆகியவற்றைத் தவிர கட்டிடம் முழுக்க முழுக்க செங்கற்களினால் கட்டப்பட்டுள்ளது. அதே சமயம் பல்லவர் கட்டிடக் கலை மரபில் கட்டப் பட்ட இன்னுமோர் கேடிகே கோயில் மாத்தளை மாவட் டத்தில் உள்ள நாளந்த என்னுமிடத்தில் அமைந்துள்ளது. இது முற்றிலும் கருங்கல்லில் கட்டப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.

**பெருங்கற்காலப் பண்பாட்டு நிலவிய காலத்திற்குரிய வேல் சின்னம்**

அனுராதபுரம் புராதன பெருங்கற்கால பண்பாடு நில விய இடங்களில் ஒன்றாக விளங்குகிறது. இது பொ.ஆ.மு. 800ஆம் ஆண்டு காலப் பகுதியாகும். இக்காலத்திற்குரிய தொல்லியல் சின்னங்கள் பல கேடிகே கோயில் எனப் படும் கட்டிட இடிபாடுகள் உள்ள பகுதியில் கண்டெடுக் கப்பட்டுள்ளன. இவற்றில் இரும்பினால் செய்யப்பட்ட வேல் சின்னம் சிறப்பாக நோக்கத்தக்கது. மிகப்புராதன காலத்தி லேயே இங்கு முருக வழிபாடு நிலவியமைக்கான ஆதார மாக இவ்வேல் சின்னம் காணப்படுகின்றது. இதன் மூலம் மிகப்புராதன காலத்தில் அனுராதபுரத்தில் வேல் வழிபாடு நிலவியுள்ளமை உறுதியாகத் தெரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கெடிகே கோயில்**

வரலாற்று ஆய்வாளரான டகி என்பவர் அண்மையில் தெற்காசியாவில் உள்ள இந்து ஆலயங்கள் பற்றிய ஆய்வுக் குறிப்பில் அதன் தொன்மையான வழிபாட்டுத் தலங்கள் உள்ள இடங்களில் ஒன்றாக அனுராதபுரத்தைக் குறிப்பிட் டுள்ளார்.

இக்கேடிகே கோயில் ஓர் இந்துக் கோயில் என்பதற் கும், இங்கு இந்து தெய்வச்சிலைகள் இருந்தன என்பதற் கும் சில ஆதாரங்கள் உள்ளன. இக்கோயிலை ஆராய்ந்த ஆய்வாளர்கள் இங்கு புத்தர்சிலை இருந்தமைக்கான ஆதா ரங்கள் எதுவுமில்லை எனக் குறிப்பிட்டுள்ளனர். அப்படி யானால் இங்கிருந்த சிலை எந்த தெய்வத்திற்குரியது எனும் கேள்வி எழுகிறது. எனவே நிச்சயமாக இங்கு இந்து தெய்வச்சிலைகள் இருந்திருக்கலாம் என நம்ப இடமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கெடிகே கோயிலின் இன்னுமோர் தோற்றம்.

## 45.நாக கோயில் (நகா விகாரை)- அனுராதபுரம்

அனுராதபுரத்தில் புராதன கோட்டைப் பகுதியின் கிழக்குப் புறத்தில் காணப்படும் வீதியின் கிழக்குப் பக்கத் தில் நகா விகாரை எனும் நாக கோயிலின் இடிபாடுகள் காணப்படுகின்றன. இது பொ.ஆ. 7-10ஆம் நூற்றாண்டுக் குரிய மகாயான சம்பிரதாய தாதுகோபத்தின் சிதைவு என இங்குள்ள பெயர் பலகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இங்குள்ள கட்டிடம் முழுமையாக செங்கற்களில் அமைக்கப்பட்டுள்ளது. சதுர வடிவுடைய இக் கட்டிடத் தின் மேல் பகுதியில் சதுர வடிவுள்ள ஓர் சிறிய மேடை காணப்படுகிறது. கட்டிடத்தைச் சுற்றி சில பீடக் கற்க ளும், கற்தூண்களும் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**நகா விகாரை எனும் நாக கோயிலின் முழுமையான தோற்றம்**

இக்கட்டிடம் ஓர் தூபி எனக் குறிப்பிட்டுள்ளமை அவதானிக்கத்தக்கது. ஏனெனில் தூபிகள் வட்ட வடிவ மாகவே அமைக்கப்படும். ஆனால் இக்கட்டிடமோ சதுர வடிவில் உள்ளது. எனவே இது ஓர் பண்டைய நாக கோயிலின் இடிபாடாக இருக்க வேண்டும் என நம்ப லாம். நாககோயில் என்பதே நாகவிகாரை எனத் திரிப டைந்து இன்று "நகா விகாரை" என மாற்றம் செய்யப் பட்டுள்ளது. நகா விகாரை என்ற பெயர் இங்கே பொறி க்கப் பட்டிருப்பினும் இப்பெயர் இடப்பட்டமைக்கான காரணங்களோ, ஆதாரங்களோ இங்கே கூறப்படவில்லை.

**பண்டைய காலத்து நாக கோயில்**

இக்கட்டிடம் பண்டைய காலம் முதல் நாக வழிபாடு செய்யப்பட்ட ஓர் நாக கோயில் என்பதற்கான சான்றுகள் சில இப்பகுதியில் வாழும் மக்களால் கூறப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**நாக கோயில் கட்டிடத்தைச் சுற்றி பீடக்கற்கள்**

பண்டைய காலம்முதல் இங்கு நாகவழிபாடு செய்யப் பட்டதாகவும், நாகங்கள் பல இங்கு வாழ்ந்ததாகவும், எனவே இரவில் யாரும் இப்பகுதிக்கு வருவதில்லை எனவும், இங்கு வாழும் மக்கள் இவ்விடத்தை பயபக்தியுடன் வழிபட்டு வந்ததாகவும் இப்பகுதி மக்கள் கூறுகின்றனர். மேலும் இங்கு அண்மைக்காலம்வரை ஓர் வெள்ளைநாகம் குடிகொண்டிருந்ததாகவும் கூறப்படுகிறது.

இக்கூற்றுக்கள் யாவும் இங்கு பண்டைய காலம் முதல் நிலவிய நாக வழிபாட்டின் தொடர்ச்சியே என் பதை உறுதி செய்கின்றன. இவற்றைத் தவிர இங்கு உடைந்த கற்கோமுகியின் துண்டு ஒன்றும் காணப்படுகின்றது. கோமுகிகள் சைவக் கோயில்களில் மட்டும் காணப்படும் கட்டிட அமைப்பு முறைகளில் ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 46.முருகன், விஷ்ணு, பத்தினி அம்மன் கோயில்கள்-நெலும் கன்னிய, களத்தேவ-அனுராதபுரம்

அனுராதபுரத்தில் உள்ள நுவரவாவிக் குளத்தின் தெற்குப் பகுதியில் களத்தேவ என்னுமிடம் அமைந்துள்ளது. இப்பகுதியில் உள்ள நெலும் கன்னிய என்னுமிடத்தில் ஓர் பழமை வாய்ந்த விஷ்ணு கோயிலின் இடிபாடுகள் காணப் படுகின்றன. அண்மையில் இங்கு நிலத்தின் அடியில் இருந்து மூன்று வெண்கலச்சிலைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஓர் விஷ்ணு சிலையும், முருகன் சிலையும், பத்தினி அம்மன் சிலையுமே கிடைக்கப்பெற்றுள்ளன.

விஷ்ணு சிலை சதுரமான பீடத்தின் மீது நான்கு கைகளுடன் நிற்கும் நிலையில் வார்க்கப்பட்டுள்ளது. முருகன் சிலை ஓர் வட்டமான உயர்ந்த பீடத்தின் மீது நான்கு கைகளுடனும்,மயிலுடனும் காணப்படுகிறது. ஓர் தாமரை வடிவமுள்ள பீடத்தின்மீது இரண்டு கைகளிலும் சிலம்பை ஏந்திய வண்ணம் தலைக்குப் பின்னால் ஓர் ஒளிவட்டத்துடன் பத்தினி அம்மன் சிலை காணப்படுகிறது.

இச்சிலைகள் யாவும் புதையல் தோண்டும் பிரியர்களினால் கடந்த 2013 ஆம் ஆண்டு கோயில் இருந்த சிதைவுகளின் அடியில் இருந்து தோண்டி எடுக்கப்பட்டுள்ளது. இச்சிலைகள் மூன்றையும் ஒரு கோடியே நாற்பது இலட்சம் ரூபாய்க்கு விற்பதற்காக புதையல் தரகர்கள் முயற்சி செய்த போது பொலிசாரிடம் மாட்டிக் கொண்டனர். இச்சம்பவத்தின் மூலம் தொன்மை வாய்ந்த ஓர் இந்துக் கோயிலின் தொல்போருள் சின்னங்கள் வெளிப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**நெலும் கன்னியவில் கிடைக்கப்பெற்ற தெய்வச் சிலைகள்**

# 47.அம்மன் கோயில்-ஜேதவனாராம அனுராதபுரம்

அனுராதபுரத்தில் ஜேதவனாராம தூபியின் தெற்குப் பக்கத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வின் போது சிதைந்த நிலையில் இரண்டு அம்மன் சிலைகள் கண்டெடுக்கப் பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**6 அடி உயரமான சிலை**

இவற்றில் ஒன்று கணுக்கால் வரை முழுமையான சிலையாகும். முழங்கை வரையுமே இதன் கைகள் உள் ளன. அடுத்தது தலை, கைகள், கால்கள் அற்ற நிலையில் முழங்கால் வரை காணப்படும் சிலையாகும். இவை சுண்ணாம்புக் கல்லினால் அமைக்கப்பட்டவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**3.5 அடி உயரமான சிலை**

முழுமையான சிலை 6 அடி உயரமானதாகும். அகலம் இடுப்பளவில் 50 செ.மீ, தோள் அளவில் 43 செ.மீ ஆகும். தலையற்ற சிலை 3.5 அடி உயரமானதாகும். இதன் அகலம் இடுப்பளவு 50 செ.மீ, தோள் அளவில் 44 செ.மீ ஆகும். இச்சிலைகள் இரண்டும் வேறு ஓர் இடத்திலிருந்து இங்கு கொண்டு வந்து வைக்கப்பட்டது எனக் கூறப்படுகிறது. இருப்பினும் இச்சிலைகள் எந்த தெய்வத்திற்குரியவை என சரியாகக் கூறப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 48.அம்மன் கோயில்-மிகுந்தலை

அனுராதபுரத்தின் கிழக்கில் சுமார் 11 கி.மீ தொலைவில் மிகுந்தலை அமைந்துள்ளது. 2000 வருடங்களுக்கு முற்பட்ட காலங்களிலே இப்பகுதியில் இந்து தெய்வ வழிபாடுகள் நிலவியிருந்தமை தொடர்பான சான்றுகள் பல காணப்படுகின்றன.



**மிகுந்தலை மலையும், அம்பஸ்தல தூபியும்**

## மிகப்புராதன அம்மன் சிலை

மிகுந்தலை மலையில் உள்ள அம்பஸ்தல தூபியின் தெற்குப் பக்கத்தில் மிகப் புராதனமான அம்மன் சிலையொன்று கண்டெடுக்கப்பட்டது. இச்சிலை இங்கிருந்த அம்மன் கோயிலின் சிலையாக இருக்க வேண்டும் என நம்பப்படுகிறது.

## சப்த கன்னியர் வழிபாடு

மிகுந்தலையில் சப்த கன்னியர் வழிபாடு நிலவிய கோயில் ஒன்று இருந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. ஏனெனில் இங்கு சப்த கன்னியர் எழுவரில் குமாரி, இந்திராணி ஆகிய இருவரின் சிலைகளும் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மிகுந்தலையில் கண்டெடுக்கப்பட்ட அம்மன் சிலை





கந்தக்க தூபியில் உள்ள இரண்டு சப்த கன்னியர் சிலைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்துசமய சிற்பங்கள் அதிகளவில் உள்ள கந்தக்க தூபி**

மிகுந்தலையில் இந்துசமய தெய்வங்கள் தொடர்பான சிற்பங்கள் கந்தக்க தூபியின், வாகல்கட என்றழைக்கப் படும் நான்கு பக்கங்களிலும் உள்ள வாயில்களில் தான் அதிகளவில் செதுக்கப்பட்டுள்ளன. இத்தூபி யாரால், எந்தக் காலப்பகுதியில் அமைக்கப்பட்டது எனும் விபரங்கள் வரலாற்று நூல்களில் தெளிவாகக் குறிப்பிடப் படவில்லை. இருப்பினும் பொ.ஆ.மு 59-50 காலப் பகுதியில் இல ங்கை மன்னனாகவிருந்த லஜ்ஜிதிஸ்ஸ எனும் மன்னன் கந் தக்க தூபிக்கு பூஜைகள் நடத்தியது பற்றிய குறிப்புகள் மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ளன.



**மிகுந்தலையிலுள்ள கந்தக்க தூபி**

எனவே இவனது காலத்திலோ அல்லது இதற்கு சற்று முந்திய காலத்திலோ கந்தக்க தூபி அமைக்கப்பட்டிருக்க லாம் என நம்பப்படுகின்றது. இதன்படி மிகுந்தலையில் கந்தக்க தூபி அமைக்கப்பட்ட காலத்தில் அதாவது சுமார் 2200 வருடங்களுக்கு முன்பு இங்கு அம்மன், பிள்ளையார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவன், நாகம் ஆகிய இந்துசமய தெய்வ வழிபாடுகள் செல்வாக்குடன் விளங்கியிருக்கும் என நம்பக்கூடியதாக உள்ளது.

**கந்தக்க தூபியில் பிள்ளையார் சிற்பம்**

மிகுந்தலை மலைப்பகுதியில் பல மலைக்குன்றுகள் காணப்படுகின்றன. இக்குன்றுகளில் ஒரு குன்றில் கந்தக்க தூபி எனும் புராதன தூபி அமைந்துள்ளது. இத்தூபியில் வாகல்கட என்றழைக்கப்படும் வாயிலில் பிள்ளையார் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது.



**கந்தக்க தூபியில் காணப்படும் பிள்ளையார் சிலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் மூலம் மகிந்ததேரர் மிகுந்தலைப் பகுதிக்கு வருவதற்கு முன்பு இங்கு விநாயகர் வழிபாடு செல்வாக்குப் பெற்று விளங்கிருக்கலாம் என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். மிகுந்தலை அமைந்துள்ள வட மத்திய மாகாணத்தின் தொன்மைமிகு காவல் தெய்வமாக விளங்கும் தெய்வம் பிள்ளையார் என்பது குறிப்பிடத்தக்கது.

**கந்தக்க தூபியில் நந்தி சிலையும், நாகராஜர் உருவமும்.**

கந்தக்க தூபியில் விநாயகர் மட்டுமல்லாது நந்தி சிலையும், நாகராஜர் உருவமும் செதுக்கப்பட்டுள்ளன. தூபியின் நான்கு பக்கங்களிலும் உள்ள வாகல்கடவில் அமைக்கப்படும் எட்டு கற்தூண்களில் இரண்டு தூண்களில் அழகிய நந்தியின் சிற்பம் காணப்படுகிறது. இது இப்பகுதியில் நிலவிய சிவ வழிபாட்டின் அடையாளமாகும். மேலும் வாயிலில் நாகராஜனின் சிற்பமும் காணப்படுகின்றது. இதன் மூலம் இப்பகுதியில் சிவன் மற்றும் நாக வழிபாடுகளும் சிறப்புடன் விளங்கியுள்ளன எனக்கூறலாம்.



**கந்தக்க தூபியில் உள்ள நந்தியின் கற்சிலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கந்தக்க தூபியில் காணப்படும் நாகராஜர் சிலை**

## சிம்மக் கோமுகி

இங்கிருந்து சற்று தூரத்தில் சிங்க பொக்குன எனும் சிறிய நீர்த்தொட்டி காணப்படுகிறது. மேலிருந்து வரும் நீர் இத்தொட்டியில் நிரம்பி வழிந்தோடும் ஒரு சிறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடத்தின் கீழே சிங்கம் ஒன்று இரண்டு முன்னங்கால்களையும் தூக்கிய வண்ணம் நின்று கொண்டிருக்கும் சிற்பம் ஒன்று உள்ளது.



**சிங்க பொக்குன எனப்படும் சிங்க பொய்கை வாசல்**



**சிங்கத் தடாகத்தின் மேல்பகுதியில் உள்ள சிம்மக் கோமுகி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது "சிங்க பொக்குன" என அழைக்கப்படுகிறது. இதன் மேல் பகுதியில் சிம்மக் கோமுகி ஒன்றும் உள்ளது. இந்த சிம்மக் கோமுகி இங்கிருந்த அம்மன் கோயிலின் சின்ன மாக இருக்க வேண்டும்.

**பிராமணர்கள் வாழ்ந்த ராஜகிரிகந்த மலை**

மிகுந்தலையின் மேற்குப் பக்கத்தில் 1 கி.மீ தூரத்தில் ராஜகிரிகந்த எனும் மலை காணப்படுகிறது. இம்மலையில் உள்ள கற்குகைகளில் 10 பிராமிக் கல்வெட்டுக்கள் காணப் படுகின்றன. இங்கு பிராமணர்கள் வாழ்ந்தமைக்கான ஆதாரமாக ஓர் பிராமிக் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள் ளது. இக்கல்வெட்டில் பிராமணனின் மகன் ரெத்தனின் குகை என எழுதப்பட்டுள்ளது. இதன் மூலம் மிகுந்தலைப் பகுதியில் பிராமணர்கள் வாழ்ந்துள்ளார்கள் என்பது உறு தியாகிறது. எனவே இவர்களால் இங்கிருந்த இந்துக் கோயில்கள் பராமரிக்கப் பட்டிருக்க வேண்டும்.



**ராஜகிரிகந்த மலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ராஜகிரிகந்த மலையில் உள்ள கற்குகை**

## இந்து தெய்வங்கள் தொடர்பான பிராமிக் கல்வெட்டுக்கள்

மிகுந்தலையில் உள்ள மலைகளில் உள்ள குகைகளில் மொத்தமாக 82 பிராமிக் கல்வெட்டுக்கள் பொறிக்கப் பட்டுள்ளன. இவற்றில் இந்து தெய்வங்கள் சம்பந்தமான 11 பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவற்றில் நாகம் தொடர்பாக 3 கல்வெட்டுக்களும், சிவன் தொடர் பாக 2 கல்வெட்டுக்களும் அம்மன் தொடர்பான 1 கல் வெட்டும் காணப்படுகின்றன. சிவன் தொடர்பான கல்வெ ட்டுக்களில் ஒன்றில் "இளவரசன் சிவன்" எனவும் அடுத்த கல்வெட்டில் "கிராம அதிகாரி சிவன்" எனவும் பொறிக் கப்பட்டுள்ளது. இதன்மூலம் இப்பகுதியில் சிவபக்தனான ஒரு இளவரசனும், கிராமத்தின் அதிகாரியும் வாழ்ந்துள்ள னர் என்பது தெரிய வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெருமகன் நாகன்... எனப் பொறிக்கப்பட்டுள்ள கற்குகை**

நாகம் தொடர்பான கல்வெட்டுக்களில் மகாநாகன், கிராமத் தலைவன் நாகன், பெருமகன் நாகன் போன்ற பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மிகுந்த லைப் பகுதியில் வாழ்ந்த கிராமத் தலைவர்கள் நாகத்தை



**மிகுந்தலையில் உள்ள நாக பொக்குன எனும் நாக சுனை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**நாக சுனையில் ஐந்து தலை நாக சிற்பம்**

வணங்கியவர்கள் என்பது உறுதியாகத் தெரிகிறது. மேலும் இங்குள்ள நாக பொக்குன என்னும் நாக சுனையில் ஐந்து தலை நாகம் படமெடுத்த வண்ணம் இருக்கும் வடிவம் செதுக்கப்பட்டுள்ளது.இவற்றின் மூலம் மிகுந்தலை மலைப் பகுதியில் 2000 வருடங்களுக்கு முன்பு சிவன், நாகம், அம்மன் ஆகியோரின் வழிபாடு நிலவியுள்ளமை மேலும் உறுதியாகத் தெரிகிறது.

மிகுந்தலையில் ஆனைக்குட்டி மலை (ஆனகுட்டிகந்த) என்னுமோர் இடமும் உள்ளது. இங்குள்ள கற்குகைகளில் 7 பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இக்கல் வெட்டுக்களில் ஒன்றில் பெருமகன் எனும் தமிழ் சொல் பொறிக்கப்பட்டுள்ளது. "பெருமகன் ராக்காவின் புதல்வன் பெருமகன் பரகாஅச" என அதில் எழுதப்பட்டுள்ளது. இதன் மூலம் இப்பகுதியில் பண்டைய காலத்தில் தமிழ் கிராமத் தலைவனும் அவனது மகனும் இருந்துள்ளனர் எனத் தெரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 49.இரவிகுலமாணிக்க ஈஸ்வரம்-முதலாம் சிவாலயம்(ஸ்ரீ பார்வதிபுரம்) பதவியா

திருகோணமலையின் வடமேற்கில் சுமார் 56 கி.மீ தொலைவில் இருக்கும் புல்மோட்டையிலிருந்து தென்மேற்கில் சுமார் 43 கி.மீ தொலைவில் பதவியா அமைந்துள்ளது. மேலும் வவுனியாவிலிருந்து திருகோணமலைக்கு செல்லும் நெடுஞ்சாலையில் உள்ள கெப்பிட்டிக்கொல்லாவ சந்தியிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் வீதியில் 30 கி.மீ பயணம் செய்தும் பதவியாவை அடையலாம். இங்கு பதவியாக் குளத்தின் ஓரமாக, அதன் வட கிழக்குப் பகுதியில் அணைக்கட்டின் அருகில் மொறகொட என்னும் இடம் உள்ளது. இவ்விடமே சோழர் காலத்தில் ஐம்பொழில் பட்டினம் என்ற பெயரில் பெரிய வணிக நகரமாக இருந்துள்ளது. இந்நகரில் தான் இரவிகுல மாணிக்க ஈஸ்வரம் எனும் சிவாலயம் அமைக்கப்பட்டிருந்தது.



பதவியா குளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோழர் காலத்தில் ஐம்பொழில்பட்டினம், ஸ்ரீ பார்வதி புரம் ஆகிய பெயர்களுடன் விளங்கிய பதவியா

பொ.ஆ.11ஆம் நூற்றாண்டில் இலங்கையை சோழர் ஆட்சி செய்த காலத்தில் சிறப்புற்று விளங்கிய முக்கிய நகரங்களில் பதவியாவும் ஒன்றாகும். சோழரின் தலைநகராக பொலநறுவை இருந்த காலத்தில் இராஜதானி எனும் வகையில் அடங்காத நகரங்களில் முதன்மை பெற்று விளங்கிய நகரமும் இதுவே எனக் கருதலாம். இலங்கையில் தமிழர்களின் பொற்காலம் என வர்ணிக்கப்படும் சோழர் காலத்தில் பொலநறுவைக்கு அடுத்த படியாக அதிகமான இந்துக் கோயில்கள் அமைக்கப்பட்ட இடமாக பதவியா விளங்குகிறது. சோழர் காலத்தில் "ஐம்பொழில் பட்டினம்" என்ற பெயருடன் பதவியா விளங்கியுள்ளது. அத்துடன் "ஸ்ரீ பார்வதிபுரம்" என்ற பெயர் கொண்டும் அழைக்கப்பட்டுள்ளது.



**இரவிகுல மாணிக்க ஈஸ்வரம் கோயிலின் இடிபாடுகள்(முதலாம் சிவாலயம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாணம், கிழக்கு மாகாணம், வடமத்திய மாகாணம் ஆகியவற்றின் எல்லைகளை ஒட்டி பதவியா குளம் அமைந்துள்ளது. இக்குளத்தை சுற்றியிருக்கும் பிரதேசங்களில் விவசாயம் அபிவிருத்தி அடைந்தது. அதன் மூலம் வர்த்தகமும் பெருகியது. மக்கள் குடிப் பெருக்கம் ஏற்பட்டது. சோழர் ஆட்சிக் காலத்தில் சர்வதேச வாணிபத்தில் ஈடுபட்டிருந்த நானாதேசிகர் எனும் வணிகர் இங்கு வந்து தமது விற்பனை நிலையங்களை அமைத்தனர். போர் வீரர்களும், கம்மாளர்களும் வணிகர்களோடு சேர்ந்து பதவியாவில் குடியேறினர். பதவியா ஓர் வணிக நகரமாக வளர்ச்சி பெற்றது.



**பல துண்டுகளாக உடைந்த நிலையில் இரவிகுல மாணிக்க ஈஸ்வரத்தின் சிவலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இராஜராஜசோழனின் விருதுப்பெயரில் வணிகர்களால் அமைக்கப்பட்ட சிவாலயம்**

அரச செல்வாக்கு பெற்றிருந்த இவ்வணிகர்களினதும், ஏனைய தமிழ் மக்களினதும் வழிபாட்டுத் தேவைக்கான பதவியாவில் கோயில்கள் அமைக்கப்பட்டன. இவ்வாறு அமைக்கப்பட்ட கோயில்களில் ஒன்றே "இரவிகுல மாணிக்க ஈஸ்வரம்" எனும் சிவாலயமாகும். இலங்கைத் தொல்பொருள் திணைக்களத்தினால் இது முதலாம் சிவாலயம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. இங்குள்ள ஆலயங்களிலே இதுவே முதன்மையானதும், அளவில் பெரியதுமாகும்.

பொ.ஆ.11ஆம் நூற்றாண்டில் இவ்வாலயம் அமைக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. கோட்டையும் அகழியும் சூழ்ந்திருந்த இந்நகரத்தின் மையப்பகுதி 8 ஏக்கர் விஸ்தீரணம் கொண்டதாக இருந்துள்ளது. இதன் சுற்றுப் புறங்களில் விற்பனை நிலையங்களும், மக்கள் குடியிருப்புக்களும் அமைந்திருந்தன. இங்கே தான் நானாதேசி வணிகர்களால் "இரவிகுல மாணிக்க ஈஸ்வரம்" அமைக்கப்பட்டிருந்தது. அரச செல்வாக்குடன் இவ்வாலயம் சீரும் சிறப்பும் பெற்று விளங்கியது. "இரவிகுல மாணிக்கம்" என்பது இராஜராஜ சோழனுக்கு வழங்கப்பட்ட 42 விருதுப் பெயர்களில் ஒன்றாகும்.

**மக்களின்றி அழிந்துபோன நகரமும், கோயில்களும்**

பொ.ஆ.13ஆம் நூற்றாண்டில் இலங்கையில் சோழர் ஆட்சி முடிவுக்கு வந்த வேளையில் இங்கு ஏற்பட்ட அரசியல், சமுதாய சீர்குலைவுகள் காரணமாக பதவியா நகரம் அதன் செழிப்பை இழந்தது. வாணிபம் தடைப்பட்டது. மக்கள் படிப்படியாக இவ்விடத்தை விட்டகன்றனர். காடுகள் வளர்ந்து, ஜனசஞ்சாரம் ஒளிந்து வனவிலங்குகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறைவிடமாக பதவியா மாறியது. கோயில்களும், குடியிருப்புகளும், விற்பனை நிலையங்களும் பராமரிப்பின்றி இடிந்து விழுந்தன. மாளிகைகள் மண் மேடாயின.

**1891 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட சிவாலயம்**

இதன்பின் சுமார் 6 நூற்றாண்டுகளின் பின் இப்பகுதிக்கு வந்த ஆங்கிலேய அதிகாரிகளினால் பதவியாக் குளத்தின் அருகில் புராதன நகரொன்றின் அழிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. 1891ஆம் ஆண்டு தொல்பொருள் ஆராய்ச்சியாளர் D.M.de.Z.விக்ரமசிங்க அவர்களால் இங்கு அகழ்வாராய்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. இதன் பயனாக பல இந்துக் கோயில்களின் அழிபாடுகளும், சின்னங்களும், கல்வெட்டுக்களும் வெளிப்பட்டன.

அதன்பின் 1961,1962,1965, 1968 ஆம் ஆண்டுகளிலும் அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாய்வுகளின் மூலம் கண்டு பிடிக்கப்பட்ட பல இந்துக் கோயில்களில் முதன்மை பெற்றது முதலாம் சிவாலயம் என்றழைக்கப்படும் இரவிகுல மாணிக்க ஈஸ்வரமே.

**ஆலய சிதைவுகளில் கண்டெடுக்கப்பட்ட தெய்வச் சிலைகளும், கல்வெட்டுக்களும்.**

இச்சிவாலயம் கிழக்கு மேற்காக 166 அடி நீளமும், வடக்கு தெற்காக 100 அடி அகலமும் கொண்ட சுற்றுப் பிரகாரத்தில் அமைக்கப்பட்டிருந்தது. கிழக்கிலும், மேற்கிலுமாக இரு கோபுர வாயில்கள் கட்டப்பட்டிருந்தன. கிழக்குக் கோபுர வாயிலின் முன்பாக முகமண்டபம் ஒன்று அமைந்திருந்தது. இக்கோயில் கருவறை, அந்தராளம், மண்டபம், கோபுரவாசல் போன்றவற்றைக் கொண்டதாகக் காணப்பட்டது. இவையாவும் உயர்ந்த பீடமொன்றின் மீது அமைக்கப்பட்டிருந்தன. இப்பீடத்தில் உபபீடமும், அதிஸ்டானமும் இருந்தன. கருங்கல்லினாலான இவ்வதிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டானத்தின் மேலிருந்த பகுதிகள் செங்கற்களைக் கொண்டு அமைக்கப்பட்டிருந்தன. இலங்கையின் மத்தியகால இராஜ தானிகளில் ஒன்றான சீதாவாக்கையில் அமைந்திருந்த பெரண்டி சிவன்கோயிலை ஒத்ததாக இவ்வாலயம் காணப் படுகிறது.



**பதவியா சிவாலயங்கள் உள்ள இடத்தில் காணப்படும் தமிழ்க் கல்வெட்டுக்கள்**

மேலும் இவ்வாலய இடிபாடுகளுக்கிடையே ஐந்து தமிழ்க் கல்வேட்டுக்களும் கிடைக்கப்பெற்றுள்ளன. இவை இங்கு நிலை கொண்டிருந்த வணிகக்குழுக்கள் மற்றும் கோயில்கள் பற்றிய சாசனங்களாகவே காணப்படுகின்றன. இவற்றில் இரண்டு சோழர் ஆட்சிக்குப் பிந்திய காலத்திற் குரியவையாகும். இதில் ஒன்று இராஜராஜசோழன் காலத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்குரியதாகும். இக்கல்வெட்டுக்களின் மூலம் பதவியா சோழர் காலத்தில் "ஐம்பொழில் பட்டினம்" என்ற பெயரில் அழைக்கப்பட்டமை தெரிய வந்துள்ளது.

இன்னுமோர் கல்வெட்டு 2ஆம் இராதி ராஜ சோழன் (பொ.ஆ.1163-1178)காலத்திற்குரியதாகும். இதில் நானாதேசிக வணிகனான "கோணாவில் வெண்காடான்" என்பவன் எறிமணியொன்றை இவ்வாலயத்திற்கு தானம் அளித்தது பற்றிக் கூறப்பட்டுள்ளது. கோணாவில் என்னுமிடம் பூநகரியின் கிழக்கு எல்லையில் அமைந்துள்ள பழைமையான கிராமமாகும். இங்கிருந்த வணிகனொருவனே பதவியா சிவாலயத்திற்கு தானமளித்திருப்பதால், சோழர் காலத்தில் பதவியாவிற்கும் பூநகரிக்கும் இடையில் தொடர்புகள் இருந்துள்ளன எனக் கூறலாம்.



**பதவியா சிவாலயங்கள் உள்ள இடத்தை சுற்றி அமைக்கப்பட்டுள்ள அகழியுடன் கூடிய சுற்றுமதில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50.இரண்டாம் சிவாலயம்-(ஸ்ரீ பார்வதிபுரம்) பதவியா

பதவியாக் குளத்தின் வடகிழக்கில் அமைந்துள்ள மொறகொட என்னுமிடத்தில் அமைக்கப்பட்டிருந்த ஆலயங்களில் இரண்டாம் சிவாலயமும் ஒன்றாகும். சுமார் 8 ஏக்கர் விஸ்தீரனமுடைய புராதன நகரத்தின் இடிபாடுகளில் இச்சிவாலய இடிபாடுகளும் காணப்படுகின்றன. பொ.ஆ. 11ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இவ்வாலயம் பல நூற்றாண்டுகளாக கைவிடப்பட்ட நிலையில் அழிந்து போயுள்ளது.



**இரண்டாம் சிவாலய இடிபாடுகளில் சிவலிங்கம்**

பொ.ஆ. 11ஆம் நூற்றாண்டில் சோழர் இலங்கையைக் கைப்பற்றி ஆட்சி செய்த காலத்தில் தென்னிந்திய வணிகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களால் உருவாக்கம் பெற்ற இந்நகரத்தில் வணிகர்களால் அமைக்கப்பட்டு சிறப்புடன் விளங்கிய இச்சிவாலயம் இன்று முற்றாக அழிந்த நிலையில் இடிபாடுகளாய்க் காணப்படுகின்றது. இங்கு கிடைக்கப்பெற்ற ஆலயச் சின்னங்களின் மூலம் இது ஓர் சிவன் கோயில் எனக் கொள்ளப்பட்டது. எனினும், இவ்வாலயத்தின் உண்மையான பெயர் என்ன என்பது இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இந்த நிலையில் இலங்கைத் தொல்பொருட் திணைக்களத்தவர்களினால் இக்கோயிலுக்கு இரண்டாம் சிவாலயம் எனப் பெயரிடப்பட்டுள்ளது.

## 51.வலகழி சிவன் கோயில்-மூன்றாம் சிவாலயம்(ஸ்ரீ பார்வதிபுரம்)-பதவியா

பதவியாக் குளத்தின் அருகிலுள்ள மொறகொட என்னுமிடத்தில் காணப்பட்ட இந்துக் கோயில்களில் மூன்றாம் சிவாலயமும் ஒன்றாகும். இன்று அழிந்த நிலையில் இடிபாடுகளாய்க் காணப்படும் இவ்வாலயம் பொ.ஆ. 11ஆம், 12ஆம் நூற்றாண்டளவில் சிறப்புடன் விளங்கியுள்ளது. தென்னிந்திய வணிகர்களால் கட்டப்பட்ட இவ்வாலயம் சோழர் காலத்தில் இப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த "ஐம்பொழில் பட்டினம்" எனும் வணிக நகரத்தின் கோயில்களில் ஒன்றாக இருந்துள்ளது.

**ராஜராஜசோழன் காலத்து கல்வெட்டில் உத்தமர் தம் கோயில்**

இவ்வாலய இடிபாடுகளுக்கிடையே 16 வரிகளைக் கொண்ட ஓர் தமிழ்ச் கல்வெட்டும் காணப்படுகிறது. இது ஓர் தூண் கல்வெட்டாகும். தூபி, சாமரை போன்றவை இத்தூணின் உச்சியிலும், தூணில் அடியிலே குத்து விளக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குகளும், தூண்டாமணி விளக்கு போன்ற வடிவமும் பொறிக்கப்பட்டுள்ளது. இவற்றின் இடையே உள்ள நடுப் பகுதியில் எழுத்துக்கள் பொறிக்கப் பட்டுள்ளன. செய்யுள் வடிவில் பொறிக்கப்பட்டுள்ள இக்கல்வெட்டில் இவ்வால யத்தின் பெயர் "வலகழி" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



**பதவியா தமிழ் கல்வெட்டுக்களில் ஒன்று**

அத்துடன் இது "உத்தமர் தம் கோயில்" எனவும் சொல்லப்பட்டுள்ளது. உத்தமர் என்பது சிவன், திருமால் போன்றோரைக் குறிப்பதாகும். இங்கு இது சிவனைக் குறி ப்பதாகக் கொள்ளலாம். இக்கல்வெட்டின் படி இவ்வால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யத்தை“வலகழி சிவன் கோயில்”என அழைப்பது பொருத்தமானதாகும்.



**பதவியா வெண்கல முத்திரை**

வலகழி சிவன் கோயில் விசையராமப் பேரிளமையார் என்பவரால் கட்டப்பட்டிருந்தது. இதன் மூலம் “பேரிளமையார்” எனும் சமூகத்தினரும் சோழர் காலத்தில் பதவியாவில் குடியேறியுள்ளனர் என்பது தெரிகிறது. நானாதேசிகர், திசையாயிரவர், ஐந்நூற்றவர் போன்ற வணிகர்களோடு பேரிளமையார் சமூகத்தினரும் பதவியா நகரில் குடியேறியுள்ளனர்.இவர்கள் பற்றிய கல்வெட்டுக்கள் தமிழ் நாட்டிலும் மிக அரிதாகவே காணப்படுகின்றன. மாமல்லபுரத்திலும், உத்திரமேரூரிலும் மட்டுமே இவர்கள் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுக்களும் இராஜராஜசோழனின் காலத்திலேயே எழுதப்பட்டுள்ளன. பொ.ஆ 11ஆம், 12ஆம் நூற்றாண்டில் பேரிளமையாரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டப்பட்டு சீருடனும் சிறப்புடனும் பராமரிக்கப்பட்டு வந்த வலகழி சிவாலயம் இன்று பொலிவிழந்து இடிபாடு களாய்க் காட்சியளிக்கிறது.

## 52.நான்காம் சிவாலயம்-(ஸ்ரீ பார்வதிபுரம்) பதவியா

தென்னிந்திய வணிகர்களால் பொ.ஆ. 11ஆம் நூற்றா ண்டில் அமைக்கப்பட்ட ஐம்பொழில் பட்டினம் எனும் பதவியாவில் அமைந்திருந்த ஐந்து ஆலயங்களில் இதுவும் ஒன்றாகும்.

**சிதைந்த நிலையில் சிவலிங்கமும், சுடுமண்ணினாலான பிள்ளையார் சிலையும்**

தற்போது இடிபாடுகளாய்த் தோற்றமளிக்கும் இவ்வா லயம் கோட்டையும், அகழியும் சூழ்ந்த ஐம்பொழில் பட்டினத்தின் மேற்கில் அகழிக்கு வெளிப்புறத்தில் அமைந் திருந்தது. பல நூற்றாண்டுகளாகப் பராமரிப்பின்றி அழிந்து போன இவ்வாலயத்தின் இடிபாடுகள் 1961ம் ஆண்ட ளவில் கண்டறியப்பட்டன. சிதைந்த நிலையில் லிங்கம் ஒன்றும், மேலும் சுடுமண்ணினாலான பிள்ளையார் சிலை யொன்றும் இப்பகுதியில் கிடைக்கப்பெற்றன. அத்துடன் சில கற்தூண்களும் ஆங்காங்கே காணப்படுகின்றன. இதன் மூலம் இவ்வாலயம் சிவனுக்குரியது என அறியப்பட்டது.

வணிகர்களால் கட்டப்பட்டு நன்கு பூஜிக்கப்பட்ட இவ்வாலயத்தின் உண்மையான பெயர் என்ன என்பதற்கு ரிய ஆதாரங்கள் எதுவும் இதுவரை கிடைக்கப்பெறவி ல்லை. பூரணமாக ஆய்வுசெய்யப்படாத இவ்வாலய அழி பாடுகளை மேலாய்வு செய்வதன் மூலம் இச்சிவாலயம் பற்றிய மேலும் பல தகவல்களைப் பெற முடியும். பத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியா குளக்கட்டில் பிற்காலத்தில் அமைக்கப்பட்ட பிள்ளையார் கோயில் இன்றும் காணப்படுகிறது.



**பதவியா குளக்கட்டில் அமைக்கப்பட்டுள்ள பிள்ளையார் ஆலயம்**

## *53.ஐந்தாம் சிவாலயம்-(ஸ்ரீ பார்வதிபுரம்) பதவியா*

பதவியாவில் உள்ள மொறகொட பகுதியில் அமைக்கப்பட்டிருந்த ஐந்து சிவன் கோயில்களில் இதுவும் ஒன்றாகும். இலங்கைத் தொல்பொருட் திணைக்களத்தினரால் "ஐந்தாம் சிவாலயம்" என அழைக்கப்பட்டு வரும் இவ்வாலயத்தின் உண்மையான பெயர் எதுவென்பது இதுவரை கண்டறியப்படவில்லை. வணிகர்களால் அமைக்கப்பட்ட ஐம்பொழில் பட்டினத்தின் சுற்று அகழிக்கு கிழக்கே இவ்வாலயத்தின் இடிபாடுகள் காணப்படுகின்றன.

சோழர் காலத்தில் சிறப்புற்று விளங்கி வந்த இவ்வாலயத்தின் இடிபாடுகள் 1962 ல் அடர்ந்த காடுகளுக்கு மத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியில் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்வாலய இடிபாடுகளுக் கிடையேயும் சில சிவாலயச் சின்னங்கள் கண்டெடுக்கப் பட்டன. இதன் மூலம் இது ஓர் சிவனுக்குரிய ஆலயம் என அடையாளம் காணப்பட்டது.



**பதவியா சிவாலயங்கள் உள்ள இடத்தில் சிதைந்த நிலையில் காணப்படும் புராதன தீர்த்தக் கிணறு**

## 54.தெய்யன்னேகந்த இந்துக் கோயில்- பதவியா

பதவிய குளத்தின் அணைக்கட்டில் அமைந்துள்ள பிள் ளையார் கோயிலுக்கு அருகில் ஓர் மலைக்குன்று காணப் படுகின்றது. இது தெய்யன்னேகந்த என அழைக்கப்படுகி றது. தெய்யன்னேகந்த என்பது தெய்வத்தின் மலை அல் லது தெய்வமலை என்பதன் திரிபாகும். பண்டைய கால த்தில் இம்மலை உச்சியில் ஓர் இந்துதெய்வத்தின் கோயில் அமைந்திருந்தது எனலாம். எனினும் மலையில் இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வம் எது என்பது தெரியவில்லை.இதன் காரணமாக இம்மலை தெய்வமலை எனப் பெயர் பெற்றுள்ளது.



தெய்யன்னேகந்த எனும் தெய்வமலை குன்று



தெய்வமலை உச்சியில் உள்ள நீர்ச்சுனை

180அடி உயரமான இம்மலை உச்சியில் ஓர் கோயில் இருந்தமைக்கான சான்றுகளும் தெரிகின்றன. மலை உச்சி யில் ஓர் நீர்ச்சுனையும், அதன் அருகில் கோயில் அல்லது ஓர் கட்டிடம் இருந்தமைக்கான அடையாளமாக தூண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்தப் பயன்படும் சிறிய சதுரக்குழிகள் சிலவும் காணப் படுகின்றன. தெய்வமலை உச்சியில் இருந்து பதவியா குளத்தின் அழகிய தோற்றத்தைக் காணலாம்.



**மலை உச்சியிலிருந்து பதவியா குளத்தின் தோற்றம்**

## 55.சிவன் கோயில்-புத்தனேஹெல, பதவியா

பதவியாக் குளத்தின் வடகிழக்கில் அமைந்துள்ள புரா தன நகரமான ஐம்பொழில்பட்டினம் எனும் தற்போ தைய மொறகொடவிலிருந்து சுமார் 6 கி.மீ. தொலைவில் புத்தனேஹெல மலைக்குகைகள் காணப்படுகின்றன. இங்கு புராதன கட்டிட அழிபாடுகளைக் காணக்கூடியதாக உள் ளது. இம்மலைக் குகைகளில் ஐந்து குகைகள் வரலாற்று முக்கியத்துவம் பெற்றவையாக உள்ளன. இங்கு பல தொல் பொருட் சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டன.

**சிவலிங்கமும், பிள்ளையார் சிலையும்**

இக்குகைகளில் ஒன்று இந்துக் கோயிலொன்றாக இரு ந்தமைக்கான அடையாளச் சின்னங்கள் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைந்த நிலையில் ஓர் சிவலிங்கமும், பிள்ளையார் சிலையும் இங்கு காணப்படுகின்றன. மிகப் புராதன காலத்தில் பௌத்த பிக்குகள் வாழ்ந்துவந்த பின் கைவிடப்பட்ட இக்குகையை பொ.ஆ.11ஆம், 12ஆம் நூற்றாண்டில் இப் பகுதியில் வாழ்ந்த இந்துக்கள் தங்கள் வழிபாட்டுத் தல மாக மாற்றியமைத்துள்ளார்கள் எனக் கருத இடமுண்டு. இதன் மூலம் பதவியாவில் மட்டுமல்லாது இங்கிருந்து 6 கி.மீ. தொலைவிலுள்ள புத்தனேஹெலவிலும் இந்துக்கள் வாழ்ந்துள்ளமை தெரியவருகிறது.



**புத்தனேஹெல மலைக்குகை**

## 56.உத்தம சோழ ஈஸ்வரம்-ஆத்தகட, கெப்பிட்டிகொல்லாவ

அனுராதபுர மாவட்டத்தில் கடவத் கோரளையில், மதவாச்சியிலிருந்து கெப்பிட்டிகொல்லாவைக்கு செல்லும் வீதியில் 14 கி.மீ தொலைவில் ஆத்தகட எனும் புராதன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரம் அமைந்துள்ளது. சோழர்களால் அமைக்கப்பட்ட வணிக நகரமான பதவியாவின் தென்மேற்கில் கெப்பிட்டிகொல்லாவ ஊடாக மதவாச்சி செல்லும் வீதியில் 40 கி.மீ தொலைவில் ஆத்தகட அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சோழர் காலத்தில் இலங்கையின் வடமத்திய, வடக்கு, கிழக்குப் பகுதிகளில் அமைக்கப்பட்ட வணிக நகரங்களில் ஒன்றாக ஆத்தகடவும் விளங்கியுள்ளது. இங்கு சோழர் காலத்தில் இருந்த சிவாலயம் பற்றிய தமிழ்க் கல்வெட்டு ஒன்று கிடைத்துள்ளது.

**சோழர் கல்வெட்டில் உத்தம சோழ ஈஸ்வரம்**

பொ.ஆ.11ஆம் நூற்றாண்டில் பொலநறுவையை தலைநகராகக் கொண்டு இலங்கையை ஆட்சி செய்த சோழர் காலத்தில் அவர்களால் அமைக்கப்பட்ட ஓர் நகரமே ஆத்தகட என்பதாகும். இந்நகரத்தில் தமிழ்ப் பிரதானிகளால் "உத்தம சோழ ஈஸ்வரம்" என்ற சிவாலயம் அமைக்கப்பட்டுள்ளது. உத்தம சோழன் என்பது இராஜராஜ சோழனுக்கு முன்பு அரசனாயிருந்த சோழனின் பெயராகும். மேலும் இராஜராஜ சோழனின் விருதுப் பெயர்களில் ஒன்றாகவும் இப்பெயர் உள்ளது. எனவே உத்தம சோழன் எனும் அரசனின் நினைவாக இக்கோயில் கட்டப்பட்டிருக்கலாம்.



**ஆத்தகட தமிழ் கல்வெட்டு**
**(நன்றி-இலங்கை தமிழ்ச் சாசனங்கள்-பேராசிரியர் சி.பத்மநாதன்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தம சோழ ஈஸ்வரம் எனும் சிவாலயத்திற்கு அரங்கன் இராமேசன் என்பவன் மூன்று வேலி நிலமும், நந்தா விளக்கொன்றினை எரிப்பதற்கு 20 பசுக்களையும், 5 சந்தி விளக்கெரிப்பதற்கு 50 தென்னை மரங்களையும் தானம் செய்தது பற்றியா செய்தி இக்கல்வெட்டில் பொறிக்கப் பட்டுள்ளது. இது ஓர் தமிழ்க் கல்வெட்டாகும்.

## முற்றாக அழிந்து போன சிவாலயம்

இக்கல்வெட்டின் மூலம் சோழர் காலத்தில் சிறப்புடன் விளங்கிய சிவாலயம் ஒன்று ஆத்தகடவில் அமைந்திருந்து பின்பு இருந்த இடம் கூட தெரியாமல் அழிந்து போனமை தெரியவந்துள்ளது.இக்கல்வெட்டு ஆத்தகடவில் உள்ள பௌத்த விஹாரையின் வாயில் பகுதியில் ஏழு துண்டு களாகக் காணப்படுகின்றது. ஆனால் இக்கல் வெட்டு சிவாலயம் அமைந்திருந்த இடத்திலிருந்து கண் டெடுக்கப்பட்டிருக்கலாம். மேலும் இப்பகுதியில் சரியான முறையில் அகழ்வுகள் மேற்கொள்ளப்படுமானால் உத்தம சோழ ஈஸ்வரம் பற்றிய விரிவான தகவல்களையும்,சோழர் காலத்திற்குரிய விக்கிரகங்களையும் பெற வாய்ப்புண்டு. இக்கல்வெட்டை வாசித்த கலாநிதி கிருஷ்ண சாஸ்திரி தென்னிந்திய சாசனங்கள் எனும் நூலில் இதன் விபரங் களை வெளியிட்டுள்ளார்.1971ல் ஆ.வேலுப்பிள்ளை இதன் விபரங்களை வெளியிட்டார்.

## கோயிலுக்கு தானமாக வழங்கப்பட்ட 13.5 ஏக்கர் நிலம்

மேலும் இக்கல்வெட்டில் அரசனின் பெயர் குறிப்பி டப்படவில்லை. ஆனால் யாரோ ஓர் அரசனின் 28 வது ஆண்டில் என்பது மட்டும் பொறிக்கப்பட்டுள்ளது. இதில் எழுதப்பட்ட தமிழ்எழுத்து வடிவங்களை ஆராயும் போது இவ்வெழுத்துக்கள் பொ.ஆ.11ஆம், 12ஆம் நூற்றாண்டுக்கு ரியவை என்பது உறுதியாகிறது. இதில் குறிப்பிடப்பட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுள்ள "ஒரு வேலி நிலம்" என்பது 4.48 ஏக்கர் நிலப் பரப்பைக் கொண்டதாகும். மொத்தமாக 13.5ஏக்கர் நிலம் கோயிலுக்கு தானமாக வழங்கப்பட்டுள்ளது. இத்தனை பெரிய தானம் செய்யுமளவிற்கு இக்கோயில் சிறப்புற்றிரு ந்ததால் நிச்சயமாக இது ஓர் பெரிய சிவாலயமாக இருந் திருக்கலாம் என ஊகித்துக் கொள்ளலாம்.

## 57.விஷ்ணு கோயில்-ஆத்தகட, கெப்பிட்டிகொல்லாவ

அனுராதபுரம் மாவட்டத்தில் உள்ள ஆத்தகடவில் ஓர் விஷ்ணு கோயிலும் அமைந்திருந்தமை கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இங்கு உத்தம சோழ ஈஸ்வரம் எனும் சிவால யம் இருந்தது பற்றி சோழர் காலக் கல்வெட்டு மூலம் அறியப்பட்டுள்ளது.




**ஆத்தகட சந்தி, குளம் ஆகியவற்றைக் காட்டும் படம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விஷ்ணு கோயிலின் இடிபாடுகள்**

*1890*ஆம் ஆண்டு ஆய்வாளர் *H.C.P.* பெல் அவர்கள் இங்கு ஓர் விஷ்ணு கோயிலின் இடிபாடுகளைக் கண்டு பிடித்துள்ளார்.இக்கோயில் பற்றி அதே ஆண்டில் ஒக்டோபர்-டிசெம்பர் மாதத்திற்குரிய இலங்கைத் தொல்பொருள் திணைக்களத்தின் ஆண்டறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளார். இதுவும் சோழர் காலமான பொ.ஆ *11*ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்ட ஆலயமாக இருக்க வேண்டும்.

**சோழர் காலத்தில் சிறப்புற்று விளங்கிய ஆலயம்**

ஆத்தகட சோழர் காலத்தில் சிறப்புற்று விளங்கிய வணிக நகரங்களில் ஒன்றாகும். இது பல இந்துக் கோயில்கள் அமைந்திருந்த ஓர் நகரமாக விளங்கியுள்ளது. தமிழ் வணிகர்களால் பராமரிக்கப்பட்டு உன்னத நிலையுடன் விளங்கிய இவ்வாலயங்கள் எதுவும் தற்போது ஆத்தகடவில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# 58.பரமேஸ்வரி அம்மன் கோயில்-வாஹல்கட

திருகோணமலையிலிருந்து அனுராதபுரம் செல்லும் வீதியில் உள்ள ஹொரவப்பொத்தான சந்தியிலிருந்து வடக்கே செல்லும் வீதியில் சுமார் 30 கி.மீ. தொலைவில் வாஹல்கட அமைந்துள்ளது. மேலும் வவுனியாவிலிருந்து திருகோணமலை செல்லும் வீதியில் கெப்பிட்டிகொல்லாவ சந்தியிலிருந்து பதவியா, புல்மோட்டை செல்லும் வீதியில் ஹொரத் ஹம்மில்லாவ சந்தியின் கிழக்கு நோக்கிச் செல்லும் வீதியினூடாக சுமார் 7 கி.மீ. தூரம் பயணம் செய்தும் வாஹல்கட என்னுமிடத்தை அடையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோழர் கால வணிக நகரம் வாஹல்கட

பொ.ஆ.11ஆம் நூற்றாண்டில் இலங்கையை ஆட்சி செய்த சோழர் காலத்தில் இலங்கையிலிருந்த வணிக நகரங்களில் ஒன்றாக வாஹல்கட விளங்கியுள்ளது. சோழர் காலத்தில் பொலநறுவை அவர்களின் தலைநகராக விளங்கியது. அப்போது தலைநகரல்லாத வணிக நகரங்களில் முதன்மையானதாக பதவியா நகரம் இடம் பெற்றிருந்தது. பதவியா நகரின் தெற்குப் பகுதியில் சில மைல் தூரத்திலுள்ள வாஹல்கட குளத்தின் அருகே புராதன கால வாஹல்கட வணிக நகரம் அமைந்திருந்தது.



**வாஹல்கட தமிழ்க் கல்வெட்டு**
**(நன்றி-இலங்கை தமிழ் சாசனங்கள்-பேராசிரியர் சி.பத்மநாதன்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது சோழர் காலத்தில் நானாதேசிக வீரபட்டினம் என அழைக்கப்பட்டது. இதற்கு முன்பு இதன் பண்டைய பெயர் "கட்டனேரி" என்பதாகும். இங்கு சோழர் கால த்தில் தென்னிந்திய நானாதேசிகர் எனப்படும் வணிகர் குடியினர் வாழ்ந்துள்ளனர். இவர்களின் குலதெய்வமான பரமேஸ்வரி அம்மனுக்கு தாம் வாழ்ந்த இடங்களில் ஆல யம் அமைத்து வழிபட்டுள்ளனர். அதன்படி வாஹல்கட என்னும் நானாதேசிக வீரபட்டினத்திலும் இவர்களால் பரமேஸ்வரி அம்மனுக்கு ஆலயம் அமைக்கப்பட்டிருந்தது.

### சோழர் கால கல்வெட்டு

இங்கு கிடைக்கப்பட்ட கல்வெட்டொன்றின் மூலம் இங்கு நானாதேசிக வணிகர் வாழ்ந்தது பற்றியும், பரமே ஸ்வரி அம்மனை வணங்கியது பற்றியும் செய்திகளை அறியக் கூடியதாக உள்ளது.

தமிழும் கிரந்தமும் கலந்து எழுதப்பட்ட இக்கல் வெட்டு பொ.ஆ.*11*ஆம், *12*ஆம் நூற்றாண்டுக்குரியதென அடையாளம் காணப்பட்டுள்ளது. இங்கிருந்த கோயில் சோழர் ஆட்சியின் பின்பு பராமரிப்பின்றி அழிந்து போயி ருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

## 59.இந்துக் கோயில்-மஹாகணத்தராவ

அனுராதபுரம்-திருகோணமலை வீதியில் *16*கி.மீ தூரத் திலும், மிகுந்தலையிலிருந்து *3* கி.மீ. தொலைவிலும் மகா கணத்தராவ அமைந்துள்ளது. வடக்கு நோக்கி பரந்து கிட க்கும் மகாகணத்தராவ குளத்தின் அருகில் அமைந்திருக்கும் இக்கிராமம் பொலநறுவை காலத்தில் சைவக்கோயில் அமைந்திருந்த தலமாக விளங்கியுள்ளது. இங்கு சிதைந்த நிலையில் காணப்படும் இடிபாடுகளுக்கு இடையில் இந்துக் கோயிலின் சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டதைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து, இவற்றைக் கொண்டிருந்த இந்து ஆலயம் ஒன்று பொ.ஆ.11ஆம், 12ஆம் நூற்றாண்டுகளில் இப்பகுதியில் அமைந்திருந்தது எனக் கருத வேண்டியுள்ளது.

**சாமுண்டியின் புடைப்புச் சிற்பமும், சப்த தேவதைகளின் சிலைகளும்**

இங்கு சாமுண்டியின் புடைப்புச் சிற்பமொன்றும்,சப்த தேவதைகளின் உருவங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஒரு காலத்தில் இத்திருவுருவங்களுக்குச் சொந்தமாக இருந்த ஆலயம் இன்று முற்றாக அழிந்து போய் விட்டது. இத் திருவுருவங்கள் தற்போது அனுராதபுரம் தொல்பொருள் காட்சிச்சாலையில் வைக்கப்பட்டுள்ளன.



**மகாகணத்தராவ குளம்**

பொலநறுவையில் சோழர் ஆட்சி செய்து வந்த காலத்தில் இலங்கையின் பெரும்பாலான பகுதிகளில் இந்துக் கோயில்கள் கட்டப்பட்டன.தென்னிந்தியாவிலிருந்து சோழர்களால் வரவழைக்கப்பட்ட வணிகர் குழுக்களே இவ்வால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யங்களை அமைப்பதில் பெரும்பங்கு வகித்தனர். குறிப்பாக இலங்கையின் வடக்கு, கிழக்கு, வடமத்திய பகுதிகளில் ஏராளமான கோயில்கள் கட்டப்பட்டன. இப்பகுதிகளில் நிலைகொண்டு வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த வணிகக்குழுக்கள் தமது வழிபாட்டுத் தேவைகளுக்காகக் கோயில்களை அமைத்தனர். அப்படி உருவான வர்த்தக நகரங்களில் ஒன்றாகவே மஹாகணத்தராவையும் இருந்திருக்க வேண்டும். அவர்களால் பூஜிக்கப்பட்ட ஆலயத்திற்குரிய சின்னங்களே தற்போது கண்டெடுக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதில் ஐயமில்லை. சோழர் காலத்தின் பின்பு கைவிடப்பட்ட நிலையில் முற்றாக அழிந்து போன ஆலயங்களில் இதுவும் ஒன்றாக இருக்கிறது.



**மகாகணத்தராவ குளக்கட்டில் கண்டெடுக்கப்பட்ட நாகசிற்பம்**

மஹாகணத்தராவ அனுராதபுரத்திற்கும், கந்தளாய்க்கும் இடையில் அமைந்துள்ளது. கந்தளாய் சோழர் காலத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்த நகரங்களில் ஒன்றாகும். மஹாகணத்தராவைக்கு வடக்கில் சோழர் காலத்தில் வணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர் தங்கியிருந்த பல இடங்கள் உள்ளன. ஆத்தகட, வெஹெரகல, வாகல்கட, பதவியா போன்றவை இவற்றில் குறிப்பிடத்தக்கவை. ஒரு காலத்தில் சிறப்புற்று விளங்கி யிருந்த இவ்வாலயம் சிவாலயமாகவோ, அல்லது அம்மன் ஆலயமாகவோ இருந்திருக்க வேண்டுமென்பது உறுதி.

மகாகணத்தராவையில் அமைந்துள்ள குளம் அனுராத புர காலத்தில் இலங்கையை ஆட்சி செய்த மகாசேனன் எனும் மன்னனால் பொ.ஆ **274-301** காலப்பகுதியில் கட் டப்பட்டதாகும். இக்குளத்தின் அணைக்கட்டில் பழமை வாய்ந்த நாகசிற்பம் ஒன்று கண்டெடுக்கப்பட்டது. அச் சிற்பம் குளத்தின் நீர் வெளியேறும் துருசுவின் அருகில் அணைக்கட்டில் இன்றும் காணப்படுகிறது.

## 60.சிவன் கோயில்-வேரகல

தம்புள்ளையிலிருந்து திருகோணமலைக்கு செல்லும் வீதியில் உள்ள ஹபரன சந்தியிலிருந்து மேற்கு நோக்கி மரதங்கடவல செல்லும் வீதியில் 8 கி.மீ தூரத்தில் உள்ள பளுகஸ்வெவ சந்தியிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் வீதியில் சுமார் 5 கி.மீ தொலைவில் வேரகல அமைந்து ள்ளது.

### வேரகலவில் அர்த்த நாரீஸ்வரரின் விக்கிரகம்

பண்டைய காலத்தில் இப்பகுதியில் அமைக்கப்பட்டி ருந்த சைவ ஆலயம் சம்பந்தமான சின்னமொன்று இங்கு கிடைத்துள்ளது. இது ஓர் அர்த்த நாரீஸ்வரரின் விக்கிரக மாகும். இது பொ.ஆ. 6ஆம் நூற்றாண்டிற்குரிய சிலை யாகும். ஒரு அடி உயரமான இவ்விக்கிரகம் வெண்கலத் தில் செய்யப்பட்டுள்ளது. வேறு எங்கும் காணக் கிடைக் காத அபூர்வமான வகையில் இச்சிலை வடிவமைக்கப்பட் டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**வேரகலவில் கிடைக்கபெற்ற அர்த்த நாரீஸ்வரர் வெண்கலச் சிலை**

சாதாரணமாக அர்த்த நாரீஸ்வரர் சிலையில் ஒரு பாதி சிவனின் உருவமும், மறுபாதி பார்வதியின் உருவமும் அமைக்கப்பட்டிருக்கும். ஆனால் இச்சிலையின் முன் பக்க மும், பின் பக்கமும் இரண்டு முழுமையான உருவங்கள் வடிக்கப்பட்டுள்ளன. முன் பக்கம் சிவனின் உருவமும், பின் பக்கம் பார்வதியின் உருவமும் வடிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சிலை தற்போது கொழும்பு தேசிய நூதனசாலையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் வேரகலவில் ஒரு காலத்தில் இந்து ஆலயங்கள் கட்டப்பட்டிருக்க வேண்டும் என நம்பப்படுகிறது. தற்போது கிடைக்கப்பெற்ற விக்கிரகம் இருந்த கோயில் முற்றாக அழிந்து போயுள்ளது. மிகவும் சிறந்த முறையில் உள்ள இவ்விக்கிரகம் இருந்த கோயில் சோழர் காலத்தில் சிறப்புடன் பூஜிக்கப்பட்டிருக்க வேண்டும். சோழர் காலத்தில் பல இந்துக் கோயில்களைக் கட்ட உதவி புரிந்த தென்னிந்திய வணிகர்களால் இக்கோயிலும் கட்டப்பட்டிருக்க வேண்டும். இவ்வாலயம் பற்றிய வேறு எதுவித கல்வெட்டாதாரங்கள் கிடைக்காத நிலையில் மேலும் எந்த தகவல்களும் இதுவரை தெரியவில்லை. அர்த்த நாரீஸ்வரர் விக்கிரகம் கிடைத்த இடத்தில் அகழ்வாராய்ச்சிகள் மேற்கொண்டால் மேலும் பல ஆலயச் சின்னங்களைப் பெறக்கூடியதாக இருக்கும். இவ்வாலயம் ஓர் சிவாலயமாக இருந்திருக்க வேண்டும் என நம்பப்படுகிறது. சோழர் காலத்தில் பல இடங்களில் சிவாலயங்கள் கட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 61.வைரவர் கோயில்-விஜித்தபுர, கலாவெவ

தம்புள்ள-அனுராதபுரம் வீதியில் 21 கி.மீ.தொலைவில் கெக்கிராவ அமைந்துள்ளது. இங்கிருந்து மேற்கு நோக்கி சென்று, இகலகம சந்தியிலிருந்து மீண்டும் தெற்கு நோக்கி ஹம்மில்லாவ, ஆண்டியகல ஊடாக கலேவெல செல்லும் வீதியில், கெக்கிராவையிலிருந்து சுமார் 9 கி.மீ. தூரத்தில் விஜித்தபுர அமைந்துள்ளது. இதன் முன்பக்கம் கலாவெவ குளம் அமைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழ் மன்னன் எல்லாளனின் முக்கிய கோட்டை**

தமிழர் பாரம்பரியத்தின் புராதன சின்னங்களில் ஒன்றான விஜித்தபுரக் கோட்டை இங்குதான் அமைந்திருந்தது. பொ.ஆ.மு.145-101 வரையான காலப்பகுதியில் இலங்கை முழுவதையும் ஆட்சி செய்த எல்லாள மன்னனின் கோட்டைகளில் மிக முக்கிய கோட்டையாக விஜித்தபுரக் கோட்டை அமைந்திருந்தது.



**எல்லாள மன்னனின் கோட்டையின் பிரதான வாயில்-**
**இரு மலைகளுக்கிடையில் அமைந்திருந்த இடம்**

மகாவம்சத்தில் இக்கோட்டை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.எல்லாள மன்னனின் 32 கோட்டைகளில் 32 வது கோட்டையே விஜித்தபுர கோட்டையாகும். ரோகனையிலிருந்து படைதிரட்டி வந்த துட்டகைமுனுவின் படைகள் 31 கோட்டைளைக் கைப்பற்றிய பின், விஜித்தபுரத்துக்கு வந்து 4 மாதங்கள் போராடிய பின்பே இக்கோட்டையைக் கைப்பற்றி, பின்பு அனுராதபுரம் சென்றதாக மகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம்சம் கூறுகிறது. எல்லாள மன்னனின் மிகப்பலம் வாய்ந்த இக்கோட்டையின் பிரதான வாயில் இரு மலைகளுக்கிடையில் அமைந்திருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. இம்மலைகளுடன் சேர்த்து பலம் வாய்ந்த சுவர்கள் எழுப்பப்பட்டு இங்கு கோட்டை அமைக்கப்பட்டிருந்தது. இக்கோட்டையை துட்டகாமினியின் படைகள் முற்றுகையிட்ட போதுதான் எல்லாளன் இந்தியாவிற்கு ஓலை அனுப்பி தன் மருமகனான பாலுகனுக்கு யுத்தம் பற்றிய செய்தியைத் தெரிவித்தான்.



**வைரவர் சிற்பம் கிடைக்கப்பெற்ற கட்டிட இடிபாடு**

தமிழ் மன்னன் எல்லாளனின் கோட்டை அமைந்திருந்த இடத்தில் தற்போது விஜித்தபுர ரஜமகா விஹாரை அமைக்கப்பட்டுள்ளது. துட்டகைமுனு எல்லாள மன்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னின் படைகளை வென்றதன் நினைவாக இவ்விகாரையை கட்டினான் எனக் கூறப்படுகின்றது.

**விஜித்தபுர ரஜமகாவிஹாரையில் வைரவர் சிற்பம்**

இங்கு புராதன தமிழர், சைவ பாரம்பரிய எச்சங்கள் சில இன்றும் இங்கு காணப்படுகின்றன. இங்குள்ள விஹாரையில் காணப்படும் வைரவர் சிற்பம் இவற்றில் ஒன்றாகும். பௌத்த விஹாரைகள் எதிலும் காணக் கிடைக்காத இச்சிற்பம் எல்லாள மன்னன் காலத்தில் இங்கிருந்த வழிபாட்டுத் தலமொன்றின் சின்னமாக இருக்கலாம் என நம்பப்படுகிறது. மிகத்தொன்மை வாய்ந்த உருவ அமைப்பைக் கொண்ட இந்த சிற்பம் ஓர் முனிவரின் சிற்பம் எனவும் கூறப்படுகின்றது.



**வைரவர் அல்லது முனிவரின் சிற்பம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பண்டைய விஷ்ணு கோயில்

விஜித்தபுர ரஜமஹாவிகாரையில் ஓர் பழமை வாய்ந்த விஷ்ணு கோயிலும் காணப்படுகிறது. இது "புராண ஸ்ரீ விஷ்ணு தேவாலய" என அழைக்கப்படுகிறது. இருப்பினும் இதன் காலம் என்னவென்று சரியாகத் தெரியவில்லை. விஷ்ணு கோயிலின் வாசல்படிக்கல், கைப்பிடி வரிசை மற்றும் கோயிலின் முன்பக்கம் காணப்படும் இரண்டு கற்தூண்கள் போன்றவை இதன் தொன்மையைக் காட்டு கின்றன. இவற்றைத் தவிர விகாரை வளவில் சிதைந்த சில நாக சிற்பங்களும் காணப்படுகின்றன.



**பண்டைய விஷ்ணு கோயிலின் இன்றைய தோற்றம்**

### வாளைத் தீட்டிய கல்

துட்டகைமுனு எல்லாளனின் படைகளை வெட்டி வீழ்த்திய வாளைத் தீட்டி கூர்மைப் படுத்திய கருங்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றும் இங்கிருக்கும் விஹாரையில் காணப்படுகிறது. இது "கட்டுகே கல" என அழைக்கப்படுகிறது.



**வாள் சாணை பிடித்த கல்**



**பழமை வாய்ந்த நாக சிற்பத்தின் உடைந்த துண்டுகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 62.கந்தசுவாமி கோயில்-ஹூருள்ளுவெவ

ஹபரன சந்தியிலிருந்து அனுராதபுரத்திற்கு செல்லும் வீதியில் சுமார் 20 கி.மீ தூரத்தில் உள்ள கனேவல்பொல என்னுமிடத்திலிருந்து வடக்கு நோக்கி கலென்பிந்துனு வெவ எனும் இடத்திற்குச் செல்லும் வீதியில் சுமார் 20 கி.மீ தூரத்தில் உள்ள யக்கல்ல சந்தியின் கிழக்கில் சுமார் 2 கி.மீ தொலைவில் ஹூருள்ளு வாவி குளம் அமைந்துள்ளது. இக்குளத்தின் அணைக்கட்டில் உள்ள கற்பாறையின் மீது இக்கந்தசுவாமி கோயில் அமைந்துள்ளது. கோயிலின் அருகில் பத்தினியம்மன், விநாயகர், ஐயனார் ஆகிய தெய்வங்களுக்கும் பரிவாரக் கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன.



**ஹூருள்ளு வாவி குளம்**

**தென்னிந்திய பிராமணர்களால் ஸ்தாபிக்கபட்ட ஆலயம்**

பொ.ஆ.3ஆம் நூற்றாண்டில் மகாசேனனால் ஹூருள்ளுவாவி குளம் கட்டப்பட்டது. இக்குளத்தின் தெற்கில் உள்ள ரிடிகல, நுவரகல ஆகிய மலைக் குன்றுகளிலிருந்து உற்பத்தியாகும் யான் ஓயா எனும் ஆறு வடக்கு நோக்கிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாய்ந்து புல்மோட்டைக்கும், திரியாய்க்கும் இடையில் உள்ள கல்லாறு எனும் குடாவில் சங்கமமாகிறது.

2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலிருந்து தென் இந்தியாவிலிருந்து வரும் பிராமணர்கள் கல்லாறு குடா வில் புகுந்து யான் ஓயாவில் படகின் மூலமாக பயணம் செய்து இப்பகுதிக்கு வருவது வழக்கமாகவிருந்தது. இவர்க ளால் பொ.ஆ. 2ஆம் நூற்றாண்டிற்கு முன்பு இக்கந்த சுவாமிக் கோயில் ஸ்தாபிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இக்கோயில் அமைக்கப்பட்டதன் பின்பே ஹூருள்ளு வாவி அமைக்கப்பட்டதாகவும் வரலாறு கூறுகிறது.

## முருகப் பெருமானின் தங்க விக்கிரகம்

இப்பகுதியில் ஹூருள்ளு வாவி அமைக்கப்படுவதற்கு முன்பு யான் ஓயாவின் அருகில் மலைப் பாறையுடன் ஓர் சிறிய தீவு காணப்பட்டது. இப்பாறையில் ஓர் பெரிய விருட்சமும் வளர்ந்திருந்தது. தென்னிந்தியாவிலிருந்து கதிர் காமத்திற்கு யாத்திரை செல்ல, தங்கத்தினால் ஆன முரு கன் சிலையுடன் வந்த பிராமணர்கள் சிலர் யான் ஓயா வழியாக இப்பகுதிக்கு வந்து சேர்ந்தனர்.



**ஹூருள்ளுவாவி கந்தசுவாமி கோயிலின் இன்றைய தோற்றம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது கோவக்குளம் என அழைக்கப்படும் இப்பகுதியில் இருந்த சிறிய தீவில் கற்பாறையின் அருகில் இருந்த மரத்தின் கீழே இத்தங்க விக்கிரகத்தை வைத்து விட்டு இரவுப்பொழுதை அவ்விடத்தில் கழித்தனர்.காலையில் எழுந்து கதிர்காமத்திற்கு செல்ல ஆயத்தமாகி தாம் கொண்டு வந்த முருகன் சிலையை எடுக்க முற்பட்ட போது அது அவ்விடத்தை விட்டு அசையவில்லை. முருகப்பெருமான் இவ்விடத்திலேயே குடிகொள்ள விரும்பியதை அறிந்த பிராமணர்கள் அவ்விக்கிரகத்திற்கு உரிய பூஜைகள் செய்துவிட்டு தமது பயணத்தைத் தொடர்ந்தனர்.

அப்போது இப்பகுதி பன்றிகள் பல நிறைந்து காணப்படும் இடமாக இருந்தது. பன்றிகளை வேட்டையாட இப்பகுதிக்கு வந்த இயக்கர் குல ஆதிவாசிகள் சிலர் மரத்தின் அடியில் தங்கச் சிலை இருப்பதைக் கண்டு அங்கு சிறிய ஆலயம் ஒன்றை அமைத்து வழிபட்டு வந்தனர். இங்கு முருகன் விக்கிரகத்துடன் வள்ளி, தெய்வானை, ஈஸ்வரன், பிள்ளையார் ஆகியோரின் சிலைகளும் இருந்ததாக வரலாற்று நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**சல்லுரவாவி எனும் கோவிற்குளம்**

பொ.ஆ.3ஆம் நூற்றாண்டில் இப்பகுதி ஹூருள்ளு வாவி என அழைக்கப்பட்டது. இக்குளம் அமைக்கப்பட்ட பின்பு இப்பகுதியில் இருந்த பன்றிகள் குளத்தில் நீந்தி வருவதால் இது சல்லுரவாவி என அழைக்கப்பட்டது. பின்பு இது ஹூருள்ளு வாவி என மாற்றம் பெற்றது. அதே சமயம் குளம் அமைக்கப்பட்ட பின்பு முருகன் ஆலயம் இருந்த பகுதி கோவிற்குளம் எனப் பெயர் பெற்றது. காலப்போக்கில் இது திரிபடைந்து தற்போது கோவக்குளம் என அழைக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தங்க விக்கிரகம் களவு

பண்டைய காலத்திலிருந்து இப்பகுதியில் வாழ்ந்து வந்த இந்துக்களாலும், பௌத்த மக்களாலும் இவ்வாலயம் நன்கு பேணப்பட்டு வந்ததாக அறியப்படுகிறது. குளம் நீரினால் நிரம்பிக் காணப்படும் காலங்களில் ஆலயம் அமைந்திருக்கும் இத்தீவு நீரினால் சூழப்பட்டு பாரிய விருட்சம் உள்ள இடம் மட்டும் வெளியே தெரியுமாம். அப்போது இக்கோயிலுக்கு நேர்த்திக்கடன் மற்றும் பூஜை கள் செய்வோர் கட்டுமரம் கட்டி இத் தீவுக்குச் சென்று தமது பூஜைகளைச் செய்து வருவர். ஒரு தடவை இத்தீவு முற்றுமுழுதாக நீரில் மூழ்கி விட்ட நிலையில் விருட்சம் மாத்திரம் தென்பட்ட காலத்தில் கள்வர்களால் இங்கிருந்த தங்கமுருகன் விக்கிரகம் களவாடிச் செல்லப்பட்டது.பின்பு இப்பகுதி மக்கள் தங்க முலாம் பூசப்பட்ட முருகன் சிலை யொன்றைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தனர்.



**பரிவாரக் கோயில்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கடி இவ்வாலயம் நீரில் மூழ்குவதால் குளத்தின் அணைக்கட்டின் கிழக்குப் பக்கத்தில் இருக்கும் மலைக் குன்றின் மீது ஆலயம் அமைத்து வழிபட்டு வந்தனர். அணைக்கட்டிலிருந்து படிகாரமடு எனும் இடத்திற்கு பாதை அமைக்கப்பட்டுள்ளது. குளத்தில் நிரம்பும் மேல திக நீர் வெளியேறும் இடத்திலிருந்து சுமார் 50 யார் தூரத்தில் ஆலயம் அமைந்துள்ளது.

**இரண்டாம் இராஜசிங்கன் காலத்தில் அமைக்கப்பட்ட ஐயனார்,பிள்ளையார்,பத்தினியம்மன், பரிவார ஆலயங்கள்**

இரண்டாம் இராஜசிங்கன் காலத்தில் (பொ.ஆ 1627-1679)இங்கு மேலும் மூன்று பரிவாரக் கோயில்கள் அமை க்கப்பட்டன. இக்கோயில்கள் ஐயனார், பிள்ளையார், பத்தினியம்மன் ஆகிய தெய்வங்களுக்காக அமைக்கப் பட்டன. இவற்றில் ஐயனார், பிள்ளையார் ஆகிய இரு தெய்வங்களும் மிகவும் சக்தி வாய்ந்தவையாக இப்பகுதி மக்களால் நம்பப்படுகிறது.தற்போது இவ்வாலயம் பௌத்த மக்களால் நன்கு பரிபாலிக்கப்பட்டு வருவது குறிப்பிடத் தக்கது. தற்போது அமைக்கப்பட்டிருக்கும் ஆலய வாசலின் மேலே முருகன் உருவம் காணப்படுகிறது. இதன் முன்பாக உள்ள படிக்கட்டில் ஒர் பன்றி உருவமும் அமைக்கப் பட்டுள்ளது.

இவ்வாலயம் பற்றி ஆய்வாளர் எச்.சி.பி.பெல் 1893 ஆம் ஆண்டு தான் வெளியிட்ட ஆய்வு அறிக்கையில் குறி ப்பிட்டுள்ளார். வள்ளி தெய்வானையுடனான கார்த்திகே யன் சிலையும், விநாயகர் சிலையும் இவ்வாலயத்தில் காணப்படுவதாகவும், கதிர்காம சுவாமிக்கும், பத்தினி அம் மனுக்கும் இங்கு சந்நிதிகள் உள்ளதாகவும் அவர் குறிப் பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 63.இந்துக் கோயில்-பறங்கியாவாடி, ஹொரவப்பொத்தானை

திருகோணமலை - அனுராதபுரம் வீதியில் உள்ள ஹொரவப்பொத்தானையின் தெற்குப் பக்கமாக கந்தளாய்க்கு செல்லும் வீதியில் திரப்பன்கடவல, ரத்மலை குளம், பிராமணவேவ குளம் ஆகிய இடங்களை அடுத்து சுமார் 10 கி.மீ தொலைவில் பறங்கியாவாடி அமைந்துள்ளது. பொ.ஆ 11ஆம் நூற்றாண்டில் சோழர் காலத்தில் சிறப்புற்று விளங்கிய நகரங்களில் இதுவும் ஒன்றாகும்.

இங்கு சோழர் காலத் தமிழ்க் கல்வெட்டு ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. இங்கு காணப்பட்ட ஆலய இடிபாடுகளுக்கிடையில் *H.C.P.*பெல் இக்கல்வெட்டைக் கண்டெடுத்தார். ஓர் கற்றூணில் ஒரு பக்கத்தில் 14 வரிகளில் இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. *H.C.P.*பெல் அவர்கள் இக்கல்வெட்டை பிரதி எடுத்ததோடு புகைப்படமும் எடுத்ததாக 1891ல் தனது ஆண்டறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இங்கு கிடைக்கப்பெற்ற சோழர் கால தமிழ்க் கல்வெட்டின் மூலம் இவ்விடம் தமிழ் வணிகர்களின் நகரம் எனவும், கல்வெட்டு கண்டெடுக்கப்பட்ட ஆலய இடிபாடு ஓர் இந்துக் கோயிலுக்குரியது எனவும் தெரிகிறது. கல்வெட்டு கண்டெடுக்கப்பட்ட ஆலயப் பகுதியில் சரியான முறையில் தொல்லியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டால் இந்துக் கோயிலுக்குரிய மேலும் பல சின்னங்களைப் பெற வாய்ப்புண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 64.இந்துக் கோயில்-சங்கிலி கணத்தராவ, மதவாச்சி

அனுராதபுரத்திலிருந்து வவுனியாவுக்கு செல்லும் வீதியில் உள்ள மதவாச்சியின் தென்கிழக்கில் சுமார் 4 கி.மீ தொலைவில் சங்கிலி கணத்தராவ அமைந்துள்ளது. இங்குள்ள சங்கிலிகணத்தராவ குளத்தின் தென்கரையில் இந்துக் கோயில் இருந்த இடம் அமைந்துள்ளது.

பொ.ஆ 11ஆம் நூற்றாண்டில் சோழர் காலத்தில் இங்கு தமிழர் குடியிருப்புக்கள் இருந்தமைக்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இங்கு சோழர் காலத் தமிழ்க் கல்வெட்டு ஒன்றும் கிடைக்கப் பெற்றுள்ளது. இங்கிருந்த இந்துக்கோயில் ஒன்றிற்கு மானியங்கள் வழங்கியமை பற்றிய செய்தியை இக்கல்வெட்டு கூறுகிறது. இக்கல்வெட்டு செய்தியின் மூலம் இங்கு இந்துக் கோயில் ஒன்று இருந்தமை தெரிய வருகிறது.




**சங்கிலி கணத்தராவ குளத்தின் செயற்கைக்கோள் படம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செம்பினால் வார்க்கப்பட்ட அம்மன் சிலை

இங்கிருந்த கோயில் அம்மனுக்குரியது என யூகிக்கக் கூடியதாக உள்ளது. இக்கோயிலுக்குரியது எனக் கருதப் படும் சிறிய அம்மன் சிலையொன்று இங்கு கண்டெடுக் கப்பட்டது. செம்பினால் வார்க்கப்பட்ட இச்சிலையின் வலது கை உடைந்துள்ளது. 9.4 செ.மீ உயரமுடைய இச் சிலை பொ.ஆ 10ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் வார்க் கப்பட்டுள்ளது. இச்சிலை தற்போது கொழும்பு நூதன சாலையில் வைக்கப்பட்டுள்ளது.



**சங்கிலி கணதராவையில் கண்டெடுக்கப்பட்ட அம்மன் சிலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 65.திவக்கனின் கோயில்-பிராமணகாமம் (திவக்க பமுனுகம)-தந்திரிமலை

அனுராதபுரத்தின் வடக்கில், மல்வத்து ஓயாவின் மேற்குப் புறத்தில் தந்திரிமலை எனும் பண்டைய கிராமம் அமைந்துள்ளது.அனுராதபுரத்திலிருந்து வடமேற்கு நோக்கி சிலாவத்துறைக்கு செல்லும் வீதியில் 18 கி.மீ தூரத்தில் உள்ள ஓயமடு சாந்தியிலிருந்து மேலும் வடக்கு நோக்கி செல்லும் வீதியில் 14 கி.மீ தூரத்தில் தந்திரிமலை அமைந்துள்ளது. மலைக் குன்றுகள் நிறைந்த இப்பகுதியின் மேற்குப் பக்கத்தில் ஜனசஞ்சாரமற்ற காடுகள் நிறைந்த வில்பத்து வனவிலங்கு சரணாலயம் அமைந்துள்ளது.

**2000 வருடங்களுக்கு முற்பட்ட பிராமணர் குடியிருப்பு**

தந்திரிமலை 2000 வருடங்களுக்கு முன்பு ஓர் பிராமணர் குடியிருப்பாக விளங்கியது. இது திவக்கனின் பிராமணகாமம் (திவக்க பமுனுகம) என்ற பெயருடன் அழைக்கப்பட்டுள்ளது. பொ.ஆ.மு. 3 ஆம் நூற்றாண்டிற்கு முன்பு இது இந்துக்கள் குடியிருந்த பகுதிகளில் மிக முக்கியமாக விளங்கியது. பொ.ஆ.மு.247-207 வரை அனுராதபுரத்திலிருந்து ஆட்சி செய்த தேவநம்பியதீசன் பௌத்த மதத்திற்கு மாறுவதற்கு முன்பு அவனது ஆட்சிப் பகுதியின் முக்கிய இடங்களில் ஒன்றாக திவக்கனின் பிராமணகாமம் விளங்கியுள்ளது. திவக்கன் எனும் பிராமணன் தேவநம்பியதீசன் காலத்தில் இருந்த முக்கிய பிரதிநிதிகளில் ஒருவனாகத் திகழ்ந்துள்ளான். இந்து சமய வழிபாடு இங்கு சிறப்புற்று விளங்கியுள்ளது. இதன் காரணமாகவே தேவநம்பிய தீசன் மிகமுக்கிய பொக்கிஷமான போதிமரக்கிளையை இங்கு வைத்திருந்து அதன்பின் இங்கிருந்து ஊர்வலமாகக் அனுராதபுரத்திற்கு கொண்டு சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**தந்திரிமலையில் உள்ள, மகிந்ததேரர் கொண்டு வந்த எட்டு போதிமரக் கிளைகளில் ஒன்று**

## போதி மர நடுகை விழாவுக்கு அழைப்பு

தேவநம்பியதீசன் பெரும் பொக்கிஷமாகக் கருதிய போதிமரக் கிளையை மகிந்ததேரர் கொண்டு வந்த போது அதை பிராமணன் திவக்கனின் கிராமத்து வாசலில் இறக்கி வைத்தான் எனவும், இங்கிருந்து அனுராதபுரம் வரைக்கும் வெள்ளை மணலையும், மலர்களையும் தூவியபடி போதி மரக் கிளையைக் கொண்டு சென்றான் எனவும் மகாவம்சம் கூறுகிறது. அத்துடன் போதிமரநடுகை விழாவுக்கு மிக முக்கிய மூன்று இடங்களிலிருந்து பிரபுக்களை அழைத்திருந்தான். அம்மூவரில் ஒருவன் பிராமணன் திவக்கன் என்பது குறிப்பிடத்தக்கது. மகிந்ததேரர் கொண்டு வந்த எட்டு போதிமரக் கன்றுகளில் ஒன்று பிராமணன் திவக்கனின் கிராமத்தில் நடப்பட்டதாக மகாவம்சம் மேலும் கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிராமணன் திவக்கனின் வீடு அல்லது மடப்பள்ளியின் இடிபாடுகள்

பிராமணன் திவக்கனின் வீடு அல்லது மடப்பள்ளியின் இடிபாடுகள் இன்றும் தந்திரிமலையில் காணப்படுகின்றன. பாறையின் மீது படிகளுடன் கூடிய இந்த மடப்பள்ளியின் உயர்ந்த அத்திவாரம் மட்டும் எஞ்சியுள்ளது. தேவநம்பிய தீசன் காலத்திற்கு முன்பு இந்து வழிபாட்டுத் தலமாகவும், பிராமணர் குடியிருப்பாகவும் இருந்த இந்த இடம் அதன் பின்பு பௌத்த வழிபாட்டுத் தலமாக மாறியது.

## "தங்கத் திருமலை" எனும் தூய தமிழ்ப்பெயர்

பிராமணன் திவக்கனின் பிராமணகம எனும் பெயர் இன்று தந்திரிமலை என அழைக்கப்படுகின்றது. இப்பெயர் வருவதற்கு இரண்டு காரணங்கள் கூறப்படுகின்றன. ஆரம்பத்தில் இது "தங்கத் திருமலை"என்ற தமிழ்ப் பெயரைப் பெற்று விளங்கியது. இதுவே காலப்போக்கில் "தங்திரிமலை"எனத் திரிபுபட்டு பின்பு தந்திரிமலை ஆகிவிட்டது.



**பிராமணன் திவக்கனின் வீடு அல்லது மடப்பள்ளியின் சிதைவுகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித போதி மரக்கிளை ஜம்புகோலபட்டினத்திலிருந்து கொண்டு வரப்பட்டு மன்னனும், மகிந்த தேரரும் இங்கிருந்த மலையில் தங்கிச் சென்ற காரணத்தால் இது புனிதமான இடமானது. இதன் காரணமாக இவ்விடம் பெறுமதிமிக்கதாக விளங்கியதால் "தங்கத்திருமலை" என்ற பெயர் ஏற்பட்டது. இப்பெயர் வர இன்னுமோர் காரணமும் கூறப்படுகிறது. எல்லோரும் தங்கிச் சென்ற புனிதமான மலை என்பதால் தங்கிச் சென்ற புனிதமான மலை எனும் பொருள்பட தங்கத் திருமலை என்ற பெயர் வந்தது எனவும் கூறப்படுகிறது.

### பிராமிக் கல்வெட்டு

தந்திரிமலையில் பொ.ஆ.மு. 3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மூன்று பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இதில் ஒன்று நாகர் சம்பந்தமானது. இங்கு நாகர் வாழ்ந்தது பற்றியும், நாகவழிபாடு நிலவியது பற்றியும் இதன் மூலம் அறியக் கூடியதாக உள்ளது. அடுத்த இரண்டு கல்வெட்டுக்களிலும் சுவாமி சுமணன், சுவாமி தீசன் ஆகிய இரண்டு ரிஷிகளின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

### வரலாற்றுக்கு முற்பட்ட கால சித்திரங்கள்

தந்திரிமலையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த நாகர் வரைந்த சித்திரங்கள் காணப்படுகின்றன. இதில் ஒரு சித்திரத்தில் சூரியனும், மனித உருவங்களும் மாடு, குதிரை ஆகிய மிருகங்கள் மற்றும் பறவைகள்,அம்பு வில்லு போன்றவை வரையப்பட்டுள்ளன. பொ.ஆ.மு. 10,000-7000 ஆண்டுகால வரலாற்றுக்கு முற்பட்ட மனிதன் வாழ்ந்தமை இச்சித்திரங்கள் மூலம் தெரிய வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பல்லவர் கலைப்பாணியில் பௌத்த குடைவரைக் கோயில்**

இங்கு உறங்கிய நிலையில் உள்ள பெரிய புத்தர்சிலையும், அமர்ந்த நிலையிலுள்ள ஒரு புத்தர் சிற்பமும் இயற்கையான பாறையைக் குடைந்து செதுக்கப்பட்டுள்ளன. இவற்றில் அமர்ந்த நிலையில் உள்ள சிற்பம் ஓர் குடைவரைக் கோயிலின் அமைப்பை ஒத்ததாக உள்ளது. இதே போன்ற ஓர் பௌத்த குடைவரைக் கோயில் பொலநறுவை கல்விஹாரையில் காணப்படுகிறது.அது பொலநறுவைக் காலத்தில் அமைக்கப்பட்டது.ஆனால் தந்திரிமலைக் கோயில் அனுராதபுரகாலத்தில் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இலங்கையில் உள்ள மிகப்பழமை வாய்ந்த குடைவரைக் கோயில் இது என்பது குறிப்பிடத்தக்கது. இது பல்லவர் கலைப்பாணியில் அமைக்கப்பட்டுள்ளது.

## 66.ஐயனார் கோயில்-ஆண்டியாகல, தந்திரிமலை

அனுராதபுரத்தில் வடமேற்கில் சுமார் 18 மைல் தொலைவில் ஆண்டியாகல அமைந்துள்ளது. பில்லாவாகல, தந்திரிமலை ஆகிய இடங்களுக்கு அருகில் ஆண்டியாகல உள்ளது. இம்மூன்று இடங்களும் மலைப்பாங்கான கற்பாறைகளைக் கொண்டுள்ள ஓர் பிரதேசமாகும்.

**நாகவழிபாடு சம்பந்தமான பிராமிக் கல்வெட்டு**

ஆண்டியாகலவில் உள்ள கற்குகைகளில் ஒன்றில் பொ.ஆ.மு.1ஆம் நூற்றாண்டிற்குரிய நாகவழிபாடு சம்பந்தமான பிராமிக் கல்வெட்டு ஒன்றும் காணப்படுகிறது. இந்து சமயத் துறவிகள், ரிஷிகள், முனிவர்கள், போன்றோர் இப்பகுதியில் உள்ள குகைகளில் வாழ்ந்திருக்ககூடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என நம்பப்படுகிறது. இதன் காரணமாக இப்பகுதி ஆண்டி மலை என அழைக்கப்பட்டு பின்பு ஆண்டியாகல எனத் திரிபடைந்துள்ளது.

**ஐயனார் சிற்பம்**

இங்குள்ள கற்பாறையொன்று குடையப்பட்டு ஓர் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. அனுராதபுரத்திலுள்ள இசுருமுனிய கோயிலின் முன்பாக செதுக்கப்பட்டுள்ள ஐயனார் சிற்பத்தைப் போன்ற மனித உருவமொன்று இதில் செதுக்கப் பட்டுள்ளது. ஆனால் இச்சிற்பத்தின் வேலைப்பாடுகள் முற்றுப் பெறாமல் உள்ளன. இதுவும் ஓர் ஆசனக்கோல சிற்பமாகும். இசுருமுனிய ஆலயத்தின் சிற்பத்தை இராமாயணத்திலே பால காண்டத்தில் வர்ணிக்கப்படும் கபில முனிவரின் கோலம் என ஆனந்தக் குமாரசுவாமி அவர்கள் கூறியுள்ளார். இதே கருத்தை வின்சன்ட் ஸ்மித், ஹோகார்ட் ஆகியோரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். ஆண்டியாகல எனும் பெயருக்கும் கபிலமுனிவர் சிற்பத்திற்கும் ஓர் தொடர்பிருப்பது போல் தெரிகிறது.அதேசமயம் அம்ஸ்ரர்டாம் பல்கலைக்கழக பேராசிரியரான லொனா ஹசன் டி. லியூ அம்மையார் அவர்கள் இசுருமுனிய சிற்பத்தை ஐயனாரின் வடிவம் என பல ஆதரங்களை மேற்கோள் காட்டி நிரூபித்துள்ளார்.

இதன்படி ஆண்டியாகலவில் உள்ள அதே வடிவத்தைக் கொண்ட சிற்பத்தையும் ஐயனார் சிற்பம் எனக் கூறலாம். ஆகவே இப்பகுதி ஐயனார் வழிபாடு நிலவிய பிரதேசமாக இருக்க வேண்டும் எனக் கூறக்கூடியதாக உள்ளது. இச்சிற்பம் பொ.ஆ.7ஆம், 8ஆம் நூற்றாண்டிற்குரிய பல்லவர் காலப் பாணியில் செதுக்கப்பட்டதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 67.விஷ்ணு கோயில்-தம்பலகொல்லாவ

மதவாச்சியிலிருந்து ஹொரவப்பொத்தானைக்கு செல்லும் வீதியில் சுமார் 16 கி.மீ தொலைவில் உள்ள வேவல் கேட்டிய சந்தியின் தெற்கில் ஒரு கி.மீ தூரத்தில் தம்பல கொல்லாவ மலைக்குன்றும், குளமும் அமைந்துள்ளன.



**தம்பலகொல்லாவ மலைக்குன்று**

### அதிசக்தி வாய்ந்த விஷ்ணு சிலை

இங்குள்ள மலைக்குன்றில் பழமைவாய்ந்த அரிய வேலைப்பாடுகளுடன் கூடிய விஷ்ணு சிலை ஒன்று காண ப்படுகிறது. பாம்பின் மீது அமர்ந்திருக்கும் இவ்விஷ்ணு வின் சிலை மிகவும் சக்தி வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. பெண்கள் குழந்தைப் பேறு வேண்டி இவ்விஷ்ணுவுக்கு பூஜைகள் செய்து பலன் பெறுவதாகக் கூறப்படுகிறது. 99 சதவீதம் இப்புதுமையான பூஜை வெற்றியளித்து பெண்கள் குழந்தைப் பேறு பெறுகின்றனர். இச்சிலை 1891 ஆம் ஆண்டு *H.C.P.*பெல் அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 68.இந்துக் கோயில்-மொரகஹவல, கஹட்டகஸ்திஹிலிய

அனுராதபுரத்திலிருந்து திருகோணமலை செல்லும் வீதியில் 35 கி.மீ தூரத்தில் உள்ள கஹட்டகஸ்திஹிலிய என்னுமிடத்தில் இருந்து வடக்குப் பக்கமாக ரத்மல்கஹ வெவ செல்லும் வீதியில் உள்ள குருக்குராகம என்னு மிடத்தினருகில் மொரகஹவல அமைந்துள்ளது.

**தமிழ்ப் பிரதானி மூன்று கோயிலுக்கு வழங்கிய தானம் பற்றிக் கூறும் கல்வெட்டு**

இங்கு பொ.ஆ.12ஆம் நூற்றாண்டில் அமைந்திருந்த கோயில் சம்பந்தமான கல்வெட்டு கிடைக்கப்பெற்றுள்ளது. இது தமிழில் பொறிக்கப்பட்ட கல்வெட்டாகும். இக்கல் வெட்டு ஜெயபாகு தேவரின் 28வது ஆண்டில் அதாவது பொ.ஆ.1108-1145 காலப் பகுதிக்குள் பொறிக்கப்பட்டுள் ளது. பத்தாலாய என்னுமிடத்தில் பிறந்த உலகாயக்கித்தன் எனும் தமிழ்ப் பிரதானியால் இவ்விடத்தில் உள்ள ஓர் வேலி நிலம் (6.74 ஏக்கர்) மூன்று கோயிலுக்கு தானமாக வழங்கப்பட்டது பற்றிய செய்தியை இக்கல்வெட்டு கூறு கிறது. தனது மறைவின் பின் இக்கட்டளையை மீறுவோர் மூன்று கோயிலுக்கு பாவம் செய்தவர்களாகக் கருதப் படுவதோடு, வேளைக்காரரர் குலத்திற்கு செய்யக் கூடிய கடமையிலிருந்து விலகியவர்களாகவும் கருதப்படுவர் என வும், இவ்விடத்தை தமக்கு சொந்தமாக்க நினைப்பவர்கள் நடத்தை கெட்டவர்களாகக் கருதப்படுவர் எனவும், இக் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ள செய்தி கூறுகிறது.

இக்கல்வெட்டு வேளைக்காரரர் சமூகத்தினரால் பொறி க்கப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது. இதில் உள்ள "மூன்று கை" எனும் பதம் வேளைக்காரரர் சமூகத்திலுள்ள மகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தர், வலஞ்சியர், நகரத்தார் ஆகியோரைக் குறிப்பதாகும். இக்கல்வெட்டின் மூலம் பொ.ஆ.12ஆம் நூற்றாண்டில் மொரகஹவல பகுதியில் வேளைக்காரரர் சமூகத்தினர் வாழ்ந்துள்ளமையும், இவர்களால் ஆலயங்கள் அமைக்கப்பட்டு மானியங்களும் வழங்கப்பட்டமையும் தெரிய வருகிறது. சோழர் காலத்தில் இங்கு வந்த இச்சமூகத்தினர் சோழர் காலத்தின் பின்பும் இலங்கையின் பல பாகங்களிலும் தங்கி வாழ்ந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. இவர்களால் பொறிக்கப்பட்ட தமிழ்க் கல்வெட்டுக்கள் பொலநறுவை,பண்டுவஸ்நுவர ஆகிய இடங்களிலும் காணப்படுகின்றன.

## 69.நாக வைரவர் கோயில்-அவுக்கன

கெக்கிராவையிலிருந்து கலாவெவ அணைக்கட்டின் ஊடாக தெற்கு நோக்கி கலேவெலைக்கு செல்லும் வீதியில் சுமார் 12 கி.மீ தூரத்தில் கலாவெவ குளம் காணப்படுகிறது. இக்குளத்தின் அணைக்கட்டின் வலது புறமாகச் செல்லும் பாதையில் 2 கி மீ தூரத்தில் அவுக்கன அமைந்துள்ளது. பொ.ஆ 5ஆம் நூற்றாண்டில் (பொ.ஆ. 459 - 477) அனுராதபுரத்திலிருந்து ஆட்சி செய்த தாதுசேனன் இப்பகுதியில் கலாவெவ எனும் குளத்தைக் கட்டியதோடு, குளத்தின் மேற்கில் உள்ள அவுக்கனை என்னுமிடத்தில் 37 அடி உயரமான ஓர் புத்தர் சிலையையும் அமைத்தான். இச்சிலையை அமைப்பதற்கு முன்பு இங்கு ஓர் வைரவர் கோயில் ஸ்தாபிக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது. புத்தர் சிலைக்கும் இப்பகுதிக்கும் காவலாக இக்கோயில் அமைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**37 அடி உயரமான அவுக்கன புத்தர் சிலை**

இங்கு ஓர் உயரமான கற்பாறையின் மீது புத்தர் சிலையும், பௌத்த விஹாரைக் கட்டிடங்களும் அமைக்கப் பட்டுள்ளன. புத்தபகவான் சிலையும், பௌத்த வழிபாட் டிற்குரிய கட்டிடங்களும் அமைக்கப்பட்டிருக்கும் இட த்தை விட சற்று உயரமாக இன்னுமோர் மலைப்பாறை உள்ளது. இப்பாறையின் உச்சியில் உள்ள ஓர் பாரிய விருட்சத்தின் கீழ் வைரவர் கோயில் அமைக்கப்பட்டுள் ளது. இது 1600 வருடங்கள் பழமை வாய்ந்த கோயில் என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கு கல்லில் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப் பட் டுள்ள வைரவர் சிற்பம் காணப்படுகிறது. வைரவரு க்கு சிறிய கூரை அமைக்கப்பட்ட கோயில் அங்கே உள் ளது. இக்கோயிலுக்குச் செல்ல சில கற்படிகள் செதுக்கப் பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**வைரவர் கோயிலுக்குச் செல்லும் கற்படி**

சிறிய கோயிலின் உள்ளே ஓர் கப்புறாளை பூஜைகள் செய்து வருகிறார். வைரவர் கோயில் சிறியதாக இருந் தாலும் முக்கியத்துவம் வாய்ந்த காவல் தெய்வமாகக் கரு தப்படுகிறது. இதன் முக்கியத்துவம் கருதியே இது பௌத்த வழிபாட்டிற்குரிய கட்டிடங்களை விட சற்று உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. தாதுசேனன் காலத்தில் இக்கோயில் ஓர் திறந்த வெளிக்கோயிலாக இருந்திருக்க வேண்டும். இங்கு கட்டிடங்கள் எதுவும் இருந்ததற்கான அடையாளங் கள் காணப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**அவுக்கனை பறை மீதுள்ள வைரவர் கோயில்**

தாதுசேனன் ஹரண எனும் சிற்பியின் துணையுடன் இந்த வைரவர் கோயிலை அமைத்தான் என வரலாறு கூறுகிறது. தாதுசேனன் பௌத்த மதத்தவனாக இருந்தா லும் இந்து சமயத்தின் மீதும் நம்பிக்கை கொண்டவனாக இருந்துள்ளான். இதனாலேயே தனது உயரிய படைப்புக்க ளுக்கு இந்து தெய்வங்களை காவலாக வைத்துள்ளான். இந்து மதத்தின் மீது இம்மன்னன் நாட்டம் கொள்ள இன் னுமோர் காரணமும் இருந்தது. தாதுசேனனின் முதல் மனைவி பாண்டிய வம்சத்தைச் சேர்ந்த இந்து தமிழ்ப் பெண்ணாவாள். இவளின் மகனே சீகிரியாவை 18 ஆண்டு கள் ஆட்சி செய்த தமிழ் மன்னன் காசியப்பன் என்பது குறிப்பிடத்தக்கது.

18 குளங்களைக் கட்டிய தாதுசேனன், தான் கட்டிய குளங்களில் மிகப் பெரியதாக விளங்கிய கலாவெவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளத்தின் அணைக்கட்டிலும் ஓர் கோயிலைக் கட்டி னான். இது குளத்திற்கு காவலாக அமைக்கப்பட்ட கோயி லாகும். இன்றும் இக்கோயில் பல புதிய வடிவங்களுடன் காணப்படுகிறது. கலாவெவ குளக்கட்டின் மீது பயணம் செய்யும் வாகனங்களில் செல்வோர் இக்கோயிலருகில் வாகனத்தை நிறுத்தி காணிக்கைகள் செலுத்தி வழிபட்டுச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது.



**பாறையில் வைரவர் புடைப்புச் சிற்பம்**

**கருவறையில் பிரம்மா, அம்மன் வெண்கலச் சிலைகள்**

அவுக்கன புத்தர் சிலையின் கீழே உள்ள கருவறை பகுதியில் அகழ்வாராய்ச்சி நடந்தபோது நிலத்தின் கீழ் கர்ப்ப பாத்திரங்கள் என்றழைக்கப்படும் பேழைகள் சில கண்டெடுக்கப்பட்டன. இப்பாத்திரங்களில் வெண்கலத்தி லான பல இந்து தெய்வச் சிலைகள் காணப்பட்டன. நான்கு முகங்கள், நான்கு கைகள் ஆகியவற்றுடன் கூடிய 11 அங்குல உயரமுள்ள பிரம்மாவின் சிலையும், இடது கையை இடுப்பில் வைத்தவாறு வலது கையில் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளை ஏந்திய வண்ணம் 8 அங்குல உயமுள்ள நான்கு அம்மன் சிலைகளுமே பேழைகளில் காணப்பட்ட தெய்வச் சிலைகளாகும்.பிரம்மாவின் சிலை கருவறையின் நடுப் பகுதியிலும், அம்மனின் சிலைகள் ஒவ்வொன்றும் நான்கு பக்கங்களிலும் இருந்தும் கிடைக்கப்பெற்றன.



**கருவறையின் அடியில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த பிரம்மா மற்றும் அம்மன் சிலைகள்**

இவை இங்கிருந்த பிரமாண்டமான புத்தர் சிலைக்கு பாதுகாப்பாக கருவறையின் அடியில் ஸ்தாபிக்கப்பட்ட தெய்வங்கள் என பேராசிரியர் பரணவிதான கூறியுள்ளார். இவற்றைத்தவிர ஐந்து தலைகளுடன் கூடிய ஓர் நாகத்தின் சிற்பமும் இங்கு காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவுக்கனை நாக சிற்பம்

## 70.தலபத்குளம் அம்மன் கோயில்-தியதித்தவெவ, ஹோரவபோத்தான

திருகோணமலையிலிருந்து அனுராதபுரத்திற்கு செல்லும் வீதியில் உள்ள ஹொரவப் பொத்தானையிலிருந்து தெற்கு நோக்கி அளுத் ஓயாவிற்குச் செல்லும் வீதியில் சுமார் 10 கி.மீ தொலைவில் தியத்தித்தவெவ அமைந்துள்ளது. இங்கிருந்து சுமார் 4 கி.மீ தூரத்தில் தலபத்குளம் எனும் பழமை வாய்ந்த அழகிய குளம் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பாறையில் செதுக்கப்பட்ட ஒன்பது தலை நாகத்தின் உருவமும், பெண் தெய்வச் வடிவங்களும்**

இக்குளத்தின் அணைக்கட்டின் அருகில் ஓர் புராதன அம்மன் கோயிலின் இடிபாடுகள் காணப்பட்டன. கல்லி னால் அமைக்கப்பட்ட சுவர்களும், கட்டிடங்களும் காண ப்பட்டன. இவற்றின் அருகில் ஓர் அம்மன் சிலையும் காணப்பட்டது. இவ்வம்மனின் தலையைச் சுற்றி ஒன்பது தலைகளுடன் நாகம் படம் எடுத்த வண்ணம் காணப் பட்டது. அம்மன் சிலைக்கு மேலே கற்பாறையில் ஒன்பது தலை நாகத்தின் உருவமும், இரு பக்கங்களிலும் பெண் தெய்வச் வடிவங்கள் இரண்டும் செதுக்கப்பட்டுள்ளன.

ஆய்வாளர் *H.C.P.* பெல் *1891*ஆம் ஆண்டு இவ் வாலய இடிபாடுகளையும், அம்மன் சிலையையும் கண்டு பிடித்தார். இவ்வாலயம் புராதன காலத்தில் தலபத் குளத் திற்கு பாதுகாப்பாக அமைக்கப்பட்ட ஆலயமாக இருக்க வேண்டும் என நம்பப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 71.கோயில் கட்டிய குளம் இந்துக் கோயில்- கோலிபெந்த வெவ, மதவாச்சி

மதவாச்சியிலிருந்து ஹொரவப்பொத்தானைக்கு செல்லும் வீதியில் உள்ள 8வது மைல் கல்லில் உள்ள கிரிகல் வெவ என்னுமிடத்தின் தெற்கில் சுமார் 3 கி.மீ தூரத்தில் உள்ள எலபத்கம புதுரெஸ்விகாரை எனும் இடத்தின் கிழக்கில் ஒரு கி.மீ தூரத்தில் கோலிபெந்தவெவ எனும் சிறிய குளம் அமைந்துள்ளது.




**கோலிபெந்தவெவ அமைவிடத்தின் செயற்கைக்கோள் படம்**

இக்குளத்தை ஒட்டி உள்ள கிராமத்தின் அருகில் புராதன இந்துக் கோயிலின் இடிபாடுகள் காணப்படுகின்றன. இங்கு கோயில் அமைந்திருந்தபடியாலேயே இக்கிராமம் கோயில் கட்டிய குளம் என அழைக்கப்பட்டது. பின்பு இப்பெயர் மருவி தற்போது சிங்கள மொழியில் கோலி பெந்த வெவ என அழைக்கப்படுகிறது. 1892ம் ஆண்டு *H.C.P.*பெல் இவ்வாலய இடிபாடுகளைக் கண்டுபிடித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 72.மன்னன் கட்டிய குளம் நாககோயில்-மானன்கட்டிய, யக்கல்ல

கெக்கிராவையிலிருந்து வடக்கு நோக்கி கனேவல் போல ஊடாக கலென்பிந்துனுவெவ செல்லும் வீதியில் சுமார் *30* கி.மீ தூரத்தில் உள்ள யக்கல்ல சந்தியின் மேற்கில் *3* கி.மீ தூரத்தில் மானன்கட்டிய குளம் அமைந்துள்ளது. மன்னன் கட்டிய குளம் என்பதே திரிபடைந்து மானங்கட்டிய வெவ என அழைக்கப்படுகிறது.



**மானன் கட்டிய குளம்**

இக்குளத்தின் புராதன துருசின் அருகில் நாகதம்பிரான் உருவம் செதுக்கப்பட்ட கல் காணப்படுகிறது. நாகதம்பிரான் சிற்பத்தின் இரு பக்கங்களிலும் உள்ள இரண்டு கற்களில் இரண்டு அம்மன் உருவங்கள் செதுக்கப் பட்டுள்ளன. *1893* ல் *H.C.P.*பெல் இவற்றைக் கண்டு பிடித்தார். இப்பகுதியை ஆட்சி செய்த ஒரு மன்னன் இங்கு ஓர் குளத்தைக் கட்டி அக்குளத்திற்கு காவலாக நாகதம்பிரானையும், அம்மனையும் வைத்துள்ளான் எனக் கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**நாகதம்பிரானின் இரண்டு பக்கங்களில் கும்பகலசம் ஏந்திய இரண்டு அம்மன் உருவங்கள்**

## 73.சிவன் குகைக்கோயில்–ஹந்தகலகந்த

மதவாச்சியிலிருந்து ஹோரவபோத்தானைக்கு செல்லும் வீதியில் 21 கி.மீ. தூரத்தில் ரத்மல்கஹாவெவ என்னுமிடம் உள்ளது. இவ்விடத்தில் இருந்து கெப்பிட்டிகொல்லாவ செல்லும் வீதியில் 5 கி.மீ தூரத்தில் ஹந்தகலகந்த அமைந்துள்ளது.

**லிங்கக்கல்லும், சிவனின் குகைக்கோயிலும்**

இங்கு மொத்தமாக 45 கற்குகைகள் உள்ளன. இங்குள்ள கற்குகையில் ஓர் புராதன கோயில் காணப்படுகிறது. இது "புராண தேவாலய" என அழைக்கப்படுகிறது. இது சிவனுக்குரிய குகைக் கோயிலாக இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில் இங்கிருந்து சற்று தூரத்தில் ஒரு லிங்கக்கல் காணப்படுகிறது. இந்த லிங்கக்கல்லின் விஷ்ணுபாகம் 8 பட்டையாகவும், சிவபாகம் கரடுமுரடான உருளை வடிவிலும் காணப்படுகின்றது.



**ஹந்தகலகந்த மலையில் உள்ள இந்து தெய்வ குகைக்கோயில்**



**விஷ்ணுபாகம், சிவபாகம் ஆகியவற்றுடன் முற்றுப்பெறாத லிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து தெய்வங்கள் தொடர்பான பிராமிக் கல்வெட்டுக்கள்

இங்குள்ள குகைகளில் மொத்தமாக 31 பிராமிக் கல் வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் இந்து சமயம் தொடர்பான கல்வெட்டுக்கள் பல காணப்படுகின்றன. சிவன் பெயர் பொறிக்கப்பட்ட ஒரு கல்வெட்டும், வேலன் பெயர் பொறிக்கப்பட்ட 3 கல்வெட்டுக்களும், நாகம் என 5, சுவாமி என 6, பிராமண என 2 கல்வெட்டுக்களும் பொறிக்கப்பட்டுள்ளன. மேலும் தமிழ் சொற்களான பருமக என்று பொறிக்கப்பட்ட 16 கல்வெட்டுக் களும், மருமகன என பொறிக்கப்பட்ட 1 கல்வெட்டும் காணப்படுகின்றது.



**ஹந்தகலகந்த மலைக்குகையில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு**

இக்கல்வெட்டுக்கள் 2000 வருடங்களுக்கு முற்பட்ட வையாகும். இதன் மூலம் ஹந்தகல மலைக் குகைகளில் சிவன், வேலன், நாகம் ஆகிய தெய்வங்களுக்கான வழி பாடுகள் பண்டைய காலத்தில் நிலவியதோடு முனிவர்கள், பிராமணர்கள் ஆகியோரும் இக்குகைகளில் வாழ்ந்துள்ள னர் என்பது தெரிய வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹந்தகலகந்த மலைப்பகுதியில் பொறிக்கப்பட்டுள்ள இன்னுமோர் கல்வெட்டு



கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ள இன்னுமோர் மலைக்குகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 74.நாக கோயில்-எருவேவ, கல்குளம்

அனுராதபுரத்திலிருந்து தென்கிழக்கு நோக்கி கல் குளம் ஊடாக கெக்கிராவைக்கு செல்லும் வீதியில், கல் குளத்தை அடுத்துள்ள திரப்பன என்னுமிடத்தின் கிழக்கில் சுமார் 5 கி.மீ தூரத்தில் எருவெவ குளம் அமைந்துள்ளது. இக்குளத்தின் துருசின் அருகில் உள்ள கல்லில் 7 தலை நாகத்தின் உருவமும், அம்மனின் உருவமும் செதுக்கப் பட்டுள்ளன. இங்கு அமைக்கப்பட்ட குளத்திற்கு காவலாக நாகத்தையும், அம்மனையும் ஸ்தாபித்துள்ளனர். 1893 ஆம் ஆண்டு எச்.சி.பி. பெல் எருவெவ குளப்பகுதியை ஆராய் ந்த போது இச்சிற்பங்களை கண்டார்.




**எருவெவ குளத்தின் அமைவிடம்**

## 75.நாக கோயில்-வண்ணம்மடுவ குளம், உலகல்ல

அனுராதபுரத்திலிருந்து தென்கிழக்கு நோக்கி கல்குளம் ஊடாக கெக்கிராவைக்கு செல்லும் வீதியில் உலகல்ல என்னுமிடம் உள்ளது. உலகல்ல சந்தியின் கிழக்கில் சுமார் 10 கி.மீ தூரத்தில் வண்ணம்மடுவ குளம் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகல்ல வனத்தில் உள்ள இக்குளத்தின் வடிகால் *(Spill Way)* பகுதியில் உள்ள காட்டில் சில கட்டிட இடிபாடுகள் காணப்படுகின்றன. இவ்விடத்தில் பொ.ஆ 10 ஆம் நூற்றாண்டுக்குரிய ஓர் நீளமான கல்வெட்டு உள்ளது. இக் கல்வெட்டின் அடுத்த பக்கம் நாகசிற்பம் ஒன்றும் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் அருகில் உள்ள பாறையில் சதுர வடிவில் ஓர் நீர்ச்சுனை வெட்டப்பட்டுள்ளது. இவ்விடத்தில் இன்னுமோர் நாகசிற்பமும், அதன் அருகில் ஓர் அம்மன் சிலையும் செதுக்கப்பட்டுள்ளன. இவை வண்ணம்மடுவ குளத்திற்கு காவலாக அமைக்கப்பட்ட கோயிலின் எச்சங்களாகும். 1893 ஆம் ஆண்டு எச்.சி.பி. பெல் உலகல்ல வனப்பகுதியை ஆராய்ந்து தனது ஆய்வுக் குறிப்புகளில் நாக சிற்பம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

## 76.ஐயனார் கோயில் - அமுனுகொலே, சிப்பிக்குளம்

மிகிந்தலையிலிருந்து ஹொரவபொத்தானைக்கு செல்லும் வீதியில் உள்ள சிப்பிக்குளம் சந்தியின் தென்கிழக்கு திசையில் கலேன்பிந்துனுவெவவிற்கு செல்லும் வீதியில், சிப்பிக் குளத்திலிருந்து சுமார் 12 கி.மீ தூரத்தில் உள்ள கயினத்தம சந்தியின் வடக்கில் 4 கி.மீ தூரத்தில் அமுனுகொலே காடு அமைந்துள்ளது. இக்காட்டில் கண்டி இராச்சிய காலத்தில் உருவான ஐயனார் கோயில் ஒன்று அமைந்துள்ளது. இக்காட்டுக் கோயிலில் பல தெய்வங்களின் உருவச் சிலைகளும் உள்ளன. இப்பகுதியில் உள்ள சிங்கள பௌத்த மக்களால் பயபக்தியுடன் இக்கோயில் பூஜிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 77.விஷ்ணு கோயில்-காடிகல, ராஜாங்கன குளம்

அனுராதபுரம்-குருநாகல் வீதியில் உள்ள ரதகம சந்தியிலிருந்து கலாஓயாவிற்கு செல்லும் வீதியில் 7 கி.மீ தூரத்தில் உள்ள சந்தியிலிருந்து தெற்கு நோக்கி ராஜங்கனை குளத்தின் அணைக்கட்டுக்கு செல்லும் வீதியில், அணைக்கட்டின் மேற்கில் காடிகல மலை அமைந்துள்ளது.

இம் மலையின் உச்சிக்கு செல்ல கற்படிகள் செதுக்கப்பட்டுள்ளன. இம்மலையின் சரிவில் கஜபாகு மன்னனின் கல்வெட்டு ஒன்றும் பொறிக்கப்பட்டுள்ளது.இதன் அருகில் உள்ள மலைக்குகையில் வழிபாட்டுக்குரிய கட்டிடங்கள் இருந்தமைக்கான அடையாளமாக புராதன செங்கற்கள் பல காணப்படுகின்றன. இங்கு ஓர் புத்த பகவானின் கற்சிலையும், விஷ்ணு பகவானின் கற்சிலையும் காணப்படுகின்றன. இதன் மூலம் இக்கற்குகையில் புத்தர், விஷ்ணு ஆகியோருக்கு சிறிய குகைக்கோயில்கள் அமைக்கப் பட்டிருந்தமை தெரிய வருகிறது.

## 78.நாக கோயில் - பிராமணகிரி,நாகிரிகந்த

மதவாச்சியிலிருந்து கெப்பிற்றிக்கொல்லாவைக்கு செல்லும் வீதியில் 6 கி.மீ தூரத்தில் உள்ள மகாதிவுல்வெவ அரசினர் பாடசாலையை அடுத்து உள்ள சந்தியின் கிழக்குப் பக்கமாகச் செல்லும் பாதையில் 2 கி.மீ தூரத்தில் நாகிரிகந்த எனும் சிறிய மலை அமைத்துள்ளது. இங்கு நாக வழிபாடு நிலவிய கோயில் இருந்திருக்கலாம் எனவும், இது இங்கிருந்த பிராமணர்களால் பூஜிக்கப்பட்டு வந்திருக்கலாம் எனவும் நம்பப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**நாககிரி, பமணகிரி ஆகிய பெயர்கள் பொறிக்கப்பட்ட நாகிரிகந்த கல்வெட்டு**

நாககோயில் இருந்த காரணத்தினால் இம்மலை நாக கிரி என பெயர் பெற்றுள்ளது. இதுவே மருவி சிங்கள மொழியில் நாகிரிகந்த என அழைக்கப்படுகிறது. சுமார் 1500 வருடங்களுக்கு முன்பு இது பிராமணர்களின் இருப் பிடமாக விளங்கியுள்ளது. எனவே இதன் பெயர் பிராம ணகிரி என்பதாகும். இங்கு கிடைக்கப்பெற்ற ஓர் கல்வெ ட்டின் மூலம் இக்கூற்று உறுதியாகிறது. இக்கல்வெட்டில் பமணகிரி வெஹெர எனும் வழிபாட்டுத் தலத்திற்கு நிலங் களும், குளங்களும் மானியமாக வழங்கப்பட்டது தொடர் பான தகவல்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

கல்வெட்டில் பமணகிரி எனும் பெயர் 3 இடங்க ளில் பொறிக்கப்பட்டுள்ளது. பொ.ஆ. 513-522 வரையான காலப்பகுதியில் இலங்கையை ஆட்சி செய்த குமாரதாச எனும் மன்னன் இக்கல்வேட்டைப் பொறித்ததாக ஆய்வா ளர்கள் கூறியுள்ளனர். பமணகிரி என்பது பிராமணகிரி என்பதைக் குறிப்பதாகும் என பேராசிரியர் பரணவிதான குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் இம்மலை முன்பு பிராம ணகிரி எனப் பெயர் பெற்று பின்பு நாகிரிகந்த பமுனுகல என தற்போது திரிபடைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 79.இந்துக் கோயில்-நாவெஹெர,நிக்காவெவ

கெப்பிற்றிக்கொல்லாவையிலிருந்து ஹோரவபோத்தானைக்கு செல்லும் வீதியில் 15 கி.மீ தூரத்தில் உள்ள நிக்காவெவ சந்தியிலிருந்து வடக்குப் பக்கமாக செல்லும் வீதியில் 1 கி.மீ தூரத்தில் உள்ள நாவெஹெர என்னுமிடத்தில் ஓர் பழமை வாய்ந்த செங்கல் தூபி காணப்படுகிறது. இத் தூபியின் அருகில் புராதன கற்தூண்களுடன் ஓர் வழிபாட்டுத் தலத்தின் இடிபாடுகளைக் காணக்கூடியதாக உள்ளது.

## பழமை வாய்ந்த கோமுகி

இக்கட்டிடத்தில் ஓர் கோமுகி காணப்படுகின்றது. இதன் மூலம் நாவெஹெர தூபிக்கு அருகில் பழமை வாய்ந்த ஓர் இந்துக் கோயில் இருந்துள்ளமை தெரிய வருகிறது. அடர்ந்த காட்டின் அருகில் காணப்படும் இந்துக் கோயிலின் இடிபாடுகளும், தூபியும் அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



**இந்துக் கோயிலின் இடிபாடுகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பழமை வாய்ந்த கோமுகி**

**சுடுமண் லிங்க வடிவங்கள்**

நிக்காவெவவில் இருந்து 2 கி.மீ. தூரத்தில் உள்ள பெரெண்டியாகம என்னுமிடத்தில் சுடுமண்ணினால் செய்யப்பட்ட 7 லிங்க வடிவங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவை சுமார் 1500-2000 வருட காலத்திற்குற்பட்டவை என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். இவை மிகப் பண்டைய காலத்தில் இங்கு நிலவிய லிங்க வழிபாட்டின் எச்சங்களாக இருக்க வேண்டும். இது போன்ற லிங்க வடிவங்கள் அனுராதபுரம், தப்போவ, மரதன்மடுவ, பின்வெவ, உருத்திராபுரம் ஆகிய இடங்களிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. நிக்காவெவவில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் போது சுடுமண்ணில் செய்யப்பட்ட பெண் தெய்வத்தின் இடுப்பு வரையான பாகமும், அதன் பாதங்களும் கிடைக்கப் பெற்றுள்ளன. அத்துடன் ஓர் ஆணின் தலையின் பாகமும், யானையின் தலை, காது ஆகியவற்றின் பாகங்களும் கிடைக்கப்பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிக்காவெவவில் கிடைக்கப்பெற்ற சுடுமண் லிங்க வடிவம்



நிக்காவெவவில் கிடைக்கப்பெற்ற சுடுமண் பெண் தெய்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 80.நாக கோயில்-பரத நாகலேன-பில்லாவேகல, தந்திரிமலை

தந்திரிமலையில் இருந்து தெற்கு நோக்கி அனுராதபுரத்திற்கு செல்லும் வீதியில் சுமார் 5 கி.மீ தூரத்தில் உள்ள நெலும்வில சந்தியை அடுத்து அமைந்துள்ள மில்லகல என்னுமிடத்தின் அருகில் பரதநாகலேன மலைப்பகுதி காணப்படுகிறது.

இங்குள்ள மலைக்குகையில் நாக வழிபாடு நிலவிய கோயில் அமைந்திருந்ததாகவும், பரதர் எனும் குலத்தவர்களால் இது பூஜிக்கப்பட்டதாகவும் நம்பப்படுகிறது. இதன் காரணமாக இவ்விடத்திற்கு பரத நாகலேன எனப் பெயர் வந்ததாகக் கூறப்படுகிறது. பரத எனும் பெயர் பொறிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டுக்கள் பல அனுராதபுர மாவட்டத்தில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



**பரத நாக லேன கற்குகைகளில் ஒன்று**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்குள்ள மலைக்குகைகளில் மொத்தமாக 10 பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவற்றில் ஒரு குகைக் கல்வெட்டில் "பரத நாக லேன சகச" எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இது பரத நாக குகை எனப் பொருள்படும். இக்குகையே நாகவழிபாடு நிலவிய குகைக் கோயிலாக இருந்திருக்க வேண்டும்.

இங்குள்ள இன்னுமோர் கல்வெட்டில் "பத குட்டச லேன பத சங்கமித்தச லேன ....." எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இது இங்கிருந்த சுவாமி அல்லது ரிஷி குட்டன், சங்கமித்தன் ஆகியோரைக் குறிப்பதாகும்.



**பரத நாகன் குகை எனப் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு**

இங்கு காணப்படும் இன்னுமோர் கல்வெட்டில் "நாக ராஜன் ஆட்சியின் போது மண்பத்தின் குடைக்கு காவலாக இருப்பவருக்கு மடாலயம் கட்டிய சிவனின் குகை" எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு மண்டபத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்கு காவலாக இருக்கும் நாக தெய்வத்திற்கு நாகராஜன் எனும் சிற்றரசனின் பணிப்பின் பேரில் இங்கிருந்த சிவன் என்பவன் மடாலயம் ஒன்றைக் கட்டிய செய்தியை கூறு கிறது. இம்மூன்று கல்வெட்டுக்களும் பேராசிரியர் பரண விதான வெளியிட்ட *Inscriptions of Ceylon- Volume 1* எனும் நூலில் 101,100,1120 ஆகிய இலக்கங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## 81.ஜெயசேனன் யக்ஷ கோயில்-ரிடிகல (அரிட்ட பர்வத மலை)

ஹபரண சந்தியிலிருந்து வடமேற்கு நோக்கி மரதன் கடவல ஊடாக அனுராதபுரத்திற்குச் செல்லும் வீதியில், 11 கி.மீ. தூரத்தில் பாதையின் வலது பக்கத்தில் ரிடிகல மலை அமைந்துள்ளது. வடஇலங்கைப் பகுதியில் அமைந் துள்ள மிக உயரமான மலை எனக் கருதப்படும் ரிடிகல மலை 600 மீற்றர் உயரமுடையதாகும். வடக்கு தெற்காக 5 கி.மீ நீளமும், கிழக்கு மேற்காக 3 கி.மீ அகலமும் கொண்ட இம்மலையில் ஜெயசேனன் எனும் யக்ஷ தெய்வ த்திற்கு கோயில் இருந்தது பற்றி பொ.ஆ. 14ஆம் நூற்றா ண்டில் எழுதப்பட்ட ரசவாகினி எனும் நூலில் கூறப்பட்டு ள்ளது. இக்கோயில் பண்டுகாபயன் காலத்தில் இருந்திருக் கலாம் என நம்பப் படுகின்றது.

ரிடிகல மலையில் மிகவும் சக்தி வாய்ந்த யக்ஷனாகத் ஜெயசேனன் விளங்கியதாக இப்பகுதி மக்கள் கூறுகின் றனர். மக்கள் மத்தியில் ஜெயசெனன் பற்றிய ஓர் கதையும் இப்பகுதியில் நிலவுகிறது. இப்பகுதியை ஆட்சி செய்த ஜெயசெனன் கோதம்பரன் என்பவனின் மனைவி மீது ஆசை கொண்டதாகவும், இங்கிருந்து சற்று தூரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள கலந்தேவ என்னுமிடத்தில் உள்ள குளத்தில் கோதம்பரனின் மனைவி குளித்துக் கொண்டிருந்த போது ஜெயசேனன் அவளை தன் சக்தியால் மயக்க முற்பட்டதாகவும், அப்போது கோதம்பரனுக்கும், ஜெயசேனனுக்கும் சண்டை ஏற்பட்டதாகவும், அதில் ஜெயசேனன் கொல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது. அதன் பின்பே மக்களால் ஜெயசேனன் கோயில் கட்டி வழிபடப்பட்டதாகவும் கூறப்படுகிறது. பாளி மற்றும் சிங்கள நூல்களில் இக்கதை சற்று வேறு விதமாகவும் கூறப்படுகிறது.

## 82.சிவன் குகைக்கோயில்-ஆண்டியகந்த-ரிடிகல (அரிட்ட பர்வத மலை)

ரிடிகல சந்தியின் வடக்குப் பக்கமாக ரிடிகல மலைக்குச் செல்லும் வீதியில், 3 கி.மீ தொலைவில் உள்ள ஆண்டியகந்த வழிப்பிள்ளையார் கோயில் சந்தியிலிருந்து, மேற்குப்பக்கமாக செல்லும் கிரவல் பாதையில் 2 கி.மீ தூரம் பயணம் செய்தால் ஆண்டியகந்த மலைக்குச் செல்லலாம். ரிடிகல மலையின் தென்கிழக்குப் பகுதியில் ஆண்டியகந்த அமைந்துள்ளது.



**ரிடிகல மலை (அரிட்ட பர்வதம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இராமாயணத்துடன் தொடர்புடைய மலை

இராமாயணத்தில் இலட்சுமணன் உயிர்காக்க இமய மலைக்குச் சென்று அனுமன் தூக்கிக் கொண்டு வந்த சஞ்சீவி மலையின் துண்டுகளில் ஒன்று ரிடிகல மலைப் பகுதியில் விழுந்ததாகவும், இதனால் இம்மலையில் வேறு எங்கும் கிடைக்காத அரிய பல மூலிகைகள் காணப்படுவதாகவும் கூறப்படுகிறது. இந்தியாவிலிருந்து இலங்கைக்கு தீர்த்த யாத்திரை வந்த முனிவர்கள் பலர் இம்மலையில் உள்ள குகைகளில் தங்கிச் சென்றதாகவும் கூறப்படுகின்றது.

### எல்லாளனின் மகிளநகரக் கோட்டை

ரிடிகல பண்டைய காலத்தில் அரிட்ட பப்பத்த (அரிட்ட மலை) என்ற பெயரில் அழைக்கப்பட்டுள்ளது. தேவநம்பியதீசனின் தம்பியான சூரதீசன் பொ.ஆ.மு. 187-177 காலப்பகுதியில் அரிட்ட பர்வத மலை அடிவாரத்தில் மங்குலக எனும் விகாரையை அமைத்தான் என மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ளது.இது மகுலக எனவும் அழைக்கப்பட்டது.இவ்விடம் எல்லாள மன்னனின் 32 கோட்டைகள் இருந்த இடங்களில் ஒன்றான மகிளநகரம் என அடை யாளம் காணப்பட்டுள்ளது.



**ஆண்டியகந்த வழிப்பிள்ளையார் கோயில் சந்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாள மன்னனின் பலம் வாய்ந்த கோட்டையான விஜிதநகரக் கோட்டையை துட்டகாமினியின் படைகள் நான்கு மாதங்கள் போர் செய்து கைப்பற்றிய பின், அங்கிருந்து கிரிலகம் எனும் இன்னுமோர் இடத்தை அடைந்தன. அங்கு எல்லாளனின் சிற்றரசனான கிரியன் எனும் தமிழ் மன்னனின் கொன்ற பின், அங்கிருந்து மகிளநகரத்திற்கு படைகள் சென்றன. மூன்று அகழிகளால் சூழப்பட்ட இக்கோட்டைக்கு ஒரே ஒரு கோட்டைக்கதவு மட்டுமே இருந்ததாகவும், மூன்று மாதங்கள் மகிளநகரக் கோட்டையை முற்றுகையிட்ட பின் அந்நகரத்தின் படைத் தலைவனை துட்டகாமினி கொன்றதாகவும் மகாவம்சம் கூறுகிறது.



**ஆண்டியாகந்த மலைக்குகை**

மகிளநகரம் ரிடிகல மலையின் அடிவாரத்தில் அமைக்கப்பட்டிருந்த எல்லாளனின் பலம் வாய்ந்த நகரமாகும். தமிழர் வாழ்ந்த இந்நகரில் நிச்சயமாக சிவன் கோயில் இருந்திருக்கலாம் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் எல்லாளனின் படைகளை வென்று இந்நகரைக் கைப்பற்றிய பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துட்டகாமினியின் யுகம் ஆரம்பமான போது ரிடிகல மலைப் பகுதியில் மீண்டும் பௌத்த மத செயல்பாடுகள் தொடங்குவதற்கான அறிகுறிகள் உருவாகின என பூஜ்ய எல்லாவல மேதானந்த தேரர் ரிடிகலகந்த எனும் நூலில் தெரிவித்துள்ளார். இதில் மீண்டும் பௌத்தமத செயல் பாடுகள் தொடங்கின எனும் கூற்று அதுவரை இங்கு வேறு ஓர் மதம் இருந்தது என்பதை உணர்த்துகிறது. தமிழர்களின் ஆதிக்கத்தின் கீழ் இந்நகரம் இருந்தமையால் அந்த மதம் சைவம் தான் என்பது உறுதியாகிறது. மேலும் எல்லாளன் ஆட்சியின் போது இசுருமுனிய கோயில் சிவன் கோயிலாக மாற்றம் பெற்றது என கலாநிதி மிரு ண்டோ ஒபேசேகரவும் தனது நூலில் கூறியுள்ளார். இவை அனைத்தும் ரிடிகல மலையடிவாரத்தில் சிவன் கோயில் இருந்தது என்பதை மேலும் உறுதி செய்கின்றன.

ஆண்டியகந்த வழிப்பிள்ளையார் கோயில் சந்தியிலிரு ந்து ரிடிகல மலையடிவாரத்தில் உள்ள ஆண்டியகந்த மலைப்பகுதிக்கு சென்றதும் பல மலைக்குகைகளைக் காண லாம். இக்குகைகளே பண்டைய காலத்தில் முனிவர்களும், சித்தர்களும் வாழ்ந்த இடமாகும்.இதன் காரணமாக இம் மலை "ஆண்டிமலை" எனப் பெயர் பெற்றிருந்தது. காலப் போக்கில் இப்பெயர் சிங்கள மொழியில் ஆண்டிகந்த என மருவியது. இதனை நிரூபிக்கும் வகையில் இங்கு பொறிக் கப்பட்டுள்ள பிராமிக் கல்வெட்டுக்களில் சுவாமி சிவகுத் தன், சுவாமி நந்தன், சுவாமி சோனன் ஆகிய பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. ஆண்டியகந்தையில் மொத்தமாக 13 பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவற்றில் சுவாமி எனப் பொறிக்கப்பட்ட 3 கல்வெட்டுக்களும், சிவன், பிராமணன் ஆகிய பெயர்கள் பொறிக்கப்பட்ட தலா ஒரு கல்வெட்டும் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ஆண்டியகந்த மலைப்பகுதியில் உள்ள இடிபாடுகள்**

மேலும் தமிழ்ச் சொல்லான பருமக எனும் சொல் பொறிக்கப்பட்டுள்ள 5 கல்வெட்டுக்கள் இங்கு காணப்படு கின்றன. இக்கல்வெட்டுக்கள் மூலம் இப்பகுதியில் முனி வர்கள், பிராமணர்கள் வாழ்ந்துள்ளனர் என்பதும், இங்கு வாழ்ந்த முனிவர்கள் இங்கிருந்த மலைக் குகைகளில் சிவனை வழிபட்டிருக்கலாம் எனவும் நம்பப்படுகிறது.

## 83.தெவியன்னேகந்த இந்துக் கோயில்- ரிடிகல (அரிட்ட பர்வத மலை)

ரிடிகல மலைப்பகுதியில் தெவியன்னே கந்த என்னும் ஓர் மலைப்பகுதியும் காணப்படுகின்றது. இப்பகுதியில் ஓர் இந்து தெய்வம் வணங்கப்பட்ட கோயில் ஒன்று இருந்துள் ளது. இதனால் இம்மலைப்பகுதி "தெய்வ மலை" எனப் பெயர் பெற்றுள்ளது. இப்பெயரே சிங்கள மொழியில் தெவியன்னே கந்த என அழைக்கப்படுகிறது. இங்கிருந்த தெய்வம் என்னவென்று தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரிடிகல மலைப்பகுதியில் உள்ள குகைக் கோயில்

## 84.வேவல்தென்ன சிவன் குகைக்கோயில்- ரிடிகல (அரிட்ட பர்வத மலை)

ரிடிகல மலைப்பகுதியில், ஆண்டியாகந்த மலையடி வாரத்திற்கு சற்று தூரத்தில் வேவல்தென்ன என்னுமிடம் அமைந்துள்ளது. இங்கு 2000 வருடங்களுக்கு முன்பு சிவ வழிபாடு நிலவியமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன.

இங்குள்ள மலைக்குகைகளில் 2 பிராமிக் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுக்களில் மகாமத்த பிராமணதத்த எனும் பிராமணனின் மகன்மார்களான, இப்பகுதியின் தலைவர்களான புஸ்ஸகுத்தன், பாஹிகன், மித்தன், தீசன் ஆகியோரால் அரிட்ட எனும் நகரம் அமைக்கப்பட்டது பற்றியும், இங்கு புஸ்ஸகுத்தனால் ஓர் தூபி அமைக்கப்பட்டது பற்றியும் கல்வெட்டுக்களில் கூறப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



268



269

**திரிசூலக் குறியீடுகள், சுவஸ்திகா, சக்கரம் பொறிக்கப்பட்ட வேவல்தென்ன கல்வெட்டுக்கள்**

இதில் ஒரு கல்வெட்டில் இரண்டு திரிசூலக் குறியீடுகளும், ஒரு சுவஸ்திகா குறியீடும், ஒரு சக்கரக் குறியீடும் பொறிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் திரிசூலக் குறியீடுகள் பொறிக்கப்பட்ட மலைக்குகையில், இங்கு வாழ்ந்த பிராமணதத்தனால் சிவன் அல்லது திரிசூலம் பூஜிக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. இக்கல்வெட்டுக்கள் பேராசிரியர் பரணவிதான பதிப்பித்த *Inscriptions of Ceylon-Volume 1* எனும் நூலில் 268,269 ஆகிய இலக்கங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதிலும் சற்று வித்தியாசமான திரிசூலக் குறியீடுகள் பொலநறுவை மாவட்டத்திலுள்ள திம்புலாகல, அம்பாறை மாவட்டத்திலுள்ள குடும்பிகல ஆகிய இடங்களில் உள்ள மலைக்குகைகளிலும் பொறிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 85.முருங்க ஹிட்டி கந்த முருகன் கோயில்- (முருகன் நின்ற மலை) மடாத்துகம

தம்புள்ளையில் இருந்து வடக்கு நோக்கி கெக்கிரா வைக்கு செல்லும் வீதியில் சுமார் 12 கி.மீ தூரத்தில் மடா த்துகம சந்தி அமைந்துள்ளது. இங்கு ஓர் சிறிய மலைக் குன்று காணப்படுகின்றது.இம்மலைக்குன்று முருங்கஹிட்டி கந்த என அழைக்கப்படுகிறது.பண்டைய காலத்தில் இங்கு முருகன் கோயில் அமைந்திருந்ததாக நம்பப்படுகின்றது. இதன் காரணமாக இதற்கு முருகன் இருந்த மலை என்ற பெயரே இருந்தது. இது சிங்கள மொழியில் முருக ஹிட்டி கந்த என அழைக்கப்பட்டு வந்தது. காலப்போக் கில் இப்பெயர் மருவி முருங்க ஹிட்டி கந்த என அழைக் கப்படுகிறது.



**முருகன் கோயில் அமைந்திருந்த முருங்க ஹிட்டி கந்த மலை**

இம்மலைக் குன்றில் தற்போது புராதன பௌத்த தூபி காணப்படுகின்றது. இவ்விடத்திலேயே முருகன் கோயிலும் இருந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 86.அம்மன் கோயில்- கிரலகல, ஹொரவப்பொத்தனை

ஹொரவப்பொத்தானையில் இருந்து மதவாச்சிக்கு செல்லும் வீதியில் 5 கி.மீ தூரத்தில் கிரலகல என்னுமிடம் அமைந்துள்ளது. இதன் பண்டைய பெயர் வெஹெர பெண்டிகல என்பதாகும்.

இங்குள்ள கல்விஹாரை என்னுமிடத்தில் கற்சுனை, கற்படிகள் மற்றும் பாறைமீது தூபியின் சிதைவுகள் ஆகியவை காணப்படுகின்றன. இவற்றின் மத்தியில் உடைந்த நிலையில் ஓர் அம்மனின் கற்சிலையும் காணப்படுகின்றது. இது இங்கிருந்த அம்மன் ஆலயத்தின் சிலையாக இருக்கலாம் என நம்பப்படுகின்றது. எச்.சி.பி. பெல் அவர்கள், இவ்வம்மன் சிலையைக் கண்டது பற்றி தனது குறிப்புகளில் எழுதியுள்ளார்.



**கிரலகலவில் காணப்படும் பொலநறுவை சிவன் கோயில்கள் போன்ற அமைப்பையுடைய கட்டிடம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இங்கு பொலநறுவையில் உள்ள சிவன் கோயில்கள் போன்ற வடிவமைப்புடன் ஓர் கட்டிட இடி பாடும் காணப்படுகின்றது. இதன் முன் பகுதியில் நாகக் கற்களும் காணப்படுகின்றன.



நாகக்கல்

**பிராமணர்கள் வாழ்ந்த கிராமம்**

இப்பகுதியில் பிராமணர்கள் வாழ்ந்த ஓர் ஊரும் இரு ந்துள்ளது. இவ்விடத்தில் இருந்து 4 கி.மீ. தொலைவில் குழுமீமாகட என்னுமிடம் உள்ளது. இங்கு கற்பலகையில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. இக் கல்வெட்டில் இப்பகுதியில் இருந்த ஓர் வழிபாட்டிடத்தி ற்கு 5 கிராமங்களின் வயல்காணிகள் மானியமாக வழங்கப் பட்டது பற்றிய செய்தி பொறிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கிராமங்களில் ஒன்று பிராமணகாமம் (பமனகம) என்பதாகும். இதன் மூலம் இப்பகுதியில் பிராமணர்கள் வாழ்ந்த ஓர் கிராமம் இருந்துள்ளது எனவும்,அங்கு கோயில்கள் அமைக்கப்பட்டு பிராமணர்களால் பூஜிக்கப்பட்டிருக்கலாம் எனவும் நம்பப்படுகிறது.



**குழுமீமாகட கற்பலகைக் கல்வெட்டு**



**குழுமீமாகட கற்பலகைக் கல்வெட்டில் பிராமணகாமம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 87.இந்துக் கோயில்-ஆண்டியாகல,பாலாகல

குருநாகலில் இருந்து தம்புள்ளைக்கு செல்லும் வீதியில் கலேவெல சந்தி அமைந்துள்ளது. இங்கிருந்து வடக்குப் பக்கமாக கலாவெவ குளத்திற்கு செல்லும் வீதியில், கலே வெல சந்தியில் இருந்து 19 கி.மீ. தூரத்தில் ஆண்டியாகல என்னுமிடம் அமைந்துள்ளது. இங்குள்ள ஆண்டியாகல மலையில் பண்டைய காலம் முதல் இந்துத் துறவிகள் வாழ்ந்து வந்துள்ளனர். இதன் காரணமாக இம்மலை ஆண்டிமலை என அழைக்கப்பட்டுள்ளது. அவர்களால் இங்குள்ள கற்குகைகளில் சிவலிங்க வழிபாடுகள் நடத்தப் பட்டுள்ளன.

## 88.சிவன் கோயில்-பிராமணயாகம, பறங்கியாவாடி

ஹொரவபொத்தானையின் தெற்கில் உள்ள பறங்கியா வாடி என்னுமிடத்தின் மேற்கில் 4 கி.மீ. தூரத்தில் பிராம ணயாகம என்னுமிடம் அமைந்துள்ளது. இங்கு பண்டைய காலம் முதல் பிராமணர்கள் வாழ்ந்து வந்ததோடு இங்கி ருந்த கற்குகைகளில் சிவனையும், நாகத்தையும் வழிபட்டு வந்துள்ளனர். இங்குள்ள மலைக்குகைகளில் மொத்தமாக 19 பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இக்கல் வெட்டுக்களில் சிவன் என பொறிக்கப்பட்ட 3 கல்வெட் டுக்களும், நந்தி என பொறிக்கப்பட்ட 3 கல்வெட்டுக்க ளும், நாகம் என பொறிக்கப்பட்ட 2 கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன. மேலும் சுவாமி அபிஜிகுத்தன் என்ற பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்றும் இங்கு காணப்படுகிறது. இதன் மூலம் இங்கு வாழ்ந்த பிராம ணர்கள் சிவன், நாகம், நந்தி ஆகிய தெய்வங்களை வழி பட்டுள்ளார்கள் எனக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 89.சங்கிலி மலைக்கோயில்-கோகபேகந்த, கஹட்டகஸ்திகிலிய

அனுராதபுரம்-திருகோணமலை வீதியிலுள்ள கஹட்ட கஸ்திகிலியவை அடுத்து உள்ள ஹல்மில்லேவ குளத்தின் தென்கிழக்கில் 6 கி.மீ.தொலைவில் சங்கிலி மலைக் குன்று அமைந்துள்ளது. இங்குள்ள ஒரு மைல் சுற்றளவுள்ள கோக பேகந்த எனும் மலையின் உச்சியே சங்கிலி மலை எனப் பெயர் பெற்றுள்ளது.

சங்கிலி மலை உச்சியில் வழிபாட்டிடங்கள் இருந்த மைக்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன. கற்படிகள்,கட்டிட இடிபாடுகள் மற்றும் மலைக்குகைகள் இங்கு காணப் படுகின்றன. இவற்றில் இந்துக் கோயில் ஒன்று இருந்திரு க்கலாம் என நம்பப்படுகிறது. சங்கிலி மலை என்பது ஓர் தூய தமிழ்ப் பெயர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 90.ஆண்டிக்கல் மலை இந்துக் கோயில்-அங்கமுவ,ராஜங்கனை

அனுராதபுரத்திலிருந்து குருநாகலுக்கு செல்லும் வீதி யில் உள்ள தம்புத்தேகம சந்தியின் மேற்கில் ராஜாங்கனை எனும் ஊர் அமைந்துள்ளது. இங்குள்ள அங்கமுவ குளத் தின் அருகில் ஆண்டிக்கல் மலை அமைந்துள்ளது. இது அகல பர்வத்த எனவும் அழைக்கப்படுகிறது. இங்கு மூன்று மலைகள் உள்ளன. இவை ஆண்டிகல, மெதகல, தும்மு ள்ளகல என அழைக்கப்படுகின்றன.

இங்கு பல கற்குகைகள் உள்ளன. இக்குகைகளில் பொ.ஆ.மு. 2ஆம் நூற்றாண்டிற்குரிய 2 பிராமிக் கல்வெ ட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பண்டைய காலத்தில் இம்மலையில் இந்துத் துறவிகள் வாழ்ந்து வந்ததாகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் இம்மலையில் சிவலிங்கத்தை வைத்து வழிபட்டதாகவும் கூறப்படுகிறது. இதை உறுதி செய்யும் வகையில் இங்குள்ள கற்குகையில் உயரமான சடாமுடியுடன் கூடிய முனிவரின் சிற்பம் ஒன்று செதுக்கப்பட்டுள்ளது. எச்.சி.பி. பெல் இச்சிலையைக் கண்டது பற்றி தனது குறிப்பில் எழுதியுள்ளார். துறவிகள் இங்கு வாழ்ந்தமையால் இம்மலை ஆண்டிமலை எனப் பெயர் பெற்றது.



**ஆண்டிக்கல் மலை**

ஆண்டிகல மலையின் அருகில் இருக்கும் அங்கமுவ எனும் நகரம் பண்டைய காலத்தில் ஓர் வர்த்தக நகரமாக விளங்கியதாகவும், இப்பகுதியை ஆட்சி செய்த நாக மன்னனின் தளபதியான அகல என்பவன் அங்கமுவ குளத்தைக் கட்டியதோடு, மலையில் வழிபாட்டிடங்களையும் அமைத்தான் என ஆண்டிகல வரலாறு கூறுகிறது.

இம்மலையில் நாக மன்னன் காலத்தில் தூபியும் கட்டப்பட்டதாகவும் கூறப்படுகிறது. மலை உச்சிக்கு செல்வதற்கு பாறையில் படிகள் வெட்டப்பட்டுள்ளன. மலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்சுனைகள் பல காணப்படுகின்றன. இம்மலையில் தொல மிக்கு முற்பட்ட பண்டைய இலங்கையின் வடிவம் செது க்கப்பட்டுள்ளது. இது இலங்கையில் வேறெங்கும் காணக் கிடைக்காத அரிய சிற்பமாகும்.



**இந்துத் துறவிகள் வாழ்ந்த கற்குகை**



**மலையில் காணப்படும் கல் நீர்ச்சுனை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 91.பத்தினியம்மன் கோயில்-பத்தினிகம, கல்னேவ

அனுராதபுரத்திலிருந்து குருநாகலுக்கு செல்லும் வீதியில் உள்ள தம்புத்தேகம சந்தியிலிருந்து தென்கிழக்குப் பக்கமாக கலாவெவைக்கு செல்லும் வீதியில் உள்ள ஹுரிகஸ்வெவ என்னுமிடத்தை அடுத்து வரும் கலன்குட்டிய வெவ குளத்தின் வடக்கில் சுமார் 3 கி.மீ.தூரத்தில் கலா ஓயா ஆற்றின் அருகில் பத்தினிகம எனும் பண்டைய கிராமம் அமைந்துள்ளது.

இங்கு புராதன மதிற்சுவர் மற்றும் கட்டிட இடிபாடுகள் காணப்படுகின்றன. இவற்றுள் சிற்பங்கள் செதுக்கப்பட்ட பல கற்தூண்களும் உள்ளன. பண்டைய காலத்தில் இவ்விடத்தில் ஓர் பத்தினியம்மன் கோயில் இருந்ததாகக் கூறப்படுகிறது. இதன் அருகில் ஓர் தூபியும் கட்டப்பட்டுள்ளது. அதன் சிதைவுகளும் இங்கு காணப்படுகின்றன. இதன் காரணமாக இவ்விடம் பத்தினிகம எனப் பெயர் பெற்றுள்ளது. இங்கு இருந்த புராதன பத்தினியம்மன் கோயில் இப்பகுதியில் வாழும் சிங்கள மக்களால் மிகவும் பயபக்தியுடன் பூஜிக்கப்படுகிறது.

## 92.சிவாலயக்குளம் சிவன் கோயில்-கலென்பிந்துனுவெவ

அனுராதபுரம்-ஹொரவபொத்தான வீதியில் உள்ள மஹாகணத்தராவ குளத்தை அடுத்து வரும் சிப்புக்குளம் சந்தியில் இருந்து தென் கிழக்குப் பக்கமாகச் செல்லும் வீதியில் கலென்பிந்துனுவெவ என்னுமிடம் அமைந்துள்ளது. இங்கிருந்து தெற்குப் பக்கத்தில் உள்ள ஓர் சிறிய குளம் சிவாலகுளம என அழைக்கப்படுகிறது. சிவாலயக் குளம் என்பதே திரிபடைந்து சிவாலகுளம எனப் பெயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுள்ளது. இது பண்டைய காலத்தில் இங்கு இருந்த சிவன் கோயிலுக்குரிய குளமாக விளங்கியுள்ளது. இவ்விடத்தின் தெற்கில் ஹுருளுவெவ குளம் அமைந்துள்ளது.

## 93.அம்மன்கட்டு அம்மன் கோயில்-அமனன்கட்டுவ,இபலோகம

அனுராதபுரத்திலிருந்து தெற்கு நோக்கி தம்புத்தேகமவிற்கு செல்லும் வீதியில் உள்ள தலாவ சந்தியின் தென் கிழக்குப் பக்கமாக கெக்கிராவைக்கு செல்லும் வீதியில் உள்ள கந்திரியாகம குளத்தின் அருகில் அமனன்கட்டுவ என்னுமிடம் அமைந்துள்ளது. இங்கு இருந்த குளத்தின் அணைக்கட்டில் ஓர் அம்மன் கோயில் இருந்தது. இது அம்மன் கட்டு என அழைக்கப்பட்டது. அதுவே மருவி தற்போது அமனன் கட்டுவ எனப் பெயர் பெற்றுள்ளது.

## 94.ஆண்டிக்கடவை இந்துக் கோயில்-பலிப்பொத்தன, ரத்மல்கஹவெவ

மதவாச்சியிலிருந்து ஹொரவபொத்தானைக்குச் செல்லும் வீதியில் உள்ள ரத்மல் கஹவெவ சந்தியிலிருந்து தெற்கு நோக்கி கஹட்டகஸ்திகிலியவுக்கு செல்லும் வீதியில் சுமார் ஒரு கி.மீ தூரத்தில் உள்ள ரம்பேவ சந்தியின் மேற்கு நோக்கி ரம்பேவைக்கு செல்லும் வீதியில் 3 கி.மீ தொலைவில் பலிப்பொத்தானைக்குளம் காணப்படுகின்றது.

இக்குளத்தின் அருகில் ஆண்டிக்கடவை எனும் ஊர் உள்ளது. பண்டைய காலத்தில் இவ்விடத்தில் ஓர் இந்துத் துறவி வாழ்ந்து வந்ததாகத் தெரிய வருகிறது. இவர் தான் இருந்த இடத்தில் சிறிய கோயில் ஒன்றைக் கட்டி பூஜை செய்து வந்ததாகவும், இதனால் இவ்விடம் ஆண்டிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவை எனப் பெயர் பெற்றதாகவும் கூறப்படுகிறது. அதுவே மருவி சிங்கள மொழியில் ஆண்டியாகடவல என அழைக்கப்படுகிறது.



**பலிப்பொத்தானைக் குளத்தின் முன்பக்கம் உள்ள சிறிய கோயில்**

பலிப்போத்தானைக் குளத்தின் முன்பக்கம் உள்ள பாதையின் ஓரத்தில் ஓர் சிறிய பிள்ளையார் கோயில் காணப்படுகின்றது. அதே சமயம் பண்டைய காலத்தில் இந்து முனிவர் பூஜித்த கோயில் எவ்விடத்தில் இருந்தது என்பது தெரியவில்லை. பெரும்பாலும் முனிவர்கள் சிவனையே வழிபடுவதால் இங்கிருந்த கோயில் ஓர் சிவன் கோயிலாக இருந்திருக்கும் எனக் கூறலாம்.

## 95.சிவாலயபிட்டி இந்து கோயில்- துனுமடலாவ,மகாவிலச்சி

அனுராதபுரத்திலிருந்து புத்தளத்திற்கு செல்லும் வீதியில் உள்ள நொச்சியாகம சந்தியின் வடக்குப் பக்கமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓயமடுவிற்கு செல்லும் வீதியில் உள்ள துனுமடலாவ குளத்தை அடுத்து வரும் சந்தியின் தென்மேற்கில் 2 கி.மீ தூரத்தில் சிவாலயபிட்டி குளம் அமைந்துள்ளது. இக்குளத்தின் அருகில் உள்ள மேட்டுத்திடலில் பண்டைய காலத்தில் ஓர் சிவாலயம் இருந்துள்ளது.

எனவே இவ்விடம் சிவாலயபிட்டி எனப்பெயர் பெற்றுள்ளது. அருகில் இருந்த குளமும் இதே பெயரில் அழைக்கப்பட்டுள்ளது. இன்று ஆலயம் இருந்த இடம் கூட தடம் தெரியாமல் போய் விட்டது. காலப்போக்கில் இவ்விடத்தின் பெயரும் மருவி தற்போது சிவலாபிட்டிய என இவ்வூரும், குளமும் அழைக்கப்படுகின்றன.

## 96.ஆண்டிக்குளம் இந்துக் கோயில்-தெப்பன்குளம

நுவரகம் பலாத்த மத்தி-உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள தெப்பன்குளம எனும் கிராம சேவகர் பிரிவில் 2 கிராமங்கள் உள்ளன. அவற்றில் ஒன்று ஆண்டியா குளம என்பதாகும். இக்கிராமத்தில் பண்டைய காலத்தில் முனிவர்கள் வாழ்ந்துள்ளனர். அக்காலப்பகுதியில் அவர்கள் பயன்படுத்திய குளம் ஆண்டிக்குளம் என்ற பெயரைப் பெற்றுள்ளது. இங்கு அவர்கள் இந்து தெய்வங்களைப் பூஜித்து வந்ததாக நம்பப்படுகிறது. இதனால் இவ்வூரும், குளமும் ஆண்டிக்குளம் எனப் பெயர் பெற்றுள்ளது.

## 97.பிராமணகாமம் இந்துக் கோயில்-பமுனுகம,சந்தபாகம

திரப்பனே-ஹுருழுபலாத்த தெற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள சந்தபாகம எனும் கிராம சேவகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவில் 3 கிராமங்கள் உள்ளன. இவற்றில் ஒன்று பமுனு கம எனும் கிராமமாகும். பண்டைய காலத்தில் இருந்த பிராமணகாமம் என்பதே பமுனுகம எனத் திரிபடைந்துள்ளது. சிங்கள மொழியில் பமுனு என்பது பிராமணர்களைக் குறிக்கும் பெயராகும். பண்டைய காலத்தில் இது பிராமணர்களில் கிராமமாக விளங்கியுள்ளது. இங்கு வாழ்ந்த பிராமணர்கள் தமது கிராமத்தில் கோயில் கட்டி வழிபட்டுள்ளனர்.

## 98.காளி கோயில்-காளிவில்,களுவில

நுவரகம் பலாத்த கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள களுவில எனும் கிராம சேவகர் பிரிவில் 2 கிராமங்கள் உள்ளன. இவை களுவில வடக்கு, களுவில தெற்கு என அழைக்கப்படுகின்றன. இங்கும் ஓர் காளி கோயிலும், குளமும் அமைந்திருந்ததாகக் கூறப்படுகிறது. இதன் காரணமாக இவ்விடம் காளிவில் எனப் பெயர் பெற்றிருந்தது. அதுவே தற்போது களுவில எனத் திரிபடைந்துள்ளது. இவ்வூரிலிருந்து சுமார் 15 கி.மீ தூரத்தில் காளிவில்காமம் எனும் ஊரும் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 99.காளி கோயில்-காளிவில்காமம் (களுவிலகம),சுகதகம

பண்டைய காலத்தில் இங்கு ஓர் காளி கோயிலும், குளமும் அமைந்திருந்ததாகக் கூறப்படுகிறது. இதன் காரணமாக இவ்விடம் காளிவில்காமம் எனப் பெயர் பெற்றுள்ளது. காலப்போக்கில் இப்பெயர் மருவி தற்போது களுவிலகம என அழைக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 100.பிராமணகாமம் இந்துக் கோயில்-பமுனுகம,கம்சபா ஹல்மில்லேவ

பாலாகல-கலாகம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கம்சபா ஹல்மில்லேவ எனும் கிராம சேவகர் பிரிவில் 3 கிராமங்கள் உள்ளன. இவற்றில் ஒன்று பமுனுகம என அழைக்கப்படுகிறது. இது பண்டைய கால பிராமணர் கிராமமாகும். இங்கு பிராமணர்கள் கோயில் கட்டி தெய்வங்களை பூஜித்ததாகக் கூறப்படுகிறது. பிராமணர் கிராமம் என்பதே மருவி தற்போது பமுனுகம என இவ்வூர் அழைக்கப்படுகிறது.

## 101.பிராமணர்காமம் இந்துக் கோயில்-பிராமணயாகம,செலஸ்திமடுவ

திரப்பனே-ஹுருழுபலாத்த தெற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள செலஸ்திமடுவ எனும் கிராம சேவகர் பிரிவில் 8 கிராமங்கள் உள்ளன. இவற்றில் ஒன்று பிராமணயாகம எனும் கிராமமாகும். இது பண்டைய காலத்தில் பிராமணர்கள் மட்டும் வாழ்ந்த ஓர் கிராமமாக விளங்கியுள்ளது. இங்கிருந்த பிராமணர்கள் இப் பிரதேசத்திலுள்ள ஏனைய பல கோயில்களையும் பராமரித்து வந்துள்ளனர். இவர்களின் கிராமத்திலும் தமது வழிபாட்டிற்காக கோயில் கட்டி பூஜித்துள்ளனர்.

## 102.சிவாலயகல்லு சிவன் கோயில்-சிவலாகல,வலகம்பாஹுருவ

திரப்பனே-ஹுருழுபலாத்த தெற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள வலகம்பாஹுருவ எனும் கிராம சேவகர் பிரிவில் 6 கிராமங்கள் உள்ளன. இவற்றில் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்தின் பெயர் சிவலாகல என்பதாகும். இங்குள்ள மலைப்பாறையில் பண்டைய காலத்தில் ஓர் சிவாலயம் அமைந்திருந்ததாகவும், இதனால் இப்பாறை சிவாலயகல்லு எனப் பெயர் பெற்றதாகவும் கூறப்படுகிறது. அப்பெயர் திரிபடைந்து தற்போது சிங்கள மொழியில் சிவலாகல என அழைக்கப்படுகிறது.

## 103.ஆண்டிமலை இந்துக் கோயில்-ஆண்டியாகல,தமரவெவ

பதவியா குளத்தின் தெற்கில் சுமார் 15 கி.மீ தூரத்தில் உள்ள பட்டேவ என்னுமிடத்திற்கும், தமரவெவ என்னு மிடத்திற்கும் இடையில் ஆண்டியாகல அமைந்துள்ளது. பண்டைய காலத்தில் இங்குள்ள மலையில் முனிவர்கள் வாழ்ந்ததாகவும், இதனால் இவ்விடம் ஆண்டிமலை என அழைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இந்த மலையில் முனிவர்களால் கோயில் அமைக்கப்பட்டு பூஜிக்கப்பட்டுள் ளமை தெரிய வருகிறது.

## 104.இந்துக் கோயில்-கோயில் கட்டிய குளம், கோணமரியாவ

கெப்பிட்டிகொல்லாவ உதவி அரசாங்க அதிபர் பிரி வில் உள்ள கோணமரியாவ எனும் கிராம சேவகர் பிரி வில் 14 கிராமங்கள் உள்ளன. இவற்றில் ஒன்று கோலி பெந்தேவ எனும் கிராமமாகும். இது பண்டைய காலத் தில் இருந்த கோயில் கட்டிய குளம் எனும் ஊரின் திரி பாகும். இப்பெயர் கோவில் பெந்த வெவ என சிங்கள மொழியில் அழைக்கப்பட்டு தற்போது கோலிபெந்தேவ எனத் திரிபடைந்துள்ளது. இங்கிருந்த மக்கள் குளத்தின் அருகில் ஓர் கோயிலைக் கட்டி பூஜித்து வந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 105.கதிர்காமம் முருகன் கோயில்-கதிரகம, கெலே புளியங்குளம

கெக்கிராவ உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கெலே புளியங்குளம எனும் கிராம சேவகர் பிரிவில் உள்ள 6 கிராமங்களில் கதிரகம எனும் கிராமமும் உள் ளது. பண்டைய காலத்தில் இங்கிருந்த கதிர்காமம் எனும் கிராமமே கதிரகம என சிங்கள மொழியில் அழைக்கப் படுகின்றது. இங்கு வாழ்ந்த மக்கள் இங்கே முருகனுக்கு கோயில் கட்டி வழிபட்டுள்ளனர்.

## 106.நாக கோயில்-பதவியா

பதவியா குளத்தின் அணைக்கட்டின் கீழ் பகுதியில் உள்ள மொறகொட என்னுமிடத்தில் காணப்படும் சிவா லய இடிபாடுகளுக்கு அருகில் ஓர் நாக கோயில் இருந்த மைக்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

இங்கு களிமண்ணினால் செய்யப்பட்ட இரண்டு நாக உருவங்கள் காணப்பட்டன. இவற்றில் ஒன்று 12 அடி நீளமானதாகும். இதன் மூலம் இங்கு நாகராஜாவிற்கு ஓர் கோயில் இருந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. பேரா சிரியர் எஸ்.பரணவிதான இது பற்றிய குறிப்புக்களை எழுதியுள்ளார்.

## 107.காளி கோயில்-களுவில பரணகம, பாவக்குளம்

நுவரகம் பலாத்த உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பாவக்குளம் கிராம சேவகர் பிரிவில் 2 கிராமங்கள் உள்ளன. இதில் ஒன்று களுவில பரணகம எனும் கிரா மமாகும். இது பண்டைய காலத்தில் காளிவில் எனப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் பெற்றிருந்த கிராமமாகும். இங்கிருந்த வில்லுக் குளத்தின் அருகில் ஓர் காளி கோயில் அமைந்திருந்ததாகக் கூறப்படுகிறது. இதனால் இவ்வூர் காளிவில் எனப் பெயர் பெற்றது. அதுவே இன்று மருவி சிங்கள மொழியில் களு வில பரணகம(பழைய காளிவில்) என அழைக்கப்படுகிறது.

## 108.நாக கோயில்-நாபடவில, பரண ஹல்மில்லேவ

மதவாச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பரண ஹல்மில்லேவ எனும் கிராம சேவகர் பிரிவில் உள்ள 6 கிராமங்களில் ஒன்று நாபடவில என்பதாகும். இது பண்டைய காலத்தில் இருந்த நாகபடவில்லு எனும் கிராமத்தின் திரிபாகும். இங்கு இருக்கும் வில்லுக்குளத்தின் அருகில் ஓர் நாக கோயில் இருந்ததாகவும், இதனால் இவ்விடம் நாகபடவில்லு எனப் பெயர் பெற்றதாகவும் கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுராதபுரம் மாவட்டத்தில் இந்து தெய்வங்கள் தொடர்பான பிராமிக் கல்வெட்டுக்கள்

இலங்கையில் மொத்தமாக சுமார் 1800 பிராமிக் கல்வெட்டுக்கள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை இயற்கையாக அமைந்த மலைக் குகைகளிலும், மலைப் பாறைகளிலும் பொறிக்கப்பட்டுள்ளன. அனுராத புரம் மாவட்டத்தில் மொத்தமாக 431 பிராமிக் கல்வெட் டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 347 கல் வெட்டுக்கள் ஆங்கிலேயர் காலத்திலும், 84 கல்வெட்டுக் கள் அண்மையிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் இந்து சமயம் மற்றும் இந்து தெய்வங்கள் தொடர்பான 116 கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இதில் அதிகப் படியாக இந்துத் துறவிகளைக் குறிக்கும் சுவாமி எனும் சொல் பொறிக்கப்பட்ட 33 கல்வெட்டுக்களும், அடுத்த படியாக சிவன் மற்றும் நந்தி எனும் சொற்கள் பொறி க்கப்பட்ட 29 கல்வெட்டுக்களும், நாகம் எனும் சொல் பொறிக்கப்பட்ட 28 கல்வெட்டுக்களும், முருகன் எனும் சொல் பொறிக்கப்பட்ட 13 கல்வெட்டுக்களும், பிராமணர் எனும் சொல் பொறிக்கப்பட்ட 9 கல்வெட்டுக்களும், இராமர் எனும் சொல் பொறிக்கப்பட்ட 2 கல்வெட்டுக் களும், கண்ணன், பிள்ளையார் எனும் சொற்கள் பொறி க்கப்பட்ட தலா ஒரு கல்வெட்டும் காணப்படுகின்றன. இக் கல்வெட்டுக்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு,

**நாகம் தொடர்பான கல்வெட்டுக்கள்.**

அனுராதபுரம் மாவட்டத்தில் நாகம் என்ற பெயர் பொறிக்கப்பட்ட 28 பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படு கின்றன. இவற்றில் தலதர நாகய (ஆசாரி நாகன்), கபதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாக (கிருஹபதி நாகன்), மகாநாக (மகாநாகன்), பருமக நாக (பெருமகன் நாகன்),பரத நாக(சுவாமி/கடவுள் நாகன்), நாக ராஜஹ (அரசன் நாகன்), உபசிக்க நாகய (பக்தை நாகினி), கமிக நாகச சடயச (கிராம ஆலோசகரும், பங் காளியுமான நாகன்), நாக நகரக வபி ஹமிக (நாக நகர குளத்தின் உரிமையாளன்), பருமக சுடநாகக (பெருமகன் சூளநாகன்), பகுல நாக (பக்குல நாகன்) ஆகிய நாகம் சம்பந்தமான பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டுக்கள் பின்வரும் இடங்களில் பொறிக்கப் பட்டுள்ளன.

அனுராதபுரம்-வெஸ்ஸகிரி-2 *(80,85),*
மிகுந்தலை-4 *(10,11,54,1107),*
பில்லாவேகல-2 *(101,1120),*
ஒச்சாப்புகல்லு-1 *(110),*
தந்திரிமலை-1 *(112),*
ரஸ்னகாவ-1 *(116),*
ஹந்தகல-5 *(120,128,132,133,1129),*
பிராமணயாகம-3 *(149,150,159),*
கொட்டகந்த-1 *(175),*
மானாகந்த-1 *(196),*
ரிடிகல-மரக்கலஉல்பொத்த-4 *(261,263,265,266),*
கல்கே-1 *(1122),*
மஹாஅளங்கமுவ-1 *(1157),*
பெரவாயாகந்த-1 *(209 El)*

**சிவன் மற்றும் நந்தி தொடர்பான கல்வெட்டுக்கள்**

அனுராதபுரம் மாவட்டத்தில் சிவன் என்ற பெயர் பொறிக்கப்பட்ட 15 பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படு கின்றன. இவற்றில் சிவஹ (சிவன்), கமிக சிவஹ (கிராம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலோசகர் சிவன்), பருமக சிவஹ (பெருமகன் சிவன்), கமிக கடசிவ (கிராம ஆலோசகர் காளசிவன்), கபதி சூட சிவ (கிருஹபதி சூடசிவன்),பத்த சிவகுதஹ(சுவாமி/கடவுள் சிவகுத்தன்), பரிஹ சட்ட கொவக சிவஹ (சட்டசபை குடையின்/மண்டபத்தின் பாதுகாவலன் சிவன்) உபசிக்க சிவாய (பக்தை சிவ), மகாசிவயஹ புத்த சிவயஹ (மகா சிவனின் புத்திரன் சிவன்), கட சிவச (கடசிவன்) ஆகிய சிவன் தொடர்பான பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டுக்கள் பின்வரும் இடங்களில் பொறிக்கப் பட்டுள்ளன.

அனுராதபுரம்-ருவன்வெலிசாய-*1* *(98)*,
மிகுந்தலை-*1* *(40)*,
பிராமணயாகம-*3* *(152,153,161c)*,
மகாஅலகமுவ-*1* *(215)*,
ரிடிகல-*1* *(243)*,
பில்லாவேகல-*1* *(1120)*,
ஹந்தகல-*1* *(1137)*,
அவுக்கன-*1* *(1149)*,
மஹா அளங்கமுவ-*1* *(1156)*,
தியதித்தேவ-*3* *(168El, 188El, 203El)*,
பெரவாயாகந்த-*1* *(216El)*

நந்தி தொடர்பான 14 பிராமிக் கல்வெட்டுக்கள் அனு ராதபுரம் மாவட்டத்தில் காணப்படுகின்றன. இவற்றில் பகினிய நதிகச (நந்திகனின் துணைவி), பருமக நதிக (பெருமகன் நந்திகன்) எனப் பொறிக்கப்பட்டுள்ளது. நந்தி தொடர்பான 14 கல்வெட்டுக்களில் 13 கல்வெட்டுக்கள் பெருமகன் நந்தி என்பதையே குறிப்பிடுகின்றன.பெருமகன் என்றால் தலைவன், உயர்ந்தவன், அரசன், பெரியமகன், மூத்தமகன், அண்ணன் எனப் பொருள் படுவதாக கலாநிதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமு புஷ்பரட்ணம் குறிப்பிட்டுள்ளார். மேற்சொன்ன 13 கல்வெட்டுக்களிலும் பருமக-பெருமகன் என்பது தலைவன் எனும் அர்த்தத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. இதன்படி இக் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்ட 6 இடங்களிலும் நந்தி அல்லது நந்திகன் என்பவன் தலைவனாக இருந்துள்ளான் எனத்தெரிகிறது.

இக்கல்வெட்டுக்கள் பின்வரும் இடங்களில் பொறிக்கப்பட்டுள்ளன.
பிராமணயாகம-2 (148,156),
நாட்டுக்கந்த-1 (166),
மகாஅலகமுவ-2 (233a,233b),
தியதித்தேவ-3 (165El,166El,170El),
பெரவாயாகந்த-5(207El,211El,213El,214El,218El),
மதயாகந்த-1 (237El)

**முருகன் தொடர்பான கல்வெட்டுக்கள்**

முருகன் தொடர்பான 13 பிராமிக் கல்வெட்டுக்கள் அனுராதபுரம் மாவட்டத்தில் காணப்படுகின்றன. இவற்றில் பருமக குமர (பெருமகன் குமரன்), பத்த சிடகுதஹ புத்த வேலுக(சுவாமி/கடவுள் சிட்டகுத்தனின் புதல்வன் வேலன்) கபதி வேலு( கிருஹபதி வேலன்), பருமக பாகினிய வேல ஹ (பெருமகன் பாகினியன் வேலன்), பத்த குமாரஹ (சுவாமி/கடவுள் குமாரன்), பருமக வேலுபுத்த (பெருமகன் வேலு புத்திரன்) ஆகிய முருகன் தொடர்பான பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டுக்கள் பின்வரும் இடங்களில் பொறிக்கப்பட்டுள்ளன.
மிகிந்தலை-1 (5),
அனுராதபுரம்-வெஸ்ஸகிரி-1 (91),



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹறந்தகல-*3 (121,123,1125),*
நாட்டுக்கந்த-*1 (169)*
குட்டிக்குளம-*1 (190),*
ரிடிகல-கரம்பஹின்ன-*1 (250),*
தியதித்தேவ-*2 (184El,185El),*
பெரவாயாகந்த-*3 (228El, 231El, 232El)*

## இராமர் தொடர்பான கல்வெட்டுக்கள்

அனுராதபுரம் மாவட்டத்தில் இராமர் என்ற பெயர் பொறிக்கப்பட்ட 2 பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவற்றில் உபசிக்க ராமதத்தய (பக்தை இராம தத்தை), உபசிக்க ராம (பக்தை ராமா) ஆகிய இராமர் தொடர்பான பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டுக்கள் பின்வரும் இடங்களில் பொறிக்கப் பட்டுள்ளன.
மிகிந்தலை-*1 (31 rama),*
பிராமணயாகம-*1 (159 rama)*

## கண்ணன் தொடர்பான கல்வெட்டு

அனுராதபுரம் மாவட்டத்தில் கண்ணன் என்ற பெயர் பொறிக்கப்பட்ட 1 பிராமிக் கல்வெட்டு காணப்படுகின்றது. இக்கல்வெட்டில் ராஜ கணச புத்த ராஜபுத்த கணச (அரசன் கண்ணனின் மகன், ராஜபுத்தன் கண்ணன்) எனப் பொறிக்கப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டு பின்வரும் இடத்தில் காணப்படுகின்றது.
ஒச்சாப்பு கல்லு-*1 (111)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளையார் தொடர்பான கல்வெட்டு

அனுராதபுரம் மாவட்டத்தில் பிள்ளையார் தொடர் பான பெயர் பொறிக்கப்பட்ட 1 பிராமிக்கல்வெட்டு காணப்படுகின்றது. இக்கல்வெட்டில் கனச லெண (கணே சனின் குகை)எனப் பொறிக்கப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டு பின்வரும் இடத்தில் காணப்படுகின்றது.
*வனசிம்ஹ விஹார-1 (111)*

## பிராமணர் தொடர்பான கல்வெட்டுக்கள்.

பிராமணர் தொடர்பான 9 பிராமிக் கல்வெட்டுக்கள் அனுராதபுரம் மாவட்டத்தில் காணப்படுகின்றன. இவற்றில் பமண புத்த (பிராமண புத்திரன்), பமண சுக (பிராமணன் சுங்கன்), பருமக பமணஹ (பெருமகன் பிராமணன்), பமண கோசிக (பிராமணன் கோசிகன்), படத்த பமண திசஹ (வணக்கத்திற்குரிய பிராமணன் தீசன்), பமண உத்தர (பிராமணன் உத்தரன்), மஹாஅமத்த பமதத்த (பெரிய அமைச்சர் பிராமணதத்தன்), பமண வெணிகஷ(பிராமணன் வேணிகன்) ஆகிய பிராமணர் சம்பந்தமான பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டுக்கள் பின்வரும் இடங்களில் பொறிக்கப் பட்டுள்ளன.
*மிகுந்தலை-ராஜகிரிகந்த-1 (67),*
*ஹந்தகல-2 (124,1136),*
*யாங்கல-1 (205),*
*மகாஅலகமுவ-1 (228),*
*ரிடிகல-1 (242),*
*ரிடிகல-வேவெல்தென்ன-2 (268,269),*
*பெரவாயாகந்த-1 (204El)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுவாமி அல்லது கடவுள் எனப் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள்**

அனுராதபுரம் மாவட்டத்தில் சுவாமி அல்லது கடவுள் எனப் பொறிக்கப்பட்ட **33** பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவை பத்த எனும் அடைமொழியுடன் ஓர் பெயரைக் குறிக்கும் கல்வெட்டுக்களாகும். பத்த எனும் பதத்தை பேராசிரியர் பரணவிதான ஆங்கிலத்தில் "*Lord*" (கடவுள்) என மொழி பெயர்த்துள்ளார். பூஜ்ய எல்லாவல மேதானந்த தேரர் சிங்கள மொழியில் "சுவாமி" என மொழி பெயர்த்துள்ளார். சுவாமி எனும் சொல் சிங்கள மொழியிலும், தமிழ் மொழியிலும் ஒரே அர்த்தத்தைக் கொண்டதாகும். பத்த என கல்வெட்டுக்களில் குறிப்பிடப் பட்டிருப்பது கடவுள், வணக்கத்திற்குரியவர், சுவாமி, முனிவர் ஆகியோரில் ஒருவரைக் குறிப்பதாகும். இவர்கள் வணக்கத்திற்குரிய இந்து துறவிகள் அல்லது முனிவர்களாகும். இவர்கள் தாம் பயன்படுத்திய கற்குகைகளில் தமது பெயர்களைப் பொறித்துள்ளனர். அல்லது பிற்காலத்தில் வந்த அவர்களின் சீடர்கள் தமது குருவின் பெயரை அவர் தங்கியிருந்த குகைகளில் பொறித்துள்ளனர் எனலாம்.

பேராசிரியர் பரணவிதான பத்த எனும் அடைமொழியில் அழைக்கப்பட்டவர்கள் பௌத்த துறவிகள் எனக் குறிப்பிட்டுள்ளார். இதை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. ஏனெனில் பௌத்த துறவிகளை தேர, தேரஹ, தேரச (தேரர்) ஆகிய பதங்களில் கல்வெட்டுக்களில் குறிப்பிட்டுள்ளனர். இவர்களே பௌத்த துறவிகளாவர். இவ் அடைமொழி **118** கல்வெட்டுக்களில் காணப்படுகின்றது. தேர, தேரஹ, தேரச எனும் பதங்களோடு பத்த எனும் பதமும் பௌத்த துறவிகளைக் குறிப்பதாகும் என பேராசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியிருப்பது பக்க சார்பான கருத்தாகும். இவ்வாறு பௌத்த பக்க சார்புடன் பேராசிரியர் பரணவிதான பல நூல்களில் தவறாகப் பல கருத்துக்களைக் கூறியிருப்பதை ராஜ டி சில்வா, மிரிண்டோ ஒபேசேகர, சூரிய குண சேகர ஆகிய சிங்கள பேராசிரியர்கள் உட்பட பல அறி ஞர்கள் மறுத்துரைத்து உள்ளார்கள் என்பது குறிப்பிடத் தக்கது. எனவே பத்த எனும் பதம் இந்துத் துறவிகளைக் குறிப்பதாகும்.

இக்கல்வெட்டுக்கள் பின்வரும் இடங்களில் பொறிக்கப் பட்டுள்ளன.

மிகுந்தலை-*1 (41)*,
அனுராதபுரம்-வெஸ்ஸகிரி-*1 (90)*,
தந்திரிமலை-*1 (113)*,
ஹந்தகல-*3 (126,129,132)*,
வலஸ்குனவெவ-*1 (136)*,
பிராமணயாகம-*1 (147)*,
நாட்டுக்கந்த-*1 (167)*,
பம்பரஹெல-*2 (177,179)*,
தோணிகல-*1 (192)*,
பணிக்கன்குளம-*1 (207)*,
மகாஅலகமுவ-*7 (218,221,222,223,224,225,233d)*,
ரிடிகல-*3 (241,243,247)*,
ரிடிகல-நாஉல்பொத்த-*4 (253,255,256,257)*,
ரிடிகல-மரக்கல உல்பொத்த-*1 (267)*,
தியதித்தேவ-*1 (199 El)*,
பெரவாயாகந்த-*5 (208El,216El,219El,223El,235El)*,
மதயாகந்த-*1 (236El)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுராதபுர மாவட்டத்தின் தமிழ்க் கிராமங்கள்

அனுராதபுர மாவட்டத்தில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள கோயில்களைத் தவிர இன்னும் பல கோயில்கள் மண்ணுள் புதைந்து கிடக்கின்றன. இம்மாவட்டத்தில் ஏராளமான தமிழ்க் கிராமங்கள் இருந்தன. இக்கிராமங்கள் எல்லாவற்றிலும் கோயில்களும் அமைக்கப்பட்டிருந்தன. காலப்போக்கில் இங்கிருந்த தமிழ் சைவமக்கள் இக்கிராமங்களை விட்டு வேறு இடங்களுக்கு குடிபெயர்ந்தனர். எஞ்சியிருந்த தமிழ் மக்கள் சிங்கள மக்களுடன் திருமண பந்தங்களை ஏற்படுத்திக் கொண்டு இரண்டறக் கலந்தனர். இன்று அவர்களின் சந்ததியினர் சிங்களவர்களாகக் காணப் படுகின்றனர். இந்நிலையில் இங்கிருந்த கோயில்களும் பராமரிப்பின்றி சிதைந்து அழிந்து போயுள்ளன.

தமிழர்கள் வாழ்ந்த சில இடங்களில் சிங்கள பௌத்த மக்கள் குடியேறியதுடன் கோயில்கள் இருந்த இடங்களுக்கு அருகில் பௌத்த விகாரைகளை அமைத்து, இந்துக் கோயில்களில் இருக்கும் தெய்வங்களையும் பக்தியுடன் வழிபட்டு வந்தனர்.இக்கோயில்கள் “தேவாலய”என அழைக்கப்படுகின்றன. சிங்கள பௌத்த மக்கள் இங்குள்ள இந்து தெய்வங்களை கண தெவியா, கத்தரகம தெவியா, ஈஷ்வர தெவியா, விஷ்ணு தெவியா, காளி மேனியன், பத்தினி மேனியன் என அழைத்து பயபக்தியுடன் வழிபட்டு வருகின்றனர்.

இவ்வாறு தமிழ்க் கிராமங்கள் அனைத்தும் சிங்களக் கிராமங்களாயின. அதே சமயம் பல கோயில்கள் மண்ணுள் புதையுண்டு போயின. இன்றும் சிங்களப் பெயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு அழைக்கப்படும் தமிழ்க் கிராமங்கள் பல இம்மாவட்டத்தில் இருக்கின்றன.

பொ.ஆ.16 ஆம் நூற்றாண்டு முதல் இங்கு வந்த போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர் ஆகியோர் தமது கிறிஸ்தவ மதத்தைப் பரப்பும் நோக்குடன் இலங்கையிலிருந்த நூற்றுக்கணக்கான இந்துக் கோயில்களையும், சில பௌத்த விகாரைகளையும் அழித்தனர். யாழ்ப்பாணத்தில் மட்டும் 500 கோயில்களை போர்த்துக்கேயர் அழித்ததாக பாதிரியார் குவைறோஸ் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். யாழ்ப்பாணத்திற்கு வெளியே வடக்கு,கிழக்கு,வடமேற்கு, வடமத்தி ஆகிய பகுதிகளில் மேலும் 300 கோயில்கள் வரை அழிக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. தெற்குப் பகுதியிலும் சந்திரசேகரஈஸ்வரம், தெவிநுவர விஷ்ணு கோயில், பெந்தோட்டை காளிகோயில் உட்பட சில கோயில்கள் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டன. இவற்றில் அனுராதபுரம் மாவட்டத்தில் உள்ள கோயில்களும் அடங்குகின்றன.

வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் ஐரோப்பியரால் அழிக்கப்பட்ட கோயில்களில் ஓரிரு கோயில்களைத் தவிர ஏனைய எல்லாக் கோயில்களும் அடையாளம் காணப்பட்டு, ஆங்கிலேயர் காலத்திலும், அதன் பின்பும் மீண்டும் அமைக்கப்பட்டன. அதே சமயம் வடக்கு, கிழக்கிற்கு வெளியே அழிக்கப்பட்ட ஆலயங்கள் மீண்டும் கட்டப்படவில்லை. இதற்குக் காரணம் அங்கு தமிழ் சைவ மக்கள் இல்லாமையே.

அனுராதபுரம் பகுதியில் 1670 ஆம் ஆண்டில் தமிழ் மக்கள் செறிந்து வாழ்ந்தது பற்றி றொபேர்ட் நொக்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"*An Historical Relation of Ceylon*" எனும் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

அனுராதபுரம் மாவட்டத்தில் தமிழ் மக்கள் வாழ்ந்த இப்படியான பல தமிழ்க் கிராமங்கள் அடையாளம் காண ப்பட்டுள்ளன. இக் கிராமங்களில் தற்போது சிங்கள மக் களே வாழ்கின்றனர். இக்கிராமங்களின் பெயர்களின் முடி வில் "குளம்" எனும் சொல் காணப்படுகின்றது. தற்போது இப்பெயர்கள் சற்று சிங்களமயமாகி விட்டன. நொச்சிக் குளம்-நொச்சிக்குளம எனவும், காயன் கொல்லை-காயங் கொல்லேவ எனவும், புளியங்கடவை-புளியங்கடவல என வும், மருதங்கல்லு-மரதன்கல எனவும் உருமாறியுள்ளது. எனவே இவற்றை அடையாளம் காணக்கூடியதாக இருக் கின்றது. அதேசமயம் முற்றிலும் சிங்களப் பெயர்களாக மாற்றமடைந்த தமிழ்க் கிராமங்களை இன்று அடையாளம் காண முடியாமல் உள்ளது. உதாரணத்திற்கு புளியங்குளம் எனும் தமிழ்ப்பெயர் "சியம்பலா கஸ்வெவ" எனவும், விளாங்குளம் எனும் தமிழ்ப் பெயர் "திவுள் கஸ்வெவ" எனவும் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் இன்றும் தமிழ்க் கிராமங்கள் என அடையாளம் காணக் கூடிய பல கிராமங்கள் அனுராதபுரம் மாவட்டத்தில் காணப்படுகின்றன.

இம்மாவட்டத்தில் மொத்தமாக **21** உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் உள்ளன. இவற்றில் **694** கிராம சேவகர் பிரிவுகளும், **3085** கிராமங்களும் அடங்குகின்றன. இக் கிராமங்களில் **446** தமிழ்க் கிராமங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இது மிகக்குறைந்த தொகையே. ஏனெ னில் அடையாளம் காண முடியாத வகையில் பல தமிழ்க் கிராமங்கள் உள்ளன. அடையாளம் காணப்பட்ட **446**



Digitized by Noolaham Foundation.
